வரு.73 இல. 11 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරි
2021 மார்ச் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
March 14 Sunday, 2021
32 பக்கங்கள் 40/-






வீர வேங்கை சசிகலா
அரசியலில் இருந்து ஓய்வு பெற்றது ஏன்?
02



தமிழருக்குக் கிட்டிய விமோசனம் என்ன?
05



பரத் அருள்சாமியின் விசேட நேர்காணல்
09



CSK அணியில்
இலங்கையின் இளம் வீரர்கள் இருவர்
24

### சகல விதமான சட்டச் சிக்கல்களையும் தீர்த்து

# மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துங்கள்

## சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



மாகாண சபை தேர்தல் தொடர்பில் முன் வைக்கப்பட்டுள்ள சட்ட வரைபு அல்லது அதிலுள்ள குழப்பங்களை நீக்கி மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தொகுதி முறை, எல்லை நிர்ணயம், ஐம்பதுக்கு ஐம்பது, பெண்களின் அமைப்பு உள்ளிட்ட கடந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்ட வரைபு அவர்களினாலே தோற்கடிக்கப்பட்டது.

மாகாண சபைகள் இப்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலைமை குறித்து

04



பாவனையிலிருந்து நீக்கப்பட்ட இ.போ.ச. பஸ்களை நூலகங்களாக மாற்றியமைத்து நூலகங்கள் அற்ற பாடசாலைகளுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, துணுக்காய் ஐயன்குளம் மகா வித்தியாலயத்துக்கான பஸ் நூலகத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (12) கையளித்தபோது..

# அயல்நாட்டு கொள்கையில் இலங்கைக்கே முதலிடம்

### ஜனாதிபதியுடன் மோடி தொலைபேசியில் உரையாடல்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குமிடையில் தொலைபேசி உரையாடலொன்று நேற்று நடைபெற்றுள்ளது.

தொலைபேசி ஊடாக நேற்று (13) பிற்பகல், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியுள்ளதாக இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தின் டுவிட்டர் தளத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி பணிகள் மற்றும் இரண்டு நாடுகளுக்கு மிடையிலான ஒத்துழைப்புக்கள் தொடர்பில்

04

### பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சரணடைந்தவர்கள், தடுப்புக்காவலிலுள்ளவர்களுக்கு

# புனர்வாழ்வளிப்பதற்கு புதிய விதிமுறைகள்

## வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியானது

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சரணடைந்தவர்கள் மற்றும் தடுப்புக்காவலில் எடுக்கப்பட்டவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தும் மற்றும் உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் புதிய விதிமுறைகளுடன் கூடிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

வெளியாகியுள்ள வர்த்தமானியின் பிரகாரம், சந்தேகத்தின் பேரில் தடுப்புக் காவலில் எடுக்கப்படுகின்ற எவரோனுமொருவருக்கு எதிராகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் புதிய ஒழுங்கு விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு

04




### ஜிஹாத் கருத்தியல், வஹாபிசத்தை பரப்பிய குற்றச்சாட்டு;

# ஜமாதே இஸ்லாமியின் முன்னாள் தலைவர் கைது

## பயங்கரவாத ஒழிப்பு பிரிவினரால் கொழும்பில் நேற்று கைதானார்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

இலங்கையில் வஹாபிசத்தையும் ஜிஹாத் கருத்தியலையும் பரப்பிய குற்றச்சாட்டில் ஜமாதே இஸ்லாமி அமைப்பின் முன்னாள் தலைவர் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், பயங்கரவாத ஒழிப்பு பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண நேற்றுத் தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், பயங்கரவாத தடுப்புப் பிரிவால் தெமட்டகொடை

**2018இல் மாவனல்லையில் புத்தர் சிலை உடைத்த சந்தேகநபர்களின் நெருங்கிய உறவினராம்**

யில் 66 வயதுடைய மாவனல்ல முத்தவல பகுதியைச் சேர்ந்த ஜமாஅதே இஸ்லாமி அமைப்பின்



முன்னாள் தலைவர் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் வஹாபிசத்தையும் ஜிஹாத் கருத்தியலை யும் பரப்பியதான குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

04

# ஹலீம் எம்.பிக்கு கொரோனா உறுதி

தனக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ ஹலீம் தெரிவித்துள்ளார்.

தமக்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் எண்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதியானதாகவும், பீ.சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்நிலையில், தம்முடன்



04

### புர்காவை தடை செய்யும்

# அமைச்சரவை பத்திரத்தில் அமைச்சர் வீரசேகர கைச்சாத்து

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக காணப்படும் முகத்தை முழுமையாக மூடும் புர்காவை தடை செய்வது தொடர்பான அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கான பத்திரத்துக்கு தான் கையொப்பமிட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர நேற்று தெரிவித்தார். களுத்துறையில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், புர்கா அணிவது கடந்த காலத்தில்



04

### வெளிநாட்டிலிருந்து திரும்புவோர்

# தனிமைப்படுத்தல் காலத்தை 07 நாட்களாக குறைக்கவும்

## சுகாதார பிரிவிடம் இராணுவத் தளபதி கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாட்டிலிருந்து திரும்பும் இலங்கையரின் தனிமைப்படுத்தல் காலத்தை 07 நாட்களாக குறைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக் கோரிக்கையை இராணுவத் தளபதி

04



### ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும்

# சகல தகுதிகளும் பசிலுக்கு உண்டு

### அமைச்சர் லொக்குகே

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான அனைத்துத் தகுதிகளும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கே உள்ளதென போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.



04

# அசாத் சாலிக்கு எதிராக பல முறைப்பாடுகள் பதிவு

தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவர் அசாத் சாலி அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பில் நேற்றும் குற்றவியல் விசாரணைப் பிரிவில் சிலர் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர். பௌத்த தகவல் மையத்தின் பணிப்பாளர் வண. அங்குலுகல்லே சிறி ஜினானந்த தேரர், தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற



04

# தமிழர் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள முழுமையான அதிகார பகிர்வே தீர்வு

## என்றும் இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு இதுவே

**பருத்தித்துறை விசேட நிருபர்**

தமிழ் மக்களது நீண்டகால இனப் பிரச்சினைக்கு, அர்த்தமுள்ள முழுமையான அதிகாரப் பகிர்வே தீர்வாகுமென்பதில் இந்தியா எப்போதும்

04

**யாழ்ப்பாணத்தில் தமிழர் பிரதிநிதிகளிடம் இந்திய தூதுவர் கோபால் பாக்லே சுட்டிக்காட்டு**



### உயிர்த்த ஞாயிறு, புத்தாண்டு காலத்தில்

# கொரோனா 03 ஆவது அலை ஏற்படும் அபாயம்

### PHI மார் சங்கம் எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலை அபாயம் இருப்பதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எதிர்வரும் பண்டிகை காலங்களில்

04

### கொரோனா சடலங்களை அடக்கம் செய்ய

# மாவட்ட ரீதியாக காணிகள் இனங்காணல்

கொரோனா தொற்று காரணமாக மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு மாவட்ட ரீதியில் காணிகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருத்தமான காணிகள் தொடர்பில் தாமதமின்றி அறிவிக்குமாறு



04

# எஸ்ட்ரா செனெகா தடுப்பூசி குருதி உறைவை ஏற்படுத்துமா?

## WHO ஆராய்கிறது



### மிகச் சிறந்ததென நிபுணர்குழு பரிந்துரை

எஸ்ட்ரா செனெகா தடுப்பூசியை பயன்படுத்துவதை உலக நாடுகள் சில இடைநிறுத்தியுள்ளமை தொடர்பில் ஆராய்ந்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இத் தடுப்பூசியை பெற்ற சிலர் குருதி உறைவு நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதுவே தடுப்பூசியை தடை செய்ய காரணம் எனவும் ஐரோப்பிய நாடுகள் சில தெரிவித்துள்ளன.

இந்த தடுப்பூசி தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர்கள் ஆலோசனை குழுவின் பேச்சாளர் கூறியதாவது,....

04

### விக்கல் வீராச்சாமி



சிவராத்திரி விழாவில சஜித் ஐயா–வின்ட கூட்டணிக் கட்சியின் அந்த மூண்டு தலைகளையும் காணேல்ல....?

ஓ அதுவா, முறையாக அழைக்கவில்லையாம், அதோட தங்கட எதிரிகளுக்–கும் அழைப்பு விடுக்கப்பட்டதால கடுங்கோ–பமாம்...!!!

# தேசிய கொடி பதித்த கம்பளங்கள் விற்பனைக்கு தடை; சீனா உறுதி

## சீனா இலங்கையின் நண்பன் எனவும் தெரிவிப்பு



சீனாவிலுள்ள அலிபாபா வலைத்தளம் மூலம் இலங்கை தேசிய கொடி அச்சிடப்பட்ட கம்பளம் விற்பனை செய்யப்படாதென சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தயாரிப்பு அமேசான் வலைத்தளம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது. இலங்கை தேசியக் கொடியை சீன உற்பத்தியாளர் ஒருவர் கால் துடைப்பானில் அச்சிட்டு விற்பனை செய்வது குறித்து இலங்கை அரசு நடத்திய விசாரணையைத் தொடர்ந்து இந்த அறிக்கையை சீனா

04

தமிழக தேர்தல் அரசியல்...

# வீர வேங்கையாக எதிர்பார்க்கப்பட்ட சசிகலா

# அரசியலில் இருந்து ஓய்வு பெற்றது ஏன்?

அருள் சத்தியநாதன்



'அ.தி.மு.கவைக் கைப்பற்றும் காய் நகர்த்தல்களில் சின்னம்மா' என்ற தலைப்பில் கடந்த 28ம் திகதி இதழில் ஒரு கட்டுரை தீட்டியிருந்தோம். அக் கட்டுரைவெளியாகிய நான்கு நாட்களிலேயே தடாலடி அறிவிப்பை விடுத்தார் சசிகலா. அது புரட்டிப்போடும் ஒரு அறிவிப்பு. அரசியலில் இருந்து ஓய்வு பெறுகின்றேன் என்று நியாயமான எந்தக் காரணத்தையும் அறிவிக்காமல் பாயை சுற்றி கக்கத்தில் வைத்துக் கொண்டு போயே போய்விட்டார்!

அவ்வாறானால், அ.தி.மு.கவை கைப்பற்றும் நோக்கம், நானே இப்போதும் அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் என அறிவிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, விடாப்பிடியாக அ.தி.மு.க. கொடியை தான் சென்னைநோக்கிப் பயணித்த காரில் ஏற்றிக் கொண்டது, அம்மாவின் ஆட்சியை ஏற்படுத்துவேன் என்று சொன்னது, விரைவில் தொண்டர்களை சந்திப்பேன் என்று வழங்கிய உறுதிமொழி... இவை எல்லாம் பொய்யா? தான் கைகாட்டியதால் முதல்வராக பதவியேற்ற எடப்பாடியார் தன்னை கிள்ளுக் கீரையாக கருதுவதால் அவருக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என ஒரு 'ஜெயலலிதா பாணி' ஆத்திரம் அவருக்கு வரவில்லையா? அவர் விடுதலையானதும் பல அ.தி.மு.க பிரமுகர்கள் சின்னம்மாவைப் போற்றி சுவரொட்டிகளையும் பேனர்களையும் வைத்து கட்சியின் சீற்றத்தை சம்பாதித்துக் கொண்டார்களே, அது வெறும் வேடிக்கை மட்டும்தானா? சின்னம்மா சென்னை வந்ததும் எடப்பாடியார் தரப்பு மட்டுமே சின்னம்மாவை கடுமையாக விமர்சிக்க, அ.தி.மு.கவின் இன்னொரு தரப்பு அதைக் கண்டு கொள்ளவே இல்லை. மௌனம் காத்தனர். ஓ. பன்னீர் செல்வம் சின்னம்மா பற்றி வாயே திறக்கவில்லை. சின்னம்மா தன்னை அரசியல் ரீதியாக ஸ்திரப்படுத்திக் கொண்டதும் அ.தி.மு.கவின் ஒரு பகுதியினர் பன்னீர் தலைமையில் வெளியேறி போட்டி அ.தி.மு.கவை உருவாக்கலாம் என்றொரு அரசியல் கணக்கும் போடப்பட்டிருந்தது.

சின்னம்மாவின் முதல் எதிரி எடப்பாடியாரே. அவரை வீழ்த்த வேண்டுமானால் அ. தி.மு.க வின் வாக்குகளைப் பிரிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தி.மு.க வெற்றி பெறும் எடப்பாடியை ஒன்றுமில்லாமல் செய்துவிட்டு அ.தி.மு.கவை கைப்பற்ற வேண்டும். ஸ்டாலின் ஆதரவோடு எடப்பாடி பழனிச் சாமியை உண்டு இல்லை பண்ணிவிடலாம் என்றொரு கணக்கையும் சசிகலா போட்டிருக்க வேண்டும்.

ஆனால் இவ்வளவும் பொய்யாகி விட்டதா? அல்லது சசிகலாவின் அறிவிப்பு தற்காலிகமானதா? சசிகலா ஒரு வீடியோ கடை நடத்திவந்த சாதாரண பெண்மணி. ஜெயலலிதாவின் நட்பு கிடைத்ததும் படிப்படியாக கோடீஸ்வரரானார். பின்னர் இருவருமாக ஊரை அடித்து உளையில் போட்டார்கள். சசிகலா ஜெயலலிதாவின் பினாமியாக செயற்பட்டு வந்துள்ளார். மிடாஸ் என்ற மது உற்பத்தி நிறுவனம் அவருடையது. தமிழக அரசு அவரது மது உற்பத்தி நிறுவனத்தில் இருந்து 40 முதல் 65சதவீதமான மதுவகைகளை வாங்குகிறது. தி.மு.க ஆட்சியிலும் மிடாஸ் நிறுவனத்திடமிருந்து மது வாங்குவதை நிறுத்துவதில்லை. சென்னையில் பிரபலமான தியெட்டர்களை சசிகலா தன்வசம் வைத்துள்ளார். இவ்வளவும் அவருக்குக் கிட்டக் காரணம் அரசியல் செல்வாக்கே. அவர் தன் திரண்ட செல்வத்தைக் கட்டிக்காக்கவும் மேலும் வளர்த்துக் கொள்ளவும் அவருக்கு அரசியல் பலம் அவசியம். அரசியலில் அவர் துறவறம் பெற்றால் அது அவருக்கு உதவப்போவதில்லை. எப்படிப் பார்த்தாலும் சசிகலாவின் அரசியல் துறவறம் நீடிக்க வாய்ப்பில்லை என்பதே யதார்த்தம். இன்றைய திகதியில் சசிகலா என்ற பெயர் அரசியல் செல்வாக்கு மிக்கது. அவர் ஒரு கொள்ளைக்காரியாக இருந்தாலும், அவருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கவே செய்கிறது.

எனவே, சசிகலாவின் 'காசிக்கு போறேன் சன்யாசி'யின் பின்னணி என்னவாக இருக்க முடியும் என்பதை ஆராயவே வேண்டும்.

சசிகலாவின் 'காசி யாத்திரைக்கு பா.ஜ.க விடமிருந்து வந்திருக்கக் கூடிய மிரட்டலுடன் கூடி அழுத்தமே காரணமாக இருந்திருக்க வேண்டும் என்பது விமர்சகர்களின் பொதுவான கணிப்பாகும். பா.ஜ.க. வின் தேவையும், வியூகமும் மீண்டும் எடப்பாடி ஆட்சியைத் தமிழகத்தில் நிறுவுவதே. எவ்வாறேனும் அதை, தமது இருப்புக்காக செய்தேயாக வேண்டும் என்பது பா.ஜ.க தலைமையின் திட்டமாகும். அ.தி.மு.க ஆட்சியில் தொடர்ந்தால்தான் தமிழகத்தில் மதவாத சிந்தனையை புகுத்தலாம். நினைத்தவற்றை செய்து முடிக்கலாம். திராவிட சிந்தனையை கருவறுக்கலாம். இதையேதான பா.ஜ.க கேரளாவிலும், மேற்கு வங்காளத்திலும் செய்ய நினைக்கிறது. இம் மூன்று மாநிலங்களையும் கைப்பற்றிவிட்டால் முழு இந்தியாவையும் காவி நிறமாக்கி விடலாம் என்பது பா.ஜ.க. வின் நீண்டகால அரசியல் இலட்சியம்.

சசிகலா விடுதலையாகி வந்ததும் அவருக்கு பிரமாண் –வரவேற்பு அளிக்கப்பட்டதோடு அடுத்தடுத்த தினங்களில் அவருக்கான உயர் மட்ட செல்வாக்கு அதிகரிப்பதையும் அவர் ஒரு அரசியல் சக்தியாக உருவாகுவதற்கான வாய்ப்புகள் திறந்திருப்பதையும் மத்திய அரசு கவனித்துவந்தது. 1989தேர்தலில் அ.தி.மு.க ஜானகி அணி, ஜெ. அணி எனப் பிரிந்து வாக்கு கேட்டபோது பதவிக்கு வந்தது தி.மு.க.வே! ஆசன எண்ணிக்கை வித்தியாசம் மலைக்கும் மடுவுக்குமானதாக இருந்தாலும் வாக்களிப்பு சதவீதம் தி.மு.கவுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையே வெறும் மூன்று சதவீதமாகவே காணப்பட்டது. தோல்வி அடைந்தாலும் மக்கள் ஆதரவு கைவிட்டுப் போகவில்லை என்பதை ஜெயலலிதா உணர்ந்து கொண்டார். அடுத்து வந்த தேர்தலில் தி.மு.கவை வீழ்த்தி ஆட்சியைக் கைப் பற்றினார் ஜெயலலிதா.

இப்போது அ.தி.மு.கவின் வாக்குகளை சசிகலா இரண்டாகப் பிரிப்பாரானால் தி.மு.கவின் வெற்றி தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை பா.ஜ.க உணர்ந்து கொண்டதால் அந்த விபத்தைத் தடுக்கும் வகையில் சசிகலாவை மிரட்டியோ அல்லது அவருக்கு தலைவலியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளில் இருந்து விடுவிப்பதாக உறுதிமொழி அளித்தோ, தேர்தல் அரசியலில் இருந்து அவரை வெற்றிகரமாக பா.ஜ.க அப்புறப்படுத்தியிருக்க வேண்டும் என்பது அவதானிகள் கருத்து. ஏனெனில், பா.ஜ.கவைத் தவிர வேறு எந்தக் கட்சியாலும் சசிகலாவை தன் சொற்படி ஆட்டுவித்திருக்க முடியாது. ஏனெனில் அவர் வெளியே வந்தபோது அவருக்கு முன்னால் அரசியல் பாதை ஒன்று திறந்து கிடந்தது. அவருடன் சேர்ந்து பயணிக்க கட்சிகளும், தனி நபர்களும் மற்றும் தொண்டர் பட்டாளமும் காத்துக் கிடப்பதும் அவர் அறிந்ததே. தினகரன் ஒரு கட்சியுடன் தயாராகக் காத்துக் கிடந்தார். இந்த நிலையில் – வாய்ப்பான ஒரு சூழலில் – அவர் அரசியலை விட்டுப் போகமாட்டார் என்பதே யதார்த்தம்.

சசிகலாவுக்கு எதிராக இன்னும் பல வழக்குகள் உள்ளன. அவற்றில் இருந்து விடுதலை அளிக்கக் கூடிய அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. பண மதிப்பிழக்கம் செய்யப்பட்ட போது சசிகலாவுக்கு சொந்தமான பெருந்தொகையான பணம் புதுநோட்டுகளாக மாற்றப்பட்டன. பணத்தை புதுநோட்டுகளாக மாற்றிக்கொள்ள விடுக்கப்பட்டிருந்த காலக்கெடு முடிவடைந்த பின்னரே பெருமளவு பணம் மாற்றப்பட்டதாகக் கூறுகிறார்கள். செல்லுபடியற்றதாக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி பெருமளவு இரத்தினகற்களும் நகைகளும் வாங்கப்பட்டதாகவும் ஒரு குற்றச்சாட்டு உண்டு. நிரூபிக்கப்படக் கூடிய சிக்கலான வழக்குகளில் சசிகலா மீண்டும் சிக்க வைக்கப்படுவாரானால் மீண்டும் நீதிமன்றப் படிகளில் ஏறி பல கோடி ரூபாவையும் நேரத்தையும் செலவிட வேண்டி வரலாம் என்ற அச்சமும் உடல் தளர்ந்துபோன சசிகலாவை யோசிக்க வைத்திருக்கலாம்.

இவை காரணமாகவே சசிகலா இத்தேர்தல் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருக்க வேண்டும். பெரும்பாலும் இந்த ஓய்வானது தற்காலிகமானதாகவே இருக்க முடியும். தேர்தல் முடிந்து புதிய அரசு பதவியேற்றதும் அவர் அரசியல் மறு பிரவேசம் செய்யலாம். அதற்கான வாய்ப்புகள் பிரகாசமாகவே இருக்கின்றன. எந்த அரசியல்வாதியும் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளபோது பயன் படுத்தாமல் இருக்க மாட்டார். அரசியலுக்கு பெரும் பணக்காரர்கள் வருவதற்கான காரணம் மக்கள் சேவை மீது அவர்கள் கொண்டிருக்கும் பிரேமையாக இருந்ததில்லை. தாம் சேர்த்த பணத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் மேலும் திரட்டவும்தான் என்பது வெளிப்படையானது. சசிகலா தன் செல்வங்களையும் அதிகார பலத்தையும் காப்பாற்றிக் கொள்ளத் தவறினால் அரசியல் எதிரிகளால் துவம்சம் செய்யப்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கவே செய்கின்றன.

நிரூபிக்கப்படக் கூடிய சிக்கலான வழக்குகளில் சசிகலா மீண்டும் சிக்க வைக்கப்படுவாரானால் மீண்டும் நீதிமன்றப் படிகளில் ஏறி பல கோடி ரூபாவையும் நேரத்தையும் செலவிட வேண்டி வரலாம் என்ற அச்சமும் உடல் தளர்ந்துபோன சசிகலாவை யோசிக்க வைத்திருக்கலாம்

சசிகலா களத்தில் இல்லை என்பது டி.டி.வி தினகரனுக்கு ஒரு பின்னடைவுதான் தி.மு.கவுக்கும் இது ஒரு இழப்பே. ஊர் இரண்டு படாமல் போனதால் கூத்தாடிக்கு இழப்புதானே! அ.தி.மு.க.வுக்கு சசிகலாவின் விலகல் அறிவித்தல் பெருத்த ஆறுதல் என்பதே உண்மை. அக் கட்சி முக்கியஸ்தர்கள் அதை வெளிக்காட்டிக் கொள்ளப் போவதில்லை.

இன்று தமிழக தேர்தல் அரசியலில் ஆறுதரப்புகள் மோதவுள்ளன. தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி, அ.தி.மு.க – பா.ஜ.க கூட்டணி, நாம் தமிழர் கட்சி, கமலின் மக்கள் நீதி மய்யம், அம்மா மக்கள் முன்னேற்றக்கழகம் மற்றும் விஜயகாந்தின் தே.மு.தி.க ஆகியனவே தற்போது களத்தில் இறங்கியுள்ளன.

இத் தேர்தலில் ஸ்டாலின் தலைமையிலான கூட்டணிக்கே வெற்றி வாய்ப்பு உள்ளதாக பரவலான கருத்து உள்ளது. ஆனால் இக் கணிப்புகள் தேர்தல் நெருங்கிவரும் போது மாற்றம் பெறலாம். தி.மு.க கூட்டணி சிறிய வித்தியாசத்தில் தோல்வி அடையுமா என்றால் அப்படி நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தான் கூற வேண்டியிருக்கிறது. ஏனெனில் இக் கூட்டணியைத் தோல்வியடையச் செய்வதற்கு பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் வெகு நேர்த்தியான திட்டங்களை வகுத்து செயற்படுகின்றன.

அ.தி.மு.க தலைமையிலான கூட்டணியில் பிரதான அங்கம் வகிக்கும் கட்சியான பா.ஜ.க, அ.தி.மு.க.வுடன் கூட்டணி ஒப்பந்தம் போட்ட விதம் மற்றும் தொகுதி உடன்பாடு செய்து கொள்ளப்பட்டவிதம் என்பன அதிரடி பாணியில் மேற்கொள்ளப்பட்டன. பா.ஜ.கவே தன்னிச்சையாக செயல்பட்டது போலவே தெரிகிறது. பா.ஜ.க.வுக்கு இருபது தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு வெற்றி வாய்ப்பான கன்னயாகுமரி தொகுதியும் பா.ஜ.க.வுக்குத் தரப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வெற்றி வாய்ப்பு பற்றி கருத்து சொல்ல வந்த சுப்பிரமணியம் சுவாமி, ஒரு தொகுதியிலாவது வெற்றி பெறும் வாய்ப்பு பா.ஜ.க.வுக்கு கிட்டாது என்று ஆருடம் கூறியிருக்கிறார். தமிழகத் தேர்தலில் வென்று அடுத்த ஆட்சியை அமைக்கும் வாய்ப்பு அ.தி.மு.க அணிக்கு கிட்டுமானால் மாத்திரமே பா.ஜ.க. சுமார் ஐந்து தொகுதி வரையில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. அதிக இடங்களை தி.மு.க கூட்டணி கைப்பற்றுமானால் பா.ஜ.க. ஒரு இடத்திலேனும் வெற்றி பெற வாய்ப்பு இல்லை. பா.ஜ.க.வை ஏன் தெரிவு செய்யக்கூடாது என்பதற்கான காரணங்களை பா.ஜ.க.வே உருவாக்கி வைத்திருப்பதால் எதிர்க் கட்சிகளுக்கு வேலை சுலபமாகிப் போயிருக்கிறது.

அ.தி.மு.க கூட்டணியில் இணைந்திருக்கும் பா.ம.க.வுக்கு 23 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் எத்தனை இடங்களில் அக் கட்சிதேறும் என்று தெரியவில்லை. தமிழகமெங்கும் வன்னியர் வாழ்ந்தாலும் அவர்களில் பெரும்பாலானோர் அ.தி.மு.க மற்றும் தி.மு.கவுக்கு வாக்களிக்கக் கூடியவர்களே. எனவே, உறுதியான கொள்கைகள் இல்லாத மற்றும் பா.ஜ.க இணைந்திருக்கும் அணியில் அங்கம் வகிக்கும் பா.ம.க வுக்கு வெற்றி பெறும் அளவுக்கு வாக்காளர்கள் வாக்களிப்பார்களா என்று தெரியவில்லை.

இது இப்படி இருக்க, தற்கொலைக்கு சமனான ஒரு முடிவை தே.மு.தி.க எடுத்திருப்பதாகத் தெரிகிறது. அ.தி.மு.க கூட்டணியில் அங்கம் வகித்த தே.மு.தி.க, தொகுதி உடன்பாடு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்பே அ.தி.மு.கவை பிரேமலதா அம்மையார் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கியிருந்தார். தொகுதி உடன்பாட்டு பேச்சுவார்த்தையின் போது தே.மு.தி.க.வுக்கு 15 தொகுதிகள் வரை ஒதுக்கித்தர அ.தி.மு.க. முன்வந்தது. அதை முற்றிலுமாக நிராகரித்த பிரேமலதா, பா.ம.க.வுக்கு தரப்படும் அதே எண்ணிக்கை தமக்கும் ஒதுக்கித்தரப்பட வேண்டும் என்று பிடிவாதம் காட்டினார்.

தே.மு.தி.க ஒரு சமயத்தில் 12.5 சதவீத வாக்கு வங்கியைப் பெற்றிருந்தது உண்மைதான். பின்னர் அதன் வாக்கு வங்கி 2.5 சதவீதமாகக் குறைந்தது. ஆனால் தற்போதும் 12 ½ சதவீதம் என்ற நிலைப்பாட்டில் இருக்கும் அக்கட்சி, பா.ம.க.வுக்கு சமனாக தம்மையும் கருதவேண்டும் என கோருகிறது. அ.தி.மு.க தலைமை இதை ஏற்பதாக இல்லை.

இந்தப் பிரச்சினை தீவிரமடைந்த நிலையில் தாம் அ.தி.மு.க கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்து, விலகியும்கொண்டது. இதையடுத்து தமது கூட்டணியில் இணையுமாறு கமலின் மக்கள் நீதிமய்யம் விடுத்த வேண்டுகோளையும் புறக்கணித்துள்ள தே.மு.தி.க, தனியாக இத் தேர்தலில் களம் காணவுள்ளதாக அறிவித்துள்ளது. அவ்வாறு தனிக் கட்சியாகக் களம் காணுமானால் அது தற்கொலைக்கு ஒப்பானதாகவே அமையும். அனேகமாக அனைத்து தொகுதிகளிலும் கட்டுப்பணம் இழந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

## பிரதேச செயலாளர் எம்.எம் நஸீரின் சேவைகள் பாராட்டி கௌரவிப்பு









இடமாற்றம் பெற்றுச் செல்லும் கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம் நஸீரின் சேவைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் டாக்டர் எஸ். எம்.ஏ அஸீஸ் தலைமையில் வெள்ளிக்கிழமை (12) நடைபெற்றது. கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகையை தொடர்ந்து நடைபெற்ற இந் நிகழ்வில் கடந்த மூன்று வருடங்களாக கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றி தற்பொழுது இடமாற்றம் பெற்று செல்லும் எம். எம் நஸீரின் மக்கள் நல சேவைகள் பாராட்டப்பட்டன.

# ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர் தமிழர்களுக்கு சாதகமானதா?

எம்.ஜி.ரெட்ணகாந்தன் ...





ஓர் ஏரிக்கரையில் கிழட்டு கொக்கு ஒன்று வசித்து வந்தது, அதற்கு ஏரியில் இறங்கி மீன்களை பிடித்து உண்ண முடியவில்லை. கொக்கு தந்திரமாக மீன்களை பிடிக்க ஏரியில் இறங்கி அமைதியாக நின்றது. மீன்கள் கொக்கின் பக்கம் வந்தபோது கூட அது மீன்களை பிடித்து உண்ணவில்லை, இதனை பார்த்த நண்டு ஒன்று கொக்கிடம் ஏன் மீன்களை பிடிக்கவில்லை என கேட்க, எனக்கு உயிர்களை கொல்ல விருப்பமில்லை செய்த பாவங்கள் எல்லாம் போதும் நான் அன்பாக இருந்து என்ன பிரியோசனம் மீன்களுக் கெல்லாம் பேராபத்து ஒன்று வரப்போகிறது என நீலிக்கண்ணீர் வடித்தது கொக்கு. நண்டு என்ன ஆபத்து என கேட்க, இந்த ஏரியில் அனைத்து மீன்களையும் ஒரே நாளில் பிடித்து செல்ல வேண்டும் என சில மீனவர்கள் பேசிக்கொண்டதை கேட்டேன் என கூறிற்று. மீன்களெல்லாம் இதை கேள்விப்பட்டு கொக்கிடம் வந்து நாங்கள் உயிர்தப்ப வழியே இல்லையா எனக் கேட்டன. அதற்கு கொக்கு காட்டு பகுதியில் இன்னொரு குளம் உள்ளது. என்மீது நம்பிக்கை இருந்தால் என்னுடன் வாருங்கள் உங்களை சுமந்து சென்று அந்த குளத்தில் விட்டு விடுகிறேன். அங்கே மீனவர்கள் வர மாட்டார்கள் என நயவஞ்சகமாக கூறியது. அதன் பேச்சைக் கேட்ட மீன்கள் கொக்குடன் பயணம் செய்ய சம்மதித்தன. ஒவ்வொரு நாளும் தன்னால் முடிந்த அளவுக்கு மீன்களை சுமந்து சென்ற கொக்கு பாறை ஒன்றின் மேல் போட்டு சாப்பிட்டு தீர்த்தது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தமிழ் மக்களின் நிலைமை மேற்கூறிய கதைக்கு ஒப்பானதாகவே இருக்கின்றது. இலங்கை ஒரு ஜனநாயக நாடு அதன் இறைமையில் வேறு நாடுகள் தலையிட முடியாது. உள்நாட்டில் உள்ள அரசியல் பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக் கொள்கிறோம் என்ற நிலைப்பாட்டில் இலங்கை உறுதியாக உள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களை பொறுத்தவரையில் ஐ.நா கூட்டத்தொடர் தொடர்பாக எந்தவிதமான அக்கறையும் அற்றவர்களாகவே இருக்கின்றார்கள். வடக்கு கிழக்கில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசிய கட்சிகள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் 46 வது கூட்டத்தொடரில் தமிழர்களுக்கு தீர்வு வந்துவிடும் என்பது போல் அறிவிப்புக்களையும் பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வருகின்றன.

தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் மார்ச் மாதம் வந்துவிட்டால் தமிழ் தேசிய கட்சிகள் மற்றும் தமிழ் தேசியம் பேசும் அமைப்புக்கள் பரபரப்பாக கிளம்பி விடும். தமிழ் தேசிய பேரவையை உருவாக்க போகிறோம், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை நடை பயணம், லண்டனில் அம்பிகை அம்மாவின் சாகும்வரை உண்ணாவிரதம், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் என ஊடகங்களில் பரபரப்பாக செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

கடந்த காலங்களில் கூட ஐ.நா கூட்டத்தொடர்கள் நடைபெற்ற காலப்பகுதிகளில் நாங்கள் தான் இலங்கை மீது சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தோம் என தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் உரிமை கொண்டாடி அறிக்கைகளை விடுத்திருந்தன.

தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஒரு படி மேலே சென்று தாங்கள் கோரியதற்கு அமைவாக சர்வதேச விசாரணையை அப்போதைய அதாவது 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பான விசாரணைக்கான ஐ.நா நிபுணர் குழுவின் ஒரு உறுப்பினரும். சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான யஸ்மின் சூக்கா தலைமையில் சர்வதேச விசாரணை நிறைவு பெற்றுள்ளதாக வவுனியாவில் குருமன்காட்டில் அமைந்திருந்த தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் பாராளுமன்ற தேர்தல் உறுப்பினர் அறிமுக நிகழ்வில் உரையாற்றிய போது தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கான ஐ.நா.வின் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான யஸ்மின் சூக்கா, நீதியையும் பொறுப்புக் கூறலையும் அடைவதற்கு மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளன என்பதற்கான சாட்சியங்கள் அவசியம். அத்துடன் மனித உரிமைகள் பற்றிய ஐ.நா.வின் அறிக்கைகள் சர்வதேச சமூகம் மற்றும் குறிப்பாக உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுப்பதற்கு மிகவும் முக்கியமானவை என தெரிவித்திருந்தார். இங்கே ஐ.நா.வின் இலங்கைக்கான நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளராகிய யஸ்மின் சூக்கா இலங்கைக்கான சர்வதேச விசாரணை நிறைவு பெற்று விட்டது என எச்சந்தர்ப்பத்திலும் கூறியிருக்கவில்லை.

அதேபோல் 2015 ஆம் ஆண்டு பி.பி.சி செய்தி சேவைக்கு கருத்து தெரிவித்த இரா. சம்பந்தன் இலங்கை விவகாரத்தில் சர்வதேச விசாரணையை தாமும் தமது கட்சியும் வலியுறுத்தியதாகவும் அதற்கு முந்தைய ஆண்டு பங்குனி மாதம் சர்வதேச விசாரணை கோரி ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டதாகவும் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை சில நாட்களில் வெளிவரும் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால் அவ்வாறான அறிக்கை ஒன்று இன்னும் வரவில்லை.

இதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஐ.நா.குறித்து கட்டுக்கதைகளை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்க, தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது வடக்கில் ஓரளவு அரசியல் செல்வாக்கை பெற்று இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்டு முன்னெறியுள்ள நிலையில் பிரித்தானியாவில் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துவரும் திருமதி அம்பிகை செல்வக்குமாருக்கு ஆதரவு தெரிவிப்பதுடன் 13 வது நாளை எட்டும் அவரது போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாகவும் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ் மக்களுக்கான நீதியை பெற்றுத் தர இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் என தெரிவித்து தனது அரசியல் சித்து விளையாட்டை ஆரம்பித்துள்ளது.

இங்கே கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் தமிழ் தேசியம் பேசும் எந்த கட்சியும் உள்ளூரில் போராடுவதற்கு தயாராக இல்லை எங்கேயாவது போராட்டம் நடந்தால் அதை வைத்து அரசியல் இலாபம் பார்க்கும் நோக்கத்துடன் அறிக்கைகளை விடுவதற்கு மாத்திரம் தயாராக இருக்கின்றார்கள்.

மக்களை அணி திரட்டி அம்மக்களின் நியாயமான உரிமைகளை பெற்றுக்கொடுக்க போராட முன்வராத தமிழ் தேசிய கட்சிகள் ஐ.நா கூட்டத்தொடர், முள்ளிவாய்க்கால் நினைவுதினம், புலிகளின் மாவீரர் தினம் மற்றும் திலீபனின் நினைவு தினம் என சில நிகழ்வுகளை குத்தகைக்கு எடுத்து அரசியல் செய்து வருகின்றார்கள்.

ஐ.நா.வின் மனித உரிமைகள் கூட்டத்தொடருக்கு தமிழ் தேசிய கட்சிகள் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்கள். அதில் நீதி மறுக்கப்பட்ட மக்களுக்கு காலம் கடத்தாமல் நீதி வழங்குமாறு உறுப்பு நாடுகளுக்கு வலியுறுத்துவதாக தெரிவித்துள்ளனர். கடந்த காலத்தில் நடைபெற்ற கூட்டத்தொடர்களில் இதே தமிழ் தேசிய அரசியல்வாதிகள் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தை வழங்கியிருந்தனர்.

உண்மையில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரித்துவரும் நிலையில் அவைகளை களைவதற்கான எந்தவிதமான காத்திரமான அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தமிழ் தேசிய கட்சிகள் தயாராக இல்லை, வடக்கில் ஆக்கிரமிக்கப்படும் சைவர்களின் வழிபாட்டு தலங்கள், தமிழ் மக்கள் மீது தொல்பொருள் திணைக்களத்தால் தொடுக்கப்படும் வழக்குள், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிப்பு, விடுவிக்கப்பட்ட காணிகளில் மீள் குடியேற்றம், இரணைதீவு மக்களின் பிரச்சினை, பட்டதாரிகள், சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப்பு, பறிபோகும் தமிழர் நிலங்கள் என தமிழ் மக்கள் தெருவில் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் தமிழ் தேசிய கட்சிகள் வேறு எங்கேயோ தங்கள் அரசியலை செய்து கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகளாகிய அரசியல் கைதிகள் பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினை, மீள்குடியேற்றம் போன்றவை உள்ளபோதும் அவை குறித்து இப்போது யாரும் பேசுவது இல்லை. இலங்கை அரசானது சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்க முன்வராத பட்சத்திலும் இலங்கையில் கொரோனா பெருந்தொற்றால் உயிரிழந்தவர்களை எரியூட்டி வந்த நிலையில் முஸ்லிம் மக்களின் சடலங்களை எரியூட்டுவதற்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியிருந்தது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலர் அரசாங்கத்திடம் இஸ்லாமியரின் உடலங்களை புதைப்பதற்கு கோரிக்கை விடுத்த போதும் அக்கோரிக்கைகளை அரசு அலட்சியம் செய்திருந்தது.

ஐ.நா.வின் 46 வது கூட்டத்தொடரை இராசதந்திர ரீதியில் சாதகமாக பயன்படுத்திய முஸ்லிம் தலைமைகள் இஸ்லாமிய நாடுகள் ஊடாக இலங்கைக்கு கொடுக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக இலங்கை அரசு முஸ்லிம் மக்களின் சடலங்களை எரியூட்டாமல் அடக்கம் செய்வதற்கான அனுமதியை வழங்கியிருந்தது. கடந்த ஐ.நா.கூட்டத் தொடர்களில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கி தேன் நிலவு கொண்டாடிய தமிழ் தேசிய கூட்டமைப்பு சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான இராசதந்திரங்கள் அற்ற ஒரு அரசியல் அமைப்பாகவும் சுயநலமிக்க அரசியல் கூடாரமாகவும் செயற்பட்டு வருவதானது தமிழ் மக்களை நிரந்தரமான அரசியல் சூனியத்திற்குள் தள்ளி விட்டுள்ளது.

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பதாக காட்டிகொண்டுள்ள இந்திய அரசானது ஈழத்தமிழர் விவகாரத்தை தனது பிராந்திய சுயநலத்திற்காக பயன்படுத்தி வருகின்றது. தமிழ் தேசிய அரசியல்வாதிகள் இலங்கை தமிழர் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து வாய் திறக்காமல் கள்ள மௌனம் சாதித்து வருகின்றனர். இலங்கையில் தமிழர்களை தனது அரசியல் நலன்களுக்காக அவ்வப்போது பயன்படுத்தும் இந்தியா இறுதியில் கைவிடும் அல்லது அழித்துவிடும் இதுவே கடந்தகால வரலாறாக இருக்கின்றது. இப்போது இலங்கையின் சீன சார்பு நிலையை தடுப்பதற்கு ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா தனது பிராந்திய நலன் கருதி கையில் எடுத்துள்ளது.

இலங்கையில் சிங்கள மக்கள் சீன சார்பு நிலையையும், முஸ்லிம் மக்கள் இஸ்லாமிய நாடுகளின் அரசியல் ஆதரவு நிலையையும் பெற்று தங்கள் அரசியல் இருப்பை தக்கவைத்துள்ள நிலையில் தமிழ் மக்கள் உலக நாடுகளினால் ஒதுக்கப்பட்டவர்களாக அரசியல் பலமற்றவர்களாக அனைத்து தரப்பினராலும் ஏமாற்றப்பட்டு தெருவில் இறங்கி தங்கள் உரிமைகளுக்காக போராடி வரும் அரசியல் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

இந்து மற்றும் பசுபிக் பிராந்தியங்களின் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி அமெரிக்கா இந்தியா போன்ற வல்லரசுகளின் தேவைக்கு ஏற்பவே இலங்கை விவகாரம் ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கையாளப்படும் என்பதனை உறுப்பு நாடுகள் வழங்கிய பரிந்துரையில் காணக்கூடியதாக உள்ளது.

தமிழ் தேசிய கட்சிகளையும், தமிழ் மக்களையும் நம்பவைக்கும் நோக்கில் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் ஆணையாளரின் பரிந்துரையில் ஐ.சி.சி எனப்படும் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்த வேண்டும் என்ற வாசகம் காணப்பட்டது.

ஆனால் தற்போது இலங்கை விவகாரத்தை கையாளும் பிரித்தானியா தலைமையிலான நாடுகளான கனடா, ஜேர்மனி, மாலாவி, மசிடோனியா மற்றும் மொன்றியோ ஆகிய நாடுகளை உள்ளடக்கிய கருக்குழு நாடுகள் வழங்கியுள்ள பரிந்துரையில் ஐ.நா.ஆணையாளரியால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் முற்றாக நீக்கம் செய்யப்பட்டு அமரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற வல்லாதிக்க நாடுகள் தமக்குரிய புவிசார் அரசியல் நிலைசார்ந்து பேரம் பேசக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

உலக அரசியலில் இந்தியாவை மையப்படுத்தி அமரிக்கா மற்றும் பிரித்தானியாவி;ன் காய் நகர்த்தல்கள் ஈழத்தமிழர்களுக்கு எப்போதும் ஆதரவாக இருக்கப் போவதில்லை.

சீனாவிடம் இலங்கை சார்ந்துவிடக் கூடாது எனும் வல்லாதிக்க நாடுகளின் அச்சத்தை இலங்கை திறம்பட கையாள்கின்றது. இந் நாடுகளின் அச்சத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் இலங்கை ஈழத்தமிழரின் அரசியல் தீர்வு மற்றும் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளின் பொறிமுறைகளை இலங்கை தனக்கு சார்பாக பேரம் பேசி மாற்ற முனைகின்றது.

இலங்கையை அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற வல்லாதிக்க சக்திகள் அச்சுறுத்துகின்றன என்பதற்கு பதிலாக இலங்கையிடம் அவை மண்டியிடுகின்றன என்பதே பொருத்தமாகும். ஆனால் தமிழ் தேசிய தலைமைகள், புலம்பெயர் அமைப்புக்கள் வல்லாதிக்க நாடுகள் தீர்வை பெற்றுத்தர போவதாக தமிழ் மக்களை நம்பவைத்து ஏமாற்றுகின்றனர்.

ஐ.நாவில் கருக்குழு நாடுகள் சமர்ப்பித்த வரைபில் இலங்கையின் ஒற்றையாட்சி முறைமையை காப்பாற்றும் விதத்திலும், இலங்கையுடன் பேரம் பேசக்கூடிய வகையில் அமைந்துள்ளதுடன், இலங்கையின் பொறுப்பக்கூறல் மாத்திரம் வலியுறுத்தப்பட்டு இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்து பரிந்துரையின் ஆரம்பத்திலேயே இலங்கையின் இறைமை,தனித்துவம் போன்ற ஒற்றையாட்சி தன்மைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வாசகங்கள் காணப்படுகின்றன. ஈழத்தமிழ் மக்கள் கோருகின்ற வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சியுடன் கூடிய சுயநிர்ணய உரிமை பற்றிய பேச்சுக்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

உலகில் எந்த ஒரு நாடும் ஈழத்தமிழருக்காக இதய சுத்தியுடன் குரல் கொடுக்க போவதில்லை மாறாக தமது நலன்சார்ந்த விடயங்களுக்கு எதிராக இலங்கை செயற்பட எத்தனிக்கும் போது இலங்கையை பணிய வைக்க அல்லது கடிவாளம் இடுவதற்காக மாத்திரம் ஈழத்தமிழர் விடயங்கள் கையில் எடுக்கப்படும்.

தமிழ் தேசிய கட்சிகளின் சாதாரண கட்சி அரசியல் செயற்பாடுகள் தமிழ் மக்களின் அரசியல் பயணத்தை மேலும் மோசமாக்கும் என்பதுடன் ஐ.நா.வையும், இந்தியாவையும் நம்புவது தமிழ் மக்களை மேலும் அரசியல் நாதியற்ற இனமாக மாற்றிவிடும். ஆகவே ஈழத்தமிழர்களின் கட்சி அரசியலுக்கு அப்பாலான ஒன்றுபட்ட அரசியல் திரட்சியே அவர்களின் அரசியல் உரிமைகளை பெற்றுத்தரும், இல்லாவிட்டால் கொக்கை நம்பிய மீன்களின் கதையாகவே ஈழத்தமிழரின் கதை முடிந்துவிடும்.




# பொறுமையுடன் புதிதாக சிந்திப்பதே அவசியமானது

அமைதியாக இருக்க வேண்டிய நாடு குழப்பத்தில் உள்ளது. மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலையே விரும்புகிறார்கள். ஆனால் எங்கும் அமைதியின்மையே காணப்படுகிறது. அடிக்கடி தீப்பற்றி எரிகிறது. தேவையான விடயங்களுக்கு மாத்திரமல்லாது தேவையற்ற விடயங்கள் பற்றியும் விவாதங்கள் நடத்தப்படுகின்றது. அதனால் எழுப்பப்படும் கோஷங்களால் மக்கள் வாழ்க்கை பெரும் அழுத்தத்தை சந்தித்துள்ளது. அடுத்தவர்களின் கருத்தை தோல்வியடைய செய்து தங்களுடைய கருத்தை மாத்திரம் உறுதி செய்ய எடுக்கும் முயற்சி அபத்தமானது.

அண்மைக்காலமாக நடைபெற்ற ஏழெட்டு சம்பவங்களை நினைவுப் படுத்திப் பாருங்கள். கொவிட் வைரஸை கட்டுப்படுத்தினாலும் தவறு. கட்டுப்படுத்தாவிட்டாலும் தவறு. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மருந்தால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பான விடயம் இன்னுமொரு உதாரணமாகும்.

அந்த நெருப்பு அணையும் போது அதிவேகப் பாதையில் உள்ள அரிய மரம் பற்றிய சர்ச்சை எழுந்தது. கொவிட் தொற்றினால் மரணமடையும் முஸ்லிம்களின் உடலை எரிப்பது பற்றிய பிரச்சினை பல மாதங்களாக விவாதிக்கப்பட்டது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் ஆணைக்குழு அறிக்கை இன்னொன்று. ஜெனீவா மனித உரிமை சபை விவகாரம் இன்னொரு விவாதம். ஜனாதிபதி கிராமங்கள் தோறும் சென்று மக்களை சந்திப்பதை கேலியாக நோக்குவதுடன் விமர்சிக்கவும் செய்கிறார்கள். அரசியல்வாதிகள், தொழில் நிபுணர்கள்,தொழிற்சங்க பிரதிநிதிகள். தேரர்கள் உள்ளிட்ட வணக்கத்துக்குரிய மதத்தலைவர்கள், சமூக ஊடக பயனாளர்கள் மாத்திரமல்லாது கருத்துத் தெரிவிக்காவிட்டால் நாட்டை காப்பாற்ற முடியாது என எண்ணும் சிலரும் நாம் குறிப்பிடும் வாதப்பிரதிவாதங்களின் பங்குதாரர்களாவார்கள்.ஒரு சம்பவத்தில் மாட்டிக்கொள்ளும் சிலருக்கு அதன் சாரம் உள்விவகாரம் பற்றி எவ்வித புரிதலும் காணப்படுவதில்லை. கெமராவின் முன்னால் வார்த்தைகளை அள்ளி வீச பலர் தயாராக உள்ளார்கள். அநாவசியமான எவ்வித தொடர்புமில்லாத ஒன்றில் சிக்கியுள்ளதை அறியாமலேயே நிறுத்தாமல் போர் புரிகிறார்கள்.இந்த துக்க துயரங்களை வீட்டின் வரவேற்பறைக்கு கொண்டு வரும் ஊடகம் இந்தப் பிரச்சினையை தீவிரமாக்கியுள்ளது. சமூக பொறுப்புகளும் கடமைகளும் மறந்து போயுள்ளதோடு சமூக ஊடகங்களும் அதிக பாதிப்பை ஏற்படுத்துவதாக தெரிகிறது.

புத்தரின் தர்ம போதனையில் கூறப்படும் கதையொன்று உள்ளது. பரணஸ் நகரில் நடந்த சம்பவமொன்று. அரச சபையில் புரோகிதர் ஒருவர் தெரிந்த, தெரியாத எல்லா விடயங்களிலும் தலையிடுவதோடு நீண்ட உரையையும் ஆற்றுவார். அரசனுக்கும் அமைச்சர்களுக்கும் பெரும் தலைவலியாக இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் பிலா என்னும் மாற்றுத்திறனாளியை அரசர் சந்தித்தார். அவன் குறிபார்த்து கல் எறிவதில் கெட்டிக்காரன். அரசன் அவனை மாளிகைக்கு அழைத்து வந்து ஒரு பாத்திரத்தில் ஆட்டு பிழுக்கைகளை கொடுத்து மாடியில் தங்க வைத்தார். முன்னர் கூறிய புரோகிதர் கதைப்பதற்கு வாயை திறக்கும் போது ஒவ்வொரு பிழுக்கையாக அவரது வாயில் எறியுமாறு அரசன் கூறினான். வாயை திறக்கும் போது, வாயில் விழுந்ததை விழுங்கிய பின்னர் மீண்டும் கதையை ஆரம்பிப்பார். இது தொடர்ந்தது. பிலா பாத்திரத்திலுள்ள எல்லா பிழக்கைகளையும் புரோகிதர் வாயில் எறிந்த பின்னர் அரசன் புரோகிதரிடம உண்மையை கூறியதாக கதையில் கூறப்பட்டுள்ளது. எல்லா சந்தர்ப்பங்களிலும் வாயை திறக்கும் பலர் எம்மிடையே உள்ளார்கள். சம்பவங்களில் தலையிடுவோரின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டால் போதுமான அளவு ஆட்டுப்பிழுக்கைகளும் கிடைக்காது. மாற்றுத்திறனாளியாக இருந்தாலும் பிலா போன்ற இளைஞர்களும் ஆயிரக்கணக்கில் தேவைப் படுகிறார்கள்.

நாடு என்பது பலதுறைகளின் இணைப்பாகும். அவை ஒவ்வொன்றிலும் மாறுபட்ட செயல்களே நடைபெறுகின்றன. எமக்கு பொருந்தாத விடயம் இன்னொரு தரப்பாருக்கு முக்கியமானதாக இருக்கலாம். ஜனநாயகத்தின் உயர்பண்புகளை மதிப்பது அவசியமாகும்.

எனது விருப்பத்துக்கு ஏனையோர் அடிபணியத்தேவையில்லை. மற்றையவரின் கருத்துக்கும் மதிப்பளிக்க வேண்டும். பலமாக கோஷமெழுப்பி பலாத்காரமாக ஏனைய தரப்பினரின் கருத்தை அடக்குவது ஒரு போதும் நல்லதல்ல.

வளர்ச்சியடைந்த நாட்டில். வளர்ச்சியடைந்த சமூகத்தை அளக்கும் அளவு கோலுண்டு. அரசியல்வாதி, அறிஞர்கள், தொழில் நிபுணர்கள். தொழிற்சங்க தலைவர்களிடம் எதிர்பார்க்கும் கட்டுப்பாடுகள் உண்டு. தலைமைப் பண்புகள் உண்டு. மகா தேரர்கள் உள்ளிட்ட மதத் தலைவர்களிடம் எதிர்பார்க்கும் எடுத்துக்காட்டுகள் மிக ஆழமானவை. கருத்து குழப்பங்களால் உண்மை வெளிவராது. நாம் அனைவரும் தற்போதைய சத்தம் நிறைந்த சூழலில் பொறுமையுடன் புதிதாக சிந்திப்பது அவசியமாகும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

# 2031 ஆம் ஆண்டில் 2 ஆவது சிறுபான்மை இனமாக தமிழர்கள்

## சமூதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

இலங்கையில் இதுவரை காலமும் முதலாவது சிறுபான்மை இனமாக இருந்த தமிழர்கள் 2031 ஆம் ஆண்டளவில் இரண்டாவது சிறுபான்மை இனமாக தமிழர்கள் காணப்படுவார்கள் என சமூதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தமிழர்களின் எதிர்காலம் ஒரு குடித்தொகையியல் நோக்கு எனும் நிகழ்வில் பிரதம வளவாளராக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ் மக்களின் சனத் தொகை பெருக்க வீதம் வருடா வருடம் குறைவடைந்தே செல்கிறது. யுத்தம், நலிவுற்ற பொருளாதாரம், புலம் பெயர்வு, காலம் பிந்திய திருமணம், குடும்ப கட்டமைப்பு சிதைவுகள், நாகரீகம், கருத்தடைகள், குடும்ப கட்டுப்பாடுகள், என பல்வேறு காரணிகளை கூறிக் கொண்டே போகலாம். இந்த காரணிகளால் தமிழர்களின் சனத் தொகை குறைவடைந்து செல்கின்றமையை நாம் கண்முன்னே காண்கின்றோம், வடக்கு கிழக்கில் தமிழ் பாடசாலைகளில் தரம் ஒன்றில் இணைந்து கொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் குறைவடைந்து செல்கின்றமையை புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.இது எமது இனத்திற்கு ஆபத்தானது.



யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் (12) இலங்கையிலுள்ளஅமெரிக்க தூதுவர் அலெய்னா பி டெப்ளிட்ஸை தூதரகத்தில் சந்தித்தார். வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் தேவைப்பாடுகள் தொடர்பாக தூதுவரிடம் பாராளுமன்ற உறுப்பினர் விசேட கோரிக்கையொன்றையும் விடுத்துள்ளார். (சாவகச்சேரி விசேட நிருபர்)


# பிரதமர் 19ஆம் திகதி பங்களாதேஷ் பயணம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் 19ஆம் திகதி பங்களாதேஷிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

பங்களாதேஷ் நாட்டின் அழைப்பையேற்று அங்கு செல்லும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருப்பாரெனவும் தெரிவிக்கப்பட்டுகிறது.

இந்த விஜயத்தின்போது அவர் பங்களாதேஷ் அரச பிரமுகர்களை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.



# தவக்கால சிந்தனை

## கிறிஸ்து வழி மீட்பு

இன்று தவக்காலத்தின் நான்காம் வாரத்தில் அடி எடுத்து வைக்கின்றோம்.

இயேசுவின் மீட்புச் செயலை நினைவுகூர்ந்து கொண்டாடும் பண்டிகை நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

உண்மையில் எமது குற்றங்கள் வழியாக தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகி இழப்புக்கு ஆளாக வேண்டிய நாம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால் மீட்கப்பட்டுள்ளோம். இதற்கு காரணம் கடவுள் எம் மீது வைத்த அளவில்லா அன்பே.

இரக்கம் நிறைந்த ஆண்டவர் இந்த புதிய வாழ்வை இயேசு கிறிஸ்து வழியாகத் தந்தார்.

இது எமது மனித செயலால் நிகழ்ந்தது அல்ல. இதை குறித்து நாம் பெருமை பாராட்ட முடியாது.

பாவத்தினால் விழுந்த நிலையில் இருந்த மனித குலத்தை ஆண்டவர் உயர்த்தி தமக்கு உரிமையாக இயேசுகிறிஸ்துவை சிலுவையில் உயர்த்தப்பட கையளித்தார். அவரை நோக்கிப் பார்ப்போர் யாவரும் மீட்புப் பெறுவர். ஏனென்றால், சிலுவையில் அவர் செய்த அந்த உயிர் தியாகமானது எமது வாழ்வை கடவுளுடைய வழிக்கு மாற்ற வல்லது.

இறைவனோடு வாழும் வாழ்வாகிய தாயகத்தை விட்டு, பாவ அடிமை வாழ்வாகிய பபிலோன் என்னும் அடிமை தேசத்தில் இருந்து மீண்டு வர, இயேசு தம்மையே எமக்காக பலியாக்கினார்.

இத் தவக்காலம் எமக்கு இறைவனின் அன்பை உணர்த்தட்டும். நாம் சிலுவையை நோக்கிப் பார்த்து மீட்பினை சுவைப்போமாக.

இந்த தவக்காலத்தில் அதற்காக விசேட விதமாக மன்றாடுவோம்.

அருட்சகோ றீகன் லோகு...

## அசாத் சாலிக்கு எதிராக...

உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் ஆகியோரே இவ்வாறு நேற்று முறைப்பாடுகளைப் செய்தனர். இஸ்லாமிய சட்டம் தொடர்பில் அண்மையில் அசாத் சாலி தெரிவித்த கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இவர்கள் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

## தனிமைப்படுத்தல் காலத்தை...

சவேந்திர சில்வா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விடுத்துள்ளார். அத்தோடு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்த அனுமதிக்குமாறும் அவர் கோரியுள்ளார். இவ்விரண்டு கோரிக்கைகளும் எதிர்வரும் நாட்களில் அங்கீகரிக்கப்படுமென நம்புவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நம்பிக்கை தெரிவித்தார். ஹோட்டல்களில் தனிமைப்படுத்தும் போது வெளிநாட்டில் இருந்துவரும் இலங்கையர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா 03 ஆவது...

அரசாங்கம் சரியான வழிகாட்டல்களை உருவாக்கி மக்கள் அதன் கீழ் செயல்படவில்லையென்றால், ஒரு பேரழிவை எதிர்கொள்ளக்கூடுமென்று சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் வழக்கம் போல் நடைமுறையிலுள்ளன. இந்தச் சூழலில்தான் உயிர்த்த ஞாயிறு தினத்தையும் புத்தாண்டையும் கொண்டாட நாங்கள் தயாராகி வருகிறோம்.

குறிப்பாக பிரேசில் போன்ற நாடுகளில், கோவிட் 19 தொற்று எதிர்பாராத விதமாக மீண்டும் அதிகளவில் பரவுகிறது.

அதனாலேயே நாங்களும் எச்சரிக்கிறோம். வரவிருக்கும் உயிர்த்த ஞாயிறு மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு அரசாங்கமும் சுகாதார அமைச்சும் சரியான வழிகாட்டல்களை வகுக்கவில்லையெனில், புத்தாண்டுக்குப் பிறகு மூன்றாவது அலைகளில் ஒரு பேரழிவை எதிர்கொள்வோமென்றும் நாங்கள் எச்சரிக்கிறோம்.

## தேசியக் கொடி பதித்த...

வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஒரு நாட்டின் அடையாளமான தேசியக் கொடிக்கு முழு மரியாதை அளிக்க வேண்டுமென்பதே சீனாவின் நிலைப்பாடென்று கொழும்பிலுள்ள சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது.

அனைத்து சூழ்நிலைகளிலும் சீனா இலங்கையின் நெருங்கிய நண்பனாக இருக்குமென்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.நாட்டில் அமைதி, செழிப்பு மற்றும் கௌரவத்திற்கும் மற்றும் சர்வதேச அளவிலும் சீனா இலங்கையை ஆதரிக்குமென்று கூறியுள்ளது. சீனாவிலுள்ள அலிபாபா வலைத்தளம் மூலம் இலங்கை தேசிய கொடி அச்சிடப்பட்ட கம்பளம் விற்பனை செய்யப்படாதென்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

## அஸ்ரா செனெகா தடுப்பூசி...

அஸ்ரா செனெகா தடுப்பூசி மிகச் சிறந்ததென்பதோடு, அந்த தடுப்பு மருந்தை நாங்கள் தொடர்ந்து பயன்படுத்தவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அஸ்டிரா செனேகாவின் தடுப்பூசி குறித்த அவுஸ்திரேலியாவின் சுகாதார அதிகாரிகள் கரிசனை எதனையும் வெளியிடவில்லையென பிரதமர் ஸ்கொட்மொறிசன் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடதக்கது. இந்த விவகாரம் குறித்து சுகாதார திணைக்களத்தின் செயலாளருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள பிரதமர் அவுஸ்திரேலியாவில் அஸ்டிரா செனேகாவை பயன்படுத்துவதை இடைநிறுத்துமாறு ஆலோசனை வழங்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

## அயல்நாட்டு கொள்கையில்...

இதன்போது ஆராயப்பட்டுள்ளதாக இந்திய பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, கொவிட்19 தொற்று காரணமாக எதிர்நோக்கியுள்ள சவால்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் அயல் நாட்டு கொள்கையில், இலங்கைக்கே முக்கியத்தும் வழங்கப்படுமென இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## ஹலீம் எம்.பிக்கு...

தொடர் புடையவர்களை சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறு பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ ஹலீம் கோரியுள்ளார்.

## சகல தகுதிகளும்...

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அலுவலகத்தில் (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மீண்டுமொரு முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடபோவதில்லையென எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. அதனால் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் குறித்து தற்போதைக்கு பேச வேண்டிய அவசியம் கிடையாது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிடப் போகின்றார்கள்? என்பது தொடர்பில் சரியாகக் கூற முடியாது. எனினும், பஸில் ராஜபக்ஷவுக்கு அந்தத் தகுதி உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடுவாரெனவும், 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிடுவாரெனவும் எந்தவொரு நபரும் எதிர்பார்க்கவில்லையென்றும் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

## புனர்வாழ்வளிப்பதற்கு புதிய விதிமுறைகள்...

முன்னர் வலுவிலிருந்த ஏதேனும் அவசர கால ஒழுங்குவிதியின் நியதிகளின்படி சரணடைந்துள்ள அல்லது தடுப்புக்காவலினுள் எடுக்கப்பட்டுள்ள நபர்கள் எத்தகைய பாதுகாப்பையும் பராமரிப்பையும் அனுபவத்திருந்தார்களோ அதே பாதுகாப்பையும் பராமரிப்பையும் தொடர்ந்து புதிய விதிகளின் ஏற்பாடுகளினூடாக அனுபவிப்பதற்கு உறித்துடையவர்களாவர்.

2019ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த 2123/03ஆம் இலக்க 2019ஆம் ஆண்டின் முதலாம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பயங்கரவாதத் தடுப்பு ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் தவறுகள் சம்பந்தமாக சரணடைகின்ற அல்லது சரணடைந்துள்ள அல்லது தடுப்புக் காவலில் எடுக்கப்பட்டுள்ள – எடுக்கப்படும் அல்லது 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதிய 2120/5 இலக்கத்தையுடைய அதிவிசேட வர்த்தமானியில் அவசரகால ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் தவறு தொடர்பில் சரணடைந்துள்ள அல்லது தடுப்புக்காவலில் எடுக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் இவ்விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆற்றுப்படுத்தலாம்.

சரணடைந்தோர் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் புனர்வாழ்வு நோக்கத்திற்காக மீள் ஒன்றிணைத்தல் நிலையங்கள் காலத்துக்கு காலம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். இதற்கான இடத்தை குறித்துரைத்தல் அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். பொலிஸ் அதிகாரி அல்லது ஏதோ ஒரு அதிகாரியின் ஊடாக நபர் ஒருவர் சரணடைந்தாலோ அல்லது நபர் ஒருவரால் தடுப்புக்காவலில் எடுக்கப்பட்டு 24 மணித்தியாலங்களில் மிக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் பொறுப்பாகவுள்ள அதிகாரியிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் எடுக்கப்பட்டவர் தவறொன்றை புரிந்திருந்தால் பொறுப்பான பொலிஸ் அதிகாரியால் சட்டத்தின் 09ஆவது பிரிவுக்கமைய பாதுகாப்பு அமைச்சருக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

சரணடைந்த அல்லது தடுப்புகாவலில் வைக்கப்பட்டுள்ளவரை குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தாது சட்டத்துறை தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன், நீதவான் ஒருவரின் முன்னிலையிலான ஓராண்டை மிஞ்சாத புனர்வாழ்வளிக்கும் உத்தரவை பெறலாம்.

விடுதலைச் செய்வது அல்லது மேலும் குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கு புனர்வாழ்வளிப்பது தொடர்பில் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்பதுடன், செயலாளரினால் அமைச்சருக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## ஜமாதே இஸ்லாமியின்...

2018ஆம் ஆண்டு மாவனல்லை பிரதேசத்தில் புத்தர் சிலை உடைக்கப்பட்ட விவகாரத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் நெருங்கிய உறவினராகவும் இவர் உள்ளார்.

ஜமாதே இஸ்லாமி அமைப்பின் அல் ஹசன் பிரிவின் மூலம் பரப்பப்படும் வஹாபிசம் மற்றும் ஜிஹாத் கருத்தியல் தொடர்பிலான கடிதங்களை இவர் வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் பாரம்பரிய முஸ்லிம்களுக்கு பாதிப்புகள் ஏற்படும் வகையிலும் அவர்களின் கருத்தியலுக்கு எதிரானவற்றை கூறி அவர்களிடத்தில் மாறுபட்ட கருத்துகளை உருவாக்கும் வகையிலும் இவர் செயற்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் என்பவரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைப்பதற்காக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மற்றும் ஏனைய மதத்தினர் இடையே உள்ள சகவாழ்வை சீர்குலைக்கும் நோக்கில் அடிப்படைவாதக் கருத்துகளை பரப்ப வருபவர்களில் இவர் பிரதான சூத்திரதாரியாகவும் உள்ளார்.

பயங்கரவாத ஒழிப்புப் பிரிவு இவர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதி பொலிஸ் மாஅதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழர் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள...

உறுதியாகவுள்ளது. அது ஜெனீவாக இருந்தாலும் சரி, கொழும்பாக இருந்தாலும் சரி, டெல்லியாக இருந்தாலும் சரி இந்தியாவில் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லையென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் நான்கு நாட்கள் அங்கு தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றும் பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களையும் மேற்கொண்டார்.

நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள விருந்தினர் விடுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தமது நிலைப்பாட்டை வலியுறுத்தினார்.

இச் சந்திப்பில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். குறிப்பாக தமிழ் மக்களது அரசியல் ரீதியான பிரச்சினைக்கு தீர்வு தொடர்பாக பேசப்பட்டது. இக் கலந்துரையாடல் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறுகையில்,

இச் சந்திப்பில் 14 உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தோம். சுமார் ஒரு மணி நேரம் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது பல விடயங்கள் பேசப்பட்டன. அரசியல் ரீதியான மற்றும் அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் பேசப்பட்டன.

குறிப்பாக அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் இந்தியா உதவுவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். மேலும் அபிவிருத்தி தொடர்பாக திட்டங்களை வழங்குகின்ற போது அவற்றை மேற்கொள்வது தொடர்பாக சாதகமான முடிவுகளை எடுக்க முடியுமென உறுதியளித்தார்.

இதேநேரம், இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13ஆம் திருத்தத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை அமுல்படுத்தினால் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற ஆக்கிரமிப்புக்களை தடுத்து நிறுத்த முடியுமென எமது உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். விசேடமாக 13ஆம் திருத்தம் எமது பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக இல்லாத போதும், முழுமையான அதிகாரப் பகிர்வு முறைக்கு செல்லும் வரை இதனை உபயோகப்படுத்தலாமென குறிப்பிட்டனர்.

இதற்கு அவர் தமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையெனக் குறிப்பிட்டார். தமிழ் மக்களது பிரச்சினைக்கு, முழுமையான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வே தீர்வாகும் என்பதில் இந்தியா உறுதியாகவுள்ளது. இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை. அது ஜெனீவாக இருந்தாலும் சரி, கொழும்பாக இருந்தாலும் சரி, டெல்லியாக இருந்தாலும் சரி அந்த நிலைப்பாட்டில் மாற்றமில்லையென இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார் என்றார்.

## அமைச்சரவை பத்திரத்தில்...

நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது.

எமது சிறிய காலத்தில் முஸ்லிம் பெண்களும் முஸ்லிம் சிறுபிள்ளைகளும் இவ்வாறு புர்காவை அணிந்திருப்பதை நாம் கண்டிருக்கவில்லை. இது அண்மையில் உருவான அடிப்படைவாத போக்கிலானது. அதனால் கட்டாயம் புர்காவை தடைசெய்வோம்.

அதேபோன்று நாட்டில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மத்ரஸா பாடசாலைகள் உள்ளன. நாட்டில் எவருக்கும் பாடசாலைகளை தனியாக உருவாக்கி தமக்கு வேண்டியவற்றை மாணவர்களுக்கு கற்பிக்க முடியாது.

05 வயது முதல் 16 வயது வரையிலான பிள்ளைகள் கட்டாயம் நாட்டின் தேசிய கல்விக் கொள்கையின்அடிப்படையிலான கல்விலேயே கற்க வேண்டும். எவ்வித அனுமதிகளையும் பெறாத ஆயிரத்துக்கும் அதிகமான மத்ரஸா பாடசாலைகளை எதிர்வரும் நாட்களில் தடைசெய்வதற்கான உத்தரவுகள் வெளியாகும் என்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழு, புர்காவை தடை செய்யுமாறு பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 2019 இல் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் உடன் அமுலாகும் வகையில் புர்காவுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இலங்கையில் புர்காவை தடை செய்ய நீதியமைச்சர் அலி சப்ரியும் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண சபை தேர்தலை...

மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்துகிறார்.

ஜனாதிபதி அலுலகத்தில் (12) ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை குழுவுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

நாட்டின் தேசியத்துக்கும் பாதுகாப்புக்கும் முன்னுரிமையளித்து கட்சியின் கொள்கைகள் மற்றும் மக்களுக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, கடந்த 15 மாதங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி கூறினார்.

ஒரு தேசியவாத அரசாங்கம் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அதனை வீழ்த்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் செயற்பட்டன. மஹிந்த ராஜபக்ஷவை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தவறான பிரசாரங்களுக்கு பலியாகி கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு எவ்வளவு தூரம் பின்னடைந்துள்ளதென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் காரணமாக முழு நாட்டுக்கும் பிக்குகளுக்கும் போர் வீரர்களுக்கும் ஏற்பட்ட அவல நிலையை மக்கள் அறிந்திருக்கிறார்கள்.

இந்த சக்திகள் அரசாங்கத்தின் தற்போதைய திட்டங்களை நாசப்படுத்த மீண்டும் முயற்சிக்கின்றன. அதற்குப் பலியானால் ஏற்படும் விளைவுகள் குறித்து பொது மக்களுக்கு அறிவுறுத்துவதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். பேராயரின் ஒப்புதலுடனும் நம்பிக்கையின் அடிப்படையிலுமே ஆணைக்குழுவின் பணிகளைத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெப்ரவரி 01 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்ட இந்த அறிக்கை 28 நாட்களுக்குள் அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் ஆணைக்குழுவின் அறிக்கையை மறைக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சி தவறான பிரசாரங்களை பரப்புகிறது.

தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் விடயங்களைத் தவிர மற்ற அனைத்தும் மக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய எம்.சி.சி ஒப்பந்தம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. போர் வீரர்களுக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் பெரும் அடியைக் கொடுத்த ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பான முன்மொழிவுக்கு வழங்கப்பட்ட இணை அனுசரணை நீக்கிக்கொள்ளப்பட்டது.

குறுகிய காலத்தில் நாட்டுக்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் குறித்து யாரும் பேசுவதில்லை. எவ்வாறாயினும், மக்கள் முன் வைக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் மற்றும் கொள்கைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் நாட்டின் முன்னேற்றத்திற்கு தாம் உறுதிபூண்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

## மாவட்ட ரீதியாக காணிகள்...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்த்தன அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கொரோனா தொற்றினால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு சுகாதார அமைச்சு பரிந்துரைத்துள்ள விடயங்களை உள்ளடக்கிய பொருத்தமான காணியை தெரிவு செய்யுமாறே மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைக்கப்படும் இடங்கள் கொரோனா தொற்றினால் மரணிப்போரின் உடல்களை அடக்கம் செய்வதற்குப் பொருத்தமான இடமா? என்பது சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஆராயப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படுமெனவும் அவர் கூறினார்.

தற்போது மட்டக்களப்பு, ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் சுமார் 40 சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே, கொரோனா தொற்று காரணமாக மரணிக்கும் காலி மாவட்ட முஸ்லிம்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கு காலி மாவட்டத்தில் 04 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த 04 இடங்களின் பெயர்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் காலி மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக காலி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மொஹமட் சகுர்தீன் தெரிவித்தார்.

மேலும் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம், திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா ஆகிய பகுதிகளிலும் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

# 11 ஆண்டுகளாக ஜெனிவா பிரேரணை மூலம் தமிழருக்கு கிட்டிய விமோசனம் என்ன?

**“தமிழ் மக்களின் நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணக் கூடிய தலைமைகள் எதுவும் இல்லை” என்று கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தது தமிழ் அரசியல்வாதிகளிற் பலருக்கும் பிடிக்கவில்லை. சிலர் என்னோடு தனிப்பட சண்டைக்கே வந்து விட்டனர். ஆனால், “சரியான கணிப்பு இது” என்று மக்கள் தரப்பிலிருந்து பலரும் பாராட்டினார்கள். இதில் இருவர் “இதை சற்று விரிவாக்கி தமிழ் மக்களின் நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணக் கூடிய தலைமைகள் எதுவும் நாட்டிலேயே இல்லை. அதாவது அரசிலும் இல்லை. ஒட்டுமொத்தச் சிங்களத் தரப்பிலும் இப்பொழுது அப்படியானதொரு தலைமை கிடையாது” என்று குறிப்பிடுங்கோ” என்றனர்.**

**கருணாகரன்...**



இதுதான் தலைமைகளுக்கும் மக்களுக்கும் இடையிலான வேறுபாடும் உண்மையுமாகும். அரசியல்வாதிகளை விட, இந்தத் தலைமைகளை விட மக்களில் பலர் தெளிவான பார்வையோடுள்ளனர். அவர்களுக்கு உண்மையும் யதார்த்தமும் புரியும். இந்த உண்மையையும் யதார்த்தத்தையும் விளங்கிக் கொள்வதற்கு எவருக்கும் கடினமில்லை. ஏன் பலருக்கும் இதெல்லாம் நன்றாகவே தெரியும். ஆனால், அவர்களால் இதை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. தங்களின் நலன்கள் கெட்டு விடும் என்பதே இதற்குக் காரணம்.

ஆகவே நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பதைப்போல, இவர்களைத் திருத்தவே முடியாது. ஆட்களை மாற்றுவதாலும் பயனில்லை. அப்படி ஆட்களை மாற்றுவதால் பயனிருக்கும் என்றால் தமிழ்த்தரப்பில் செல்வநாயகம், அமிர்தலிங்கம், சம்பந்தன் என்று ஆட்கள் மாறியிருக்கிறார்கள். ஏதாவது மாற்றம் நிகழ்ந்திருக்கிறதா? முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா? இந்த இடத்தில் சுமந்திரனோ, சாணக்கியனோ, விக்கினேஸ்வரனோ, கஜேந்திரகுமாரோ இருந்தாலும் இதுதான் நடக்கும். பழைய கள்ளு புதிய மொந்தையில் என்ற மாதிரி. இதற்கு நல்ல உதாரணம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் – தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்று முலாம் பூசப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சி – தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்று மினுக்கிக் காட்டப்படுகிறது. தென்னிலங்கையில் சிங்களத் தரப்பிலும் இதுதான் கதை. அங்கே சிறிலங்கா சுதந்திரக் கட்சி – மறுவார்ப்பாக பொதுஜன பெரமுன என்றாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இப்பொழுது ஐக்கிய மக்கள் சக்தி என்று தோற்றம் காட்டுகிறது. தவிர, ஐ.தே.கவும் சு.கவும் பழைய ரங்குப் பெட்டியாக இன்னும் மிஞ்சிக் கிடக்கின்றன. இவை எல்லாவற்றிலும் பல தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். இப்பொழுதும் இருக்கிறார்கள். இவர்கள் எவரிடமும் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற விசுவாசமான – நேர்மையான எண்ணம் கிடையாது. அதைப்போல நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி, ஜனநாயக நெருக்கடி போன்றவற்றைச் சீர்ப்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணமும் அதற்காகத் தம்மை அர்ப்பணிக்கின்ற மனப்பாங்கும் இல்லை. நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனப் பார்வையும் செயற்றிட்டமும் கிடையாது. எதிர்த்தரப்புகளை மடக்கி தம்மை நிலைப்படுத்துகின்ற தந்திரோபாயத்துக்கு அப்பால் எந்த வெற்றிப் புள்ளிகளும் இவர்களிடத்தில் இல்லை.

இதனால்தான் நாடு வரவர சிக்கலான நிலைமைக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள் மேலும் மேலும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இதை எவராலும் மறுக்கவே முடியாது. யுத்த காலத்தைத்தான் விடுவோம். அது ஆயிரம் சிக்கல்களையும் முடிச்சுகளையும் கொண்டது. யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகள் கடந்து விட்டன. இந்தப் பதினொரு ஆண்டுகளில் தமிழ்த்தரப்பும் சரி, சிங்களத் தரப்பும் சரி உருப்படியாக எதையாவது இந்த நாட்டுக்கும் தாம் சார்ந்த மக்களுக்கும் செய்திருக்கின்றனவா? பதிலாக நாட்டைச் சர்வதேச நெருக்கடிக்குள்ளும் பிராந்திய அழுத்தத்திற்குள்ளுமே தள்ளி விட்டிருக்கின்றன. அதாவது தமக்கிடையில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டிய – கண்டிருக்க வேண்டிய இணக்கப்புள்ளிகளை விட்டு விட்டு, வெளிச் சக்திகளின் கால்களில் மண்டியிட்டிருக்கின்றன. இதனால் நாடு மிகப் பெரிய நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. இன்றைய சூழலில் நாடு இன்னொரு யுத்தச் சூழலுக்குள்ளேயே இருக்கிறது. அப்படி நம் கண்களுக்குப் புலப்படவில்லையே தவிர, உள்நிலைமை அதுதான்.

இது ஏன் நிகழ்கிறது? இந்த நிலைமை எப்படித் தொடர்கிறது? என்றால், ஒன்று பிராந்திய சக்திகளும் சர்வதேச சக்திகளும் மிகத் திறமையாக இலங்கைச் சமூகங்களைப் பிரித்தாளுகின்றன என்பது. இரண்டாவது, இந்தப் பிரித்தாளும் தந்திரத்துக்கு இலகுவில் இலங்கைச் சமூகங்களும் அவற்றின் அரசியல் தலைமைகளும் இலகுவாகப் பலியாகின்றன என்பது. மூன்றாவது, தமக்கிடையில் இணக்கப்பாட்டையும் ஒருமைப்பாட்டையும் காணக்கூடிய மனநிலையை – உள நிலையை இந்தச் சமூகங்களும் இழந்து நிற்கின்றன. தலைமைகளும் அவற்றுக்குத் தயாரில்லை. அவை இணக்கப்பாட்டுக்குச் செல்வதை விட, ஒருமைப்பாடுகளைக் காண்பதை விட பகை நிலையையும் முரண் நிலையையும் வளர்ப்பது இலகு. அதிக லாபம் தரக்கூடியது என நம்பியிருக்கின்றன என்பது. நான்காவது, தங்கள் கடந்த கால அனுபவங்களை (பட்டறிவை) பாடமாகக் கொள்வதற்கு இலங்கைச் சமூகங்கள் தயாரில்லை என்பது. இதில் பிராந்திய சக்திகளும் சர்வதேச சமூகமும் எப்படியெல்லாம் செயற்படும்? அவற்றின் நோக்கு என்ன? தந்திரம் என்ன? இலங்கைச் சமூகங்களாக இருக்கும் நாம் தொடர்ச்சியாக இப்படியே முரண்பட்டுக் கொண்டும் பகைமை நிலையிலும் இருந்தால் நாட்டுக்கும் தமக்கும் ஏற்படும் பாதிப்புகள் எப்படியானது? கடந்த காலத்தில் நிகழ்ந்தது என்ன? தற்போது நிகழ்ந்து கொண்டிருப்பதென்ன? இந்த நிலை இப்படியே நீடித்தால் எதிர்காலம் எப்படியிருக்கும்? என்பதைக் குறித்துச் சிந்திக்காதோராய் இருப்பது. ஐந்தாவது, மாற்றங்களை நிகழ்த்த விரும்பும் சக்திகளை மக்கள் இனங்காண மறுப்பதும் அவற்றின் மீது நம்பிக்கை கொள்ளத் தயங்குவதுமாகும். உண்மையிலேயே நாட்டில் மாற்றத்தை உண்டாக்க விரும்பும் தரப்புகள் உண்டு. ஆனால், அவை நிதிப்பலம். ஊடக ஆதரவு. மக்களிடம் போதிய அறிமுகமற்ற செல்வாக்கற்ற நிலையிலேயே உள்ளன. இவற்றை முன்கொண்டு செல்லும் பொறுப்பை ஊடகவியலாளர்களும் மாற்றாளர்களும் புத்திஜீவிகளும் எடுப்பதில்லை. அவர்களும் பழைய இனவாத அலைகளில் இழுபட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

என்பதால்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழிகாட்டிகளும் இல்லை. தீர்க்கதரிசிகளும் இல்லை. தலைவர்களும் இல்லை என்று அழுத்தமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. மிக இலகுவாகவே பரிகாரம் காண வேண்டிய பல பிரச்சினைகள் பத்தாண்டுகளுக்கு மேலாக பாராமுகமாகவே இருக்கின்றன, இழுத்தடிக்கப்படுகின்றன என்றால், அதற்குக் காரணம் என்ன? இதற்கான நோக்கம் என்ன? ஒரு சிறிய கேள்வி அல்லது சிறியதொரு உதாரணம், போரிலே உடல் உறுப்புகளை இழந்த நிலையில் எண்பது ஆயிரம் பேர் வரையில் வடக்குக் கிழக்கில் மட்டும் உள்ளனர். அதைப்போல இதே எண்ணிக்கையுடைய பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உண்டு. இவர்களுக்கான மறுவாழ்வுத்திட்டம் என்று எதை அரசாங்கமும் இந்தக் கட்சிகளும் இந்தத் தலைமைகளும் உருவாக்கியுள்ளன? என்று யாராவது கூறட்டும் பார்க்கலாம்?

இப்படிப் பல நூறு பிரச்சினைகள் நம்மால் தீர்க்கப்பட்டிருக்கக் கூடியவையும் தீர்க்க வேண்டியவையும் உண்டு. இதைப்பற்றிச் சிந்திக்காமல் இருப்பது ஏன்? இது எந்த வகையில் நியாயமானது?

முக்கியமாக இவற்றிடம் அர்ப்பணிப்புணர்வும் மக்கள் மீதான கரிசனையும் இல்லை என்பதே இதற்கான காரணமாகும். இதை இன்னும் அழுத்தமாகச் சொல்வதென்றால், இவற்றுக்கு தங்கள் மக்கள் மீதான கரிசனையையும் விட பிராந்திய – சர்வதேச சக்திகளே இன்று முக்கியமாகி விட்டன. அவற்றின் நிகழ்ச்சி நிரலே முக்கியமாகி விட்டது. அவற்றுக்காக காவடி எடுப்பதே வழமை – பெருமை என்றாகி விட்டது. இதுவே இன்று மக்களுக்கும் நாட்டுக்கும் எதிராகியுள்ளது.

இதை இவை மறுத்துரைப்பதாக இருந்தால் இந்தத் தலைமைகளிடத்திலும் இந்தக் கட்சிகளிடத்திலும் நாம் பல கேள்விகளை எழுப்ப முடியும். அதிகம் ஏன், தமிழ்க்கட்சிகளிடத்திலேயே ஒன்றிரண்டு எளிய கேள்விகளைக் கேட்கலாம். காணாமலாக்கப்பட்டோர்விவகாரத்துக்கானதீர்வைக்காண்பதற்கு அந்த மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்களே. அந்தப் போராட்டத்தில் உங்களுடைய நேர்மையான பங்களிப்பு என்ன? அந்த மக்களுக்கு என்ன வகையான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவுள்ளீர்கள்? அதற்கான கால வரையறை என்ன? அதுவரையிலும் அந்தக் குடும்பங்கள் எதிர்நோக்கியிருக்கும் ஆதரவற்ற நிலை, பொருளாதாரப் பிரச்சினை போன்றவற்றுக்கு நீங்கள் இதுவரையில் செய்துள்ள ஏற்பாடுகள் என்ன? எத்தனை குடும்பங்களை நீங்கள் இதுவரையில் பராமரித்து வருகிறீர்கள்? அவர்களுடைய வீடுகளுக்கு போய் வருகிறீர்களா? அப்படியென்றால், அது எவ்வளவு எனப் பட்டியலிட முடியுமா? அப்படி நீங்கள் சென்று வரும்போது கண்டுணர்ந்தது என்ன? அப்படிக் கண்டுணர்ந்த தவற்றுக்கு மாற்று ஏற்பாடாக என்ன செய்திருக்கிறீர்கள்? இதைப்பற்றி எங்காவது குறிப்பிட்டிருக்கிறீர்களா? உங்கள் கட்சியில் இதைப்பற்றி நீங்கள் பேசியதென்ன? எடுத்த தீர்மானம் என்ன? அந்தத் தீர்மானத்தின்படி மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

இப்படி போராளிகளின் விடயங்களுக்கு நீங்கள் மேற்கொண்டிருக்கும் திட்டங்களும் செயற்பாடுகளும் என்ன? அவற்றின் பலன்கள் எவ்வாறுள்ளன? இன்னும் மண வாழ்க்கையை எட்டாமல் தனியே வாழும் 40 வயதுகளைக் கடந்து கொண்டிருக்கும் பெண் போராளிகளின் நிலைக்கு உங்களுடைய ஏற்பாடுகள் என்ன?

(21ஆம் பக்கம் பார்க்க)

Unilever

## கொவிட் - 19 தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த வர்த்தகநாமம் தனது நோக்கத்திற்கு மறுவாழ்வு அளித்துள்ளது



கொவிட்-19 தொற்றுநோய் பரவ ஆரம்பித்த சமயத்திலேயே, பொதுவான நோய்களை மட்டுமல்லாது, கொரோனா வைரஸ் தொற்றுநோயையும் தடுப்பதற்கான எளிய மற்றும் பயனுள்ள முறையாக சவர்க்காரமிட்டு கை கழுவுவதன் முக்கியத்துவத்தை அது மீண்டும் வலியுறுத்த ஆரம்பித்தது.

வைரஸுக்கு எதிராக 99.9% செயல்திறனை உறுதிப்படுத்திய முதல் கைகளைச் சுத்தம் செய்யும் (ஹேன்ட்வோஷ்) வர்த்தகநாமமாக, லை∴வ்போய் பொதுச் சேவை அறிவிப்புகள் மற்றும் குறித்த இலக்குடனான தொடர்பாடல்கள் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பதை உறுதிசெய்ததுடன், நாடெங்கிலும் பொது இடங்களில் 100 க்கும் மேற்பட்ட கை கழுவும் மையங்களை அமைப்பதன் மூலம் தீர்க்கமான நடவடிக்கையை முன்னெடுத்து, பல மில்லியன் கணக்கான இலங்கையர்களின் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு நேரடி பங்களிப்பை வழங்கியுள்ளது.


சிறுவர்கள் மத்தியில் கைகளைக் கழுவும் பழக்கவழக்க மாற்றத்தை ஊக்குவிப்பதற்காக உலகளாவிய கைகழுவும் தினம் 2020 (Global Handwashing Day) அன்று 'H for Handwashing' என்ற உலகளாவிய ஊக்குவிப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கியிருந்தது. சிறு வயதிலிருந்தே சிறுவர்கள் மத்தியில் கை கழுவும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக கல்வி, சுகாதார, மனிதாபிமான மற்றும் பழக்கவழக்க மாற்ற வல்லுநர்களுடன் இணைந்து உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய இந்த முயற்சியை நோக்கி லை∴வ்போய் உலகளவில் நிதியை வழங்கும்.





புகழ்பெற்ற உள்நாட்டு துள்ளிசைப்பாடல் இரட்டையர்களான பாத்திய ஜெயக்கொடி மற்றும் சந்தூஷ் வீரமன் ஆகியோரின் படைப்பில் மறக்கமுடியாத பாடல் மூலம் உலகளாவிய கை கழுவும் தினம் 2020 ஐ லை∴வ்போய் இலங்கையில் கொண்டாடியது. அன்றாடக் குறிப்பாக 'கை கழுவுதல்' என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு H என்ற எழுத்தை அவர்கள் ஊக்குவித்ததால், H என்றால் Handwashing என்று சொல்லும் அளவிற்கு சிறுவர்கள் கற்றுக்கொண்டனர்.

சவர்க்காரமிட்டு கை கழுவுவதன் மூலம் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை கொண்டுவருவதற்கான லை∴வ்போயின் சமூக நோக்கத்தை ஊக்குவிப்பதில் சிறுவர்களை ஈடுபடச் செய்வதற்காக கல்வி அமைச்சுடன் இணைந்து 'H for Handwashing' முயற்சியின் கீழ் நாடு முழுவதும் சித்திரப் போட்டியொன்று ஆரம்பிக்கப்பட்டது.





## லை∴வ்போய்: ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சிறந்த சுகாதாரப் பழக்கத்தை ஊக்குவித்து வந்துள்ளது

யூனிலீவர் நிறுவனத்தின் உற்பத்தியான லை∴வ்போய் ஒரு நூற்றாண்டுக்கும் முன்னர் அறிமுகமாக்கப்பட்ட காலத்திலிருந்து, ஒரு தெளிவான நோக்கத்தைச் சுமந்து வந்துள்ளது- கிருமிகள் மற்றும் நோய்களிலிருந்து பாதுகாப்பதன் மூலம் உயிர்களைக் காப்பாற்றுவதே அதன் தலையாய நோக்கம். 100 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, லை∴வ்போய் அதன் நோக்கத்தில் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்துள்ளமை கிருமிகளிடமிருந்து பாதுகாப்பு என்றால் இது லை∴வ்போய் தான் என்று சொல்லும் அளவுக்கு அதன் பெயரை நிலைநாட்டியுள்ளது. நம்பகமான சுகாதார தீர்வுகளை வழங்குவதற்கான அதன் உலகளாவிய உறுதிப்பாட்டுக்கு ஏற்ப, இந்த வர்த்தகநாமமானது பல மில்லியன் கணக்கான இலங்கையர்களின் வாழ்வில் நல்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

அத்தகைய நோக்கத்தை அடைவதற்கு வெறுமனே உற்பத்தியை அனைவரும் பெற்றுக்கொள்ளச் செய்வதையும் தாண்டிச் செல்ல வேண்டிய தேவை உள்ளது என்பதை இனங்கண்டு கொண்ட லை∴வ்போய், உலகின் மிகப்பெரிய சுகாதார பழக்கவழக்க ஊக்குவிப்புத் திட்டங்களில் ஒன்றில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளதுடன், கடந்த தசாப்தத்தில் மாத்திரம் 40 நாடுகளில் 486 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் வாழ்வை ஏற்கனவே எட்டியுள்ளது.



## அன்றும், இன்றும், என்றென்றும் இலங்கையின் எதிர்காலச் சிற்பிகளுக்கு அறிவூட்டுதல் மற்றும் பாதுகாத்தல்



நேர்மறையான சுகாதார செய்திகளை ஊக்குவிப்பதற்கும், கை கழுவும் பழக்கவழக்கத்தை ஊக்குவிப்பதற்கும் ஆரம்பகால குழந்தைப் பருவ கற்றல் ஒரு முக்கிய பகுதியாகும் என்று லை∴வ்போய் இனங் கண்டுள்ளது. ஏனெனில் குழந்தைகள் பாடசாலையில் தங்கள் சக மாணவர்களின் பழக்கவழக்கங்களின் செல்வாக்கினால் ஈர்க்கப்படுகின்றனர்.

எனவே, இந்த வர்த்தகநாமம் 2007 ஆம் ஆண்டு முதல் சுகாதார மற்றும் கல்வி அமைச்சுக்களுடன் இணைந்து சிறந்த கைச் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பில் சிறுவர்களுக்கு அறிவூட்டும் பணிகளை முன்னெடுத்து வந்துள்ளது. ஆண்டுதோறும் லை∴வ்போய் ரூபா. 5 மில்லியன் தொகையை முதலிட்டு, பாடசாலை சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 2.5 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்களை எட்டியுள்ளது.



இந்த ஆண்டில் லை∴வ்போய், யூனிலீவர் நிறுவனத்துடன் இணைந்து முறையாக கைகழுவும் நுட்பத்தைப் பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுவதற்காக 10,000 பாடசாலைகளை எட்டுவதற்கான உறுதிப்பாட்டை எடுத்திருந்ததுடன், தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக சிறுவர்களிடையே கை கழுவும் பழக்கவழக்க மாற்றத்தை விரைவுபடுத்துவதற்காக 75 க்கும் மேற்பட்ட கை கழுவும் மையங்களையும் நிறுவியுள்ளது.

மேலும், ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, ரூ. 5 மில்லியன் பெறுமதியான சுத்திகரிப்பான் (சானிடைசர்) போத்தல்களை கபொத உ/த பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் பாதுகாப்பிற்காக கல்வி அமைச்சுக்கு லை∴வ்போய் நன்கொடையளித்துள்ளது.

## மிக உயர்ந்த தர நிர்ணயங்களின் பக்கபலத்துடனான ஒரு பணி இலக்கு

சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களை ஏற்படுத்துவதற்கான அதன் பல முயற்சிகளுடன் முன்னோக்கிப் பயணிக்கும் போது, எல்லாவற்றுக்கும் மேலாக தனது தயாரிப்புகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் உயிர்களைக் காப்பாற்றுவதற்கான அதன் நோக்கத்திற்கான உறுதிப்பாட்டில் லை∴வ்போய் ஓயாத அர்ப்பணிப்புடன் உள்ளது. இது உள்ளக மற்றும் வெளிப்புற ஆய்வுகூடங்களில் நடத்தப்படும் தொடர்ச்சியான சோதனைகள் மூலமாக உறுதிப்படுத்தப்படுவதுடன், இத்தயாரிப்புக்கள் கிடைக்கும் ஒவ்வொரு நாட்டிலும் அங்கு நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை இணக்கப்பாடுகளையும் தவறாது உறுதிப்படுத்தி வருகின்றது.

இலங்கையில், லை∴வ்போய் உள்நாட்டு தரங்களுடன் தொடர்ந்து இணங்கும் வகையில் செயற்படுவதுடன், தேசிய ஔடதங்கள் ஒழுங்குமுறை அதிகார சபையில் (National Medicines Regulatory Authority) பதிவு செய்யப்பட்டுள்ளது. லை∴வ்போய் சவர்க்காரங்கள், ஹேன்ட் வாஷ் (பம்ப்), பொடி வாஷ் மற்றும் ஹேன்ட் சானிடைசர்கள் ஆகிய தயாரிப்புக்கள் யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தால் ஹொரணையிலுள்ள அதன் தொழிற்சாலையில் ISO 9001 அங்கீகாரம் மற்றும் GMP அங்கீகாரம் ஆகியவற்றுடன் அனைத்து தர தேவைப்பாடுகளையும் பின்பற்றியவாறு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக மக்களுடன் ஈடுபாட்டு அனுபவத்தைக் கொண்ட ஒரு வர்த்தகநாமமாக, நுகர்வோர் மற்றும் அவர்களின் தேவைகள் விரைவாக மாறி வருவதை லை∴வ்போய் இனங்கண்டுள்ளது. இந்த மாற்றங்களுடன் தளைத்தோங்கி, வெறும் 'சிவப்பு நிற சவர்க்காரக் கட்டி' என்பதையும் தாண்டி, சுகாதாரம் மற்றும் பிற நன்மைகளை வழங்கும் பல்வேறு பண்புகளைக் கொண்ட இயற்கை தயாரிப்புகளால் உற்பத்தி செய்யப்பட்ட தனிப்பயன் வடிவிலான சவர்க்கார வகைகளை புதிய யுகத்தின் வாடிக்கையாளர் தேவைகளுக்காக வழங்கி வருகிறது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சௌகரியத்தை வழங்குவதற்காக ஹேன்ட் வோஷ், பொடி வோஷ் மற்றும் ஹேன்ட் சானிடைசர் போன்ற பல்வேறு தயாரிப்பு வடிவங்களையும் கொண்டுள்ளது.

ஒரு தயாரிப்பு மற்றும் வர்த்தகநாமத்தின் வெற்றியின் ஒரு தெளிவான மதிப்பீடு முடிவுப் பாவனையாளர்களான மக்களின் அங்கீகாரம் மற்றும் அபிமானத்திலேயே தங்கியுள்ளது. 2019 ஆம் ஆண்டில் மாத்திரம், வருடாந்த SLIM Nielsen People's Awards என்ற மக்கள் தெரிவு விருதுகளில் லை∴வ்போய் ஆண்டின் மிகச் சிறந்த இளையோர் தெரிவு விரைவாக விற்பனையாகின்ற வர்த்தகநாமம், ஆண்டின் தனிப்பட்ட பராமரிப்பு வர்த்தகநாமம் மற்றும் ஆண்டின் மிகச் சிறந்த விரைவாக விற்பனையாகின்ற வர்த்தகநாமம் ஆகிய விருதுகளை அள்ளிக் குவித்துள்ளது. இலங்கை பொதுமக்களால் நேரடியாக வாக்களிக்கப்படும் நடைமுறைகொண்ட இந்த விருதுகள் நிகழ்வானது லை∴வ்போய் எவ்வாறு நீண்ட காலமாக மதிப்புமிக்கதாக இருந்தது என்பதற்கான ஒரு சிறிய அடையாளமாக இது காணப்படுவதுடன், அது ஏன் 'உலகின் முதற் தரத்தில் விற்பனையாகும் கிருமிகளிடமிருந்து பாதுகாக்கும் சவர்க்கார வர்த்தகநாமம்' என ஏறுநடை போட்டு வருகின்றது என்பதையும் புலப்படுத்துகின்றது.



மேல்மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் நாளை திறக்கப்படவுள்ளன. மேல் மாகாணத்தில் மாத்திரம் ஐந்தாம், பத்தாம் மற்றும் 13ம் ஆண்டு வகுப்புகள் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இது பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் உவப்பான செய்தியாகவே இருக்கும். பாடசாலைக் கல்வி ஒரு வருட காலத்துக்கு முடங்கிப் போனது இதுவே இந்நாட்டில் முதல் தடவை. இந்த ஒரு வருட கால முடக்கம் ஏற்படுத்தியிருக்கும் பின்விளைவுகளை நாம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். கல்வியில் ஆர்வம் கொண்ட மாணவர்கள் இடைவெளியை நிரப்பி நூல் பிடித்தாற்போல முன்னேறிச் சென்று விடுவார்கள் என்பதில் ஐயமில்லை என்றாலும் பெரும்பாலான மாணவர்கள் கற்றல் ஆர்வத்திலும் மனநிலையிலும் சோர்ந்திருக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளதால் அடுத்த மூன்று மாத பாடசாலை தவணைக் காலப்பகுதியில் மாணவர்கள் எதிர்கொள்ளக்கூடிய உளவியல் ரீதியான பிரச்சினைகளை ஆசிரியர்களும் அதிபர்மாரும் புரிந்து கொண்டு அவர்களை வழமையான கல்வி கற்றல் பண்புகளுக்குள் நடத்திச் செல்ல வேண்டிய அவசியம் இருப்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பாடசாலைகள் மட்டுமின்றி அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலும் படிப்படியாக வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அலுவலகங்களுக்கு செல்வோமானால் காலி ஆசனங்களையே காண முடிவதோடு இன்றைக்கும் கொழும்பு நகர் வெறிச்சோடியே காணப்படுகிறது. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இயல்புத் தன்மையைக் காண முடியவில்லை. நாட்டில் கொரோனா பாதிப்பு படிப்படியாகக் குறைந்து வருவதை வெளிப்படுத்தும் சமிக்ஞைகளை நாம் காண்கிறோம். மக்கள் பழையபடி கூடினால், வழமைபோல் செயற்பட்டால் தொற்று அதிகரிக்கக் கூடிய சாத்தியங்கள் மேலோங்கலாம் என்ற அச்சம் இருந்தாலும் நாம் இன்றைய மந்த நிலையிலேயே தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருக்க முடியுமா என்ற கேள்விக்கு விடைகாண வேண்டியது அவசியம்.

இலங்கை கடந்த ஓராண்டு காலத்தில் கடுமையான பொருளாதார பாதிப்புகளை அடைந்துள்ளது. பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள வேண்டிய அவசியம் உள்ளது. அதற்கான ஒரே வழி, நாட்டை சாதாரண நிலைக்குக் கொண்டு வந்து உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகளையும் உற்பத்தியையும் விரைவுபடுத்துவதாகும். இதை எப்படிச் செய்யலாம் என்றால், கொரோனாவுடன் வாழ்தல் என்பதன் பொருள் புரிந்து வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலமே சாதிக்க முடியும். தற்போது தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது. அடுத்த வருடமே முதல் தடுப்பூசி இலங்கைக்கு வரும் சாத்தியம் உண்டு என ஆருடம் கூறப்பட்டு வந்த நிலையில், தடுப்பூசி உலகில் பாவனைக்கு வந்த சில மாதங்களிலேயே இலங்கைக்கும் தடுப்பூசிகள் வந்து சேர்ந்தன என்பது பெருமை கொள்ள வேண்டிய ஒன்று. இதற்காக நாம் இந்தியாவுக்கு நன்றி சொல்ல வேண்டும். தடுப்பூசி ஏற்றல் என்பது இவ்வருடம் முழுவதும் நடைபெற்று வரும் அதே சமயம் தடுப்பூசி காரணமாக கொரோனா தொற்று முடிவுக்கு வந்து விட்டதாகக் கருதிவிடவும் முடியாது.

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

சார்வரி வருடம் பங்குனி மாதம் 01ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 றஜப் பிறை 29

# நாம் கற்க வேண்டிய புதிய போர்முறை

தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர் கொரோனா தொற்றில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்கிறார் என்பது உண்மையானாலும் அவர் தொடர்ந்தும் மற்றொருவருக்கு தொற்றை ஏற்படுத்தும் காவியாகவே இருப்பார் என்பதை தடுப்பூசி ஏற்றிக் கொண்ட ஒவ்வொருவரும் மறந்துவிடக் கூடாது. எனவே, சுகாதாரத்துறையினர் தொற்று முடிவுக்கு வந்து விட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை தற்போது கடை பிடிக்கப்படும் சுகாதார வழி முறைகளை நாம் கைவிடலாகாது. முதல் அலை தணிந்து வந்தபோது மக்கள் படிப்படியாக தாம் அதுவரை கை கொண்டுவந்த சுகாதார வழிமுறைகளைக் கைவிட ஆரம்பித்ததையும் சுகாதாரத்துறை மற்றும் பொலிஸ்துறை சார்ந்தோர் இதை பொருட்படுத்தாது விட்டதையும் இதன் விளைவாக இரண்டாவது அலை பேரலையாகக் கிளம்பியதையும் நாம் மறப்பதற்கில்லை.

எனினும் நமது வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பியாக வேண்டும். அவ்வைக் கிழவி 'வரப்புயர' என்றதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறோம். வரப்பு உயர்ந்தால் விளைச்சல் பெருகும் அது நாட்டுக்கு செல்வத்தையும் மன்னனுக்கு புகழையும் தரும் என்பது அவர் சொல்ல வந்த விடயம். நாமும் அடிப்படையாகக் கைகொள்ள வேண்டிய வழிமுறைகளை தொடர்ச்சியாக கடைபிடிப்பதன் மூலம் நாட்டையும் நமது பொருளாதார நிலைமைகளையும் வழமைக்குக் கொண்டு வரமுடியும். மக்கள் மத்தியிலும் சோம்பேறித்தனமும், செயல்படுவதில் காணப்படும் தயக்கமும் துடைத்தெறிய வேண்டிய அவசியம் உள்ளது. அமெரிக்க ஐரோப்பிய நாடுகளை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால், கொரோனா தொற்றுக்கும் மரணங்களுக்கும் மத்தியிலும் பொருளாதார செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். இந்தியாவுடன் ஒப்பிடுவோமானாலும் அந்நாட்டு மக்களைவிட இலங்கையர்கள் கட்டுப்பாடுடன் நடந்து கொள்ளக் கூடியவர்களே. இலங்கையின் பொதுக் கலாசாரம் அத்தகையதே.


எனவே, ஏப்ரல் நீண்ட விடுமுறையின் பின்னர் அனைத்து கல்வி, வர்த்தக நிறுவனங்களும் முழு அளவிலும், தனி மனித சுய கட்டுப்பாடுடனும் முழு வீச்சில் இயங்கத் தலைப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நாம் ஒவ்வொருவரும் மேற்கொண்டாக வேண்டும். இந் நாடு தொடர்ந்தும் மந்தகதியில் இயங்கிக் கொண்டிருக்க முடியாது. இந் நிலையானது ஒவ்வொரு இலங்கைக் குடிமகனையும், அவர் செல்வந்தரோ ஏழையோ, பாதிக்கவே செய்யும். இதற்காக நாம் அரசாங்கத்தைக் குறை கூறிக் கொண்டிருக்க முடியாது. அரசு குடிகளுக்கானதே தவிர நம்மில் இருந்து வேறுபட்டதல்ல. நமது பொருளாதார மீட்பு என்பது கடன்களில் தங்கியிருப்பதல்ல. உழைப்பிலேயே தங்கியிருக்கிறது. விமான நிலையில் திறக்கப்பட்டால் தொற்று அதிகமாகி விடும் என்றொரு வாதம் முன்வைக்கப்படுகிறது.

விமான நிலையம் என்பது ஒரு முக்கியமான பொருளாதார வாயில். கொரோனா அச்சத்தால் அதை மூடிவைத்துக் கொண்டிருக்க முடியாது. இலங்கை சுற்றுலாத்துறையுடனும் அதை நம்பிவாழும் இலட்சக்கணக்கான குடும்பங்களின் எதிர்காலத்துடனும் நெருக்கமான தொடர்பு கொண்டது. விமான நிலையம், எனவே, திறக்கப்பட வேண்டும். அது ஏற்படுத்தக்கூடிய எதிர்மறைவிளைவுகளை நாம் கையாளத் தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர, விமான நிலைத்தை மூடி வைப்பதல்ல.

உலகம் எத்தனையோ பெரும் பிரச்சினைகளைத் தாண்டித்தான் வந்திருக்கிறது. எதிர்மறை விளைவுகளை பாதுகாப்பாகக் கையாள்வது எப்படி என்பதை அறிந்து கொள்வதே நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய புதிய பேர்முறையாகும்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத தாக்குதல்கள்!



# அடுத்த மாதத்துடன் 2 வருடங்கள் பூர்த்தி

இயேசு பிரான் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் புனித தினத்தன்று (உயிர்த்த ஞாயிறு) பயங்கரவாதக் கும்பலொன்று காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் மேற்கொண்டு இரண்டு வருட காலம் பூர்த்தியடையப் போகின்ற போதிலும், அச்சம்பவத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து நாட்டு மக்கள் இன்னமும் முழுமையாக மீளவில்லை.

சஹ்ரான் என்ற பயங்கரவாதி தலைமையிலான குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தொடர் தாக்குதல்கள் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்ததன் பின்னர், இந்த அறிக்கையானது அரசியல் அரங்கத்தில் பரபரப்புக்குரிய பேசு பொருளாகியுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே கடந்த மார்ச் 07ஆம் திகதி நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்கத் தேவாலயங்களிலும் 'கறுப்பு ஞாயிறு' என்ற பெயரில் அமைதியான கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. தேவாலயங்களில் வழமையான ஞாயிறு பூஜையின் பின்னர் அனைவரும் கறுப்பு ஆடை சகிதம் 'நீதி வேண்டும்' என்ற பதாதைகளைத் தாங்கியவாறு இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்தப் போராட்டத்திற்கான வேண்டுகோளை கத்தோலிக்க மக்களுக்கு விடுத்திருந்ததுடன், அப்போராட்டத்திலும் கலந்து கொண்டிருந்தார். பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு நீதி கிடைப்பதுடன், தாக்குதலுக்கு மூலகாரணமானவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதே இந்த அமைதிப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த பெப்ரவரி 01 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் 22ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் மீண்டும் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் ஏறத்தாழ 214 நாட்களில், 457 பேருடைய சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு, இவற்றின் அடிப்படையில் 472 பக்கங்கள், 215 இணைப்புக்கள் மற்றும் ஆறு பகுதிகளைக் கொண்டதாக இந்த இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து இதனை ஒரு அரசியல் துரும்பாக பலரும், குறிப்பாக எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் பயன்படுத்தத் தொடங்கியிருந்தனர். 'அறிக்கை மறைக்கப்படுகிறது, இதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும்' என ஆரம்பத்தில் அவர்கள் குரல் கொடுத்திருந்தனர். குறித்த அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தவிரவும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகளின் பிரதிகளை, ஜனாதிபதியின் சட்ட விவகாரப் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஹரிகுப்தா ரோஹணதீர முக்கிய தரப்பினரிடம் நேரில் சென்று கையளித்தார். பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, மகாநாயக்க தேரர்கள், சட்டமா அதிபர் என பல தரப்பினரிடம் நேரடியாகச் சென்று அவர் பிரதிகளைக் கையளித்தார்.



அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டு, பின்னர் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது குறித்து மூன்று நாள் விவாதம் எதிர்க் கட்சியால் கோரப்பட்ட நிலையில், கடந்த புதன்கிழமை முழுநாள் சபை ஒத்திவைப்பு விவாதம் இதுபற்றி முன்னெடுக்கப்பட்டது.

இதற்கிடையில் ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் உப குழுவொன்றையும் ஜனாதிபதி நியமித்திருந்தார். எனினும், இந்த உபகுழு தொடர்பில் கர்தினால் உள்ளிட்ட பலரும் நம்பிக்கை வெளியிடவில்லை.

மறுபக்கத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பலர் இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தடுப்பதற்கு தவறியுள்ளார்கள் என்ற விடயம் ஆணைக்குழு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த விசாரணை அறிக்கையில் தாங்கள் திருப்திப்படவில்லையென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவெடுத்திருந்தது. பழிவாங்கும் நோக்கில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதே அக்கட்சியினரின் நிலைப்பாடாக உள்ளது.

எனினும், ஜனாதிபதி விசாரணை அறிக்கை தொடர்பில் மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்க் கட்சியினர் முயற்சிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மேடைகளில் கூறி வருகின்றார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குக் காரணமானவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதில் தமது அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றும், எந்தவொரு தரப்பினரையும் காப்பாற்றுவதற்கோ அல்லது அறிக்கையில் உள்ள விடயங்களை மறைப்பதற்கோ அரசு முயற்சிக்கவில்லையென்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியானதன் பின்னர் அரசியல் களத்தில் உருவெடுத்துள்ள பரபரப்பான சர்ச்சைகள்!

அதிகாரத்துக்கு வருவதற்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை தாம் பயன்படுத்தவில்லையென்றும், கடந்த அரசாங்கத்தின் தவறான கொள்கைகள் மற்றும் திட்டங்களாலேயே மக்கள் தம் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்திருந்ததாகவும், கிராமிய மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போது ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை தமது சொந்த அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்த சிலர் முயற்சிப்பதுடன், மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பத்தையும் அவர்கள் ஏற்படுத்துவதாக ஜனாதிபதி சுட்டிக் காட்டியிருந்தார்.

அதேநேரம், அரசாங்கம் உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை மறைப்பதாக எதிர்க் கட்சி சார்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரும் பொதுவாக இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியிருந்தனர்.

சஹ்ரான் போன்ற தீவிரவாதிகளை உண்மையில் உருவாக்கி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் யார் என்பது போன்ற விடயங்கள் புலப்படவில்லையென்றும், தாக்குதல் சம்பங்களின் பின்னணியில் உள்ள உண்மையான குற்றவாளிகள் இதில் குறிப்பிடப்படவில்லையென்றும் எதிர்த் தரப்பினர் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை பல்வேறு பகுதிகளைக் கொண்டிருப்பதுடன், இவற்றின் சில பகுதிகள் தேசிய பாதுகாப்புப் பற்றிய விடயங்களை உள்ளடக்கியிருப்பதால் பகிரங்கப்படுத்தப்படவில்லை. இது குறித்தும் பல்வேறு விமர்சனங்கள் எதிர்த் தரப்பினால் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இருந்த சிலரை மாத்திரம் குறி வைத்து அரசியல் பழிவாங்கும் நோக்கில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதே எதிர்த் தரப்பினரின் பாரிய குற்றச்சாட்டாகக் காணப்படுகிறது.

எனினும், அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என அரசாங்கத்தின் தரப்பில் கூறப்படுகிறது. இதற்கிடையில் பொதுபல சேனா அமைப்பின் செயற்பாடு குறித்தும் ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இனவாத செயற்பாடுகளைத் தூண்டும் வகையில் அந்த அமைப்பு செயற்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த பரிந்துரைக்கு எதிராக பௌத்த பிக்குமார் சுதந்திர சதுக்கத்தில் கூடி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து முன்வைத்த கருத்துத் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். அவரிடம் சுமார் 3 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று அடுத்த மாதத்துடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியடையவுள்ளன. இதுவரை குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. தாக்குதலுடன் நேரடியாகத் தொடர்புபட்ட சஹ்ரான் உள்ளிட்ட தீவிரவாதிகள் உயிரிழந்திருந்தாலும், இவ்வாறான தீவிரவாதக் குழு உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்கள், இத்தாக்குதலின் மூளையாகச் செயற்பட்டவர்கள் உள்ளிட்ட தரப்பினர் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் உரிய முறையில் தண்டிக்கப்பட்டாலேயே பாதிக்கப்பட்ட அப்பாவி கிறிஸ்தவர்களுக்கு நீதி கிடைத்ததாக அமையும் என்பதே பொதுவான கருத்தாக இருக்கின்றது.

இத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்டு அநியாயமாக உயிரிழந்து போனவர்கள் ஒருபுறமிருக்க, காயமுற்ற பலர் இன்னமும் ஊனமுற்றவர்களாக இருப்பதுடன், பலர் தமது குடும்ப உறுப்பினர்களை இழந்து தனித்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அவ்வாறானர்களுக்கு இழந்த வாழ்க்கையை மீண்டும் திருப்பிக் கொடுக்க முடியா விட்டாலும், அவர்களை இந்த நிலைக்குத் தள்ளியவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதன் ஊடாகவேனும் அவர்களை சற்றுத் திருப்திப்படுத்த முடியும். எனவே இந்த கொடூரமான பயங்கரவாத தாக்குதலுடன் பல வகையிலும் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே வன்முறைகளை வெறுக்கின்ற மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

பி.ஹர்ஷன்...



**குற்றம் இழைத்தோர் இனம் காணப்பட்டு, நீதித் துறையினால் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் பாதிக்கப்பட்ட தரப்பினர் உறுதி**

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத் தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வரும் நிலையில், இலங்கை விவகாரம் சர்வதேச அரங்கில் தொடர்ந்தும் பரபரப்பான விடயமாகவே நோக்கப்படுகின்றது. பிரித்தானியா உள்ளிட்ட ஆறு நாடுகளால் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கான வரைபு மீதான வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு இன்னும் சில நாட்களே இருக்கும் நிலையில், இப்பிரேரணை வரைபுக்கு ஆதரவை உறுதிப்படுத்துவதற்கும், இதனை எதிர்ப்பதற்கும் இருதரப்பிலும் கடுமையான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**



# சர்வதேசம் ஒருபோதுமே தீர்வு தரப் போவதில்லை!

இலங்கை தொடர்பான பிரேரணை வரைபு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன் இதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான யோசனைகள் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. இலங்கை அரசாங்கம் தன் மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்திருப்பது மாத்திரமன்றி, தமக்கெதிராகக் கொண்டு வரப்படும் எந்தவொரு பிரேரணையையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென திட்டவட்டமாகக் கூறி விட்டது.

அது மாத்திரமன்றி, தனக்கு நட்பான நாடுகளின் உதவியுடன் இப்பிரேரணை வரைபை நிராகரிக்கச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் அங்கத்துவ நாடுகளுடன் தொடர்பு கொண்டு முழு மூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வகையில் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா போன்ற நாடுகள் ஜெனீவா தொடர்பில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

இலங்கையின் நட்பு நாடுகளில் ஒன்றான பாகிஸ்தான் சர்வதேச ரீதியில் முஸ்லிம் நாடுகளின் ஒத்துழைப்பை இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்க கடும் பிரயத்தனங்களை முன்னெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

கொவிட்19 தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் கொண்டிருந்த நிலைப்பாடு மாற்றம் பெற்றிருப்பதானது, பாகிஸ்தான் ஊடாக முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறும் முயற்சியின் ஒரு அங்கம் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.



**ஐ.நாவை கருவியாகப் பயன்படுத்தும் சர்வதேச சக்திகள், இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கு ஏற்ப பிடியை இறுக்குவதும், பின்னர் தளர்த்துவதும் மாறி மாறி காண்கின்ற காட்சிகள்!**

இதற்கிடையில், இலங்கை தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள பிரேரணை வரைபு தமிழ் மக்கள் நீண்ட காலமாக முன்வைத்து வருகின்ற குற்றச்சாட்டுக்கு தீர்வு காணும் வகையில் கடுமையானதாக அமையவில்லையென்று தமிழ் அரசியல் தரப்புகளும், புலம்பெயர் அமைப்புகளும் கூறி வருகின்றன.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நீர்த்துப் போகச் செய்யும் விதத்தில் பிரேரணை அமைந்துள்ளது என புலம்பெயர்ந்து வாழ் தமிழர்களின் அமைப்புக்களும், இங்குள்ள தமிழர் தரப்பின் சில அரசியல் பிரதிநிதிகளும் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

இந்த விவகாரத்தில் ஒரு விடயத்தை நாம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, எந்தவொரு சர்வதேச நாட்டினதும் வெளியுறவுக் கொள்கை என்பது மற்றொரு நாட்டினது குறித்த இனமொன்றின் மீதான முழுமையான அக்கறையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்காது என்பதே உலக வரலாற்றில் பெறப்பட்டுள்ள அனுபவமாகும்.

இதனை வைத்துப் பார்க்கின்ற போது, இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் சார்பானதாக இருந்தாலும், அதனை ஆதரிக்கும் விடயத்தில் சர்வதேச நாடுகள் தமது சொந்த நலன் சார்ந்த முடிவுகளையே எடுக்கும் என்பதுதான் உண்மை.

பூகோள அரசியல் மற்றும் பொருளாதார நன்மைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே ஒவ்வொரு நாட்டினதும் நிலைப்பாடுகள் அமைவதுதான் வழமை.

எனவே, தமிழர் தரப்பினரின் முழுமையான எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்யும் வகையில் பிரேரணை வரைபொன்றை எந்தவொரு உலக நாடும் தயாரிக்கும் என தமிழர் தரப்பு நம்பிக்கை கொள்வது விவேகம் அல்ல.

ஒரு சில தமிழர் தரப்பு அரசியல்வாதிகளும், வெளிநாட்டில் உள்ள புலம்பெயர்ந்து வாழ் அமைப்புகளும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சாத்தியமற்ற நம்பிக்கையை ஊட்டி விடுகின்ற போதிலும், இவ் விவகாரத்தின் பின்னணியில் உள்ள களநிலைமைகளை தமிழர் தரப்பு கசப்புடனாவது ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

சர்வதேசம் தமிழர்களுக்கு நேரடியான தீர்வைப் பெற்றுத் தரப் போவதாக கண்மூடித்தனமான நம்பிக்கையை தமிழ் அரசியல்வாதிகள் மக்களுக்கு வழங்குவது வெறும் அரசியல் நாடகமே தவிர வேறெதுவும் இல்லை. சர்வதேச போக்கின்படி பார்க்கையில் கள யதார்த்த நிலைமையானது முற்றிலும் வித்தியாசமானதாக இருக்கின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டாலும், சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையைச் சார்ந்தவர்களை நிறுத்த வைப்பது சில தரப்பினர் கூறுவதைப் போன்று இலகுவானதோ அல்லது சாத்திமானதோ காரியமல்ல. அவையெல்லாம் நடைமுறைச் சாத்தியத்துக்கு இலகுவான விடயங்கள் அல்ல.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் பரிந்துரைகளை மேற்கொள்வதுடன், அது குறித்து கண்காணிப்புகளை மேற்கொள்ளவே முடியும். சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வது குறித்த தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்புச் சபையே எடுக்க வேண்டும். ஐ.நா பாதுகாப்புச் சபையில் உள்ள உறுப்பு நாடுகளின் ஒட்டுமொத்த சம்மதத்துடனேயே அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். பாதுகாப்புச் சபையில் இலங்கையின் மிகவும் நெருங்கிய நட்பு நாடான சீனா காணப்படுவதால் சிலர் எதிர்பார்ப்பதைப் போன்று சர்வதேச நீதிமன்றம் என்ற விடயம் எவ்வளவுக்கு சாத்தியமாகும் என்ற முக்கிய வினா இங்கே எழுகின்றது.

அப்படியாயின், தமிழர்களின் நீண்ட கால எதிர்பார்ப்புகளுக்கு நடக்கப் போவது என்ன என்ற மற்றொரு வினா பலருக்கு எழக் கூடும். தமிழர்களின் எதிர்பார்ப்புகளுக்கு சர்வதேசத்திடமிருந்து முழுமையான தீர்வு கிடைக்குமா என்பது பற்றி முன்கூட்டியே கூற முடியாதிருந்தாலும், தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றை வழங்குமாறு அழுத்தமொன்றை இலங்கை அரசாங்கத்துக்கு நிச்சயமாக வழங்க முடியும்.

ஆகக் கூடியதாக 'பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வருவோம்' என்ற மிரட்டல்களுடன் கூடிய அழுத்தம் சர்வதேசத்திடமிருந்து வழங்கப்படலாம். கடந்த காலங்களில் இலங்கைக்கு பொருளாதார தடைகள் பற்றிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கா விட்டாலும், சர்வதேசத்திலிருந்து தொடர்ச்சியான அழுத்தங்கள் கடந்த 12 வருடங்களாக வழங்கப்பட்டுக் கொண்டே வருகின்றன.

சர்வதேசத்தின் அழுத்தம் என்பது மேலைத்தேய நாடுகள் சார்ந்த நலனுடன் ஒன்றுபட்டது என்ற விடயம் கடந்த நல்லாட்சி காலத்தில் அந்நாடுகள் எடுத்த நிலைப்பாட்டிலிருந்து தெளிவாகப் புலனாகிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இலங்கையின் மீது இறுக்கமான பிடியொன்றைக் கொண்டிருக்க வேண்டும் என விரும்புகின்ற சில சர்வதேச சக்திகள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றன என்றே கூறலாம்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பிடி தளர்ந்ததும், ராஜபக்ஷக்களின் ஆட்சி இலங்கையில் அமையும் போது சர்வதேசத்தின் பிடி இறுகுவதும் 2009ஆம் ஆண்டிலிருந்து மாறி மாறி நிகழும் காட்சிகளாகும். இவ்வாறான பின்னணியிலேயே ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் மீண்டும் ஒருமுறை இப்போது சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பது ஒருபுறத்தில் சரியாக இருப்பினும், தமிழர்கள் எதிர்பார்க்கின்ற எதிர்பார்ப்புகளுக்கு சர்வதேசத்தினால் முழுமையான தீர்வைப் பெற்றுக் கொடுத்து விட முடியுமா என்ற கேள்வியும் இங்கு உள்ளது.

தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உண்மையான நோக்கம் இருந்திருந்தால், ஒவ்வொரு முறையும் ஜெனீவா கூட்டத்தொடரின் போது தம்மை மனித உரிமை காவலர்கள் போன்று காண்பிக்கும் தமிழ் அரசியல் தரப்பினர் சிலர் கடந்த நல்லாட்சியின் காலத்தில் இலங்கை அரசுக்கு உரிய அழுத்தத்தைக் கொடுத்து பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும்.

குறிப்பாக நல்லாட்சி அரசாங்கத்துக்கு தோள் கொடுத்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பல சந்தர்ப்பங்கள் அன்று கிடைத்தன. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக் கவிழ்ப்பை சந்தித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தோள்கொடுத்தது என்னவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான்.

இதன் அடிப்படையில் ஒவ்வொருமுறை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் போதும் தமிழ் மக்களின் ஒவ்வொரு பிரச்சினைக்குத் தீர்வை நிபந்தனையாக வைத்திருந்தால் பலவற்றை இப்போது அடைந்திருக்கலாம்.

இலங்கைக்கு எதிராக கடுமையான பிரேரணையொன்றைக் கொண்டு வர வேண்டும் எனக் கோரி தற்பொழுது வெளிநாட்டு தூதுவர்களைச் சந்தித்த அதே அரசியல்வாதிகள்தான், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அரசின் ஆயுளை நீடிப்பதற்காக வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

பொது வெளியில் தமிழர் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாகக் காண்பிக்கப்பட்டாலும் அதற்காக செயற்படும் பலரின் பின்னணியில் ஒவ்வொரு நிகழ்ச்சி நிரல் இருப்பது துரதிர்ஷ்டமானது. அப்பாவித் தமிழ் மக்கள் இம்முறையாவது தமக்கு தீர்வு கிடைக்கும் என நம்பி ஏமாந்து போவதே தொடர்ச்சியாக நாம் காணும் விடயங்கள்.

சர்வதேச அழுத்தங்களுக்கு அப்பால், இனமொன்றை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்படும் அரசியல் கலாசாரம் மாற்றமடைந்தாலே பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உள்நாட்டில் தீர்வொன்றை வழங்குவது இலகுவானதாக அமையும். தாம் சார்ந்த இனத்தின் அடையாளத்தைப் பயன்படுத்தி அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் வேளையில் மற்றைய இனத்தவர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்பது கடினமானதாகவே இருக்கும்.

குறிப்பாக இனவாதமே இலங்கையின் அரசியல் போக்காக மாறியுள்ளது. ஒவ்வொரு முறை தேர்தல் வரும் போதும் சிறுபான்மை இனத்தவர்கள் மீதான வெறுப்புக்களைத் தூண்டும் வகையிலான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவது இலங்கையின் அரசியல் போக்காகக் காணப்படுகிறது. எந்தவொரு அரசியல் கட்சியும் இந்த நிகழ்ச்சி நிரலில் இருந்து விலகிச் செல்வதைக் காண முடியாதிருக்கின்றது.

இவ்வாறான அரசியல் கலாசாரம் தொடர்ந்தும் நீடிக்குமாயின் இனங்களுக்கிடையே நிரந்தர ஐக்கியம் ஏற்படுமா என்ற கேள்வி பலமாகக் காணப்படுகிறது.

இலங்கையர்கள் அனைவருமே இந்நாட்டுப் பிரஜைகள் என்ற சிந்தனை ஏற்படும் பட்சத்தில் மட்டுமே எவ்வித சர்வதேச அழுத்தங்களும் இன்றி உள்நாட்டிலேயே இப்பிரச்சினையை தீர்க்க முடியுமென்பது உறுதி. இல்லாத பட்சத்தில் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதமும், செப்டெம்பர் மாதமும் இலங்கை விடயம் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர்களில் பேசப்படும் விடயமாகவே இருக்கும்.



**இனங்களை உருவேற்றும் போலிப் பிரசாரங்கள் நிறுத்தப்பட்டு, முரண்பாடுகளுக்கு உள்நாட்டில் தீர்வு காணும் சாத்தியப்பாடான வழிவகைகளை தேடுவதே பொருத்தம்.**

# கூட்டு ஒப்பந்தத்திலிருந்து கம்பனிகள் வெளியேற முடியாது

2015ல் சம்பள உயவு பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் இ.தொ.கா முன்னாள் தலைவர் ஆறுமுகம் தொண்டமானால் தன்னிச்சையாக 1000 ரூபா கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது சம்பந்தமாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் தோட்டத் தொழிலாளர் சங்கக் கூட்டமைப்பும் கலந்தாலோசித்து இக்கோரிக்கையை ஆதரித்தன.

இக்காலத்தில் தேர்தல் சூடுபிடித்திருந்ததால் தேர்தலில் களமிறங்கிய வேட்பாளர்கள் 1000 ரூபா கோரிக்கைக்கு பச்சைக்கொடி காட்டினர். ஆனால் தேர்தல் முடிவடைந்தவுடன் அவர்கள் மௌனமாகி விட்டனர். தொழிற்சங்க பிரதிநிதிகளோடு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 1000 ரூபா வழங்க முடியாதென்பதே முதலாளிமார் சம்மேளனத்தின் நிலைப்பாடாக இருந்தது. இறுதியில் அடிப்படை சம்பளமாக 700 ரூபாவும் ஏனைய கொடுப்பனவாக 50 ரூபாவாக மொத்தம் 750.00 ரூபா கிடைக்கப்பெற்றது.

இதற்கு எதிராகப் போராட்டங்கள் அதிகரித்ததால் தோட்ட மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மந்திரிமார் 50 ரூபா வாங்கித் தருவேன் எனவும், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தி வாங்கித் தருவதாகவும், இன்னொருவர் 1000 ரூபா கொடுத்தால் அரசாங்கதுடன் இணையவும் தயார் எனவும் ஊடகங்களில் பிரச்சாரம் செய்தனர். பெட்ரோல் கேன் சகிதம் பாராளுமன்றத்திற்குள் செல்ல முயற்சித்து பாசாங்கு காட்டியவரும் இருக்கின்றார். ரூபா 1000 சம்பந்தமாக கம்பனிகளுக்கு இரண்டுவார காலக்கெடுவும் கொடுக்கப்பட்டது.

இக்கோரிக்கைக்கு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கருப்புப்பட்டி போராட்டங்கள், உண்ணாவிரதப் பேராட்டங்கள் தேசிய சர்வதேச ரீதியிலும் நடைபெற்றன. ஆயிரம் ரூபா இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டது. 1000 ரூபா கொடுக்காவிட்டால் தோட்டங்களை அரசு சுவீகரிக்கும் எனவும் பயமுறுத்தப்பட்டது. தைப் பொங்கலுக்கு முன் கிடைக்கும், தீபாவளிக்கு முன் கிடைக்கும், கொரோனா காய்ச்சல் சுகமான பின் கிடைக்கும், தேர்தல் முடிவடைந்தவுடன் கிடைக்கும் என மாறிமாறி ஏதோதோ ஊடகங்களில் கூறிக்கொண்டே இருந்தனர்.

கடந்த வருடம் சம்பள உயர்வுப் பேச்சுவார்த்தையில் 1000 ரூபா கோரியபோது இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தால் மாற்றுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது. ஆனால், அவர்களின் இந்த மாற்றுத்திட்டம் தொழிலாளர்களைப் படுகுழியில் தள்ளும் திட்டமாதலால் தொழிற்சங்கங்களால் நிராகரிக்கப்பட்டது. இவ்வாண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது 1000 ரூபா வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதன்பின் பலமுறை தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பிரதமர் என பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் முதலாளிமார் சம்மேளனத்தினால் எவ்வித மாற்றமும் ஏறப்படாமையால் இதுகுறித்து அமைச்சரவையில் ஆராயப்பட்டது. அதன்பின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தொழில் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வாவும் பலமுறை முதலாளிமார் சம்மேளனத்தோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். ஆனால் முதலாளிமார் சம்மேளனத்தின் நிலைப்பாட்டில் எவ்வித முன்னேற்றமும் இல்லாததினால் சட்டத்தின் உதவியை நாடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதை முதலாளிமார் சம்மேளனம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஏனெனில் ஆண்டாண்டு காலம் நட்டம் நட்டம் எனக் கூறிக் கொண்டே போனால் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது எப்போது?

இதனால், இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய ஒரே மார்க்கம், சம்பள சபைகள் கட்டளைச் சட்டம் என்பதால் 07.01.1944ல் அங்கீகரிக்கப்பட்ட தேயிலை வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில் சம்பள நிர்ணய சபை, 22.10.1949ல் அங்கீகரிக்கப்பட்ட இறப்பர் நடுதல் மற்றும் பொது இறப்பர் உற்பத்தி கைத்தொழில் சம்பள நிர்ணய சபை ஆகிய இரண்டு சபைகளிலும் 1000 ரூபா வழங்க வேண்டுமென்ற பிரேரனைகள் முன் வைக்கப்பட்டன. இந்த இரண்டு சபைகளிலும் இவ்விடயங்கள் சம்பந்தமாக 08.02.2021ல் வாதவிவாதங்கள் நடைபெற்றன. அதன்பின் இறுதியில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு தொழிலாளர் பிரதிநிதிகளுடன் 03 நியமன அங்கத்தவர்களும் வாக்களித்ததினால் 900 ரூபா குறைந்தபட்ச தினச் சம்பளமாகவும் 100 ரூபா வரவுசெலவு திட்ட சலுகைக் கொடுப்பனவாக தேயிலை இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இதை தொழில் அமைச்சரின் அங்கீகாரத்துடன் 05.03.2021ல் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த அதிவிசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டதை தோட்ட நிர்வாகங்கள் 05.03.2021 முதல் அமுல்படுத்த வேண்டும். இதுபோன்ற விடயங்கள் கடந்த காலங்களிலும் நிறைவேற்றப் பட்டுள்ளன. உதாரணமாக, 1998ம் ஆண்டு நமது நாட்டின் தேசிய தினமான பெப்ரவரி மாதம் 4ம் திகதியை ஏனைய தொழிலாளர்களுக்கு விடுமுறை தினமாக அங்கீகரித்துள்ளதைப் போல் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கும் அங்கீகரித்து விடுமுறை வழங்கப்பட வேண்டுமென்ற பிரேரணைக்கு 29.03.2000ல் நடைபெற்ற வாக்கெடுப்பில் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் 03 நியமன அங்கத்தவர்களும் வாக்களித்ததால் இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் 01.08.2020 முதல் சம்பளத்தோடு விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்ற அறிவித்தலின் பிரகாரம் சம்பளத்துடனான விடுமுறை வழங்கப்படுகின்றன.

அதன்பின் சிறுதோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் சம்பந்தமாக சிறு தோட்ட உரிமையாளர்களின் சார்பில் 50 ஏக்கருக்கு மேலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு 95 ரூபாவும், 50 ஏக்கருக்கு குறைவாக உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு 88 ரூபாவும், 5025 ஏக்கருள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு 83 ரூபாவும் வழங்க வேண்டுமென்ற பிரேரணை தேயிலை உற்பத்தியும் பதனிடல் சபையில் முன்வைக்கப்பட்டது. இப்பிரேரணை சம்பந்தமாக 22.07.1998ல் நடைபெற்ற தேயிலை வளர்த்தல், உற்பத்தி தொழில் சம்பள நிர்ணய சபையில் வாதவிவாதங்கள் நடைபெற்று இறுதியில் நடைபெற்ற வாக்கெடுப்பில் 95 ரூபா வழங்கும் பிரேரணைக்கு தொழில்கொள்வோர் 04 பிரதிநிதிகளோடு 02 நியமன அங்கத்தவர்களும் வாக்களித்தனர் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

கூட்டு ஒப்பந்தமுறையை பலர் பல விதமாக விமர்சனம் செய்ததோடு அதனை கிழித்தெறிய வேண்டும் எனக் கூறப்பட்டதுடன் பாராளுமன்றத்தின் மூலமாக சம்பள உயர்வை பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டன. வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. தற்போது 1000 ரூபா வழங்க சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வழங்க வேண்டும் இல்லையேல் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளமுடியும். முதலாளிமார் சம்மேளனம் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதுமட்டுமல்ல, தொழிலாளர்கள் நீண்டகாலமாக அனுபவித்த உரிமைகள் சலுகைகள் போன்றவைகள் தோட்டங்கள் கம்பனிமயமான பின் ஒவ்வொன்றாக ஒழித்து தற்போது கொழுந்து பறிப்பதும் அதை தூளாக்கி விற்பது மாத்திரமே செய்யப்படுகின்றன. ஆகக் குறைந்தது தொழிலாளர்களுக்கு மாதாமாதம் வழங்கப்பட்ட 500 கிறாம் தேயிலைத் தூள் வழங்குவதிலும் புதியமுறை மூலம் அதிகமானவர்களுக்கு கிடைப்பதில்லை. தோட்டங்கள் காடாகி காட்டு மிருகங்களின் நடமாட்டம் அதிகரிக்கின்றன. அதிகமான தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இவற்றை நிர்வாகங்கள் கணக்கெடுப்பதும் இல்லை. இதேநிலை தொடர்ந்தால் தோட்டங்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும். கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து முதலாளிமார் சம்மேளனம் விலகிவிடுவதாகவும் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை பொருத் திருந்தே பார்க்க வேண்டும்.

நமது மக்கள் பிரதிநிதிகள் வெறுமனே சம்பள விடயத்தை மட்டுமே பேசிக் கொண்டிருக்காமல் தோட்ட மக்களின் மிக முக்கிய தேவையான காணி உறுதியோடு வீடும் காணியும் பெற்றுக்கொடுக்க முன்வருவதுடன் தமிழ்மொழி பாடசாலைகளில் நிலவும் விஞ்ஞான, கணிதபாட ஆசிரியர்கள் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதனையே பெருந்தோட்ட சமூகம் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து எதிர்ப்பார்க்கிறது.



ஆ.முத்துலிங்கம் ...
பொதுச் செயலாளர்
ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம்.

# பெருந்தோட்ட சேவையாளர்களின் காணிப்பிரச்சினைக்கு தீர்வு கிட்டும்

## இலங்கை தோட்ட சேவையாளர் சங்க நூற்றாண்டு விழாவில் உறுதிமொழி

பெருந்தோட்டங்களில் சேவையாற்றும் சேவையாளர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்கு வகிப்பவர்கள். அவர்கள் தோட்டங்களில் தொழில் செய்து ஓய்வு பெற்றபின் தமக்கென சொந்தக்காணி இல்லாமல் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். இது சம்பந்தமாக தொழில் அமைச்சர் சிறிபால டி சில்வாவுடன் பேச்சுவாத்தை நடத்தி இப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும் என்றும் சுமார் 3300 தோட்ட சேவையாளர்கள் காணியில்லாத நிலையில் இருக்கிறார்கள் என்றும் ரமேஸ் பத்திரன குறிப்பிட்டுள்ளார். "இவர்களுக்கு 100 ஹெக்டயர் காணியே தேவைப்படுகிறது. இதனை பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட பெருந்தோட்ட அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் நூற்றாண்டு விழா கடந்த 6ஆம் திகதியன்று கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு ஜெஸ்மின் மண்டபத்தில் சங்கத்தலைவர் சத்துரசமரசிங்க தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட சங்கத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்ற தலைவர்கள் பொதுச்செயலாளர்கள் உபத்தலைவர்கள் மற்றும் இலங்கையிலுள்ள 12 கிளைக் காரியாலங்களிலுள்ள நிறைவேற்று குழு உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். நாட்டின் கொவிட் தொற்றுநோய் காரணமாக சுகாதார நிலைமைகளுக்குகேற்ப மட்டுப்படுத்தப்பட்டவர்களே கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் பத்திரன பேசுகையில், இத் தொழிற்சங்கம் பெருந்தோட்ட அபிவிருத்திக்கு முக்கிய பங்குவகிப்பதோடு இன மதங்களுக்கிடையில் ஒற்றுமையே ஏற்படுத்துவதையிட்டு பாராட்டுகிறேன். எல்லா இனத்தவர்களும் இதில் அங்கத்துவம் வகிக்கின்றனர். பெருந்தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வு யோசனையை முன் வைத்து நடவடிக்கைகளை எடுத்தோம் என்றார். 1930 ஆம் ஆண்டளவில் தேயிலை உற்பத்தியில் முன்னணியில் திகழ்ந்த நாடு நமது இலங்கை. 2020ம் ஆண்டில் தேயிலை உற்பத்தியில் இலங்கை 04 ஆவது இடத்திலுள்ளது. இந்தியா, சீனா ஆகிய



அமைச்சர் நிமல் சிறிபால டி சில்லா

நாடுகள் தேயிலை உற்பத்தியை அதிகரித்துள்ளன. தேயிலை உற்பத்தியை பொறுத்தளவில் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

அடுத்து பேசிய தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உரையாற்றினார். இத் தொழிற்சங்கம் தேசிய பொருளாதாரத்தை சக்திமிக்கதாக்கும் தொழிற்சங்கமாகும். தேயிலை, இறப்பர், தென்னை போன்றபெருந்தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் பலவருடகாலமாக 1000 சம்பள உயர்வு கேட்டு வருகிறார்கள். பலதடவை தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கு இடையில் நடைபெற்ற பேச்சுவாா்த்தை இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை.

குதிரையை தண்ணீர் இருக்கும் இடத்திற்கு கொண்டுசெல்ல முடியும் அதற்கு நீரை ஊட்டமுடியாது. வேறு வழியில்லாமல் சம்பள நிர்ணய சபை மூலமாக 1000 ரூபாவை பெற்றுக் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. எனது ஆலோசனைப்படி கூட்டு ஒப்பந்தம் தான் சிறந்தது. இரண்டு சாராரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வராவிட்டால் எப்படியாவது இப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும். அரசு வாக்குறுதியளித்தபடி தோட்டத் தொழிலாளர்கள் கஷ்டப்பட்டு வியர்வை சிந்தி வேலை செய்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு 1000 ரூபா பெற்றுக்கொடுக்க வேண்டியது எமது கடமையாகும் தோட்ட கம்ப





னிக்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் மூலம் அரசிற்கு எந்த இலாபமுமில்லை கம்பனிக்கே அதிக இலாபம். இன்று பெருந்தோட்டங்களில் 39000 ஹெக்டெயர் காணிகள் விவசாயம் செய்யாமல் இருப்பதாக கேள்விப்படுகிறோம்.

அப்படிப்பட்ட காணிகளை தோட்டத் தொழிலாளர்களுக்கும் தோட்டத்தின் அருகாமையிலுள்ளவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். பெருந்தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு மலசலகூட வசதி வீட்டு வசதிகள் குறைவு. பல வேலைத் திட்டங்களை செய்துவந்த போதிலும் இன்னும் பெருந்தோட்டப்பகுதிக்கு வேலை செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

பெருந்தோட்டங்களில் வேலை செய்து ஓய்வுபெற்ற உத்தியோகஸ்தர்களுக்கு காணிப்பிரச்சினை சம்பந்தமாக நானும் அமைச்சா் ரமேஸ் பத்திரனவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். உங்கள் தொழிற்சங்கத்தை பாராட்டுகிறேன். சில தொழிற்சங்கங்கள் வருடக்கணக்கில் கூட்டம் வைப்பதில்லை. உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில்லை. உங்கள் சங்கத்தின் யாப்புக்கமைய இரண்டு வருடத்திற்கு ஒருமுறை தேர்தல் நடத்துவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் என்றார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா.

அடுத்து பேசிய இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் தலைவர் சத்துரசமரசிங்க தமதுரையில் 100 வருடங்கள் பெருந்தோட்டங்களை பாதுகாத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் சங்கத்தின் முதல் தலைவர் சொய்சா எனவும் குறிப்பிட்டார்.



ரமேஷ் பத்திரன

எந்த முடிவையும் சுயாதீனமாக எடுப்போம். இந்நாட்டில் எந்தவொரு அரசாங்கத்திற்கும் கட்சிக்கும் சார்பாக நடந்துகொள்ளவில்லை. அவர்களுக்கு ஏற்றவாறான முடிவுகளை நாங்கள் எடுக்கமாட்டோம். கடந்துவந்த வருடங்களில் இன, மத பேதமின்றி சகோதாரத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் செயல்பட்டுவந்த தொழிற்சங்கமாகும். தொழில் செய்பவர்களுக்கு எங்கு அநியாயம் நடந்தால் அங்கு எமது தொழிற்சங்கம் முன்னின்று செலாற்றுவோம்.

தோட்டத் தொழிலாளா்களுக்கு 1000 ரூபா சம்பள விடயத்தில் பல போராட்டங்களை செய்து வந்துள்ளோம். அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்க வேண்டும் என்ற நிலையில் நாம் உறுதியாகவே இருக்கிறோம் என்றார்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்ற
ஆளுமைகள்

## அரசியல் தொழிற்சங்க செயற்பாட்டாளர்

# எஸ். இராமநாதன்



மலையக அரசியல், தொழிற்சங்க, கலை இலக்கிய துறையில் இன்று சுடர்விட்டுப் பிரகாசிக்கும் எஸ். இராமநாதன் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனில் சுமார் ஐந்து தசாப்தகால அனுபவம் கொண்டவர். மஸ்கெலிய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பி.ஜி. ஆரியதிலகவின் வழிகாட்டலில் கலாநிதி என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா போன்ற இடதுசாரித்தலைவர்களின் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு முன்னாள் கல்லூரி அதிபராக இருந்த ஏ.ஆர். சுப்ரமணியத்தின் வேண்டுகோளுக்கிணங்க லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் மாத்தளை மாவட்டப் பிரதிநிதியாக 1965 இல் மாத்தளைக்கு வந்தார். டாக்டர் என்.எம். பெரேரா தலைவராகவும், எஸ். செல்லையா பொதுச் செயலாளராகவும் பணியாற்றிய காலமது.

வி.எஸ். ராஜா பொதுச் செயலாளராகக் கடமையாற்றியபோது ல.தோ.தொ.யூ உதவிச் செயலாளராகவும், அதன் பின்னர் கொல்வின் ஆர்.



காமினி திசாநாயக்கவுடன்

டி.சில்வா தலைவராக பணியாற்றிய காலத்தில் தொழிற்சங்க கூட்டுப்பிரதி செயலாளராகப் பதவி உயர்வு பெற்றவர். வி.எஸ். ராஜாவுக்கு பின்னர் பொதுச் செயலாளராக பணியாற்றிய எஸ். சிவசாமி, 1985 இல் மரணமானதையடுத்து இராமநாதன் தொழிற்சங்க செயலாளராக பதவியேற்றார்.

அன்று முதல் இன்றுவரை சுமார் 36 வருடங்கள் பொதுச் செயலாளராக பதவி வகிக்கும் இவர் மலையகத்தின் 10 தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பான மலையக பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பின் செயலாளர் நாயகமாகப் பதவி வகித்து வருகிறார்.



அன்று முதல் இன்று வரை தோட்டத் தொழிலாளர்களின் விடுதலைக்காகவும் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் நேரம் காலம் பாராது உழைத்து வரும் இராமநாதன் கடந்த 55 வருடகாலமாக மாத்தளையில் வசித்து வருகிறார்.

ஹட்டன் வெலிஓயா தோட்டத்தில், எஸ். சுப்பையா, எம். காளியம்மாள் தம்பதிகளின் நான்காவது புதல்வனாக 691941 இல் பிறந்த இராமநாதன் ஒரு அப்பழுக்கற்ற தொழிற்சங்கவாதி. தனது ஆரம்பக் கல்வியை வெலிஓயா



தோட்டப் பாடசாலையிலும், தனது உயர் கல்வியை ஹட்டன் ஸ்ரீபாத கல்லூரியிலும் பயின்றவர்.

இவர் மாத்தளைக்கு வந்த காலம் முதல் இவருடன் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நோர்த் மாத்தளையில் நாங்கள் வாழ்ந்த தோட்டத்தில் பல்வேறு பிரிவுகளிலும் இருந்த தொழிலாளர்களின் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் நானும் மாத்தளை வடிவேலனும் இவருடன் தொடர்பு கொண்ட போதெல்லாம் பிரச்சனைகளைத்தீர்த்து வைப்பதில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்.

ஸ்ரீமா தலைமையில் ஐக்கிய முன்னணி ஆட்சியில் (1970 / 1977) தோட்டத் தொழிலாளர் மத்தியில் வறுமை கோரத் தாண்டவம் ஆடிய காலத்தில் தொழிலாளர்களுக்கு வாரந்தோறும் தோட்டங்களில் ரேசன் அரிசி வழங்கப்பட்டு வந்தது. இதனைக் கூட தோட்ட நிர்வாகிகளும் அவரைச் சார்ந்தவர்களும் மோசடிசெய்து தொழி

களை கையும் மெய்யுமாக பிடித்து நிர்வாகிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்து தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அகற்றிய பெருமகனே இவர்.

1971 ஜே.வி.பி. கிளர்ச்சி ஏற்பட்டது தொடர்பாக ஆய்வு செய்த ஐக்கிய முன்னணி அரசு, 1972 முற்பகுதியில் மலையகத்தில் உள்ள தனியாருக்கு சொந்தமான பல தோட்டங்கள் காணி சீர்திருத்த சட்டத்தின் கீழ் சுவீகரித்து ஜனவசம என்ற நிறுவனத்தால் நிர்வகிக்கத் தொடங்கியது. இதனால் தோட்டங்களில் சேவையாற்றிய பலர் தொழில்களை இழந்து வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் மாத்தளையில் பல இடங்களில் நிகழ்ந்தன.

அரசு சுவீகரித்த தோட்டங்களில் தொழிலாளர்கள் தமது தொழிற்சங்கங்களில் தொடர்ந்து செயற்படவும், புதிய தொழிற்சங்கங்கள் அமைக்கவும் உரிமைகள் மறுக்கப்பட்டன. இது சம்பந்தமாக அன்றைய காணி விவசாய அமைச்சருக்கு எஸ். இாாமநாதன் பல கடிதங்களை அனுப்பி தனது எதிர்ப்பை தெரிவித்தார். அமைச்சர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராமநாதன் வெளியிட்ட அறிக்கைகள் வீரகேசரி, தினபதி, தினகரன் உட்பட ஆங்கில, சிங்கள பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருந்தன.

பத்திரிகைகளில் இந்த அறிக்கையை அவதானித்த உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் வி. தா்மலிங்கம் 14.10.1975 அன்று பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் அரசு சுவீகரித்த தோட்டங்களில் தொடர்ந்து அவர்களுக்கு தொழில் வழங்க வேண்டும் எனவும் அவர்களது அடிப்படை உரிமைகளான தொழிற்சங்கங்களை அமைக்கவும் அவற்றில் சேரவும் சந்தாவை செக்ரோலில் பிடித்து தொழிற்சங்கங்களுக்கு அனுப்பவும் அனுமதிக்க வேண்டும் எனக் கோரியதோடு, லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த உதவிச் செயலாளர் எஸ். இராமநாதன் காணி சீர்திருத்த சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட தோட்டங்களில் உள்ள தொழிலாளா் கள் தங்கள் அடிப்படை உரிமையான தொழிற்சங்க உரிமைகளை இழந்துள்ளனர் என்று பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றும் வி. தர்மலிங்கம் சுட்டிக்காட்டினார். அதன்பின்பே காணி சீர்திருத்த சட்டத்தின்கீழ் அரசு சுவீகரித்த தோட்டங்களில் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்பட்டன என்பது வரலாறாகும். இது (14.10.1975) பாராளுமன்ற பதிவேட்டில் உள்ளது.

மலைநாட்டு எழுத்தாளர் மன்ற முக்கிய ஆளுமைகளில் ஒருவரும், செய்தி பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான கு. இராமச்சந்திரனுடன் தொடர்பு ஏற்பட்ட பின்னரே தான் எழுத்துலகில் பிரவேசித்ததாக பெருமையுடன் கூறும் இவர் 'தோட்டத் தொழிலாளரும் சமசமாஜ கட்சியும்' என்ற நூலை 1992 இல் வெளியிட்டு கு. இராமச்சந்திரனுக்கு அதனை சமர்ப்பணம் செய்துள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

எச்.எச்.விக்கிரமசிங்க ...

# "கூட்டு ஒப்பந்தத்தை அடிமை சாசனம் என்றவர்கள் அதில் இருந்து விலகக் கூடாது என்கிறார்கள் இப்போது!"



## இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வெளிவிவகாரத்திற்கு பொறுப்பானவரும் பிரஜா சக்தி பணிப்பாளருமான பரத் அருள்சாமி உடனான நேர்காணல்

'நாங்கள் (தொழிற்சங்கங்கள்) இந்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுகிறோம் என்று முதலாளிமார் சம்மேளனமிடம் கூற வேண்டும். அல்லது முதலாளிமார் சம்மேளனம் எங்களிடம் கூறவேண்டும். அதன் அடிப்படையிலேயே இந்த ஒப்பந்தம் செயலிழக்கும். இதற்கு ஒரு மாதகால அவகாசம் தேவை'

'பெருந்தோட்டங்கள் வெளியாட்களுக்கு பிரித்து கொடுக்கப்படமாட்டாது.



தொழிற்சங்கம் என்ற ரீதியில் நாங்கள் தொழிலாளர்களுக்கு தேயிலை தோட்டங்களை பிரித்து கொடுக்க அனுமதிப்போமே தவிர வெளியாட்களுக்கு தோட்டங்களை பிரித்துக் கொடுக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்'

சம்பள சபையிடம் சென்றது தவறான அணுகுமுறை என்றும் உடன்படிக்கையில் தொடர்வதுதான் புத்திசாலித்தனம் என ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறது. சம்பள சபை என்பது சம்பள அதிகரிப்புடன் முடிந்துவிடும். நலன்கள், சலுகைகள், வசதிகள் என்பன உடன்படிக்கை வழியாகவே தொடரப்பட முடியும். உங்கள் கருத்து என்ன?

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் சம்பள நிர்ணய சபை ஊடாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அமரர் ஆறுமுகன் தொண்டமானின் விடா முயற்சியாலும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அழுத்தத்தினாலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள கோரிக்கைக்கு சம்பள நிர்ணய சபை அனுமதி வழங்கியுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக 8.2.2021 சம்பள நிர்ணய சபையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தொழில் ஆணையாளர், தொழிற்சங்கங்கள், கம்பனிகள் மற்றும் அரச தரப்பு பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது முதலாளிமார் சம்மேளனம் நாள் சம்பளமாக 585 ரூபாவை முன்வைத்தனர். ஆனால் தொழிற்சங்கங்கள் ஆயிரம் ரூபாவை முன்வைத்த நிலையில் அடிப்படை நாள் சம்பளமாக 900 ரூபாவும் மேலதிக கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனை சம்பள நிர்ணய சபையால் முன்வைக்கப்பட்டது. இதற்கு ஆதரவாக 11 பேர் வாக்களித்தனர். தொழிற்சங்க தரப்பிலிருந்து 8 பேரும், அரச தரப்பில் இருந்து 3 பேரும் வாக்களித்தனர். இதன்படி இத்திட்டம் நிறைவேறியது. இதற்கு தொழிற்சங்க ரீதியில் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபே ராஜபக்ஷவுக்கும் நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எமது நன்றிகள்.

கூட்டு ஒப்பந்தத்திலிருந்து நாங்கள் வெளியேறப் போவதில்லை. கூட்டு ஒப்பந்தத்தில் இருந்துகொண்டு சம்பள நிர்ணய சபையிலும் இருக்க முடியாது என்பது முதலாளிமார் சம்மேளனத்தின் வாதம். ஒன்று கூட்டு ஒப்பந்தத்தில் இருப்போம் அல்லது சம்பள நிர்ணய சபையில் இருப்போம் என்கின்றனர். இதனை அவர்களே முடிவு செய்ய வேண்டும். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம் மட்டுமல்லாது அவர்களின் நலன்புரி விடயங்களும் கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வளவு காலம் கூட்டு ஒப்பந்தம் தொழிலாளர்களுக்கு எதிரானது என்று கூறியவர்கள் கூட இப்போது கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேற வேண்டாம் என்று கூறுகின்றார்கள்.

இவ்வளவு காலமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களை கூட்டு ஒப்பந்தம் தான் காப்பாற்றி வந்துள்ளது. கூட்டு ஒப்பந்தத்தில் இருக்கும் முக்கிய விடயங்களை பார்க்கும்போது வருடத்திற்கு 300 நாட்கள் வேலை, மாதத்திற்கு 25 நாட்கள் வேலை, ஞாயிறு போயா தினங்களில் ஒன்றரை நாள் சம்பளம், குளவி கொட்டு, பாம்பு கடி மற்றும் வேலை நேரத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்கு அவர்கள் ஓய்வு எடுக்கும் நாட்களுக்கு முழு சம்பளம் வழங்கப்படுதல், தேயிலை தூள், இறந்தால் சவப்பெட்டி செலவு, கர்ப்பிணிப் பெண்களுக்கான செலவு, படித்த இளைஞர் யுவதிகளுக்கு அத்தோட்ட காரியாலயத்தில் வேலை வழங்குதல் போன்றன உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இதனையே இன்று பலர் அடிமை சாசனம் என்கின்றனர். கூட்டு ஒப்பந்தம் என்பது இரண்டு தரப்புகளும் இணைந்து ஏற்படுத்துவதே. இதனை ரத்து செய்ய வேண்டுமென்றால் நாங்கள் (தொழிற்சங்கங்கள்) இந்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுகிறோம் என்று முதலாளிமார் சம்மேளனமிடம் கூற வேண்டும். அல்லது முதலாளிமார் சம்மேளனம் எங்களிடம் கூறவேண்டும் அதன் அடிப்படையிலேயே இந்த ஒப்பந்தம் செயலிழக்கும். இதற்கு ஒரு மாதகால அவகாசம் தேவை.

**கூட்டு ஒப்பந்தம் இல்லாவிடத்து தொழிலாளர்களிடமிருந்து சந்தா பணம் அறவிடப்படுமா?**

சந்தா பணம் என்பது ஒவ்வொரு தொழிற்சங்கத்திற்கு தொழிற்சங்கம் மாறுபடும். கூட்டு ஒப்பந்தத்தில் ஒரு சரத்து உள்ளது. அதில் கூட்டு ஒப்பந்தத்திலிருக்கும் தொழிற்சங்களுக்கு ஒரு தொழிலாளியின் ஒரு நாள் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கை ஒரு மாத சந்தாவாக அறவிடவேண்டும். தொழிலாளர்களுக்கு தொழில் ரீதியாக ஏற்படும் பிணக்குகளை தொழிற்சங்கம் தலையிட்டு தீர்க்கின்றன.

இ.தொ.கா.வைப் பொறுத்தவரை இலங்கை முழுவதும் 48 தொழிற்சங்க காரியாலயங்கள் உண்டு. ஒரு காரியாலயத்தில் கிட்டத்தட்ட 5 பேர் வேலை செய்கின்றனர். அது மட்டுமல்லாமல் தொழில் வழக்குகள் அனைத்துமே தொழிற்சங்கத்தினூடாகவே பேசி தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும். தொழிலாளர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றினை எதிர்காலத்தில் இ.தொ.கா அறிமுகப்படுத்தவுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மட்டும் சந்தா பணம் அறவிடவில்லை. மலையகத்திலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் சந்தா பணத்தை அறவிடுகின்றன. கூட்டு ஒப்பந்தம் இல்லாத காலத்திலும் தொழிலாளர்கள் சந்தா செலுத்தியுள்ளார்கள். கூட்டு ஒப்பந்தம் இல்லையென்றாலும் சந்தா செலுத்துவது இல்லாமல் போகாது.

**கம்பனிகளை அரசு பொறுப்பேற்றால் அவை பிரித்து கொடுக்கப்படக் கூடிய வாய்ப்பு உள்ளது என்றும் சீன, இந்திய கம்பனிகளிடம் கையளிக்கப்படலாம் எனவும் ஒரு கதையாடல் உள்ளது. இந்த ஆபத்து பற்றி....**

சீன இந்திய கம்பனிகளுக்கு வழங்குவது என்பதில் எந்த உண்மைத் தன்மையும் இல்லை. அது ஒரு புரளி. இந்த அரசாங்கம் மிக நேர்த்தியாக செயற்படுகின்றது. கம்பனிகள் தொழிற்சங்கங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று அரசாங்கம் கூறுகின்றது. பெருந்தோட்டங்கள் வெளியாட்களுக்கு பிரித்து கொடுக்கப்படமாட்டாது. தொழிற்சங்கம் என்ற ரீதியில் நாங்கள் தொழிலாளர்களுக்கு தேயிலை தோட்டங்களை பிரித்து கொடுக்க அனுமதிப்போமே தவிர வெளியாட்களுக்கு தோட்டங்களை பிரித்துக் கொடுக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

**மலையகத்தில் இரண்டு பெரிய கட்சிகளே உள்ளன. ஒன்று இ.தொ.கா. இரண்டாவது தமிழ் முற்போக்கு முன்னணி. இரண்டுக்கும் இடையில் முக்கியமான, அடிப்படையான விடயங்களில் ஒரு செயலாற்றும் உறவை (working relationship) ஏற்படுத்துவதில் உள்ள சாதகத் தன்மை பற்றி யோசித்திருக்கிறீர்களா? வருங்காலம் அவ்வளவு சிறப்பாக இருக்காது என்ற ஒரு கருத்து உண்டு. அவ்வாறானால் நாம் குடுமிப்பிடி சண்டை போட்டுக் கொண்டிருக்க முடியாது அல்லவா?**

இ.தொ.கா.வுக்கு ஒரு வரலாறு இருக்கின்றது. அந்த வரலாற்றை பார்க்கின்றபொழுது அது எல்லோருடனும் இணைந்து செயற்படும் ஒரு அமைப்பு என்பது தெரியவரும். அரசியலிலும் அப்படித்தான் வடக்கு கிழக்கு வரை பரந்துள்ளது. கொள்கைகள் ஒன்றாக இருந்தாலும் மக்கள் நலனுக்காகவே பல முடிவுகளை எடுத்துள்ளது. இங்கு மக்கள் நலனுக்கே முன்னுரிமை வழங்கப்படும். தமிழ் முற்போக்கு கூட்டணி எப்பொழுதுமே இ,தொ.கா வசைப்பாடி, விமர்சித்து, குறைகூறி அரசியல் செய்வதையே ஒரு கொள்கையாக கொண்டுள்ளது. எங்களை பொறுத்தவரையில் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக மக்களை தவறாக வழிநடத்தியதில்லை. மறைந்த எமது தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு பாராளுமன்றத்தில் ஒரு அனுதாப பிரேரனை கொண்டுவந்தார்கள். அவர் இ.தொ.கா பொதுச்செயலாளராக இருந்தாலும் அவர் மலையகத்தின் தலைவர். ஒரு சமூகத்தின் தலைவர். 225 பேர் பாராளுமன்றத்திலே இருக்கின்றபொழுது அவர்கள் அனைவருமே அந்த அனுதாப பிரேரணையில் பங்கேற்றார்கள். ஆனால் மலையகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் சிலர் அதில் பங்கேற்காதது கவலையளிக்கின்றது.

**நேர்கண்டவர் : பி. கேதீஸ்**

இதுவே அரசியல் காழ்புணர்ச்சியின் வெளிப்பாடாகும். அவர்களின் தன்மை வெளிப்படுகிறது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பொறுத்தவரை மக்கள் நலனுக்காக யார் முன் வருகின்றார்களோ அவர்களுடன் கைகோர்க்கும்.

**மாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நீங்கள் களம் இறங்குவதற்கான எண்ணம் உள்ளதா?**

கண்டி மாவட்டத்தில் பொதுஜன பெரமுன சின்னத்தில் இ.தொ.கா பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டேன். கண்டி மாவட்டம் மாற்று அரசியல் கொள்கை கொண்ட மாவட்டம். இங்கு ஐக்கிய தேசிய கட்சியினருக்கே சிறுபான்மை மக்கள் தங்களின் வாக்குகளை தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ள நிலையில் முதல் தடவையாக இந்த அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்று இந்த அரசாங்கத்தின் மீதும் இ.தொ.கா மீதும் என் மீதும் நம்பிக்கை வைத்து வாக்களித்தார்கள். நான் 24 ஆயிரத்திற்கு அதிகமாக வாக்குகளை பெற்றாலும் என்னால் பாராளுமன்றம் செல்ல முடியவில்லை. இருந்தாலும் இந்த மக்களுக்கு தொடர்ச்சியாக சேவை செய்ய விரும்புகிறேன். தற்போது நான் பிரஜா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன். மேலும் எங்களது அமைச்சினூடாகவும் பிரஜா சக்தியூடாகவும் இந்த அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் ஊடாகவும் இப்பிரதேச மக்களுக்கு தொடர்ச்சியாக சேவை செய்வேன். நான் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து எமது கட்சியே தீர்மானிக்கும்.

**மலையக தொழிற்சங்க அரசியல் எதிர்காலம் எப்படி இருக்கும், எதிர்நோக்கப்படும் சவால்கள் யாவை?**

தொழிற்சங்கம் வேறு அரசியல் வேறு. நாம் ஏற்கனவே 30 வருடம் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றோம். ஆனால் எமது மக்களின் உழைப்பு ஒரு சரியான தலைமைத்துவத்தின் கீழ் இயங்கியது.

அதனால்தான் இன்று நாம் ஏனைய சமூகங்களுக்கு நிகரான சமூகமாக வாழ்ந்து வருகின்றோம். ஆரம்ப காலத்தில் நமக்கு குடியுரிமை கிடைப்பதற்கு தொழிற்சங்கம் பலமாக இருந்தமையே காரணமாகும். இன்று இந்திய வம்சாவளி மக்கள் 10 இலட்சம் பேர் இருக்கின்றனர்.

தொழிலாளர்களின் தொழில் பிணக்குகளையும் அவர்களின் உரிமைகளையும் பெற்றுக்கொடுப்பதே தொழிற்சங்கம். அரசியல் என்பது அதையும் தாண்டி வாழ்வாதாரம், கல்வி, பொருளாதாரம், தொழில் வாய்ப்புகள் ஏனைய துறைகளை அபிவிருத்தி செய்வது ஆகும். மலையகத்தை பொறுத்தவரை இந்த ஆயிரம் ரூபா சம்பள விடயம் கூட அரசியல் மயமாக்கப்பட்டதன் காரணமாக இன்று எமது அபிவிருத்தி மற்றும் அனைத்துமே இந்த 1000 ரூபாவுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது.

மலையகத்தை பற்றி பேசுபவர்கள் எல்லாம் ஆயிரம் ரூபா சம்பளத்தை மட்டுமே பேசுகின்றார்கள். இந்த ஆயிரம் ரூபா சம்பளம் விடயம் தொழிற்சங்கத்திற்கும் கம்பனிகளுக்கிடையில் பேசி தீர்மானிக்கக் கூடியது. மலையகத்தில் அரசியல் வேறு, தொழிற்சங்கம் வேறு என்பதனை மக்கள் உணர வேண்டும். நாம் எமது பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையில் அரசியல் பரிணாமத்தை ஏற்படுத்துகின்றோம். பல்கலைக்கழகம்,தொழில் வாய்ப்புகள், தொழில் பேட்டைகள் போன்ற எண்ணில் அடங்காத அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம். இன்று நுவரெலியா மாவட்டத்திற்கு மாத்திரம் அபிவிருத்தி மட்டுப்படுத்தப்படாமல் கண்டி, பதுளை, கேகாலை, காலி, இரத்தினபுரி என விஸ்தரிக்கப்பட்டுள்ளது. நாம் ஒரு கொள்கை ரீதியான இலக்கை நோக்கி பயணிக்கிறோம். தொழில் இருக்கும் வரைக்கும் அங்கு ஏற்படும் பிணக்குகளை தீர்ப்பதற்கு தொழிற்சங்கங்கள் இருந்தே தீரும்.

**பிரஜா சக்தி செயற்திட்டத்தின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன? வினைத்திறனாக இயங்கக்கூடிய வாய்ப்பு உள்ளதா?**

பிரஜா சக்தி செயற்திட்டம் என்பது சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகர்த்த மன்றமாகும். இது மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் உருவாக்கப்பட்டது.

தோட்டப்பகுதிகளிலுள்ள மாணவர்கள் கணனி அறிவில் புலமைத்துவம் அடையவேண்டும் என்ற உயரிய நோக்கில் கொண்டுவரப்பட்டது. தற்போது 48 பிரஜா சக்தி நிலையங்கள் காணப்படுகின்றன.

313 தோட்டங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கேகாலை, பதுளை, கண்டி, இரத்தினபுரி, காலி, களுத்துறை, மாத்தளை போன்ற மாவட்டங்களில் பிரஜா சக்தி நிலையங்கள் இயங்குகின்றன.

இங்கு தகவல் தொழிநுட்ப, கல்வி, சுகாதாரம் மற்றும் போசாக்கு, சுயதொழில் மற்றும் அதற்கான சந்தை வசதி, இளைஞர் யுவதி மற்றும் மகளிருக்கான வலுவூட்டல், காணி உரிமையை பெற்றுக்கொடுத்தல் போன்றன இதனூடாக செயற்படுத்தப்படுகின்றன. பிரஜா சக்தி செயற்திட்டத்தின் கீழ் நவசக்தி, இளைஞர் வலுவூட்டல் என மூன்று பிரிவுகள் இயங்குகின்றன.

2015ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் இத்திட்டம் கைவிடப்பட்டது. மீண்டும் இ.தொ.கா அமைச்சு பொறுப்பை ஏற்றதும் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கீழ் பிரஜா சக்தி செயற்திட்டம் இயங்குகின்றது. தோட்டப் பகுதிகள் மாத்திரமின்றி

# கிழக்கு மாகாண அதிபர் இடமாற்றம்: தீர்வும் தெளிவும்

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பெர்ணான்டோவினால் ஒப்பமிடப்பட்ட கிழக்கு மகாண அதிபர்கள் இடமாற்றப் பெயர் பட்டியல் வெளியாகியிருந்தது.

கிழக்கு மாகாண ஆளுனரின் 20.02.2021 ஆம் திகதிய கடிதத்திற்கு அமையவும் 15.09.2020 ஆம் திகதிய கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரது வருடாந்த அதிபர் இடமாற்றம் தொடர்பான அறிவுறுத்தல் விதிகளுக்கு அமையவும், இவ்விடமாற்ற நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இடமாற்றம் கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை தொடக்கம் திருக்கோவில் வரையிலான 12 வலயங்களில் கடமைபுரியும் அதிபர் தரம் I, II, III இல் உள்ளவர்களை உள்ளடக்கியதாக இடம்பெற்றிருக்கின்றது.

இப்பட்டியலில் 137 அதிபர்களின் பெயர்கள் மொத்தமாக உள்வாங்கப்பட்ட நிலையில் 70 அதிபர்கள் இடமாற்றத்தினை பெறுகின்றனர்.

1. **திருகோணமலை வலயம் 8**
2. **கிண்ணியா வலயம் 6**
3. **மூதூர் வலயம் 3**
4. **கல்குடா வலயம் 8**
5. **மட்டக்களப்பு மத்தி வலயம் 2**
6. **மட்டக்களப்பு மேற்கு வலயம் 1**
7. **மட்டக்களப்பு வலயம் 2**
8. **பட்டிருப்பு வலயம் 4**
9. **கல்முனை வயலம் 25**
10. **சம்மாந்துறை வலயம் 5**
11. **அக்கரைப்பற்று வலயம் 6**
12. **திருக்கோவில் வலயம் -**

இடமாற்றம் பெறுபவர்களின் விபரம் இவ்வாறு இருக்க இந்த இடமாற்றம் நடைபெறக்கூடாது என்று முற்றாக யாரும் மறுக்கவோ எதிர்க்கவோ இல்லை. ஆனாலும்



இவ்விடமாற்றம் தொடர்பாக பல்வேறு கருத்து முரண்பாடுகள் உருவாகி இருப்பதனை அறிய முடிகிறது.

முதலில் இந்த இடமாற்றங்கள் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு போதிய விளக்கங்களோ தெளிவுகளோ வழங்கப்படாமல் அவர்களின் அபிப்பிரயாங்களும் அறியப்படாமல் தங்களது வலய அதிபர்களின் பெயர்ப்பட்டியலை மாத்திரம் பெற்று இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பல கருத்துக்களும் நிலவுவதாக கூறப்படுகின்றது.

மகாணாக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ. ஏ. நிஸாம் இவ் இடமாற்றத்தில் சில குழறுபடிகள் இருப்பதாக குறிப்பிட்டு இவ்விடமாற்றத்தில் தனக்கு பல மாற்றுக் கருத்துக்கள் இருப்பதாகவும் தனது கருத்தினை வெளிப்படுத்தியதையும் அறியமுடிகிறது.

இப்பின்னணியில் இடம்பெற்றுள்ள அதிபர் இடமாற்றங்களுக்கான விதிமுறையினை கடந்த 15.09.2020 ஆம் திகதிய அதிபர் இடமாற்ற வழிகாட்டலுக்கு அமைய செய்திருந்தாலும் அவற்றில் நன்கு ஆராயப்படாமல் செய்யப்பட்ட இடமாற்றங்களால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதில் வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்காத பலரும் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள்.

8 வருடங்கள் என்ற அடிப்படையில் நோக்கினாலும் உரிய காலத்தை முடிக்காதவர்கள் இவ்விடமாற்றத்தில் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள்.

மேலதிக ஆளணி என்ற அடிப்படையில் அதிபர்களை சமப்படுத்தல் என அவதானித்தால் கடமைப் பொறுப்பிலுள்ள அதிபர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு பாடசாலையில் வெற்றிடம் இல்லை என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட இடமாற்றம் இன்னுமொரு வெற்றிடமில்லாத பாடசாலைக்கே வழங்கப்பட்டிருப்பதாகவும் மாணவர் தொகையினை வைத்து அறிய முடிகிறது.

கடமை நிறைவேற்று அதிபர்கள் இருக்கத்தக்கதாக அவர்களை கருத்தில் கொள்ளாது கடமையிலுள்ள அதிபர்கள் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதுபோன்ற ஆராயப்படவேண்டிய முக்கிய விடயங்கள் இந்த இடமாற்றத்தில் கருத்தில் கொள்ளப்படாமல் இருப்பதனை கவனத்திற்கு கொண்டுவரவேண்டிய தேவை இருப்பதனை உரிய தரப்பினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் இவ்விடமாற்றம் நடந்துள்ள காலப்பகுதி என்பது கொரோனா காரணமாக கடந்தவருடம் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தது. இந்த வருட ஆரம்பத்தில் பாடசாலைகளில் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் நிலவுகின்ற நிலையில் இவ்விடமாற்றம் பாடசாலை நடவடிக்கைகளை மேலும் மோசமாக பாதித்திருப்பதையுதட அறியமுடிகிறது.

இடமாற்றம் பெறுகின்ற அதிகமான அதிபர்கள் பிரதி மற்றும் உதவி அதிபர்களாக உரிய பாடசாலைகளில் பல்வேறு நிர்வாகப் பொறுப்புக்களையும் பாடத்திட்ட மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் கொண்டவர்கள் என்பதால் பாடசாலைக்கான அவர்களின் தேவை இக்கொரோனா காலத்தில் மிக முக்கியமானதாக உணரப்படுகின்றது.

பாடசாலையில் உள்ள அதிபர் வெற்றிடங்களின் அடிப்படையில் இவ்விடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அதனை தேவை கருதி வலயக் கல்விப் பணிப்பாளர்களின் கலந்தாலோசனையுடன் நடைமுறைச் சிக்கல்கள் எழாதவாறு மேற்கொண்டிருக்கலாம். ஏனெனில் தாபன விதிகள், சுற்று நிருபங்களுக்கு அப்பால் நடைமுறைசார் அவசியம் கருதி இன்று எத்தனையோ பாடசாலைகளில் எத்தனையோ அதிபர் கடமைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

எனவே சில விதிவிலக்கான நடைமுறைகளை பாடசாலையின் எதிர்காலம் கருதி அதிபர் இடமாற்ற விடயங்களில் கருத்தில் கொள்ளும் சாத்தியங்களை உருவாக்க உரிய தரப்பினர்கள் மேல் முறையீட்டினை செய்துள்ளனர்.

இவ்விடமாற்றங்கள் தொடர்பாக தங்களது முறையீட்டினை செய்வதற்கும் அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது. இம்மாதம் 31 ஆம் திகதிற்குள் உரியவர்கள் தங்கள் இடமாற்ற முறையீட்டினை செய்வதன் மூலம் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பிலிருந்து தீர்வு பெறலாம்.

நவாஸ் சௌபி...

## அரசியல் தொழிற்சங்க செயற்பாட்டாளர்... (08ஆம் பக்கத் தொடர்)

மலையக இந்திய வம்சாவளியினா் 'இருளும் ஒளியும்' நூலை பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் அணிந்துரையுடன் 2009 இல் வெளியிட்டுள்ளார்.

அண்மையில் பேராசிரியர் சோ. சந்திரசேகரம், கலாநிதி இரா. ரமேஷ் இருவரும் 'இலங்கை மலையகத் தமிழர்கள்' நூல் விபரப்பட்டியலில் (2020). மலையக மக்களின் வாழ்க்கை வரலாற்றை அவர்கள் அனுபவித்த வேதனைகளை, போராட்டங்களை ஆவணப்படுத்தும் ஒரு நூலாகும். இந்நூலாசிரியர் மலையகத்தைப் பிற்புலமாகக் கொண்டவராவார்.

நீண்டகால தொழிற்சங்க அனுபவத்தை கொண்டிருப்பதுடன் தொழிலாளர்களின் வேதனத்தினை தீர்மானிக்கும் கூட்டுக் கமிட்டியின் பொதுச் செயலாளராகவும் காணப்படுகின்றார். தமது தொழிற்சங்க அனுபவத்தினைக் கொண்டு இந்நூலினை எழுதியுள்ளார். இந்நூல் மலையக மக்களின் குடியுரிமை, அரசியல் உரிமை, வாக்குரிமை, தொழில் உரிமைகள், சட்டப்பூர்வமான உரிமைகள், சட்டபூர்வமான கொடுப்பனவுகள் என்பனவற்றை சுருக்கமாக ஆராய்கின்றது என்று பதிவு செய்துள்ளனர்.

தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் சம சமாஜ கட்சியின் அன்றைய தலைவர்களான கலாநிதி என்.எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா போன்றோர் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் போராடி வந்தனர். 1956 இல் பாராளுமன்றத்தில் பேசிய கொல்வின் ஆர்.டி. சில்வா ஒரு மொழி இரு நாடு, இருமொழி ஒரு நாடு என்று கூறியிருந்தமை பிற்காலத்தில் இந்த நாட்டின் அரசியலில் எவ்வளவு மாற்றங்களை ஏற்படுத்தியது என்பது வரலாறாகும்.

எனவேதான் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு (1987) ஆதரவாக சம சமாஜ கட்சி செயற்பட்டது. 1987 இல் 13 வது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபை உருவாக்கம் தொடர்பாக (11.01.987) சமசமாஜ கட்சியின் கேட்போர் கூடத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவாக பெட்டி வீரக்கோன் சொற்பொழிவு நடைபெற்றது. இந்த நிகழ்வு முடிவுற்று எல்லோரும் அங்கிருந்து சென்றதன் பின்னர் இராமநாதன் அங்கு தங்கியிருந்து சில ஆவணங்களை பரிசீலனை செய்துகொண்டிருந்தபோது இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு எதிரான ஒரு குழுவினர் கையில் வெடிகுண்டுகளுடனும், பெற்றோல் கான்களுடனும் உள்ளே நுழைந்து சத்தம் போடவேண்டாம். இங்கிருந்து யாரும் ஓட வேண்டாம் என கூறிக் கொண்டு பெற்றோல் குண்டுகளை வீசி பெற்றோலையும் ஊற்றி வெடிக்கச்செய்து அங்கிருந்து தப்பி ஓடினர். இதனால் இராமநாதன் உட்பட பலர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். விவியன் குணவர்த்தனவால் கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரவோடு இரவாக சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டது. இராமநாதன் 20 நாட்களாக வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று மாத்தளை திரும்பினார்.

ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை 55 வருடகாலமாக ஒரு இடதுசாரி கொள்கை பிடிப்பாளராக இருந்து வரும் இவர்தான் ஏற்றுக்கொள்ளும் எந்த கடமையையும் செவ்வனே செய்து முடித்துவிட வேண்டும் என்ற ஆா்வமும் துடிப்பும் உள்ளவர்.

# பரிபூரண IMS தரப்படுத்தலைப் பெற்ற 1வது வைத்தியசாலையாக ராகம Melsta



இலங்கையின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனமான மெல்ஸ்டாகோர்ப் பிஎல்சியின் துணை நிறுவனமான Melsta ஹெல்த்தின் அங்கமான ராகம Melsta வைத்தியசாலை, இலங்கையின் முதலாவதும் ஒரே பரிபூரண ஒன்றிணைக்கப்பட்ட நிர்வாக கட்டமைப்பு (IMS) தரப்படுத்தலைப் பெற்ற வைத்தியசாலையாக அமைந்துள்ளது. அத்துடன் ISO 9001 :2015, ISO 22000:2018, ISO 14001:2015 மற்றும் ISO 45001:2018 ஆகிய நான்கு தரப்படுத்தல்களையும் கொண்டுள்ளது.

2020 பெப்ரவரி மாதத்தில் மெல்ஸ்டா கோர்ப் பிஎல்சியின் ஹெரி ஜயவர்தன, பிரவுண்ஸ் வைத்தியசாலையை கொள்வனவு செய்து, அதனை ராகம Melsta வைத்தியசாலை என பெயர் மாற்றம் செய்திருந்தார். குறுகிய காலப்பகுதியில், Melsta ஹெல்த் நிர்வாகத்தினால் இயலுமான வகையில், தரத்துக்கு முக்கியத்துவமளித்து மற்றும் செயன்முறையினடிப்படையில் இயங்கும் கலாசாரத்தை கட்டியெழுப்ப முடிந்துள்ளதுடன், தமது நோக்கமான சமூகப் பொறுப்பு வாய்ந்த என்பதற்கமை செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

Melsta ஹெல்த் இனால் பெண்கள் மற்றும் சிறுவர் சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் முன்னோடியான வைத்தியசாலையான ஜோசப் ஃபிரேசர் ஞாபகார்த்த வைத்தியசாலையையும் நிர்வகிப்பதுடன், மேல், தென் மற்றும் மத்திய மாகாணங்களில் வேகமாக விரிவாக்கமடைந்து வரும் Melsta Labs வலையமைப்பையும் Melsta ஹெல்த் நிர்வகிக்கின்றது.

Melsta வைத்தியசாலையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்தியர். கே. தியாகராஜா இறைவன் கருத்துத் தெரிவிக்கையில், "உலகத் தரம் வாய்ந்த தரமான சுகாதார பராமரிப்பு வசதிகளை பரிபூரணமான வகையில் நாட்டு மக்களுக்கு இயலுமானவரையில் பெற்றுக் கொள்ளும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது எமது இலக்காகும். இந்த IMS கட்டமைப்பினூடாக, எமக்கு எதிர்காலத்தில் பெருமைக்குரிய Joint Commission International (JCI) சான்றைப் பெற்றுக் கொள்ளவும் உதவியாக அமைந்திருக்கும்." என்றார்.

# விலைமனுக்களுக்கான அழைப்பு - (IFB)

### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை பொலிஸ்

### விசேட அதிரடிப்படை

## வாகனங்களின் பெறுகை

1. ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள விசேட அதிரடிப்படை, படையினரின் ஐக்கிய நாடுகள் பணியில் அமர்த்துவதில் பாவனைக்கு, கீழே குறிப்பிடப்படும் வாகனங்களின் பெறுகைக்காகக தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, செயலாளரின் சார்பாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுவின் (MPC) தலைவர் இப்போது அழைக்கின்றார். (மேலதிக விபரங்களுக்கு UNCOE கைநூலை பார்வையிடுமாறு விலைமனுதாரர்கள் கேட்கப்படுகின்றனர்.

**பெறுகைக்கான வாகனங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் வருமாறு:-**

| உருப்படி இல. | பெறுகை விபரம் | வாகனங்களின் விபரம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணையின் பெறுமதி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | PS/03/PB/ PR/08/15/2021 | Brand New 4x4 Ambulance | 02 | 1,500,000/= | 20,000/= |
| 2 | PS/03/PB/ PR/08/16/2021 | Truck Recovery (Over 05 Ton) | 01 | 775,000/= | 13,000/= |
| 3 | PS/03/PB/ PR/08/17/2021 | Truck Water Bowser (8000-10000 Ltrs) | 01 | 500,000/= | 7,500/= |
| 4 | PS/03/PB/ PR/08/19/2021 | Truck Water Canon | 01 | 775,000/= | 13,000/= |
| 5 | PS/03/PB/ PR/08/21/2021 | Jeeps 4x4 With military Radio | 04 | 1,680,000/= | 22,000/= |
| 6 | PS/03/PB/ PR/08/22/2021 | Truck Utility Cargo | 02 | 690,000/= | 12,000/= |

2. தேசிய போட்டி கேள்வி முறைமையின் (NCB) ஊடாக நடாத்தப்படும் அத்துடன் GOSL ஊடாக நிதியிடப்படும்.
3. பத்தரமுல்ல, சுஹுருபாய, 14ம் மாடி, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு பிரதம கணக்காளர் இடமிருந்து தொலைபேசி 011-2887697 ஊடாக ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களுக்கு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் 2021.03.15 முதல் 2021.04.06 வரை எந்த வேலை நாட்களிலும் (பொது மற்றும் வங்கி விடுமுறை தவிர்த்து) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற்படி முகவரியிலுள்ள பெறுகைக் கிளையில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.
4. 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்டம் (PCA) இல. 03இன் கீழான தேவைப்பாடுகளுடன் அமைந்தொழுகும் மற்றும் மேற்படி பெறுகைக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்கள் சட்ட ரீதியான உரிமையைக் கொண்டிருப்பர் விலைமனு ஆவணத்துடன் PCA 03 பதிவின் உண்மைப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர் ஆர்வ மோதலில் ஈடுபடக்கூடாது அத்துடன் பொது நிதித் திணைக்களத்தின் தடை செய்யப்பட்ட நிறுவனப் பட்டியலில் விலைமனுதாரரின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கக் கூடாது.
5. பொது மக்கள் பாதுகாப்பு செயலாளரின் சார்பாக மேலே குறிப்பிடப்படும் ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்காளருக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2021.03.15 முதல் 2021.04.06 வரை எந்த வேலை நாட்களிலும் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பத்தரமுல்லை, சுஹுருபாய, 14ம் மாடி, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் பெறுகைக் கிளையிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருத்தல் வேண்டும்.

   விலைமனுதாரர்களுக்கு ஒரு தனித்தொகுதி விலைமனு ஆவணத் தொகுதி வழங்கப்படும்.
6. பத்தரமுல்ல, சுஹுருபாய, 14ம் மாடி, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு பெறுகைக் கிளையில் வைக்கப்பட்டுள்ள. கேள்விப் பெட்டியில் PCA 3 உடனான பொறியிடப்பட்ட விலைமனுக்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடன்) வைக்கலாம். மாற்றீடாக, 2021.04.07ம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்பு, மேற்படி முகவரியை அடையுமாறு பதிவுத் தபாலில் விலைமனுக்களை அனுப்பலாம். தாமதக் கேள்விகள் நிராகரிக்கப்படும். பத்தரமுல்ல, சுஹுருபாய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் 14ம் மாடியில் பெறுகைக் கிளையில் விலைமனுதாரர்களின் கலந்து கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும். கலந்துகொள்ள விரும்பும் பிரதிநிதிகள் நிறுவனத்திலிருந்து ஓர் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் விலைமனு திறக்கப்படும் தினத்திற்கு முன், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின், பிரதம கணக்காளரை அடையுமாறு கடிதத்தை அனுப்புதல் வேண்டும்.
7. விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்படும் கால எல்லை வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. எல்லா விலைமனுவுடனும் ஒரு விலைமனுப் பிணை இணைக்கப்படல் வேண்டும். அத்துடன் அது :-
   i. இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட, இலங்கையில் இயங்கும் ஏதாவது வர்த்தக வங்கியினால்.
   ii. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் பெயருக்கு
   iii. மேலே குறிப்பிடப்படும் தொகையில்
   iv. விலைமனு ஆவணங்களின் பிரிவு 09இல் படிவங்களை உள்ளடக்கியதாக மற்றும் கோரியவுடன் காசாக்கக் கூடிய நிபந்தனையற்ற 119 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும். உ+ம் - 2021.04.07 முதல் 2021.08.03
9. பத்தரமுல்ல, சுஹுபாய, 14ம் மாடி, பொது மக்கள் பாதுகாப்பு பெறுகைக் கிளையில் 2021.03.23ம் திகதி கேள்விக்கு முன்னரான கூட்டம் நடைபெறும்.
10. பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும் அத்துடன் நிதி விதி முறைகளில் மற்றும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் திறைசேரி சுற்றுநிருபங்களில் எந்த திருத்தங்களையும் மேற்கொள்ளும் உரிமையை கொள்வனவாளர் கொண்டிருப்பார்.
11. மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு, தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

**பிரதம கணக்காளர்,**
**பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு**
**14ஆம் மாடி, சுஹுருபாய,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி - 011-2887697**
**பெக்ஸ் - 011-2887784**
**இணையதளம் - caminlofinance@gmail.com**

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**14ம் மாடி, சுஹுருபாய,**
**பத்தரமுல்ல.**

# கொமர்ஷல் பேங்க் ஓப் சிலோன் பி.எல்.சி.

## சொத்துக்கள் விற்பனை

**1. அம்பன்பிட்டியவில் அமையப்பெற்றுள்ள இரண்டு அடுக்குமாடி வீடு**

கேகாலையில் கொழும்பு - கண்டி வீதிக்கு முகப்பில் அமைந்துள்ளது

காணி விஸ்தீரணம் : 0ஏ : 0ரூ : 17பே

கட்டட பகுதி : 3,160 சதுர அடி

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

ருவன் 035 -2230232
பிமல் 011 -2486786
ஜயனாத் 011 -2486877 / 077 -3659390

**2. பலாங்கொடை, உடகந்த வீதியில் குடியிருப்பிற்குகந்த காணி.**

காணி விஸ்தீரணம் : 0ஏ : 0ரூ : 20பே

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

சாணக்க 045 -2286747 / 045 -2286697
பிமல் 011 -2486786
ஜெயநாத் 011 -2486877 / 077 -3659390

**3. பலப்பிட்டிய, ஜம்புவத்த வீதியில் குடியிருப்பிற்குகந்த காணி.**

காணி விஸ்தீரணம் : 0ஏ : 01ரூ: 21.87பே

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கும் தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

ஜெயநாத் 011 -2486877 / 077 -3659390

**4. எல்பிட்டிய, குருந்துகஹஹெடம்ப, எல்ல வீதி, சமகி மாவத்தையில் குடியிருப்பிற்குகந்த காணி.**

காணி விஸ்தீரணம்: 0ஏ : 0ரூ : 28.5பே

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

திமுத் 091 -2290283 / 091 -2290284
ஜெயநாத் 077 -3659390 / 011 -2486877

**5. உக்குவலை, மாத்தளை வீதி, இல 154/2/A இல் இரண்டடுக்குமாடி குடியிருப்பு மனை. (மக்கள் வங்கி - உக்குவலை கிளைக்கு பின்புறம்)**

காணி விஸ்தீரணம்: 0ஏ : 0ரூ : 20பே

கட்டட பகுதி : 3,204 சதுர அடி

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

ஜனித் 011 -2486985
ஜெயநாத் 077 -3659390 / 011 -2486877

**6. திகன, அம்பகோட்டே வீதி, அலுத்வத்தையில் வெற்றுக் காணி.**

காணி விஸ்தீரணம் : 0ஏ : 1ரூ. 33.32பே (ஒரே அளவில் இரண்டு காணிகள்)

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

தேவிந்த 081 -2499836 / 081 -2498341
ஜனித் 011 -2486985
ஜெயநாத் 011 -2486877/ 077 -3659390

**7. நாவலப்பிட்டி, கொத்மலை வீதியில் குடியிருப்பிற்குகந்த காணி. (நாவலப்பிட்டி நகரிலிருந்து 900 மீற்றர் தொலைவில்)**

காணி விஸ்தீரணம் : 0ஏ : 0ரூ : 36.5பே

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

சிந்தக்க 054 -2223962 / 054 -2223961
ஜெயநாத் 011 -2486877 / 077 -3659390

**8. அம்பலாந்தொட்டை - தங்காலை வீதியில், பட்டஅத்த பகுதியில் குடியிருப்பிற்குகந்த இடம்.**

காணி விஸ்தீரணம் : 0ஏ : 03 ரூ : 00பே

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

திவன்க 047 -2223818 / 047 -2223819
ஜெயநாத் 011 -2486877 / 077 -3659390

**9. ஹபரணயில் வெற்றுக்காணி (சினமன் லொட்ஜ் ஹோட்டல் எல்லையில்)**

காணி விஸ்தீரணம் : 1ஏ : 2 ரூ: 3.9பே

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

லலித் 036 -2258991
ஜெயநாத் 011 -2486877 / 077 -3659390

**10. கண்டி, கட்டுகஸ்தொட்டை வீதி, டொக்டர். சி.டி.எல். பெர்னாண்டோ மாவத்தை பூர்ணவத்த வீதியில் வெற்றுக்காணி.**

காணி விஸ்தீரணம் : 01ஏ : 0ரூ : 15.8பே

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

அசித்த 081 -2577175 / 081 -2577178
ஜெயநாத் 011 -2486877 / 077 -3659390

**11. பொலன்னறுவை, கல்லேல்ல, பாடசாலை ஒழுங்கையில் அமைந்துள்ள வணிக சொத்து.**

காணி விஸ்தீரணம் : 02ஏ : 0ரூ : 08பே

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

ரவீந்திர 027 -2225730 027 -2225731
அஜித் 027 -2225732
ஜெயநாத் 011 -2486877 / 077 -3659390

**12. அநுராதபுரம், லேக்வீதி, நிலை1 (ஸ்டேஜ் 1) குடியிருப்பிற்குகந்த காணி.**

காணி விஸ்தீரணம்: 0ஏ : 0ரூ : 7.44பே

நேரில் பார்வையிடவும் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அலுவலக நேரங்களில் கீழ் காணும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அலுவலக நேரங்களில் மாத்திரம்)

ஜெயநாத் 011 -2486877 / 077 -3659390

**விண்ணப்பிக்கும் முறை :**
உரிய விபரங்களை குறிப்பிட்டு மீள பெறக்கூடிய ரூ. 5000 (தலா ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும்) வைப்புப்பணம் இடப்பட்டு முத்திரையிட்ட கடிதவுறையின் இடது முனையில் கொள்வனவு செய்யவிரும்பும் குறித்த காணியின் விபரத்தை குறிப்பிட்டு கீழ் காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது குறித்த முத்திரையிட்ட கடிதவுறையை மத்திய மீளப்பெறல் பிரிவு (ரிக்கவரி பிரிவு), கொமர்ஷல் வங்கி சிலோன் பிஎல்சி யில் வைக்கப்பட்டுள்ள பிரத்தியேகப் பெட்டியில் நேரில் இடவும் முடியும். விண்ணப்பங்கள் 26 மார்ச் 2021 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

இதற்கமைய கூடிய விலைக்கோரலை முன்வைப்பவர் இனங்காணப்பட்டதும், அவரால் உரிய முழு பணத்தொகையையும் 14 நாட்களுக்குள் வைப்பிலிடப்படுதல் வேண்டும் அவ்வாறு வைப்பிலிடத்தவறினால் விண்ணப்பித்தலின்போது செலுத்தப்பட்ட மீள்பெறக்கூடிய வைப்புப்பணம் மீள வழங்கப்பட மாட்டாது. மேலும், விலைகோரலுக்கேற்ப தெரிவுசெய்யப்படுபவர் நடைமுறையிலுள்ள சட்டரீதியான வரிகள் மற்றும் விற்பனைக்கு பொருந்தக்கூடிய கட்டணங்கள் ஆகியவற்றை செலுத்துதல் வேண்டும்.

கிடைக்கப் பெறப்பட்ட எந்தவொரு விலைக்கோரலையும் அல்லது அனைத்து விலைக்கோரல்களையும் நிராகரிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**சிரேஷ்ட முகாமையாளர் - மீளப்பெறல் பிரிவு**
**(ரிக்கவரி பிரிவு)**
**கொமர்ஷல் வங்கி பிஎல்சி.**
**(பதிவு இல: PQ 116)**
**இல - 21,**
**சேர். ராஸிக் பரீட் மாவத்தை,**
**கொழும்பு- 01.**

COMMERCIAL BANK

# சர்வதேச மகளிர் தினம் 2021

**2021 சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி மார்ச் மாதத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கி நாடு முழுவதும் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.**

இந்த நிகழ்ச்சித் தொடரின் ஆரம்ப நிகழ்வான "சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம் - 2021" கடவத்தை, ரன்முத்துகல ரன்துல கிராண்ட் வீனஸ் (Randula Grand Venus) ஹோட்டலில் 2021 மார்ச் 08 ஆம் திகதி மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

### இந்த நிகழ்வில்...

- 2020 ஆம் ஆண்டின் சிறந்த பெண் தொழில்முயற்சியாளரை தேர்வு செய்யும் அபிமானி போட்டியின் வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டது,
- 2021 RDB திரி அபிமானி போட்டி அங்குரார்ப்பணம்,
- RDB Liyasaviya Plus வணிகத் தூதுவருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல்,
- சமூக பாதுகாப்புச் சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடல்,
- seilama.lk என்ற பெயரில் தொழில்முயற்சியாளர்களுக்கான online சந்தை ஒன்றை அறிமுகம் செய்தல்,
- தொழில் முற்சியாளர்களுக்கு அடையாள ரீதியிலான கடன் வழங்கல்,
- தொழில்முயற்சி தொடர்பில் அறிவூட்டல் போன்ற பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

### இந்த நிகழ்ச்சிக்காக...

- சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ செஹான் சேமசிங்க அவர்களின் பிரத்தியேக செயலாளர் திலங்கா சேமசிங்க அவர்கள்.
- பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர்/ தலைமை நிறைவேற்று அதிகாரி தமித் கே. ரத்னாயக்க அவர்கள்
- களனி பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் நிதி முகாமைத்துவ பிரிவின் பிரிவுத் தலைவர் கலாநிதி நாலக்க விக்ரமசிங்க அவர்கள்
- சமூக பாதுகாப்பு சபையின் தலைவர் சமன் ஹுதராகம அவர்கள்
- RDB ypartpa Plus வர்த்தக தூதுவர் வகீசா டி. சில்வா அவர்கள்.
- பிரபல நடிகை மனோஹாரி விமலதுங்க அவர்கள் மற்றும் ஸ்ரீயானி அவர்கள்.
- 2020 RDB திரி அபிமானி போட்டியின் தொழில்முயற்சி போட்டியில் தேசிய அளவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாம் இடங்களை வென்ற கே.டி. ஐராங்கனி விஜேரத்ன அவர்கள், நதீகா பிரியதர்ஷனி கஜனாயக்க அவர்கள் மற்றும் ஓ.ஆர். மஞ்சு அவர்கள்
- RDB வாடிக்கையாளர்கள் மற்றும் RDB அதிகாரிகள் சிலரும் பங்கேற்றனர்.



RDB பொது முகாமையாளர் மூலம் சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதி, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ செஹான் சேமசிங்க அவர்களின் பிரத்தியேக செயலாளர் திலங்கா சேமசிங்க அவர்கள் வரவேற்கப்படுகிறார்.



சமூக பாதுகாப்பு சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடல்



RDB Liyasaviya Plus வணிகத் தூதுவருடன் ஒப்பந்தம்



தொழில்முயற்சியாளர்களுக்கு அடையாள ரீதியில் கடன் வழங்கல்



seilama.lk என்ற பெயரில் தொழில்முயற்சியாளர்களுக்கான online சந்தை ஒன்று



2020 ஆம் ஆண்டின் சிறந்த பெண் தொழில்முயற்சியாளரை தேர்வு செய்யும் அபிமானி போட்டியின் வெற்றியாளர்கள் திலங்கா சேமசிங்க

RDB



களனி பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் நிதி முகாமைத்துவ பிரிவின் பிரிவுத் தலைவர் கலாநிதி நாலக்க விக்ரமசிங்க நிகழ்வில் உரையாற்றும்போது.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

### இலங்கையில் வர்த்தக நிறுவனங்களின் படிமுறை வளர்ச்சி : 5

# ஜே.ஆரின் 1977 பொருளாதார புரட்சி ஏன் தோற்றுப் போனது?

**1956 இன் பின்னர் இலங்கையில் கனரகக் கைத்தொழில்கள் அரசு துறை தொழில் முயற்சிகளாகவே ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அவை வினைத்திறனுடன் இயங்கவில்லை. மாறாக தரம் குறைந்த மற்றும் உற்பத்திச் செலவு கூடிய பொருள்களை உற்பத்தி செய்வனவாக இருந்தன. அரசியல் தலையீடுகளும் முகாமைத்துவக் குறைபாடுகளும் உள்நாட்டுச் சந்தையை மையப்படுத்தியதாக இருந்தமை காரணமாகவும் அரச பாதுகாப்புடன் இயங்கியமையாலும் உலகச் சந்தையுடன் போட்டியிடத்தக்க தரம் வாய்ந்த பொருள்களை அவை உற்பத்தி செய்யவில்லை. உள்நாட்டுச் சந்தை சர்வதேச போட்டியிலிருந்து அரசாங்கத்தின் வர்த்தகத் தடைகள் காரணமாக பாதுகாக்கப்பட்டிருந்தமையால் உற்பத்தித்தர மேம்பாடு குறித்த சிந்தனைகளே எழவில்லை.**

வர்த்தகத்தடை காரணமாக ஏற்பட்ட பொருள் தட்டுப்பாட்டின் மத்தியில் நுகர்வோர் ஏதாவது பொருள் நுகரக் கிடைத்தால் போதும் என்ற சிந்தனை ஏற்பட்டதனால் தரமற்ற உள்ளூர் உற்பத்திகளுக்கு போதிய சந்தை வாய்ப்புகள் இருந்தன. அதனால் உள்ளூர் கைத்தொழில்கள் எதை உற்பத்தி செய்தாலும் அதையே வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. குறிப்பாக 1970 தொடக்கம் 1977 வரையிலான காலப்பகுதியில் இந்நிலைமையை வெளிப்படையாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பெற்றோலியம் மற்றும் மருந்துப் பொருள்கள் போன்ற மிக அத்தியாவசியப் பொருள்கள் தவிர ஏனைய நுகர்வுப்பொருள் இறக்குமதிகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டன. உணவுப்பொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு மிகப்பாரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டது. இவற்றை நிரம்பல் செய்ய உள்ளூர் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. விவசாயிகள் அதுவரை பயன்படுத்திய இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மண்வெட்டிகளின் இறக்குமதி தடைசெய்யப்பட்டது. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட மண்வெட்டிகளை வாங்க விவசாயிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இறக்குமதி செய்யப்பட்ட ஒரு மண்வெட்டியால் செய்த அதே வேலையை செய்து முடிக்க இரண்டு அல்லது மூன்று மண்வெட்டிகள் தேவைப்பட்டதாக விவசாயிகள் புலம்பித் தள்ளினர். உடுபுடைவை இறக்குமதிகளும் முற்றாகத் தடைசெய்யப்பட்டன. வேயாங்கொடை மற்றும் துல்ஹிரிய நெசவுத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொப்லின் பிஜாமா மற்றும் சீத்தைத் துணிகளைப் பங்கீட்டு அட்டைக்கு கொள்வனவு செய்ய மக்கள் நிர்பந்திக்கப்பட்டனர். ஆதுவும் சித்திரைப் வருடப் பிறப்பு போன்ற பண்டிகைகளின் போதே அவை மக்களுக்கு வினியோகிக் கப்பட்டன.

துணிகளைக் கொள்வனவு செய்ய கூட்டுறவுக் கடைகளுக்கு முன்னால் மக்கள் காத்துக் கிடப்பர். துணிகளை ஏற்றிய கூட்டுறவுச்சங்க லொறிகள் அரை மைலுக்கு அப்பால் வரும்போதே யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதுபோல புடைவைகளை அச்சிடப் பயன்படுத்திய மண்ணெண்ணெய் நாற்றம் நாசிகளை வந்து தாக்கும். பாடசாலை மாணவர்களின் சீருடைத் துணிகள் சீனாவிலிருந்து வந்தன. ஆயினும் மாணவர்களின் சேர்ட்டுக்கான துணி கிடைத்தால் காற்சட்டைக்கான துணி கிடைக்காது. இந்தியாவிலிருந்து கைத்தொழில் ஆடைகளின் இறக்குமதி தடை செய்யப்பட்டதனால் உள்ளூர் கைத்தறி நெசவு ஊக்குவிக்கப்பட்டது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடி உள்ளிட்ட பல இடங்களில் சாரம் உள்ளிட்ட கைத்தறி நெசவுப்பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றின் தரம் ஆரம்பத்தில் மோசமானதாக இருந்தாலும் அதில் படிப்படியாகத் தரமேம்பாடு ஏற்பட்டது என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். சவர்க்கார இறக்குமதி தடைப்பட்டதால் உள்ளூரில் பல இடங்களில் சவர்க்கார உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. வடபுலத்தின் மில்க்வைட் சவர்க்காரம் குறிப்பிடத்தக்களவு வெற்றி கண்டது. கிராமிய மட்டத்தில் சலவை செய்ய நீலநிறம் கலந்த சவர்க்காரம் உள்ளூரில் குடிசைக் கைத்தொழிலாக உற்பத்தி செய்யப்பட்டது. அவற்றைப் பயன்படுத்தி ஆடைகளைச் சலவை செய்தவர்களின் கைகளில் வெள்ளை நிறம் படிந்திருக்கும். சவர்க்காரத்தில் தரநிருணயங்களற்று அதிகளவு கோஸ்டிக் சோடாவைப் பயன்படுத்தியமையே அதற்குக் காரணம்.

சீனிக்கு பாரியளவு தட்டுப்பாடு ஏற்பட்டதனால் அரசாங்கம் மட்டுப்படுத்திய அளவில் பங்கீட்டு அட்டைகளுக்கு குடும்பங்களுக்கு சீனி வினியோகம் செய்தது. தேநீரில் சீனியைக் கரைக்காமல் உள்ளங்கையிலே நக்கிக் கொண்டு தேனீர் பருகும் பழக்கம் ஏற்பட்டது. பங்கீட்டுச் சீனியில் ஒருபகுதியை மக்கள் விற்றுப் பணமாக்கினர். சீனியை வாங்கியவர்கள் அதைக் காய்ச்சி கோதுமை மாவைக் கலந்து கருப்பட்டி தயாரித்து விற்றனர். கருப்பட்டியைக் கடித்துக்கொண்டு தேனீர் பருகுவதை அக்காலப்பகுதியில் சாதாரணமாகக் காணலாம்.



**இறக்குமதிப் பதிலீடு முற்றாகக் கைவிடப்பட்டு பொருளாதாரம் திறந்து விடப்பட்டு தாராளமயமாக்கப்பட்டது. இதனால் இறுக்கமான பாதுகாப்பின் கீழ் இயங்கிய உள்ளூர் கைத்தொழில்கள் திடீரென வெளிநாட்டுப் போட்டியை எதிர்நோக்க நேர்ந்தது. தரம் வாய்ந்த மலிவான வெளிநாட்டுப் பொருள்களுடன் போட்டி போடக்கூடியளவுக்கு பெரும்பாலும் குறிப்பிடத்தக்களவுக்கு எந்தக் கைத்தொழிலும் இருக்கவில்லை என்பதே உண்மை.**

இவ்வாறு இக்காலப்பகுதியில் பேரளவுக் கைத்தொழில்களும் சிற்றளவுக் கைத்தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களும் இலங்கையில் தோற்றம் பெற்றன. இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்ட இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையின் காரணமாக தற்காலிகமாக ஏற்றப்பட்ட பொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இவை உருவாகினவேயன்றி முறையான இலக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்ட கைத்தொழில் விரிவாக்கமாக அது காணப்படவில்லை. ஆயினும் இலங்கையில் கைத்தொழிலாக்கத்திற்கான ஒரு அடித்தளம் இக்காலப்பகுதியிலேயே இடப்பட்டது என்பதை மறைக்க வேண்டிய தேவை நமக்கில்லை.

1977 இல் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் இலங்கை பொருளாதாரத்தில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்ததுடன் பொருளாதாரக் கொள்கைகள் அதுவரை சென்ற திசைக்கு செல்லும் வண்ணம் மாற்றியமைக்கப்பட்டன. இறக்குமதிப் பதிலீடு முற்றாகக் கைவிடப்பட்டு பொருளாதாரம் திறந்து விடப்பட்டு தாராளமயமாக்கப்பட்டது. இதனால் இறுக்கமான பாதுகாப்பின் கீழ் இயங்கிய உள்ளூர் கைத்தொழில்கள் திடீரென வெளிநாட்டுப் போட்டியை எதிர்நோக்க நேர்ந்தது. தரம்வாய்ந்த மலிவான வெளிநாட்டுப் பொருள்களுடன் போட்டி போடக்கூடியளவுக்கு பெரும்பாலும் குறிப்பிடத்தக்களவுக்கு எந்தக் கைத்தொழிலும் இருக்கவில்லை என்பதே உண்மை. அவற்றில் பல இயற்கை மரணத்தை எய்தின. மக்களின் மனங்குளிர வெளிநாட்டுப் பொருள்கள் கிடைத்தன. பொருள் தட்டுப்பாடு என்ற வார்த்தையே மறந்து போனது. பணம் மட்டும் இருந்தால் எதையும் வாங்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. அரச தொழில் முயற்சிகளாக இயங்கிய கைத்தொழில்கள் தொடர்ந்தும் இயங்கின. வெளிநாட்டுப் போட்டி புதிய போட்டியாளர்களை இலங்கைக்குள் கூட்டிவந்தது. ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் ஆக்கத்தில் அதிக கவனம் செலுத்திய அன்றைய அரசாங்கம் உலகப் பிரசித்தி பெற்ற மோட்டரோலா நிறுவனத்தை இலங்கைக்கு கொண்டுவர முயற்சித்தது. வேறுசில சர்வதேச நிதி நிறுவனங்களும் இலங்கையில் கிளைகளைத் திறக்க ஆர்வம் காட்டின நெதர்லாந்தின் ABN அம்ரோ வங்கி இலங்கையில் கிளையைத் திறந்தது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் தாபிக்கப்பட்டு வரிச்சலுகைகள் உள்ளிட்ட பல்வேறு ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டன.

1977 அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் முன்னேற்றகரமாக இருந்தாலும் அரசியல் ரீதியில் கூர்மைப்பட்டுச் சென்ற இனப்பிரச்சினை தொடர்பாகவும் தெற்கில் இளைஞர்களின் பிரச்சினை தொடர்பாகவும் அது செயற்பட்ட விதம் சர்வதேச அரங்கில் அதனை ஒரு ரெளடித்தனமான அரசாங்கமாகக் காட்டியது.

தர்மிஸ்ட சமூகம் என வெளியிலே பெரிதாக விளம்பரப்படுத்திக் காட்டிக் கொண்டாலும் சிறில் மத்தியூ போன்ற இனவாதிகளால் உருவாக்கப்பட்ட 1983 ஜூலை இனக்கலவரமும் தெற்காசியாவிலேயே சிறந்த நூலகமாக மதிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தின் எரிப்பும் இலங்கை அரசாங்கத்தைக் காட்டுமிராண்டியாகக் கருதச் செய்தது. 1982 தேர்தலில் செய்யப்பட்ட அரசியல் மோசடிகள் ஜனநாயக பாரம்பரியத்தையே கேள்விக்குறியாக்கின.

கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் ஒரு காணியையும் வாங்கி முதலிடத் தயாரான மோட்டரோலா நிறுவனம் இலங்கையைவிட்டு நடையைக்கட்டியது. இந்த முதலீட்டைப் பெற்றுக் கொண்ட மலேசியா எப்படிப்பட்ட நன்மைகளைப் பெற்றுக் கொண்டதென்பது பெரியகதை. இலங்கைக்கு சமமான நிலையில் இருந்த ஏனைய நாடுகள் தமது பொருளாதாரங்களைத் திறந்து விடுமுன்பே தனது பொருளாதாரத்தைத் திறந்து விட்ட இலங்கை அதன் நன்மைகளை அமைந்து கைத்தொழில் விரிவாக்கத்தை அடைய முடியாமல் போனமைக்கு வெளிச்சக்திகள் எதனையும் குறைகூற முடியாது. ஒரு தடவை இரு தடவையல்ல பலதடவைகள் வாய்த்த சந்தர்ப்பங்களை தவறவிட்ட ஒரு நாடாகவே இலங்கை பதியப்பட்டுள்ளது. தனக்கு ஒரு கண்போனாலும் பரவாயில்லை எதிரிக்கு இரண்டு கண்ணும் போகவேண்டும் என்ற அடிப்படையில் இலங்கையில் வாழும் சகோதர இனங்களை மோதவிட்டு அரசியல் குளிர்காயும் மோசமான கலாசாரம் ஒருபுறம். தனது சொந்த இன இளைஞர்களையே டயர் சிதைகளில் எரித்துக் கொலைசெய்த கொலைக் கலாசாரம். மனித குலமே எண்ணிப்பார்க்க நடுநடுங்கும் வகையில் அப்பாவிகளை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்த கோரம் என்று நடந்து கொண்ட விதமும் மற்றும் இன்றும் நடந்து கொள்ளும் விதம் இலங்கை முதலீட்டுக்கு உகந்த ஒரு நாடல்ல என்று சர்வதேச முதலீட்டாளர்கள் கடந்து செல்லும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

அத்துடன் வினைத்திறனற்ற அரச சேவை, நிலையற்ற அரச கொள்கைகள், இறுக்கமான ஊழியச் சட்டங்கள், சக்திவலு விலைகள், மறைந்திருக்கும் ஊழல் என்பன இலங்கையை கவர்ச்சியற்ற ஒரு முதலீட்டு இடமாகக் கருதச் செய்துள்ளது. இலங்கை தனது குறைபாடுகளை உணர்ந்து அரசியல் சமூக கலாசாரா ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாகவும் கொள்கை ரீதியான விடயங்களை வினைத்திறனாகக் கையாள்வதன் மூலமாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் அடிப்படை மனித உரிமைகளையும் மனித விழுமியங்களையும் பேணிச்செல்லும் ஒரு நாடாகவும் தன்னை வளர்த்துக் கொள்ளாதவரை தொடர்ந்தும் வாய்ப்புக்களைத் தவிறவிட்ட நாடாகவே தொடர்ந்தும் இருக்கும். ஜயவேவா கோசம் போடுபவர்கள் தொடர்ந்து போட்டுக் கொண்டே இருப்பார்கள்.

(தொடரும்)

# சமய சிந்தனைக்கு சாயம் பூசப்பட்டதா?

## கருதுகோளைக் குழப்பிய கள அரசியல்!



**"நிச்சயமாக நீங்கள் எங்கிருந்த போதிலும் மரணம் உங்களை வந்தடைந்தே தீரும், மிகப் பலமான கோட்டை கொத்தளங்களை கட்டி நீங்கள் வாழ்ந்த போதிலும் சரியே.!" (புனித அல் குர்ஆன்). இவ்வாறு வரும் மரணம் கொரோனா தொற்றியதால் வந்து விடக்கூடாது. சுமார் ஒரு வருடங்களாக முஸ்லிம்களுக்கு இருந்த பயம் இதுதான். குளிரூட்டிகளில் வைக்கப்படும், கொளுத்தி எரிக்கப்படும், உறவினர்கள் பார்ப்பது தடுக்கப்படும் இவைகள்தான், முஸ்லிம்களை பயமுறுத்தின.**

2020 மார்ச் ஆரம்பத்தில், தொற்றத் தொடங்கிய இந்தக் கொரோனா, இன்று வரை ஐநூறு பேரை பலி எடுத்துள்ளது. எல்லா நாடுகளிலும் நல்லடக்கம் செய்ததைப் போன்று, எமது நாட்டிலும் நடந்திருந்தால், முஸ்லிம்களுக்கு இந்தப் பயம் ஏற்பட்டிருக்காது. இது, முஸ்லிம்களுக்கு மதத்திலிருந்த, ஆத்மீகத்தின் திருப்தி, நம்பிக்கையையே காட்டியது. விஞ்ஞானத்தையும் விஞ்சி, ஆத்மீகத்திலிருக்கும் இந்த சமூகத்தின் நம்பிக்கையை சிலர் அடிப்படைவாதமாகக் காட்டுவதற்கும், இந்த சமூகத்தின் விடாப்பிடி (மதப்பற்று) வழிகோலியிருந்தது. “தோதுவாய்த்தால் தோளுக்கு மேலேயும் தவளை துள்ளும்” என்பார்களே! அதுதானிது.



ஈஸ்டர் தாக்குதலும் நடந்திற்று, அரசியலும் சறுக்கிற்று, காத்திருந்தவன் காய் பறிக்காமலா இருப்பான்? இதுதான் கடைசியில் இந்த சமூகத்தின் ஆத்மீகத்தை அரசியலாக்கியது. இவ்விடயத்தில் ஒன்று மட்டும் எல்லோருக்கும் உணர்ந்திருக்கும். நல்லடக்கத்தில் நம்பிக்கையுள்ள ஏனைய சமூகங்களை விடவும் முஸ்லிம்கள் இதைத் தூக்கிப்பிடித்தனரே ஏன்? அரசாங்கத்தைக் காட்டிக் கொடுப்பதற்கல்ல, ஆத்மீகத்தைக் காப்பாற்றவே இத்தனையும். நீர்கொழும்பு பலகத்துறையில், முதலாவது ஜனாஸா எரிக்கப்பட்டபோது, ஒவ்வொரு முஸ்லிமின் "கல்புக்குள்ளும்" கானல் நீராகிவிடுமோ நமது நம்பிக்கை? என்ற ஏமாற்றம் தொற்றிக்கொண்டது. அன்றிலிருந்து இந்த மார்ச் இரண்டு வரை எத்தனை ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன? இந்தக் கேள்விக்கான கணிப்புக்களில் குரோதத்தில் வெளிவருபவைதான் அதிகம். இதனால்தான், நம்பிக்கையை வெல்வதற்கான இந்த சமூகத்தின் தூக்கிப்பிடிப்புக்கள், அரசாங்கத்தைக் காட்டிக் கொடுப்பதற்கானவை எனச் சிலரால் சாயமும் பூசப்படுகின்றது.

கொரோனாத் தொற்றில் மொத்தமாக மரணித்த ஐநூறு பேரில் 334 முஸ்லிம்கள் எரிக்கப்பட்டதாகத்தான் ஒருதலைப்பட்சக் கணிப்பீடுகள் கருதுகின்றன. மேலும் அனுமதி வந்த பின்னர் 40 பேர் நல்லடக்கமும் செய்யப்பட்டுள்ளனர்.

எதற்காக ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டதென்று சிந்திக்கும் எவரும், இதுவரைக்கும் இதில் ஒரு தீர்மானத்துக்கு வரவில்லை. வர முடியாதளவில்தான் இதில், சிக்கல்களும் சிக்கியிருந்தன. கடைசியில், சிக்கல்களை தீர்த்து வைத்த சக்திகள் எவை? என்றும் அடையாளம் காண முடியாதிருக்கிறது. மரணித்து மூன்று மணித்தியாலத்துக்குள் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் முஸ்லிம்கள், மாதக் கணக்கில் காத்துக்கிடந்தனர். என்ன? அடக்கம் செய்வதற்கா இல்லை, நீதிமன்றத் தீர்ப்புக்காகத்தான். நமது ஜனாஸாக்காள் குளிரூட்டிகளுக்குள் காத்துக்கிடந்தன. நடக்கப்போவது தெரியும் வரைக்கும் இந்த ஜனாஸாக்களின் உறவினர்கள் எப்படிக் கதிகலங்கி, "கல்பு" (உள்ளம்) கொதித்திருப்பர். உறவினர்கள் மட்டுமல்ல முழு "உம்மத்தும்" (சமூகம்) இதனால், மத நம்பிக்கையை நெஞ்சுக்குள் பொத்திப்பிடித்தவாறு, பிரார்த்தனைகளில் இருந்தது.

இப்போது, இந்தச் சமூகத்தின் பிரார்த்தனைகள் பலித்து விட்டன. இனிமேல், பழிவாங்கும் தீர்மானங்கள் ஜனாசாக்களில் இருக்கப்போவதில்லை. எரிக்கப்பட்ட ஜனாஸாக்களும், இறைவனின் ஏட்டில் எழுதப்பட்டவையே, என்ற நம்பிக்கைதான், உறவினரைத் தேற்றியிருக்கும். இனியாவது, நடப்பவற்றில் நிதானத்துடன் செயற்படத் தயாராக வேண்டும். அரசியல் நோக்கிலான ஆத்மீகப் பற்றுக்களைப் புறந்தள்ளி, அடைய வேண்டிய யாத்திரை இலக்குகளுக்கு சரியான பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டியது, இந்த சமூகத்தின் பொறுப்பாகிறது.

அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு சமூகங்களதும் மத, கலாசார, அரசியல் உரிமைகளில், ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வழிகள், வியூகங்களில் தீர்வு தேடப் புறப்படும் பாதையைத் தெரிவு செய்வதே, எதிர்காலத்துக்கு உகந்தது.

சுஐப் எம்.காசிம்...

# மேற்காசிய அரசியலை மீள கைப்பற்ற முயலும் அமெரிக்கா



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்



**மேற்காசியாவில் ஈரான் முக்கிய நாடாகவும் புராதன மரபுகளைக் கொண்ட நாடாகவும் தற்போது காணப்படுகிறது. கடந்த காலத்தில் ஈராக் அத்தகைய முக்கியத்துவத்தை கொண்டிருந்தது. வளைகுடா மீதான அமெரிக்க கூட்டுப்படைகளின் போர் அத்தகைய முக்கியத்துவத்தினை அழித்ததுடன் மிக நீண்ட காலமாக அழிக்க முடியாது அமெரிக்கா எதிர்கொள்ளும் ஒரு நாடாக ஈரான் விளங்குகிறது.**

குறிப்பாக 1979 ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சிக்கு பின்பு அமெரிக்காவின் ஆதிக்கம் சாத்தியப்பட முடியாத நிலைக்குள் காணப்படுகிறத. அதனை எதிர்கொள்ள பல்வேறு உத்திகளை அமெரிக்கா வகுத்துவருகிறது. கடந்த ட்ரம்ப் ஆட்சிக்காலம் ஒருவகையான அணுகுமுறையை கொண்டிருந்தாலும் நடைமுறையில் அது பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தது. புதிய ஜனாதிபதியின் நிர்வாகம் மென் அதிகாரத்தை பிரயோகித்தாலும் வன் அதிகாரத்திற்கான உத்திகளையும் வகுத்துவருகிறது. அதாவது அதிகாரத்தை பிரயோகிக்கும் நிலைக்குள்ளேயே ஈரானைப் பொறுத்த கொள்கையில் அமெரிக்காவின் ஜோ பைடன் நிர்வாகம் விளங்குகிறது. இக்கட்டுரையும் பூகோள அரசியலில் ஈரான் மையப்புள்ளியாக மாறுவதனால் அமெரிக்கா முன்னெடுத்துவரும் நகர்வுகளை தேடுவதாக அமையவுள்ளது.

ஜோ பைடன் ஆட்சிக்கு வந்த பின்பு ஈரானுடனான கொள்கை மிருதுவானதாக அமைந்திருந்தது. பின்னர் படிப்படியாக தீவிரத்தன்மை பெற ஆரம்பித்துள்ளது. காரணம் மேற்காசியாவில் ஈரானே மைய நாடாகவும் நாகரீகத்தின் மையமாகவும் இருப்பதுடன், மேற்குலகத்திற்கு அதிக சவால் மிக்க நாடாகவும் உள்ளதனால் அமெரிக்கா தொடர்ச்சியாக ஈரானை கையாளுவது தவிர்க்க முடியாததாகவே அமையும். முடிந்த வாரத்தில் நிகழ்ந்த ஒரு இராணுவ ரீதியான விடயம் அதிக பரபரப்பை ஏற்படுத்தியதுடன் அதன் முக்கியத்துவம் நீண்ட பரிமாணமுடையதாகவே தெரிகிறது. அதாவது அமெரிக்காவின் பி12 விமானப்படையின் தாக்குதல் விமானம் மேற்காசியவின் ஆகாயப்பரப்பில் நூற்றுக்கணக்கான தடவை பறந்துள்ளது. ஆனால் நடந்து முடிந்த வாரம் நிகழ்ந்த பறப்பானது அதிக முக்கியத்துவம் உடையதாக அமைந்திருந்தது. குறிப்பாக அமெரிக்க விமானங்கள் பறக்க ஆரம்பித்ததும் ஆரம்பத்தில் இஸ்ரேல் விமானங்களும் பின்பு சவுதி அரேபிய விமானங்களும் பின்பு எமிரேட் விமானங்களும் அமெரிக்க விமானங்களுக்கு பாதுகாப்பாக தமது எல்லைக்குட்பட்ட வான் பரப்பில் பறந்துள்ளன. இத்தனைகய பறப்பின் முக்கியத்துவத்தை முழுமைப்படுத்தும் விதத்தில் அமெரிக்க விமானங்கள் ஈரான் வான் பரப்பையும் சிரியாவின் வான்பரப்பையும் நோக்கிப் பயணித்ததே பிரதானமானதாகும். இவ்வாறான முக்கியத்துவம் ஏன் அமெரிக்க விமானப் படை மூலம் ஜோ பைடன் நிர்வாகம் வழங்கியது என்பதே பிரதான கேள்வியாகும்.

முதலாவது ஈரானின் அணுவாயுத தளத்தை தாக்கி அழிக்க அண்மையில் இஸ்ரேல் திட்டமிடுவதாக ஈரானிய புலனாய்வுத் தகவல்கள் உறுதிப்படுத்தியதன் காரணமாக ஈரான் பாதுகாப்பு அமைச்சு பெரும் எச்சரிக்கை ஒன்றினை வெளிப்படுத்தியிருந்தது. அதாவது இஸ்ரேல் அவ்வாறு ஏதும் தாக்குதலை மேற்கொள்ளுமாயின் இஸ்ரேலிய நகரங்கள் தாக்கி தரைமட்டமாக அழிக்கப்படும் என எச்சரித்தது. இதனை அடுத்து இஸ்ரேல், ஈரானிய எச்சரிக்கைகள் மாறிமாறி அரங்கேறின. அதற்கு இஸ்ரேல் முன்வைத்த காரணம் ஈரான் அணுவாயுதத்தை தயாரிக்க ஆரம்பித்துள்ளதாகவும் அதனைத் தடுப்பதே தமது நோக்கம் எனவும் தெரிவித்தது. அத்தகைய புலனாய்வுத் தகவலை அமெரிக்காவுக்கும் இஸ்ரேல் வழங்கியதாகவும் அது சார்ந்தே அமெரிக்கா ஈரான் மீதான வன் அதிகார நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது எனக்கூறலாம். இதற்கு ஆதாரமாக சிரியாவில் நிலைகொண்டுள்ள ஈரான் இராணுவ நிலைகள் மீது அமெரிக்க விமானங்கள் கடந்த ஒருவாரத்திற்கு முன்பு தாக்குதல் நிகழ்த்தியதை கடந்த வாரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இரண்டாவது அமெரிக்கா ஈரானை முடக்கி வைக்கவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. அதாவது ஈரான் அணுவாயுத நாடாக மாறிவிடக் கூடாது என்பதில் இஸ்ரேலுடன் அமெரிக்காவும் சேர்ந்து கவனம் கொள்கிறது. அதற்காக ட்ரம்ப் நிர்வாகம் போன்று வன்அதிகார உத்திகளை பிரயோகிப்பதில் பயனேதும் இல்லை என்றே ஜோ பைடன் நிர்வாகம் கருதுகிறது. அதாவது சிமாட் அதிகாரத்தை பிரயோகித்தே ஈரானை கட்டுப்படுத்த முடியுமென அமெரிக்க புதிய நிர்வாகம் முனைகிறது. காரணம் வன்முறை அதிகாரத்தால் ஈரான் செல்வாக்கு அதிகரிப்பதுடன் ரஷ்யா சீனாவின் ஒத்துழைப்புக்குள் வேகமாகச் சென்றுவிடும் என்பதனால் நிதானித்து செயல்பட அமெரிக்கா விரும்புகிறது.

மூன்றாவது ஈரானை எச்சரிக்கை செய்வதற்கான உத்தியை காட்டுவதாக அமெரிக்க விமான படையெடுப்பு அமைகின்றது. அதாவது இஸ்ரேல் அண்மையில் ஈரான் மீது மேற்கொள்ள திட்டமிட்டிருந்த அணுவாயுத நிலையத்தை முழுமையாக தாக்கி அழிக்க எடுத்த முயற்சியை அமெரிக்கா அங்கீகரிப்பதை வெளிப்படுத்துவதாக தெரிகிறது. ஈரான் அணுவாயுத பரிசோதனையை நிறுத்தாது விட்டால் அமெரிக்காவும் அதன் மேற்காசிய நட்பு நாடுகளும் இணைந்து தாக்குதலை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக மறைமுகமாக ஈரானுக்கு அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்கா பலதடவை ஈரானுக்கு வலியுறுத்தியிருந்தது. அணுவாயுத உடன்பாட்டை பின்பற்ற தயாரானால் பொருளாதாரத் தடை நீக்கப்படும் எனக்குறிப்பிட்டிருந்தது. மாறாக ஈரான் அணுவாயுதத்திற்கான யூரேனிய செறிவூட்டலை அதிகரிக்கப் போவதாக தெரிவித்ததுடன் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளரை வெளியேற்ற முயன்றது. இவை அனைத்தும் ஈரான் அணுவாயுதத்தை தயாரிக்க தயாராகிவிட்டது என்பதைக் காட்டுவதாகவே அமெரிக்காவும் இஸ்ரேலும் கருதுகின்றன.

நான்காவது அமெரிக்கா தனது மேற்காசிய நட்பின் பலத்தைக் காட்டுவதாக தெரிகிறது. குறிப்பாக ஈரான் சீனா ரஷ்யாவுடன் இணைந்து கொண்டு அண்மையில் மேற்கொண்டகடற்படைபயிற்சிமற்றும்இந்தியாவுடனான கடல்வழி எண்ணெய்குழாய் திட்டம் என்பன அமெரிக்காவுக்கு அதிக அதிர்ச்சியை தந்துள்ளது. ஜோ பைடன் நிர்வாகம் ஆரம்பத்தில் இஸ்ரேலை புறந்தள்ளிவிட்டு ஈரானை அணைக்கத் திட்டமிட்டிருந்தது. அதனை ஈரான் பயன்படுத்த தவறியிருந்தது. அது மட்டுமன்றி ஈரான் அமெரிக்க எதிரிகளுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தும் நகர்வையும் கொள்ளத் தொடங்கியது. இதனால் அமெரிக்கா தனது நட்புக்களைப் பலப்படுத்துவதுடன் அதனை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தமை கவனத்திற்குரியதாகும். அதனை ஆதாரப்படுத்தும் விதத்திலேயே சவுதி அரேபியாவுடனான உறவிலும் ஐக்கிய அரபு எமிரேட்டுடனான உறவிலும் சற்று நெருக்கடியை ஜோ பைடன் ஏற்படுத்தியிருந்தார். ஆனால் அதனை எல்லாம் பி12 விமானம் பயணத்தின் மூலம் முடிவுக்கு கொண்டுவந்துள்ளது அமெரிக்கா.

ஐந்தாவது அமெரிக்கா தனது நட்புகளை அரணாக கொண்டு செயல்பட்டதற்கு இன்னோரு காரணம்ரஷ்யாவையும் சீனாவையும் எதிர் கொள்வதற்கான நடவடிக்கையாகவே உள்ளது. மேற்காசிய அரசியலை மாற்றியதில் ரஷ்யாவுக்கு அதிக பங்குண்டு. அதில் சீனா ஈரான் சிரியா எனும் அணியானது பலமானதாகவும் உறுதியான அமெரிக்க எதிர்ப்பு அணியாகவும் உள்ளது. இஸ்ரேல் பலதடவை ரஷ்யாவையும் சீனாவையும் அணுகிய போதும் அதில் பெரிய நெருக்கம் ஏற்படவில்லை. அதனால் இஸ்ரேல் மீளவும் தனது அணியை பலப்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ளது.

ஆனால் ஜோடானுடன் ஏற்பட்டுள்ள முறுகல் பிராந்திய ரீதியில் இஸ்ரேலின் இலக்குகளை அடைய முடியாத நிலைக்குள் தள்ளியுள்ளது. இதில் துருக்கி ரஷ்ய அணியுடன் இணைந்த போதும் தற்போது துருக்கி ஆதரவு போராளிகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான மோதல் இரு நாட்டுக்குமான மோதலாக மாறியுள்ளது. இருந்த போதும் துருக்கியின் நிலை நெருக்கடி மிக்கதாகவே தெரிகிறது. ரஷ்யா, சீனா ஆகிய இரு நாடுகளும் ஈரானை துருக்கிக்காக விட்டுக் கொடுக்க தயாரில்லை என்பதையே நகர்வு காட்டுகிறது.

ஆறாவது ஈரானுடனான தரைத் தொடர்பினைக் கொண்ட ஆப்கானிஸ்தான் தலிபான் போராளிகளுடன் மீளவும் பேச்சுக்களை அமெரிக்க நிர்வாகம் தொடக்கவுள்ளதாக அமெரிக்க வெளியுறவு செயலாளர் அந்தோனி பிளிங்டன் ஆப்கான் ஜனாதிபதி அஸ்ரப் ஹானிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ட்ரம்ப் நிர்வாகம் பின்பற்றிய பொறிமுறைகள் அனைத்தையும் மாற்றும் உத்தியை புதிய நிர்வாகம் ஆரம்பித்துள்ளது. இத்தகை பேச்சுக்களை துருக்கியை மையப்படுத்தி ஆரம்பிக்க அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது. அத்தகைய பேச்சுவார்த்தையை ஐ.நா. சபைக்கூடாக மேற்கொள்ள திட்டமிடுகிறது அமெரிக்கா.

எனவே ஈரானின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்ட அமெரிக்கா தனது நட்பு நாடுகளுடன் ஈரானை சுற்றிவளைக்க ஆரம்பித்துள்ளது. இத்தகைய சுற்றிவளைப்பின் ஒரு கட்டமே பி12 போர் விமானத்தின் நகர்வாகும். அதனூடாக மேற்காசியக் கொள்கையையும்ஈரான்தொடர்பானகொள்கையையும்ஜோ பைடன் மீளமைக்க ஆரம்பித்துள்ளார். இதில் ஈரானின் அணுகுமுறையையும் சாதாரணமானதாக எடைபோட முடியாது. சமகாலத்தில் ஈரானின் எண்ணெய்க் கப்பலை இஸ்ரேல் தாக்கியுள்ளதாகவும் ஏற்கனவே இஸ்ரேலின் சரக்குக் கப்பலை ஈரான் தாக்கியதாகவும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. அதனடிப்படையில் ஈரானின் அணுகுமுறையும் அளவீடு செய்யப்படவேண்டியதாகும்.

# உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய

# ஓபரா வின்பிரே மேகன் உரையாடல்











**சம்பிரதாயங்களால் பாதிக்கப்படுபவர்கள் ஏராளம். அதன் காரணமாக அழிந்து போகும் உயிர்களும் ஏராளம். அவ்வாறான மனித உயிர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஒருவருமில்லை. அமைதியாக பொறுத்திருப்பது அல்லது அமைதியாகவே மரணித்துப் போவது மாத்திரமேயாகும். என்றாலும் சில நேரம் பாதுகாக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் சம்பிரதாயங்கள் காரணமாக அழிந்து போன உயிர்களுக்கான இழப்பீட்டை அதே பரம்பரையிலிருந்து வேறொருவர் என்றாவது ஒருநாள் பெற்றுக் கொள்ளக்கூடும்.**

அண்மையில் உலகையே உலுக்கிய ஒப்ரா வின்பிரேயுடனான மேகன், இளவரசர் ஹரி ஆகியோரது உரையாடலையும் அவ்வாறான மதிப்பீட்டிற்கு உட்படுத்த முடியும். எனினும் உண்மையிலேயே இளவரசர் ஹரி, மேகனுடன் அவர் நடாத்திய அந்த உரையாடலை சில தலைப்புக்களில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஒபரா வின்பிரே எப்படியேனும் உலகினது கவனத்தை ஈர்க்கக் கூடிய உரையாடல்களை நடாத்துவதற்கு ஆற்றல் பெற்றுள்ள ஒரு ஊடகவியலாளராகும்.

பிரித்தானிய அரச குடும்பம் தொடர்பில் முழு உலகினதும் கவனத்தையும் பெற்றிருந்த பல தகவல்களுடனான அரச குடும்பத்தின் முன்னாள் அங்கத்தவர்களான ஹரி மற்றும் மேகனுடன் மேற்கொண்ட உரையாடல் உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. அந்த உரையாடலை உலகம் முழுவதிலும் மக்கள் தமது அனைத்து வேலைகளையும் ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு பார்த்தார்கள். அதில் மேகன் மற்றும் ஹரி கூறிய விடயங்கள், வெளிப்படுத்திய அனேக விடயங்கள் மக்களிடத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஒபரா மேகன் மற்றும் ஹரி ஆகியோருடனான உரையாடலுக்குள் நுழைந்ததும் கூட அரச குடும்பத்தில் அவர்களது வாழ்க்கை தொடர்பான தகவல்களை வெளியில் கொண்டுவரும் நோக்கில்தான் என்பது தெளிவானதாகும்.

தான் அரச குடும்பத்தில் இணைந்ததன் பின்னர் தான் பல்வேறு அவமதிப்புக்களுக்கு உள்ளானதாகவும், ஒரு தடவை தான் தற்கொலை செய்து கொள்வதற்கும் நினைத்ததாக மேகன் கூறியுள்ளார்.

தான் ஒரு பிரித்தானியர் அல்லாததால் தன்னை மிகவும் கீழ்த்தரமாக நடாத்தியதாகவும், தனக்குப் பிறக்கும் குழந்தையின் நிறம் என்னவாக இருக்கும் என அரச குடும்பத்தின் அங்கத்தவர் ஒருவர் ஒரு தடவை சந்தேகம் தெரிவித்தாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

திருமண நிகழ்வுக்கு முன்னர் இளவரசி கேட் உங்களை அழ வைத்தார் என்று பரவும் வதந்திகள் உண்மையானவையா என ஒபரா கேட்ட கேள்விக்கு, அது முற்றிலும் பொய்யான செய்தி என்றும், அவ்வாறான எந்த சம்பவமும் இடம்பெறவில்லை என்றும் மேகன் பதிலளித்துள்ளார். எனினும் உலகிற்கு காட்டுவதற்காக நடாத்தப்பட்ட திருமண விழாவுக்கு நான்கு தினங்களுக்கு முன்னர் தானும், ஹரியும் சிறிய தேவாலயம் ஒன்றில் உண்மையாகவே திருமணம் செய்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அரச குடும்பத்தினுள் ஏனைய அனைத்து அங்கத்தவர்களைப் போல தான் பொறியில் சிக்கிய வாழ்க்கையினை வாழ்ந்து கொண்டிருப்பதாக இளவரசர் ஹரி இந்த உரையாடலில் கூறினார். அந்தப் பொறி என்ன என ஒபரா கேட்டபோது, அது நடைமுறைகளால் ஏற்படுத்தப்பட்ட பொறி என்றும், தான் மாத்திரமின்றி அரச குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களும் அந்தப் பொறியில் சிக்கிக் கொண்டிருப்பதாகவும் இளவரசர் ஹரி பதிலளித்துள்ளார். தனது தந்தை மற்றும் சகோதரரும் அதில் அடங்குவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். இளவரசர் ஹரி தனது தாயார் இளவரசி டயானா மீது மிகவும் அன்பு கொண்டவர்.

தனது தாயாரின் உயிர் பரிதாபமாக பறிக்கப்பட்டமை தொடர்பில் தனது தந்தைக்கும் தொடர்பிருக்குமா என்ற சந்தேகம் இளவரசர் ஹரியிடம் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவர் இந்த நேர்காணலில் அரச குடும்பத்தின் அங்கத்தவராக அரச குடும்பத்தை குற்றம்சாட்டியுள்ளார்.

தான் அரச குடும்பத்திலிருந்து வெளியேறியதை அடுத்து தனது தந்தையான இளவரசர் சார்ள்ஸ் தனது தொலைபேசி அழைப்புக்களுக்கும் பதில் அளிக்கவில்லை என்றும் இளவரசர் ஹரி கூறியுள்ளார். ஒபரா அவரது தந்தை பற்றி கேள்வி கேட்ட சந்தர்ப்பத்தில் சட்டென்று பதில் கூறாது ஹரி, சிறிது நேரம் மௌனமாக இருந்துள்ளார். பின்னர் உண்மையிலேயே தனது தந்தை தன்னை கைவிட்டு விட்டார் என்ற உணர்வு தோன்றியதாக பதில் கூறியுள்ளார்.

எனினும் தனக்கும், பிரித்தானியாவின் ராணியான தனது பாட்டிக்கும் இடையில் சிறந்த உறவு நீடிப்பதாகவும் இளவரசர் ஹரி தெரிவித்துள்ளார்.

தனது சகோதரருக்கும் தனக்கும் இடையிலான உறவு தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், தான் தனது சகோதரர் மீது மிகுந்த அன்பு வைத்துள்ள போதிலும் தாம் இருவரும் இரு வேறு பாதைகளில் பயணிப்பதாகவும் கூறியுள்ளார். தனக்கும் மேகனுக்கும் பிறக்கும் குழந்தையின் இனம் தொடர்பில் அரச குடும்பத்தின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும் என ஒபரா கேட்ட கேள்விக்கு பதிலளித்த ஹரி, அது தொடர்பில் இடம்பெற்ற விடயங்களை தான் உலகிற்கு வெளிப்படுத்தப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் தான் அரச குடும்பத்திலிருந்து வெளியேறிதன் பின்னர் தனக்கு அரச குடும்பத்திலிருந்து கிடைக்கும் நிதி நிறுத்தப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரச குடும்பத்திலிருந்து வெளியேறுவது தொடர்பில் தான் முன்னரே எண்ணியிருந்ததாகவும் தெரிவித்த இளவரசர் ஹரி, இது தொடர்பில் மேகன் தனக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்றார்.

இளவரசர் ஹரி, சாதாரண குடும்பத்தில் பிறந்த, விவாகரத்து பெற்ற மேகனைத் திருமணம் செய்து கொண்டதை பெரும்பாலான பிரித்தானியர்கள் அங்கீகரிக்காத போதிலும் உலகின் அனேக நாடுகளின் மக்கள் அவரு க்கு ஆதரவைத் தெரிவித்தது அவர் அரச குடு ம்ப சம்பிரதாயங்களை விட்டு விலகியதனாலாகும்.

பின்னர் இளவரசர் ஹரி மேகனுடன் அரச குடும்பத்திலிருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டனர். இளவரசர் சார்ள்ஸிடமிருந்து விவாகரத்து பெற்றதன் பின்னர் டயானாவும் கூட தொடர்ந்தும் அரச குடும்பத்தில் ஒரு அங்கத்தவராக இருக்கவில்லை. எனினும் மேகனைத் திருமணம் செய்து கொள்வதற்கு இளவரசர் ஹரிக்கு அரச குடும்பத்தின் அனுமதி கிடைத்தது என்பதை மறந்து விட முடியாது. இதன் போது அரச குடும்பம் கடந்த கால அனுபவங்களின் ஊடகவோ ஏதேனும் நெகிழ்வுத்தன்மையினை கடைபிடித்துள்ளது என்பது தெளிவானதாகும். திருமண மண்டபத்திற்கு மேகனை அழைத்து வந்ததும் இளவரசர் சார்ள்ஸ்தான் என்பதை இளவரசர் ஹரி மறந்து போனது கவலைக்குரிய விடயமாகும். அந்நேரமே இளவரசர் ஹரி பிரித்தானிய அரச குடும்பத்தின் அத்திவாரத்தை ஆட்டம் காணச் செய்துவிட்டார்.

தமது மாளிகையின் மீது கல்லெறிவது என்பது எந்தளவுக்கு தார்மீகமானது என்பதை இளவரசர் ஹரி சிந்திக்கவில்லை என்பது தெளிவான விடயமாகும்.

இவ்வாறான உரையாடல்களைச் சமூகத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் ஊடக நிறுவனங்கள் எதிர்பார்ப்பது தமது வருமானத்தை உயர்த்திக் கொள்வதை மாத்திரமேயாகும். சில நேரம் இவ்வாறான உரையாடலில் பங்குபற்றியதற்காக ஹரி, மேகன் தம்பதியினருக்கு பெருமளவு பணம் கிடைத்திருக்கவும் கூடும். இந்த உரையாடலை ஒளிபரப்பியதன் மூலம் அதனை தயாரித்த சீ.பீ.எஸ் பிரைம் டைம் நிறுவனத்திற்காக ஹார்போ தயாரிப்பாளர்கள் எந்தளவு இலாபத்தை பெற்றுள்ளார்கள் என்ற விடயம் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. என்றாலும் உலகம் முழுவதும் இந்த உரையாடல் பிரபல்யம் அடைந்துள்ளது என்பது மட்டும் நிஜமாகும்.

இளவரசர் ஹரி மற்றும் மேகன் ஆகியோருடனான உரையாடலின் போது, தாம் மற்றொரு குழந்தையை எதிர்பார்ப்பதாகவும், அதுவொரு பெண் குழந்தை என்றும் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். உண்மையிலேயே அவர்கள் இருவரும் மிகவும் அன்புடன் வாழ்க்கை நடாத்தும் தம்பதியினர் என்பது தெளிவானதாகும்.

சில நேரம் அரச குடும்பத்தினால் தனது தாய்க்கு இடம்பெற்ற அநீதி, தனது தந்தையினால் தனது தாய்க்கு ஏற்பட்ட அநீதிகள் தொடர்பான தாக்கம் இளவரசர் ஹரியினுள் இருக்கவும் கூடும்.

டிரோனி வேவலகே
தமிழில்: எம்.எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)




## தித்திக்கும் தினகரன்




**தேவந்தி காரைதீவு**

தேசிய நாளிதழ் நீயோ
தேன் தமிழின் காவியமும் நீயோ
ஆசியாவின் நிகழ்வுகளை
அள்ளித் தரும் கற்பக தருவும் நீயோ
வண்ண வண்ண பக்கங்களோடு
வாரம் முழுவதும் வருகின்றாய்
கன்னத்தில் பிறர் கை வைக்கும்படி
கலைக் களஞ்சியமாக திகழ்கின்றாய்
உறுதியான தகவல்களையும்
உரிமையோடு தருகின்றாய்
அறுதியாகும் தமிழ் பெருமைகளை
ஆர்வத்தோடு வெளியிடுகின்றாய்
தினம் தினம் நீ வந்தாலும் உந்தன்
தித்திப்புக்கு பஞ்சமில்லை
மனம் பல வென்றாலும் உந்தன்
மௌனத்திற்கு யாரும் நிகரில்லையே
தனிமையில் உனை பற்றினேன் உன்
தமிழோடு உறவாடித் தித்தித்தேன்
இனிமையான உன் இதழ்களையும்
இஷ்டத்தோடு தினம் தழுவிக் கொண்டேன்
எப்போது வருவாயோ
ஏக்கங்கள் தீர்பாயோ
தவறாமல் நீ வந்து
தமிழ் தாகம் தணிப்பாயோ
என எண்ணி எண்ணியே நகர்கிறேன்...

## ஏற்றத்தை நோக்கி....

**பசறையூர் மல்லிகா பத்மநாதன்**

பஞ்சு மேகங்கள் கொஞ்சிவிளையாடி
பரவி வான் வெளியில் நகரும்
பாரின் வனப்புதனை பெருக்கிட எண்ணி
பரிதியின் கதிர்க்கண்கள் ஊடுருவும்
கழனிகளும் காடுகளும் கதிரவனின் ஒளிகண்டு
தலையாட்டியும் நிமிர்ந்தும் வரவேற்பளிக்கும்
காவின் எழில் கூட்டிபூத்த மலர்களோ
கந்தத்தை வீசி மகிழ்வளிக்கும்
இல்லங்கள் எங்ஙனும் இயங்கின்ற மாந்தர்
ஏற்றத்தை நோக்கி செல்ல முனைவர்
உள்ளங்கள் தெளிவாகி ஒருமையுணர்வுடனே
ஊரில் வாழ்வை எதிர்க்கொள்வர்



## அந்திவானம் அழுதமழை

**இராணி பௌசியா, கல்லளை**

இற்றுப் போக முடியாமல்
இறுகிக் கிடந்த மனப் புத்தகத்தின்
சில பக்கங்களுடன் அவள் கிணற்றடியில்
பக்கம் பக்கமாகப் புரட்டி
உரத்த குரலில் வாசிக்கின்றாள்
தனக்கு மட்டும் கேட்கும் வண்ணம்
பக்கம் பக்கமாக முகங்காட்டும்
கைப் பக்குவத்தில் தேய்ந்து கொண்டிருக்கும்
பாத்திரங்களோ கரையமுடியாமல்
கண்ணீர் விட்டபடி
முற்றிய கத்தரிக்காயாக
திருமணச் சந்தையில்
விலையானவள்
இன்னும் சுண்டப்படுகின்றாள்
புகுந்த வீட்டுச் சந்தடியில்
அவள் வாசிப்பின் வேகம் அதிகரிக்க
விரைந்து சிந்திய கண்ணீர்பூக்கள்
மின்னும் பாத்திரங்களை
மேலும் மெருகூட்டுகின்றன
மின்னலோ ஒரு கேவலுடன்
எழுகிறாள்
அந்திவானம் அழுத மழைத்துளி
அவள் தேகத்தை தட்டிக் கொடுக்கிறது
ஆமாம் இன்று மகளிர் தினம்
வாழ்த்துக் கூற வானின்றிறங்கும்
மழைத்துளிகள்
அன்றைய அவளின் மேடைப் பேச்சுக்கு
நினைவாஞ்சலி செய்கின்றன
வாழ்க மகளிர்!!!
வையத்துள் வாழ்வாங்கு வாழ!

## வாக்குறுதி

**கலாபூஷணம், நிந்தவூர் மக்கீன் ஹாஜி**

எங்கு அம்மா தேடுகின்றா
எனக்கொரு
வெள்ளைப் பெண்ணை
நானோ
விரும்பினேன்,
ஒரு புழுதி மண்ணை
கையேந்தி!
என் தாய் நோக்குகின்றா,
விண்ணை
விருந்திக் கொள்கின்றா!
என்னால்,
தன்னை
எழுதிவைத்தவன்!
யோசிப்பதெல்லாம்,
என் அன்னை
மீண்டும்!
அவதானிக்கின்றான்,
என்னை
ஏமாற்றி விடுவானோ!
என்று,
அப்பெண்ணை
நானோ!
விட்டுவிடமாட்டேன்,
என் கண்ணை
சாட்சியாக!
வைக்கின் றேன்,
மண்ணை, விண்ணை

## மனதுக்குள் மரம்

**நீ.பி. அருளானந்தம்**



தனி மரமே
உனக்கேது கவலை?
என யாருமே நினைக்கலாம்
பூக்காத இலைப்பரப்புத்தான்
என்றாலும் – நீயும் மனதுக்குள்
பூக்களை புஸ்பிக்கிறாய்
பூ காய்ந்தால் தானே
கல்லெறிதலும் விழும்
அதையும் பட்டு நொந்திடவே
உனக்கும் மனதுக்குள் இஷ்டம்
காய் பழுத்தும் கீழே விழுந்து
சொரியாவிட்டால்
எவருக்குமே நீ ஒருப்
பிரயோசனமுமே இல்லவே இல்லை!
எனில் அதையுமே நீ
செய்திடல் ஆவதும் தேவை!
எந்தப் புயலுக்குமே நீ பிடுங்கி
எறியப்படா நிற்றலின் உறுதியும்
மிக மிக அவசியமானதே!
கொடுமழைதனிலும் நீ கிடந்து
நன்றாகவே நனைந்திடு
மின்னல் இடி இடிக்கும் நேரம்
கடவுளே... என்றிடு!
உரத்தைக் கூட்டி வெறித்த வெயிலுக்கும்
கிடந்து நன்றாகவே வேகு!
இவையெல்லாமே உனக்கென்றே
முழு மனதுடனும் ஏற்றுக்கொள்!
மரமேயானாலும் கூட உனக்கோ
நல்ல மனம்தான்!
உன் மனம் வறண்டே போயினதன் காலம்
இலைகள் கவலையில் பழுத்து உதிர்ந்தாலும்
விறுவிறுவென மீண்டு வந்திடுமே
உனக்கென்றே வசந்தமாக
அமைந்த அத் தளிர்!

## எதிரும்.... புதிரும்....

**கே.எம்.ஏ. அஸீஸ், சாய்ந்தமருது.**

தொப்பென்று தரையில் விழுந்த
அப்பாவிக் கிழவியின் அலறல்...வெறும்
சப்பென்று போனது, சமூகத்தின்முன்
பிச்சைப்பாத்திரம் ஏந்திய அலுகோலாய்
வீடு வீடாய் படியேறி அலையும் இந்த
அநாம தேய ஊத்தைக்கிழவியை
பார்த்தும் பாராததுமாய்
பசுத்தோல்போர்த்திய புலிகள்பல
பதுங்கிக் கொள்கின்றன
கணக்கெடுக்காத
கழிவுகளின் எச்சங்களாக
பசியின் கோர அதிர்வு
முகத்தில் விகாரமாய் பளிச்சிட
அங்குமிங்கும்... சிதறிக் கிடக்கும்
குறுணல் மணி, சிலநாணயக்குற்றிகள்
கண்ணீரில் மிதக்கின்றன, நடுரோட்டில்
கண்கெட்ட அறிவுகெட்ட மானிடர்களின்
அசமந்தத் தனம் கண்ட அதிர்ச்சியில்
எங்கிருந்தோ வீதியால் எதேச்சாதிகாரமாய்வந்த
சொறி நாய் ஒன்று... தன்
வாலை ஆட்டி வருத்தம் தெரிவிக்கையில்
ஆறறிவு மிருகங்கள், கண்ணை மூடிக்கொண்டு
கனவேகமாய் பறக்கின்றன
ஐயறிவு மிருகத்தின் இரக்க சிந்தையைக்கூட
கண்டும் காணாததுமான கெப்பரில்
எதிரும்... புதிருமாய்
ஆமாம், இது எதில் போய்முடியப்போகிறதோ?
எதிர்காலத்தில்... ஒன்றுமே விளங்கவில்லை
அஃறிணை எது? உயர்திணை எது என்று
அறியப்பட முடியாத இந்த
நா(ய்)கரீக நவீன யுகத்தில்?



## கவனம்!

**கல்லொளுவை பாரிஸ்**

நகரும் தார்ச்சாலை
இருபக்க மரங்கள்
பசுமையான வயல்வெளிகள்
முப்பரிமாண மலைகள்
முகத்தில் மோதும் தென்றல்
எதிர்வரிசை இளமை
எதையும் ரசிக்கவிடவில்லை
சில்லறை பாக்கி!

## எங்கே மனிதாபிமானம்

**எம்.எஸ்.எப். சுமையா, நெல்லியகம, பலாகல**

மரத்திலிருந்து கோடரிக் காம்பு
செய்து இறுதியில் – அம்
மரத்தையே வேறொடு சாய்க்கும்
கழியுக மனித வேடமிட்ட
மிருக வேட்டை தொடருகிறது...
இப் பூமியிலே....
கன்றுக்காய் சுரக்கும் பாலை
அக் கன்றைக் காட்டியே
கறந்து பசுவையும், கன்றையும்
கதரவைத்து வியாபாரத்தை
ஒப்பேற்றும் மனித மிருகங்கள்
வாழும் பூமி இது...
மனிதன் என்னும் பெயரிடப்பட்ட
உன்னை உனக்கே
அறிமுகம் செய்துவைக்க
கேட்டுப்பார் இதயம் என்கிற
அரங்கில் வாழும் மனசாட்சியிடம்
"எங்கே மனிதாபிமானம்" என்று...



## விடைதெரியாத வினாக்கள்

**ஏ.எம். கஸ்புள்ளா**

நான் அழகில்லையா
இல்லை அறிவில்லையா
உன்மீது பரிவில்லையா சொல்?
புருவங்கள் அசையாமல்
பார்த்திட்ட விழிகளுக்கு
பதில் சொல்?
உன் உருவத்தை படமெடுத்து
ஏந்தி நிற்கும் இதயத்திற்கு
பதில் சொல்?
நீ தூங்கி எழும்
ஒரு பொழுதில்
நிலவாகிடவா சொல்?
ஆம்ஸ்ரோனின் பாதம்பட்ட
விண்ணகத்தை களவாடிடவா சொல்?
எண்ணங்களை அடைத்து வைக்க
முடியவில்லை ஏன் சொல்?
புன்னகையை மறைத்துக் கொள்ள
தெரியவில்லை ஏன்சொல்?
கனவுகளை வெறுத்து விட்டேன்
ஏன்சொல்?
உன் நினைவுகளில்
நிலைத்துவிட்டேன்
ஏன்? ஏன்சொல்?

## மீளும் நினைவுகள்

**றஸ்மினா றாஸிக் குருநாகல்**

வடித்த கண்ணீரின் அர்த்தமும்
துடித்த இதயத்தின் காரணமும் புரியவில்லை
வடிகட்டிய உன் வசனங்களின் வரவேற்பினால்
உள்ளத்தின் பரிசுத்தம் கெட்டுப்
போனதால் உன் அன்பை
ஏற்கும் பக்குவம்
இனியும்எனக்கில்லை
சொல்லால் ஒருவனாகவும்
செயலால் இன்னொருவனாகவும்
இருப்பதாலோ என்னவோ உனக்கு
நற்சான்றிதழ்வழங்க முடிவதில்லையென
என் மனம் சொல்கிறது
மனத்தின் தளம்பல் வார்த்தையின்
தடுமாற்றம் மெல்லியதாய்
வேதனை என்ற சொல்லுக்கு
அடித்தாளம் இட்டுச் செல்கிறது
நினைவுகளையெல்லாம் அப்படியே விட்டு விட்டு
காலம் மட்டுமே நகர்ந்துசென்றுள்ளதென
மீட்டிய நினைவுகள் எனக்கு
ஞாபகப்படுத்திச் சென்றன



## இறந்து போன காலங்கள்

**ஜெகன்**

முக்கனி மர இடையில்
முழுநிலவின் ஒளி தெறிக்கும்
நினைவுகளைத் தூண்டும்
நிசப்த இரவுகள்
சுதந்திரமாய் சிந்தித்தது
எங்கோ ஒழிந்து கொள்ள
இயந்திர வாழ்வில்
களவாய் போன காலங்கள்
கனவாய் தோன்ற
அது எங்கோ தொலைவில் தெரியும்
தொட்டாச் சுருங்கியாய்
நொந்து இருந்த வேளை
அதைத் தொட்டு
சீண்டியவர்களும் சிலர் உண்டு
தொடாது எண்ணங்களை
தூண்டியவர்களோ பற்பலர்
துருப்பிடித்த பேனாவையும்
தூசி படிந்த தாள்களையும்
எடுத்துப் பார்க்கிறேன்
பச்சை இலைகளில்
பனித் துளியால் முத்துக்கள்
அதன் ஒற்றை காம்பில்
ஒரு பூ பூத்திருந்தது
சுற்றி வர வாசனை

# மேல் மாகாண சபை
# பொறியியல் பணியகம்

மேல் மாகாண சபையின் வாகன பழுது பார்த்தலுக்காக உத்தேச அலகிற்கு சமயாசமய அடிப்படையில் ஈடுபடுத்துவதற்காக வேலைப் பிரதானி/ தொழில்நுட்பவியலாளர்/ வாகன மின் தொழில்நுட்பவியலாளர் ஆகிய பதவிகளுக்காக 60 வயதிற்கு மேற்படாத விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயதரவு, தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் குறிப்பிட்டு, அதன் பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2021.03.29ம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பபிடுதல் வேண்டும்.

## வேலைப் பிரதானி (Forman) I பதவி

**சம்பளம்** :- நாளாந்தம் ரூ. 3,000.00 மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு உரித்தாகும்.

**தகைமைகள்** :- NDT/HNDE/TTI (கட்டுநாயக்க) அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இயந்திர டிப்ளோமா பாடநெறியை பயின்றிருத்தல் மற்றும் 5 வருட அனுபவம் அல்லது NCT (Mechanical) மற்றும் 10 வருட அனுபவம்.

## தொழில்நுட்பவியலாளர்/ வாகன மின் தொழில்நுட்பவியலாளர் (Mechanics/ Auto Electrician) - 03 பதவிகள்

**சம்பளம்** :- நாளாந்தம் ரூ. 2,500.00 மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் உரித்தாகும்.

**தகைமைகள்** :- குறித்த துறையில் NVQ 3 மற்றும் 5 வருட அனுபவம் அல்லது குறித்த துறையில் 10 வருட அனுபவம்.

## பயிலுநர் (தொழில்நுட்பம்/ வாகன மின் தொழில்நுட்பம்)

தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி அதிகார சபை, ஒருகொட வத்த மோட்டார் வாகன பொறியியல் நிறுவனம் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தொழில்சார் பயிற்சியை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுக்கும் விண்ணப்பிக்க முடிவதுடன் நாளாந்த கொடுப்பனவு செலுத்தப்படும்.

**பிரதி பொதுச் செயலாளர் (பொறியியல்)**
**பொறியியல் பணியகம் (மே.மா.)**
**5ஆம் மாடி - 204,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை.**
**பத்தரமுல்ல.**
**தொ.பே. - 011-2092506 / 071-8108452**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ
இராஜாங்க அமைச்சு

## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்

# ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு

## அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்காக CCTV கண்காணிப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல், நிறுவுதல், பரிசோதித்தல் மற்றும் செயற்படவைத்தல்

அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு CCTV கண்காணிப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல், நிறுவுதல், பரிசோதித்தல் மற்றும் செயற்படவைத்தல் என்ற பணி ஒதுக்கீட்டிற்காக முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக தேர்ச்சியுள்ள விலைமனுதாரர்களை இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனமானது அழைக்கின்றது.

இதற்கமைவாக, இங்கே விபரிக்கப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்காக அவர்களின் ஆர்வங்களை வெளிப்படுத்துவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். ஆர்வமுள்ள தனிநபர் விலைமனுதாரர்கள் வழங்கப்பட்டுள்ள நியதிக் குறிப்புக்களில் விபரிக்கப்பட்டுள்ள சேவைகளை செயற்படுத்துவதற்காக அவர்கள் தகைமையுள்ளவர்களென சான்று பகருவதற்கான தகவலை வழங்கல் வேண்டும். 2021.03.16 ஆம் திகதியிலிருந்து 2021.04.05 ஆம் திகதி வரையும் **www.spmclanka.lk** என்ற இணையதளத்திலிருந்து விபரமான நியதிக் குறிப்புக்களை காணலாம்.

ஆர்வமுள்ள தனிநபர் விலைமனுதாரர்கள் அவர்களின் முன்மொழிவுகள் மற்றும் விபரமான ஆவணங்களை 2021.04.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவள தோட்டம், இரத்மலான, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு CCTV கண்காணிப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல், நிறுவுதல், பரிசோதித்தல் மற்றும் செயற்படவைத்தல் ஆகியவற்றிற்கான ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு'' என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல.: 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை:**
**கந்தவள தோட்டம், இரத்மலானை, இலங்கை.**
**தொலைபேசி : (00) 94-11-2635353/ (00) 94-11-2637574 / (00) 94-11-2623298**
**மின்னஞ்சல் : spmclanka@sltnet.lk**
**இணையதளம் : www.spmclanka.lk**
**தொலைநகல் : (00) 94-11-2634771, 2626621**

# அமெரிக்க தூதரக காரியாலயம், கொழும்பு.

## டிஜிட்டல் தயாரிப்பு ஒருங்கிணைப்பாளர் [ஆண் / பெண்]

**இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமண உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.**

இந்தப்பதவி வகிப்பவர் தனிப்பட்ட ரீதியில் இணையத்தளத்தில் அல்லது வழமையான. ஊடக ஒளிபரப்பினூடாக பகிரப்படும் உயர்ஸ்தானிகராலய பொது மக்கள் தொடர்பான அனைத்து பல்லூடக தயாரிப்புகளை மேற்கொள்ளல்/பெற்றுக்கொள்ளல் வேண்டும். இலங்கையில் ஊடகத்துறையில் இருக்கும் திறமைமிகு தயாரிப்புகள், அவற்றைப் பகிரும் அலைவரிசை, மற்றும் இலங்கையில் உள்ள ஜனரஞ்சக அலைவரிசைகளின் மக்கள் அபிமானத்தை அறிந்து அவற்றிற்கு ஏற்றாற்போல் உயர்ஸ்தானிகராலயத்திலிருந்து வெளியிடப்படும் ஊடக வெளியீடுகளை திறமையானவகையில் சிறப்பாக அமைத்து வெளியிடும் தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் ஆண் அல்லது பெண், தகவல் அதிகாரியின் கீழ் செயற்படுவதோடு எவ்வித பரிசீலிக்கும் உத்தரவாதமும் அவருக்கு வழங்கப்படமாட்டாது.

**வேலைக்குரிய கால அட்டவணை: முழு நேரம் வாரத்தில் 40 மணித்தியாலங்கள்.**

**மாதாந்த கொடுப்பனவு: 163,449/-**

**தேவையான தகைமைகள்:**

1. **கல்வி:** ஆக்கத்திறன், விளம்பரத்திறன், மக்கள் தொடர்பு, கலைத்தொடர்பு, கணிணிக்கல்வி, அல்லது திரைப்படத்துறை பற்றிய பட்டப்படிப்பு அல்லது இரண்டு வருட முழுநேர தயாரிப்பு சம்பந்தப்பட்ட கல்விச்சான்றிதழ்.
2. **முழுமையான தொழில் தகைமை:** இணைய மற்றும் அதனுடன் இணைந்த தொடர்பாடல் ஊடாகவும் டெஸ்க்டொப், கைத்தொலைபேசி ஆகியவற்றினூடாக பரந்த அளவிலான டிஜிட்டல் விற்பனை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். வர்த்தக விளம்பரம் அல்லது மக்கள் தொடர்பாடல் ஊடகத்தலைப்புகள் ஆகியவைகளை பல்லூடகத் தொடர்பாடலூடாக வழங்கும் தயாரிப்புகளை மேற்கொள்ளல், அவற்றை இணையத்தில் ஒழுங்கு படுத்தி (content management system) எனும் தொடர்பூடாக ஒருங்கமைத்து வழங்கும் அனுபவம் குறைந்தது மூன்று வருடம் இருத்தல் வேண்டும்.
3. **மொழி ஆற்றல்:** தரம் IV ஆங்கிலம் (சரளமாக) வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசும் திறமை அவசியம். (பரிசோதிக்கப்படும்) அதேபோன்று, IV மட்டத்தில் (சரளமாக) சிங்களம் மற்றும்/அல்லது தமிழ் வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுவதில் திறமை பெற்றிருத்தல் வேண்டும்.
4. **தொழில் அறிவு :** ஒலி,ஒளி தயாரிப்பிலும் கிரபிக் டிசைன் மற்றும் ஏனைய ஒளிப்பதிவு தயாரிப்புகள் பற்றிய ஆக்கபூர்வமான அறிவு இருப்பது அவசியம். ஒன்லைன் டிஜிட்டல் பண்புகள் மற்றும் சமூக செயல்பாடுகள் பற்றிய புரிந்துணர்வுடன் இலக்கிற்குரிய நேயர்களின் மனப்பான்மை மற்றும் அவர்களது விருப்பத்தெரிவுகள், குறிப்பிட்ட உள்ளடக்க வடிவமைப்பு மற்றும் காட்சி வழங்கல் பற்றிய பூரணமான அறிவு அவசியம். அத்துடன் இலங்கை மற்றும் சர்வதேச தொடர்பாடல் அமைப்பு அவை இலங்கையில் மேற்கொள்ளும் தாக்கங்கள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். டிஜிட்டல் பன்முகப்படுத்தல், பார்வையாளர்களின் கருத்து, வாடிக்கையாளர் விரும்பும் சேவை பற்றிய அறிவு பெற்றிருத்தல் அவசியம். திட்டத்தின் நோக்கங்களை வரையறை செய்தல் அடங்கலான திட்ட மேலாண்மை, வெளிப்பாடு மற்றும் மதிப்பீட்டு முறை பற்றிய பொதுவான அறிவு இருத்தல் வேண்டும்.
   காட்சி ஊடகம் தொடர்பான பிரதிகள் மற்றும் ஆக்கங்களில் குறிப்பாக பதிப்புரிமை என்பவற்றில் நடைமுறை வழிகாட்டல்களின் தாக்கம், கட்டுப்பாடுகள், சட்ட திட்டங்கள் தொடர்பான பூரணமான அறிவு எதிர்பார்க்கப்படுகிறது.
5. **திறன்கள் மற்றும் திறமைகள்:**
   - பகுப்பாய்வு செய்யும் திறமை.
   - தொடர்பாடல் / தனிநபர் திறமை.
   - நிர்வாகத்திறன்.
   - தொழில்நுட்ப திறன்கள்.
   - நாடளாவிய ரீதியில் பயணிக்கத் தயாராயிருத்தல்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னணு பிரதிகளுடன் மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.


- கல்விச்சான்றிதழ்.
- சேவைக்கால அனுபவ சான்றிதழ்.
- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை /கடவுச்சீட்டு /வேறு ஆவணங்கள்).

**விண்ணப்பிக்கும் முறை:**

மேலதிக விபரங்களுக்கு https://lk.usembassy.gov/embassy/jobs/ என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA] மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

உங்கள் விண்ணப்பங்கள் **2021 மார்ச் 25** ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும்.
தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
App Store Google play Windows Store


Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# வாகனங்கள் விற்பனைக்கு

### THALAWATHUGODA VEHICLE YARD

CAR

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| CAX-58XX | SUZUKI | DAA-MH44S WAGON R | 2016 | 12 SRI 46XX | MITSUBISHI | LANCER | 1980 |
| CAN-80XX | SUZUKI | DAA-MH44S WAGON R | 2014 | CAG-85XX | MICRO | PANDA L.C.1.0 | 2015 |
| CAQ-32XX | TOYOTA | DAA-NHP10 AQUA | 2014 | CAQ-86XX | SUZUKI | WAGON R STINGRAY | 2015 |
| CBD-81XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2017 | GT-39XX | HYUNDAI | SANTRO | 2002 |
| HR-32XX | KIA | KIA SPORTAGE | 2000 | KH-20XX | TOYOTA | VIOS 1.5EA | 2003 |
| | | | | 14 SRI 90XX | NISSAN | SUNNY | 1984 |

OTHER VEHICLES

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| PI-67XX | NISSAN | PRIMASTAR DCI 115 SE SWB | 2007 | NB-52XX | MICRO | TOURER | 2012 |
| PI-92XX | SUBARU | EBD-S321B | 2015 | PD-96XX | NISSAN | NAVARA DCI OUTLAW | 2006 |
| 250-01XX | TOYOTA | HIACE | 1983 | PB-94XX | NISSAN | KR-VWE25 CARAVAN | 2006 |

### ANURADHAPURA VEHICLE YARD

CAR

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| 15 SRI 66XX | NISSAN | SUNNY | 1985 | KY-68XX | TOYOTA | DAA-NHP10 AQUA | 2012 |
| CAN-39XX | MICRO | PANDA L.C.1.0 | 2015 | CAW-60XX | SUZUKI | OMNI STR | 2016 |
| CBD-79XX | SUZUKI | DAA-MK42S SPACIA | 2016 | CAI-76XX | TOYOTA | DAA-NHP10 AQUA | 2013 |

OTHER VEHICLES

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| PI-86XX | TOYOTA | CBF-TRH200K HIACE | 2015 | PK-17XX | NISSAN | HBD-DR17V CLIPPER | 2018 |

### HORANA VEHICLE YARD

CAR

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| KY-89XX | TOYOTA | PRIUS DAA-ZVW30 | 2012 | KP-82XX | FIAT | LINEA | 2011 |
| 17-84XX | HYUNDAI | STELLAR | 1988 | | | | |

### KULIYAPITIYA VEHICLE YARD

CAR

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| CAY-75XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2017 | 65-52XX | MERCEDES BENZ | E220CDI | 1999 |
| CAC-57XX | HONDA | DAA-GP5 | 2014 | | | | |

### KADAWATHA VEHICLE YARD

CAR

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| CBH-23XX | MAZDA | DBA-HB36S CAROL | 2017 | CAO-00XX | TOYOTA | DAA-NHP10 AQUA | 2014 |
| PE-87XX | MICRO | MPV JUNIOR III | 2013 | CAV-50XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2017 |
| KG-22XX | TOYOTA | LAND CRUISER | 2003 | KO-63XX | MAZDA | DBA-BK5P | 2007 |
| 65-98XX | NISSAN | AVENIR | 1996 | KI-01XX | MICRO | TREND | 2009 |
| CBC-06XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2018 | KY-06XX | MICRO | MX7 II | 2012 |
| KW-58XX | TOYOTA | DAA-ZVW30 PRIUS | 2012 | PH-86XX | TOYOTA | EBD-S321M PIXIS | 2013 |

OTHER VEHICLES

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| 251-68XX | TOYOTA | LH119 | 1994 | NF-73XX | HINO | LIESSE | 2010 |

### NITTAMBUWA VEHICLE YARD

CAR

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| CAG-04XX | SUZUKI | ALTO LXI 800 | 2016 | CAX-46XX | SUZUKI | DAA-MK42S SPACIA | 2016 |

OTHER VEHICLES

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| 58-22XX | NISSAN | VRMGE24 | 1991 | | | | |

மேற்படி வாகனங்களை எதிர்வரும் 2021 மார்ச் 15 ஆம் 16 ஆம் 17 ஆம் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் மு.ப 08.30 முதல் பி.ப 4.30 வரை பார்வையிடலாம். (கேள்வி 2021 மார்ச் 19 ஆம் திகதி பி.ப 4.30 க்கு முடிவடையும்)

மீள செலுத்தப்படாத ரூபா 250.00 செலுத்தி கேள்விப்பத்திரங்களை தலைமைக்கொண்ட CDB கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் வாகனங்களை அந்த நேரத்தில் காணப்படும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுவார்கள். அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் வாகனத்தின் முழுக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டு செல்ல வேண்டும். மேலும் வாகனங்களின் நிலுவையாக உள்ள அரசாங்க வரி மற்றும் வருமான வரி என்பவற்றை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

வாகனப் பரிசோதனை

**Thalawathugoda Vehicle Yard:** No. 175, School Lane, Thalawathugoda.
**Horana Vehicle Yard:** No. 166, Aguruwathota Road, horana.
**Nittabmuwa Vehicle Yard:** No. 655, Jayasuriya Mawatha, Nittabmuwa.
**Anudharapura Vehicle Yard:** Ala 05, Rathmale, Shrawasthipura.
**Kadawatha Vehicle Yard:** No. 655, Jayasuriya Mawatha, Nittabmuwa.
**Kuliyapitiya Vehicle Yard:** No. 259, Madampe Road, Kuliyapitiya.

**CONTACT:** Dilsha / Pasan: 011 2744977

**CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC**
No. 175, School Lane, Thalawathugoda. Tel: 0112744977

** The Company reserves the right to withdraw any vehicle from the sale without prior notice.*

SMART MEDIA

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

011 2 429 369 / 011 2 429 368

## மோட்டார் வாகனங்கள்

### 113 சுசூகி கார்கள் விற்பனைக்கு

Suzuki Maruti 800, 2009 முதல் உரிமையாளர். 19500km . A/C, புதிய டயர் என்ஜின் பொடி 100% பாதுக்கை. 077 3960612 019826

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

இரத்மலானை மெலிபன் சந்தியில் காலி வீதியில் இந்தியன் ரெஸ்டோரன்ட் விற்பனைக்கு (கட்டடம் இல்லை) CCTV, AC நவீன சமையலறை நவீன தளபாடங்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. 0770468296 018621

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

மேல் மாடி அலுவலகத்திற்கு அல்லது தங்குமிடத்திற்கு கீழ் மாடி ஒரு பகுதி வியாபாரத்திற்கு தொடர்பு 076 5790854. இல 61, பீன்ஸ்ரோட், மருதானை. 019149

ராஜகிரிய, வெலிக்கட பிளாஸா, கீழ்மாடி கடைக்கு, அலுவலகத்திற்கு வாடகைக்கு உண்டு. 0717887710. 019255

### 212 அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு

OFFSET அச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. Proteck Plate Exposer 01, KORD Heidelberg (18x25) 02 இயந்திரங்கள், CYLIN DER Heidelberg (18x24) 01 இயந்திரம், Electric Chinese Cutter ஒன்று, SCHNEIDER Polar Cutter (36 inch) ஒன்று, Platen Machine மூன்று. வார நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 வரை பார்வையிடலாம். அழைக்கவும். 0777739459/ 0777347228. 63/5, ஸீ விக்ரம மாவத்தை, வத்தளை. 018950

### 218 மருத்துவ பொருட்கள்/ சிகிச்சை

உடல் பருமன் கூட்டுதல், குறைத்தல், புகை மது பாவனை நிறுத்துதல், அதிக நித்திரை, நித்திரையின்மை, மனச் சோர்வு, கோபம், சரும நோய்கள் உள்நாட்டு மருத்துவம் மூலம் நிவாரணம் பெறலாம். Dr. ஆப்டீன் சுஜப், நிவ் திஹாரிய மெடிக்கல், 116C, கொழும்பு கண்டி வீதி, திஹாரி சந்தி பெற்றோல் நிலையம் அருகே. 07 1 8369333, 0740656333. 016933

### 242 கோழிகள், முட்டைகள்

A.D.N. Dias Farm (நாட்டுக் கோழிக் குஞ்சுகள்) ஒரு வயதுள்ள மிகவும் ஆரோக்கியமான நாட்டுக் கோழிக் குஞ்சுகள். சேவல் குஞ்சுகளை மத்திரம் பெறலாம். போக்குவரத்து ரயில் மூலம். (100 இற்கு மேற்பட்ட ஓடர்கள் மட்டும் ஏற்கப்படும்) ஒரு குஞ்சு 60/ கம்பஹா. 0766876559 020060

## வேலைவாய்ப்பு

### 306 வெற்றிடங்கள் மருத்துவம்

கண்டி பாமசிக்கு கணனி அறிவுள்ள பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர் தேவை. கண்டிக்கு அருகில் விரும்பத்தக்கது. 071 8180058 019669

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

ஒரு முன்னணி நிறுவனம் கொழும்பு புறநகர் பகுதியில் சந்தைப்படுத்தல் அலுவலர்களை ஆட்சேர்க்கின்றது. மருத்துவம், வாகனம், போனஸ், சம்பளம், வெளிநாட்டுப் பயணங்கள் இதில் உள்ளடங்கும். 50 வயதிற்குக் குறைவானவர்கள் அழையுங்கள். 0773928246, 071 6226578, 077 7697622, 071 3530876, 0114201539 012513

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

நீர்கொழும்பில் அமைந்துள்ள பிளாஸ்டிக் நிறுவனத்திற்கு (இன்ஜெக்டின் மோல்டிங்) பகல்/ இரவு முறைமாற்று வேலைக்காக ஊழியர் தேவை (ஆண்) வயது 20 முதல் 35 தங்குமிடம் இலவசம். 0777580401/ 0711167295, 0312227391. 019667

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் AD அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் தேவை. கண்டி முதல் யாழ்ப்பாணத்துக்கு பெயின்ட், ஹார்ட்வெயார் பொருட்களை விநியோகம் செய்வதற்கு. 0777890398 019690

ஹோமகம விநியோக நிறுவனத்திற்கு சாரதி உதவியாளர் தேவை. கொமிஸ் உடன் கூடுதல் சம்பளம்/ தங்குமிட வசதிகள் உண்டு. 011 2752761, 0773358725 019674

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

இருவரைக் கொண்ட குடும்பத்தில் உணவு சமைப்பதற்கு மற்றும் வீடு சித்திகரிப்பதற்கு பெண் தேவை. 0777 268835 019811

முஸ்லிம் வீடொன்றில் தங்கி வேலை செய்ய 16 35 வயதுக்குட்பட்ட பணிப்பெண் அவசியம். முஸ்லிம் சமையல் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. 0706330503 020156

வீட்டில் உணவு சமைப்பதற்கு, சுத்திகரிப்பதற்கு 50 வயதிற்கு மேற்பட்ட அப்பு (ஆண்) தேவை. அழையுங்கள் 0777308383. 019331

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

COOK - தங்கொடுவையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு தங்கி வேலை செய்யக்கூடிய (30 நாட்களுக்கு) இந்தியன் உணவு வகைகள் சமைக்கக் கூடிய சமையற்காரர் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். இல. 18, வெலிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு: 0766200300 , 077 2217989. 019013

0754000555 எமது பேக்கரிக்கு திறமையான அனுபவமுள்ள பாஸ் தேவை. சோட்டீஸ் தயாரிப்பதற்கு பாஸ் தேவை. 019451

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

எமது பண்ணையில் வாகனங்களுக்கு பொருள் இறக்குவதற்கு ஏற்றுவதற்கு ஊழியர் தேவை. மலைநாடு விரும்பத்தக்கது. மேலதிக ஊழியர் குடும்பம் தேவை. சம்பளம் ரூ.60, 000/ தங்குமிடம் உண்டு. மாரவில தொடர்பு. 0777186251/ 0778140679. 019421

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

மேசன்பாஸ், உதவியாளர்கள் உடன் தேவை . வேலையின் படி சம்பளம் உண்டு. தங்குமிட வசதியுண்டு. 0778641697, 0701181536. 019180

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

புலக்கல் தயாரிக்க வேலையாட்கள் தேவை. நிட்டம்புவ 0775855851. 019673

### 325 தொழில்துறை பொது

ஆயு SPA பயிற்சிபெற்ற/பெறாத பெண் தெரபிஸ்ட் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. மாதாந்தம் 100000/ மேல் உழைப்பதற்கு. 291/1, கிரில்லவல்ல, கடவத்த. 019333

எமது நிறுவனத்திற்கு திறமையான வாகன ஜென்டர் தேவை. தங்குமிடம். சகல வசதிகளும் உண்டு. கொஹுவல, நுகேகொட. 0777252876. 018809

வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு பயிற்சிபெற்ற/ பயிற்சிபெறாத ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. ஒருநாள் சம்பளம் ரூ. 1 200/ முதல் ரூ.1500/ மாதாந்தம் ரூ.50, 000 வரை வழங்கப்படும். இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவும் வழங்கப்படும். நேரில் வரவும். இல.18, வெலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 0766200300. 020063

## பொது

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

குளிரூட்டப்பட்ட அறை விற்பனைக்கு. பாவிக்கப்படாத குளிரூட்டப்பட்ட அறை புதிய உத்தரவாதத்தின் கீழான உள்ளக கொள்ளளவு L-7.2", H-7.2", W-3.2", அறை வெப்பநிலை 4°C குளிரூட்டி தொகுதி Tecumseh Condensing Unit (CAK4511 Y) எவப்பரேட்டர் DE 0.47/2.5) பெனல் தடிப்பு 100 மிமீ விலை 650,000 ரூபா அல்லது பேசித் தீர்க்கலாம். அமைவிடம் சிங்கர் பிளஸ் இற்கு எதிராகவு'ள்ளது. இல. 349, காலி வீதி, கொழும்பு 03. அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்வ தற்கான இலக்கங்கள் தொலைபேசி 0112301 7 3 2 , 0777100165 019871

## சொந்த விடயம்

### 503 ஹோட்டல்கள், விடுதிகள்

கண்டி சிறிய ஹோட்டலுக்கு தங்கி வேலை செய்யக்கூடிய 25 வயதிற்குக் குறைந்த திருமணமாகாத ரூம் போய், வரவேற்பாளர் ஆண்/பெண் தேவை. அத்துடன் திரிவீலுடன் 18 வயதிற்கு மேற்பட்ட சாரதி தேவை. தொடர்பு 0718398923. 019560

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

தெஹிவளை 9.5 வெற்றுக்காணி. கூடிய குடியிறுப்புப் பிரதேசம். காலி அருகில். பள்ளிவாசலுக்கு அருகில் உடன் விற்பனைக்கு. 0771022555. 019676

மாலபே சந்திரிகா குமாரதுங்க மாவத்தைக்கு முகப்பாக 116 பேர்ச் சிறந்த காணி. விற்பனைக்கு. முழுமையாக மதிலால் சூழப்பட்டுள்ளது. பிரதான இரு மாவத்தையினால் பிரவேசிக்கலாம். 0773278302, 0718743538, 071 8743540, 0718559415 019564

மாலபே SLIT-SITM HORIZON இற்கு அருகாமையில் வலிவிட்ட பாதையில் விஜயபா மாவத்தையில் 10 பேர்ச் 3 அறைகள் பான்ரி, ஹோல், ஊழியர் அறை, 4 வாகனங்கள் நிறுத்துமிடம் ஒருவரும் வசிக்காத புதிய வீடு விற்பனைக்கு LK 240, 0773222571. 015738

ராஜகிரிய ஒபேசேக்கரபுர 07 பேர்ச் சிக்கலற்ற உரித்துரிமை உறுதி 20 அடி வீதியுடன் காணி விற்பனைக்கு. / 05 பேர்ச் முழுமையான இரு மாடி வீடு சிக்கலற்ற உறுதி. 20 அடி வீதி.விற்பனைக்கு. 0774226225, 0725959511. 018969

ராஜகிரிய 4.5 பேர்ச் வீடு விற்பனைக்கு (கீல்ஸ் ,ற்கு அருகில்) 0755 4 78265. 019424

வெள்ளவத்தையில் காணி விற்பனைக்கு இலக்கம் 145/3, காலி வீதி வெள்ளவத்தையில் இலங்கை வங்கிக்கு அருகாமையில் 5.57 பர்ச் அளவிலான சமதரைக் காணி விற்பனைக்கு உண்டு. 20 அடி அகலமான நுழைவுப் பாதையும் சிக்கலற்ற உறுதியும் கொண்டது. வீடு மற்றும் அனைத்துவித கட்டிடங்களுக்கும் மிகவும் பொருத்தமான இடம், மேலதிக தொடர்புகளுக்கு. A.Ameer Ali. 0777636349. 020164

ஹோமாகம பட்டவல பாதைக்கு முகப்பாக 30/43/100 பர்ச் அளவில் காணிகள். தொழிற்சாலைக்கு மிகவும் பொருத்தமானது 0713422888, 0771150995. 019329

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

வீடு விற்பனைக்கு ஜாஎல நகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் 3 அறை சகல வசதிகள் உடன் அவசர தேவைக்கு உடனடியாக அதிக கேள்வி விலைக்கு விற்கப்படும். தொடர்பு 078 3344878 020314

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இரண்டு வீடுகள் வாடகைக்கு 30, 000/ Rs. 20, 000/ - மீத்தோட்டமுல்ல, கொலொன்னாவ பெரேரா மாவத்தை 0777486536 020011

களுபோவில இரு அறைகளுடன் மேல் மாடி வீடு வாடகைக்கு 0779269423/ 011 2728054 019771

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகன்

காலியைச் சேர்ந்த சுன்னத் வல் ஜமாஅத் கோட்பாடுகளை பின்பற்றும் முஸ்லீம் குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதான 5'11" உயரமான, தொலை தொடர்பு மற்றும் நெட்வேர்க்கிங் ஆகியவற்றில் பட்டம் பெற்ற கம்பனி ஒன்றில் உயர் பதவி வகிக்கும் மகனுக்கு தகுதி வாய்ந்த மார்க்கப் பற்றுள்ள மணமகள் தேவை. இரகசியத்தன்மை உறுதி செய்யப்படும். தயவு செய்து மின்னஞ்சல் : bankofkawloon@gmail.com உடன் தொடர்பு கொள்ளவும். 0912244610. G160228

---

# கைத்தொழில் அமைச்சு
# மாந்தை சோல்ட் லிமிடெட்
## ஆர்வ வெளிப்பாடு

**அரச தனியார் கூட்டாண்மை ("PPP") அடிப்படையில் குறிஞ்சா தீவு (ஆனையிறவு) உப்பள செயற்பாடுகளின் மறுசீரமைப்பு, மேம்பாடு மற்றும் மீள் ஆரம்பிப்பதற்கானது**

(தேசிய சோல்ட் லிமிடெட் என பெயர் மாற்ற திட்டமிடப்பட்டுள்ள) மாந்தை சோல்ட் லிமிடெட் ஆனது இலங்கை அரசுக்கு சொந்தமான உப்பு உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நிறுவனம் தற்போது மன்னார் உப்பளம் மற்றும் ஆனையிறவு தெற்கு உப்பளம் ஆகிய இரு உப்பளங்களாக நடத்தப்படுகிறது. குறிஞ்சா தீவு உப்பளம் ஆனையிறவின் வட பகுதியில் அமைந்திருப்பதோடு கடந்த காலத்தில் நிலவிய நாட்டின் மோதல் சூழல் காரணமாக கடந்த 30 ஆண்டுகளாக இந்த உப்பளம் இயங்கவில்லை.

ஒரு சாத்தியமான உள்நாட்டு தனியார் முதலீட்டுடன் ஓர் அரச தனியார் கூட்டாண்மையாக ("PPP") குறிஞ்சா தீவு உப்பளத் திட்டத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்க 2020.02.27 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல.: அமை20/0208/224/003/TBR இன் மூலம் அமைச்சரவை அமைச்சர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர். இதன்படி, கல் உப்பின் மறுசீரமைப்பு, மேம்பாடு, உற்பத்திக்கான உப்பளத்தில் முதலீடு செய்வதற்காகவும் அரச தனியார் கூட்டாண்மை அடிப்படையில் மாந்தை சோல்ட் லிமிடெட் உடன் கூட்டிணைந்து மதிப்புச் சேர்க்கப்பட்ட உற்பத்தி மற்றும் விற்பனைக்காகவும் ஆர்வமுடைய உள்நாட்டு தனியார் முதலீட்டாளர்களிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டிக்கான (EOI) அழைப்பை விடுக்க திட்டத்திற்கான அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (CANC) தீர்மானித்துள்ளது. மாந்தை சோல்ட் லிமிடெட் (சுமார் 750 ஏக்கர்கள்) பொருத்தமான காணியை வழங்கும் என்பதோடு தொடர்புடைய அரச நிறுவனங்களிடம் இருந்து அனுமதி மற்றும் ஒப்புதல்களை பெறவும் உதவும் அதேநேரம் தேவைப்படும்போதும் வேறு எந்த தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கும்.

ஆர்வ வெளிப்பாட்டுக்கு (EOI) பின்வருவனவற்றின் விரிவான விபரங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்:

ய) நிறுவனத்தின் பொதுவான விபரங்கள்.
டி) சட்ட அந்தஸ்து.
உ) மூலதன சொத்துகளின் அளவு அல்லது நிகர பெறுமதி.
ன) தொழில்நுட்ப மற்றும் நிதி திறன்கள்
ந) கடந்த மூன்று ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின் பிரதிகள்.
க) கடந்த 5 ஆண்டுகளில் உப்பளம் அல்லது ஏனைய அது சார்ந்த செயற்பாடுகளின் அனுபவம்.
ப) நிறுவனத்தின் தற்போதைய செயற்பாடு மற்றும் தற்போது பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் தொடர்பில் எந்த ஒரு மேலதிக விபரங்களையும் வழங்குவதற்கு தரப்புகள் தயாராக இருத்தல் வேண்டும்.

முறையே 15/03/21 தொடக்கம் 05/04/2021 வரை வார நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை கீழ் குறிப்பிடப்பட்ட அமைச்சின் நிதிப் பிரிவுக்கு ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கைத்தொழில் அமைச்சு, செயலாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து த. பெட்டி 570, இல. 73/1, காலி வீதி, கொழும்பு 03 இல் கைத்தொழில் அமைச்சின் மறுசீரமைப்பு பிரிவில் இருந்து ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிக்கும் விரிவான ஆவணம் ஒன்றை பெற முடியும்.

தேவையான விபரம் அடங்கிய முறையாக பூர்த்தி செய்யப்பட்ட ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்தை இரு பிரதிகளாக இரு கடித உரைகளில் வெவ்வேறாக இட்டு 'அசல்' மற்றும் 'நகல்' என குறிப்பிட்டு பின்னர் அவை இரண்டையும் பொருத்தமான ஒற்றைக் கடித உறையில் முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், 'குறிஞ்சா தீவு உப்பளத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் திட்டத்திற்கான ஆர்வ வெளிப்பாடு' என குறிப்பிட்டு, 2021/04/05 அன்று 14.30 மணிக்கு முன்னர் கிடைக்குமாறு தலைவர், அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு, கைத்தொழில் அமைச்சு, த. பெட்டி 570, இல.: 73/1, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது மேலுள்ள முகவரியில் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் கையளால் கொண்டுவந்து சேர்ப்பதற்கு வேண்டும்.

பெருந்தொற்று நிலைமை காரணமாக ஒருவேளை வன் பிரதிகளை சமர்ப்பிக்க தவறும் நேரத்தில், ளொடளடவநசநெழதநஉவஃபுஅயடை.உழஅ மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும் மென் பிரதிகள் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டதாக கருதப்படும். வன் பிரதிகள் பின்வரும் நாளில் 0900 மணி தொடக்கம் 14.30 மணி வரை அலுவலக நேரத்தில் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆர்வ வெளிப்பாட்டை ஏற்பது 2021.04.05 அன்று 14.30 மணிக்கு முடிவுறும் என்பதோடு அதே தினத்தில் த. பெட்டி 570, 73/1, காலி வீதி, கொழும்பு 03 இல் கைத்தொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இறுதி நேரம் முடிவுற்ற உடன் திறக்கப்படும். ஆர்வ வெளிப்பாடு திறக்கப்படும் நேரத்தில் எதிர்பார்ப்புடைய முதலீட்டாளர்களின் இரண்டிற்கு மேற்படாத எதிர்பார்ப்புடைய முதலீட்டாளர்கள் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

தொலைபேசி: 011-2391365, மின்னஞ்சல்: ளொடளடவநசநெழதநஉவஃபுஅயடை.உழஅ பணிப்பாளர், மறுசீரமைப்பு பிரிவு, கைத்தொழில் அமைச்சு, த. பெட்டி 570, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை பெறவும்.

**தலைவர்**
**மாந்தை உப்பளத்தின் செயற்பாடுகளை மீள்ஆரம்பிக்கும்**
**திட்டத்திற்கான அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு**
**கைத்தொழில் அமைச்சு**
**த. பெட்டி 570, இல.: 73/1, காலி வீதி,**
**கொழும்பு - 03**

---

# அறிவித்தல்

## மொறட்டுவ பல்கலைக்கழகம்

### கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல் – 2021

கீழ்க்காணும் கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக போறிப்பிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

- டெஸ்க் டொப் கணனி, லெப்டொப் கணனி, கணனி துணைப் பாகங்கள், மல்டி மீடியா உபகரணங்கள், பிரிண்டர், போட்டோப் பிரதி இயந்திரங்கள், பெக்ஸ் இயந்திரங்கள்.
- ஆய்வுகூட உபகரணம், லேத் மெசின், மின் உபகரணம், காற்றுச்சீராக்கி இயந்திரம்
- மரம் மற்றும் உலோக தளபாடங்கள் (கதிரை, மேசை, கபட்) பிளாஸ்டிக் கதிரை, குசன் கதிரை.
- இரும்பு பாகங்கள்.

2021.03.15 முதல் 2021.03.26 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளர்/ நிறுவன விடயங்கள் இற்கு எழுத்து மூல வேண்டுகளைச் சமர்ப்பித்து பின்னர் மொறட்டுவ பல்கலைக்கழக வளாகத்தில் இக் கழிவுப் பொருட்களை பரீட்சித்துப் பார்க்கலாம். ஆர்வம் காட்டுகின்ற கேள்வி வைப்பாளர்களுக்கு இது பற்றிய மேலதிக விபரங்களை பல்கலைக்கழகத்தின் நிறுவன விடயப் பிரிவிலிருந்து (011-2650402) அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

2021.03.15ம் திகதி முதல் 2021.03.26 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கழிக்கப்பட்ட பொருட்களுக்காக ரூ. 500.00 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திய பின்னர் விலைமனுக் கோரும் கேள்விப் பத்திரத்தை நிறுவன விடயப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2021.03.29 பி.ப. 2.00 வரை ஏற்கப்படும் பூர்த்தியற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் விலைமனுப் பத்திரங்கள் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**பதிவாளர்,**
**மொறட்டுவ பல்கலைக்கழகம்**

---


Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

# சரித்திரப் பிரசித்திபெற்ற பேருவளை புஹாரி தமாம் மஜ்லிஸ்

பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் முஸ்தபவிய்யா புஹாரித் தக்கியாவில் 142 வது புஹாரி தமாம் மஜ்லிஸ் 14.03.2021 திகதி காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ்செய்கு அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் தலைமையில் கொவிட் 19 சுகாதார வழிமுறைகளை பேணி வரையறுகப்பட்டோரின் பங்குபற்றலுடன் நடைபெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தங்களது வரலாற்றுப் புகழ்மிக்க இறுதி ஹஜ்ஜின் (ஹஜ்ஜதுல் விதாவின்) போது அங்கே குழுமிருந்த அருமைத் தோழர்கள் மத்தியில் உரையாற்றும் போது இதைச் சொன்னார். “உங்களுக்காக நான் இரண்டை விட்டுச் செல்கிறேன். அவற்றைப் பின்பற்றும் காலமெல்லாம் நீங்கள் ஒரு போதும் வழி தவற மாட்டீர்கள். இறைவேதமாம் புனித அல்குர்ஆனும் அண்ணலாரது நடை முறைகளாகிய சுன்னாவுமே அவை இரண்டுமாகும்.



நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் ஹதீஸ் விளக்கங்களைத் தொகுத்துப் பாதுகாக்க வேண்டும் என்ற உண்மை உணரப்படவில்லை. நபி (ஸல்) அவர்கள் உயிரோடு இருந்த காரணத்தினால் அன்று மக்கள் மத்தியில் எழுந்த பிரச்சினைகளுக்கு அவரே விளக்கமளித்துக் கொண்டிருந்தார். ஆனால் நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப்பின்னர் ஹதீஸ்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது. புனித அல்குர்ஆனை தெளிவாக விளங்கிக் கொள்ளவும், இஸ்லாமிய திட்டங்களை நன்கு அறிந்து கொள்ளவும் ஹதீஸ்கள் தேவைப்பட்டன. இதனால் காலக் கிரமத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழித் தொகுப்புக்கள் வெளிவர ஏதுவாயின. இவற்றுள் தலையாயதும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுவது “புனித ஸஹீஹு’ல் புகாரி” எனும் ஹதீஸ் பேழையாகும்.

அபூ அப்தில்லாஹ் முஹம்மதிப்னு இஸ்மாயீல் புஹாரி (ரஹ்) அவர்களால் தொகுக்கப்பட்ட மேற்படி நூல் அல்குர்ஆனுக்கு அடுத்தபடியாக சிரமேற்கொண்டு கருதப்பட்டு போற்றப்படுகிறது. இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்களின் வாய்வந்த இலட்சக்கணக்கான ஹதீஸ்களைத் தொகுத்து, 7275 ஹதீஸ்களை மட்டுமே இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் தமது ஸஹீஹு’ல் புகாரி கிரந்தத்தில் எழுதியுள்ளார். மேற்படி புகாரிக் கிரந்தம் பராயணம் செய்யப்பட்டு விளங்கப்படுத்தும் மஜ்லிஸ்கள் உலகின் நாலா பகுதிகளிலும் இடம் பெற்று வருகிறது. எமது நாட்டிலும் பல இடங்களில் இந்த புனித கிரந்தம் வாசிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் அடங்கிய புனித புகாரி கிரந்தத்தை வாசித்து நபிகளாரின் உயரிய வாழ்க்கை முறையை அறிந்து கொள்வதற்கும் அதன்படி எமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கும் புனித புஹாரி கிரந்தம் எமக்கு பேருதவி புரிகின்றது.

இந்த அடிப்படையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற பேருவளை மாளிகாச்சேனையில் அமைந்துள்ள பைதுல் முபாரக் முஸ்தபவீயா புஹாரித் தக்கியாவில் இற்றைக்கு 142 வருடங்களுக்கு முன்னர் (ஹிஜ்ரத் ஆண்டு 1301 ஜமாதுல் ஆகிர் மாதம் பிறை 27ல் ஆரம்பம் செய்யப்பட்ட புகாரி மஜ்லிஸ் அல்லாஹ்வின் கிருபையால் ஒரு நூற்றாண்டை தாண்டிச் சென்றாலும், அன்று முதல் இன்று வரை மாற்றங்கள், நூதனங்கள் எதுவுமின்றி சிறப்பாக நடைபெற்று வருகிறது – வருடாந்தம் மூன்று பிறைகள் அடங்கிய ஜமாதுல் ஆகிர் மாதம் தொடங்கி ரஜப் மாதம் முழுமையாக நடைபெற்று சஹ்பான் மாதம் முதல் பகுதியில் முடிவடைவது விஷேட அம்சமாகும்.

18ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட மாளிகாச்சேனை புகாரித் தக்கியா இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம்மிக்கதோர் தைக்கியாவாக உள்ளது. அதன் ஆரம்ப அமைப்பிலே தக்கியா இருக்கின்ற போதிலும் தற்போது இடவசதி கருதி விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. அன்று வைத்த சட்டதிட்டங்கள் இன்றும் எவ்விதமான மாற்றமும் இன்றி அப்படியே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஹிஜ்ரி 1301 ஜமாத்துல் ஆகிர் மாதம் பிறை 27ல் அதிகாலை சுபஹ் தொழுகையை முடித்த அதே இருபில் பைத்துல் முபாரக் முஸ்தபவீயா புகாரித் தக்கியாவில் நபிகள் நாகம் முஹம்மத் (ஸல்) அவர்களின் கனவு உத்தரவுப்படி தென் அரேபிய எமன் நாட்டைச் சேர்ந்த சங்கைக்குறிய நாயகம் சேகு அப்துர் ரஹ்மான் இப்னு ஹஸன் இப்னு அப்துல் பாரி அஹ்தலி மௌலானா என்ற பெரியார் புனித ஸஹீஹு_ல் புஹாரி கிரந்தத்தை தனது கையில் எடுத்து ஆரம்பப் பகுதியை பராயணம் செய்தார். தனது வலப்பத்தில் அமர்திருந்த அரபுத் தமிழ்யுக தந்தை எனப் போற்றப்படும் மகாண் சங்கைக்குரிய சேகு முஸ்தபா வலியுல்லாஹ் விடம் புனித புஹாரி கிரந்தத்தைக் கையளித்து இதனை ஒவ்வொரு வருடமும் (வெள்ளிக்கிழமை தவிர) 30 நாட்கள் பராயணம் செய்து வரும்படி பணித்தார்.

**மாகாண் சேகு முஸ்தபா (றஹ்) அவர்கள்**

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு புனித பேருவளை நகரிலிருந்து தான் ஆரம்பமானது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோமாட்டார்கள். பேருவளை நகரில் மூத்த குடியில் ஆதம் மரைக்காரின் புதல்வரான சங்கைக்குரிய மாகாண் சேகு முஸ்தபா வலியுல்லாஹ் பிறந்தார். இந்த நாட்டின் சமய வரலாற்றில் அன்னார் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை பிடித்துக்கொண்டார். அன்னார் இஸ்லாமிய சட்ட திட்டங்கள் அரபு இலக்கண, இலக்கிய, பிக்ஹ_ சட்டதிட்டங்கள் போன்ற இஸ்லாமிய மத அறிவியல் துறையில் பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். இந்தியாவில் உள்ள காயல் பட்டணத்தில் இத்துறையில் அறிவு பெற்று நாடு திரும்பி பேருவளை மாளிகாசேனை

பைத்துல் முபாரக் முஸ்தபவியா புகாரித் தக்கியாவை தனது தலைமை ஸ்தானமாகவும், ஆய்வுகூடமாகவும் அமைத்து இஸ்லாமிய பணிபுரியும் காலத்தில் சங்கைக்குரிய முபாரக் மௌலானா என்ற பெரியாரின் சகவாசம் கிடைத்தது.

சங்கைக்குரிய செய்கு முஸ்தபா (றஹ்) வின் சேவைக்கு இவர் துணை புரிந்து சிறிது காலத்தில் முபாரக் மௌலானா தென்னிலங்கையில் காலி நகரில் இறையடி சேரவே தென் அரேபியர் யெமன் நாட்டைச் சேர்ந்த அஹ்தலி மௌலானா அவர்களின் சகவாசம் கிடைத்து பேருவளை மாளிகாச்சேனை புஹாரித் தக்கியாவில் புஹாரி மஜ்லிஸ் ஆரம்பம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. சேகு முஸ்தபா (றஹ்) அவர்களினால்

அறிமுகப்படுத்திய காதிரியதுன் நபவிய்யா முஸ்தபவீயா எனும் ஆத்ம ஞானவழி (தரீக்கா) இன்றும் இலங்கையின் சுமார் இருபது ஊர்களில் பின்பற்றப்பட்டு வருவது சுன்னத் ஜமாத் கொள்கைகளுக்கு உயிரூட்டக்கூடிய விடயமாகும்.

சேகு முஸ்தபா அவர்கள் மெய்ஞானியாகவும் புலவராகவும் திகழ்ந்தார். அன்னவரினால் இயற்றப்பட்ட மீசான் மாலை அரபுத்தமிழ் கவிதை புகழ் பெற்றதாகவுள்ளது. அவர் பல இஸ்லாமிய பத்வா நூல்கள், இஸ்லாமிய சட்ட திட்டங்கள், முனாஜாத்துக்கள் போன்றவற்றை அரபியிலும், அரபுத் தமிழிலும் வெளியிட்டார்கள். அஹ்காமுல் இகம் என்ற பெயரில் அரபுத் தமிழ் அச்சுக்கூடத்தை நிறுவி அதன் மூலம் அபுத் தமிழில் பல ஆக்கங்களை வெளியிட்டார். இறுதியில் ஹஜ் கடமைக்காக புனித மக்கா சென்ற போது மக்காவில் வபாத்தாகி கதீஜா நாயகி பாட்டியாரின் சமாதிக்கு மேல் பக்கமாக நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அரபியல்லாத ஒருவரை அந்த இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது முதல் தடவையாகும். மக்கா மதீனா போன்ற முஸ்லிம் நாடுகளில் சேகு முஸ்தபா (றஹ்) அவர்களின் சன்மார்க்க அறிவுத் திறன் பலராலும் புகழப்பட்டது.

புனித புகாரி மஜ்லிஸை ஹிஜ்ரி 1301 முதல் 1304 வரை சங்கைக்குரிய சேகு நாயகம் சேகு முஸ்தபா (றஹ்) அவர்கள் நடாத்தினார். பின்னர் அவர் மைந்தர் சங்கைக்குரிய சேகு நாயகம் முஹம்மத் ஹாஜியார் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1304 முதல் 1331 வரை நடாத்தினார். அவருக்குப் பின்னர் அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகு நாயகம் அப்துல் சமீம் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1331 முதல் 1391 வரை தலைமை தாங்கி நடாத்தினார். அதனைத் தொடர்ந்து அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகு முஹம்மத் நூர் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1391 முதல் 1411 வரை நடாத்தினார். அன்னார் இறையடி சேர்ந்த பின்னார் அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகு அஹமது ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1412 முதல் இன்று வரை மிகச் சிறப்பாக தலைமை தாங்கி நடாத்தி வருகிறார். சங்கைக்குரிய சேகு முஸ்தபா நாயகத்தின் குடும்பத்தைச் சேர்ந்த பரம்பரையினர் புனித புகாரி மஜ்லிஸை புஹாரித் தக்கியாவில் சிறப்பாக நடாத்தி வருவது அல்லாஹ்வின் கிருபையும், நபி (ஸல்) அவர்களின் திருப்பொருத்தமும் என்றே கூற வேண்டும். புனித மஜ்லிஸ் எதிர்காலத்திலும் மிகச் சிறப்பாக நடைபெற அல்லாஹ் அருள் புரிவானாக. ஆமீன்

பீ.எம்.முக்தார்
பேருவளை விஷேட நிருபர்

# மாத்தளையின் ஜீவநதி: கார்த்திகேசு

மு.நித்தியானந்தன்



மலையகத்தில் தாங்கள் பிறந்த மண்ணை நெஞ்சுயர்த்தி பெருமிதத்தோடு பிரகடனப்படுத்தும் எழுத்தாளர்கள் கலைஞர்களில் பலர் மாத்தளையின் அசல்மைந்தர்கள். தங்களுக்கு ஸ்நானப்பிராப்திகூட இல்லாத ஏரியாக்களின் பெயர்களை முன்னொட்டாக வைத்து கேகாலை கொட்டாப்புளி, பொல்காவலை சிதம்பரநாதன் என்னும்புனைபெயர்களில் உலாவும் போலிகளைப் பார்க்கும்போதுதான் அசல்களின் பெருமிதம் தெரிகிறது. மலையகத்தின் அசல் மைந்தன் என்றதும் இத்தகைய போலிகள் 'அசல் மைந்தன்' என்பதை மேற்கோளுக்குள் போடும்போது அது இவர்களை எப்படிப் பாதிக்கிறது என்பதை அவதானிக்க முடிகிறது. சிலர் இறந்த பிறகுதான் இவர்கள் எங்கே பிறந்தார்கள்? எங்கே படித்தார்கள்? என்பதைத் தேடி ஆராய வேண்டியிருக்கிறது.

விஜய கல்லூரியில் கிறிஸ்தவ தேவாலயக் கல்லூரியில் மாத்தளை புனித தோமையர் கல்லூரியில் மாத்தளை பாக்கிய வித்தியாலயத்தில் மாத்தளை கார்த்திகேசு மேடையேற்றிய நாடகங்களின் பட்டியலை மாத்தளையில் அரங்க ஆர்வம் கொண்ட யாரிடம்கேட்டாலும் ஒப்புவிப்பார்கள்.

மாத்தளையில் தமிழ் மாணவர் சார்ந்த கலைவிழாக்களா? தமிழ்த் தினப்போட்டிகளா? நாடக மேடையேற்றங்களா? எதுவென்றாலும் முன்னணியில்நின்று உழைப்பை நல்கும் பெரிய மனம் அவரிடம் இருந்திருக்கிறது. மாத்தளை இளைஞர் மன்றம் வள்ளுவர் மன்றம் போன்ற அமைப்புகளை ஆரம்பித்து, மாத்தளையில் சமூக, இலக்கிய செயற்பாடுகளுக்கு உந்து விசையாக இருந்தவர் கார்த்திகேசு. தமிழகத்திலிருந்தும் வெளிமாவட்டங்களிலிருந்தும்பேச்சாளர்களை மாத்தளைக்கு அழைத்து சொற்பொழிவுகளை நடத்தும் பெரு முயற்சிகளை அசராமல் செய்தவர் இவர். அறுபதுகளில் துடிப்புமிக்க இளைஞர்கள் தத்தம்தோட்டங்களில் மன்றங்களை அமைத்து நூலகங்களை நிறுவி கலைவிழாக்களை நடத்தி நாடகங்களைமேடையேற்றி சொற்பொழிவுகளை நிகழ்த்தி பத்திரிகைகளை வெளியிட்டு ஆத்மார்த்தமாக உழைத்தார்கள். அத்தகைய அர்ப்பணிப்பு கொண்ட பேரணியின் முக்கியகண்ணி மாத்தளை கார்த்திகேசு.

அரங்க ஈடுபாடு என்பது ஒரு கலைஞனை மக்கள் மத்தியில் துரித கதியில்கொண்டுபோய் சேர்த்துவிடுகிறது. மாத்தளை மக்கள் மனதில் நிரந்தரமாக வாழும் கலைஞன் கார்த்திகேசு. மாத்தளை ஆலயப்பணிகளில் அவர் காட்டிய ஈடுபாடு அவரின்மீது மக்களின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் தேடிக் கொடுத்தது. தனிப்பட்ட வாழ்விலும் பொதுவாழ்விலும் கறைபடியாத கண்ணியவான் அவர்.

மாத்தளை கார்த்திகேசு கொழும்பு நோக்கி நகர்ந்தபோதும் அவர் கலைமீது கொண்டிருந்த நாட்டம் குறைந்துபோகவில்லை. கொழும்பில் கவின்கலை மன்றம் என்ற அமைப்பில் ஜே.பி றொபர்ட் அவர்களுடன் இணைந்து நாடக மேடையேற்றங்களில் தீவிரமாக உழைத்தார். தீர்ப்பு களங்கம் போராட்டம் ஒருசக்கரம் சுழல்கிறது போன்ற நாடகங்கள் அவரது கொழும்பு நாடக முயற்சியின் உன்னதமான அறுவடைகள். நாட்டு நிலைமை சீரற்ற நாட்களில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் இவை.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் 'குன்றின் குரல்' நிகழ்ச்சியைநான் நடத்தியபோது நிகழ்ச்சிகளை நடத்த எனக்குப் பேருதவியாக இருந்தவர் மாத்தளை கார்த்திகேசு. மலையக இசைக்கலைஞர்களை பங்கேற்றுநர்களை ஒருங்கிணைத்து உதவியர் அவர்.

ஜே.பி.றொபர்ட் உயரமான மனிதர். பம்பலப்பிட்டியில் அவரை நான் அடிக்கடி காண்பதுண்டு. அவரும் மாத்தளை கார்த்திகேசுவும் அந்தனி ஜீவாவும் இணைந்து கொழும்பு நாடக இயக்கத்தினை வலிமையுறச் செய்தவர்கள்.கூர்மையான நாடகநெறியாளுகைத்திறன் மிக்க சுஹைர் ஹமீட் அவர்களின் பங்களிப்பும் கார்த்திகேசுவின் நாடக வெற்றிக்குப்பலமாய் அமைந்தது.

மாத்தளை கார்த்திகேசுவின் 'காலங்கள் அழுவதில்லை' என்ற நாடகம் அவரின் பெயரை ஈழத்து நாடக அரங்கில் நிலைநிறுத்தும் நாடகமாகும். மிகப்பல களங்களைக் கண்ட நாடகம் அது.

நாடகத்திலிருந்து சினிமாவை நோக்கித் திரும்பிய கார்த்திகேசுவின் கலைப்பயணம் 'அவள் ஒரு ஜீவநதி' என்ற திரைப்படமாகக் கனிந்த போது ஒருஎழுத்தாளனின் பிரதியாக்கம் என்றும் வெற்றிகரமான மேடைநாடகத் தயாரிப்பாளன் என்ற வகையிலும் பெரும் எதிர்பார்க்கைகளின் மத்தியில் அப்படம்பெரும் வெற்றியைத்தரவில்லை. மீண்டும் அத்துறையில் முயன்றிருந்தால் தனதுமுன்னைய பட அனுபவத்தின் பலத்தில் அவர் வெற்றிகரமான ஒரு படத்தைத் தந்திருக்கக்கூடும். ஒரு படத்தயாரிப்பு என்பது அவ்வளவு சுளுவானகாரியம் அல்லவே!

கொழும்பில் நாடக சினிமா முயற்சிகள் என்பன மிகப்பெரும் நண்பர்கள் வட்டத்தையும், நம்பிக்கையானவர்களையும் எதற்கும் உதவ முன்வரும்நெருக்கமானவர்களையும் கொண்டது. கார்த்திகேசு நேசம் மிக்கவர். உதவி என்றுபோனால் தன்னால் முடிந்த எதனையும் செய்துதரும் பண்பு கொண்டவர். கொழும்பில் அவர் சந்திக்க நேர்ந்த கலைஞர்கள் எழுத்தாளர்கள், சமூக, அரசியல்செயற்பாட்டாளர்கள் அனைவரையும் அவர் என்றும் மதித்துப் போற்றினார்.

நாடகம், சினிமா என்று கலைத்துறையில் பயணித்த கார்த்திகேசு மலையகநாவல் துறையில் கால் பதித்து, பிரசுரம் தந்த நாவல் 'வழி பிறந்தது'. தோட்டத்திற்கும் கொழும்பிற்குமாக இரண்டு தளங்களில் இயங்கும் இந்த நாவல் இந்திய வம்சாவளித் தமிழர்களைப் போதுமான தஸ்தாவேஜுகள் இல்லாத காரணம் காட்டி கைது செய்து சிறையில் அடைத்து இந்தியாவிற்கு நாடுகடத்தும் இலங்கை அரசின் கொடுமையைப் பேசும் முதல் நாவல் இது.இலங்கையில் தமிழர்களுக்காகத் தடுப்புமுகாம் ஒன்று அமைக்கப்பட்டது என்றால் அதுகொழும்பு கொம்பனி வீதியில் அமைக்கப்பட்டிருந்த தடுப்புமுகாம் தான். சாப்பிட்டுவிட்டு கைகழுவ வெளியில் வந்த வையாபுரி என்பவரை சாப்பாட்டுக்கையோடு கைது செய்த பதுளை போலீசார் அன்று மாலையே உடரட்டமெனிக்கேவில் அவரைக் கைவிலங்கோடு கொழும்பிற்கு கொண்டுசென்ற காட்சியை நான் பார்த்திருக்கிறேன். அவர் ஒரு டி.ஆர்.பி.காரர் என்றார்கள்.

கார்த்திகேசுவின் 'வழி பிறந்தது' நாவலின் சில பகுதிகள் இவை:

'பரமசிவம் பொலிசின் உதவியுடன் இமிகிரேசன் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு, கொம்பனி வீதியிலுள்ள தடுப்புமுகாமில் அடைக்கப்பட்டபொழுது இதன்னுடைய எளிமை நிறைந்த வாழ்க்கைக்குப் பின்னாலே இப்படி ஒரு சதிப்பின்னல் சிக்கலாகப் பின்னப்பட்டிருக்கும் என்று கனவுகூடக் காணவில்லை.'

'கொழும்பு நகரின் மத்தியில் இந்திய வம்சாவளியினருக்காக அமைக்கப்பட்டிருக்கும் தனியொரு நரக உலகத்திலே தான் அடைத்து வைக்கப்பட்டிருப்பதான உண்மையைநிதானிப்பதற்குப் பரமசிவத்திற்கு அதிகநாள்கள் பிடிக்கவில்லை.'

'(அந்த தடுப்புமுகாமில்) முகம் மட்டும் தெரியக்கூடியதாகப் பொருத்தப்பட்டிருக்கும் 'வயர் மெஸ் கிராதி' மூலமே முகதரிசனம் நடைபெறும்.'

டி.ஆர்.பி.காரர்கள் எனப்பட்டவர்களை கொம்பனித்தெருவில் அடைத்து விசாரணை நடத்தி அவர்களை நாடுகடத்தும் வரையிலான விபரங்களை இந்த நாவலில் கார்த்திகேசு துல்லியமாகக்கொண்டு வருகிறார். கைதுசெய்யப்பட்டவர்களைப் பார்வையிடச் செல்லும் உறவுகளுக்கு கைதிகள் எவ்வாறு காட்டப்படுகிறார்கள் என்று விபரிக்கும் இடங்கள் நெஞ்சைத்தொடுவன. கலாபூர்வமாக இந்நாவல் வெற்றிபெறுகிறதா என்பது கேள்விக்குரியதாயினும் தோட்டவாழ்க்கையை கொண்டுசெலுத்தும் இடங்களில் அந்த வாழ்வோடு எவ்வளவு தூரம் பின்னிப்பிணைந்திருக்கிறார் என்பதை நாம்உணர முடிகிறது.

(21 ஆம் பக்கம் பார்க்க)



பூமணி அம்மா அறக்கட்டளையும் பிரான்ஸ் சர்வதேச தமிழ் வானொலியும் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சமூகத்தில் சிறப்பாக பணியாற்றிய மகளிருக்கு விருது வழங்கும் நிகழ்வை யாழ். சர்வேதய மண்டபத்தில் நடத்தியபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதனையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை மகளிர் அமைப்பின் தலைவி ஸ்ரீ பத்மநாதன் மிதுலா பெண் ஒருவருக்கு விருது வழங்குவதனையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



# மாத்தளை சோமுவிற்கு தமிழக அரசின் உயர் விருது

இலங்கையைச் சேர்ந்த தற்போது அவுஸ்திரேலியாவில் வாழும் மலையக எழுத்தாளர் மாத்தளை சோமு எழுதிய 'பாலி முதல் மியன்மார் வரை" என்ற பயண நூலுக்கு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி அமைச்சின் சிறந்த பயண இலக்கிய நூல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே மாத்தளை முதல் மலேசியாவரை லண்டன் முதல் கனடா வரை, சிட்னி முதல் நோர்வே வரை ஆகிய பயண நூல்களை எழுதியுள்ளார்.

இது வரை சிறுகதை, நாவல், மொழி பெயர்ப்பு, ஆய்வுக்கட்டுரை திருக்குறளுக்கு அறிவியல் உரை என பல்வேறு தலைப்புகளில் 25 நூல்களை எழுதி வெளியிட்ட இவருக்கு 9 நூல்களுக்கு பல்வேறு விருதுகள் கிடைத்துள்ளன. நாவலுக்கு, இலங்கை சாகித்திய விருது பெற்ற இவர் கண்டிச்சீமை என்ற நாவலுக்கு தமிழக அரசின் கீழ் இயங்கும் மதுரை உலகத்தமிழ்ச் சங்கம் சிறந்த நாவல் பரிசை வழங்கியுள்ளது.

இவரின் வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் என்ற நூலுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கம் 2005 இல் மிகச் சிறந்த நூல் பரிசினை வழங்கியது. அந்த நூலுக்கு புகழ் பெற்ற திருச்சி தூயவளனார் கல்லூரி அறிவியல் தமிழ் எழுத்தாளர் என்ற விருதை வழங்கி கௌரவித்தது.

பல்வேறு விருதுகளையும், தமிழ் ஆய்வாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்ற இவர், தற்போது சங்க இலக்கியங்களை ஆய்வு செய்து பாமரர்களும் அறியும் முகமாக வியக்க வைக்கும் தமிழர் சிந்தனைகள் என்ற நூலையும், இராஜேந்திரசோழன் கடாரம் வென்றதை ஒரு நாவலாகவும் எழுதி வெளியிடவுள்ளார்.

இவரது 'எல்லை தாண்டா அகதிகள்" சிங்கள மொழியிலும்'கண்டிச்சீமை" ஆங்கில மொழியிலும் விரைவில் வெளிவர இருக்கின்றன.

மாத்தளை சோமுவிற்கு
தமிழக அரசின் உயர் விருது

இலங்கையைச் சேர்ந்த தற்போது அவுஸ்திரேலியாவில் வாழும் மலையக எழுத்தாளர் மாத்தளை சோமு எழுதிய



'பாலி முதல் மியன்மார் வரை" என்ற பயண நூலுக்கு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி அமைச்சின் சிறந்த பயண இலக்கிய நூல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே மாத்தளை முதல் மலேசியாவரை, லண்டன் முதல் கனடா வரை, சிட்னி முதல் நோர்வே வரை ஆகிய பயண நூல்களை எழுதியுள்ளார்.

இது வரை சிறுகதை, நாவல், மொழி பெயர்ப்பு, ஆய்வுக்கட்டுரை, திருக்குறளுக்கு அறிவியல் உரை என பல்வேறு தலைப்புகளில் 25 நூல்களை எழுதி வெளியிட்ட இவருக்கு 9 நூல்களுக்கு பல்வேறு விருதுகள் கிடைத்துள்ளன. நாவலுக்கு, இலங்கை சாகித்திய விருது பெற்ற இவர் கண்டிச்சீமை என்ற நாவலுக்கு தமிழக அரசின் கீழ் இயங்கும் மதுரை உலகத்தமிழ்ச் சங்கம் சிறந்த நாவல் பரிசை வழங்கியுள்ளது.

இவரின் வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் என்ற நூலுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கம் 2005 இல் மிகச் சிறந்த நூல் பரிசினை வழங்கியது. அந்த நூலுக்கு புகழ் பெற்ற திருச்சி தூயவளனார் கல்லூரி அறிவியல் தமிழ் எழுத்தாளர் என்ற விருதை வழங்கி கௌரவித்தது பல்வேறு விருதுகளையும், தமிழ் ஆய்வாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்ற இவர், தற்போது சங்க இலக்கியங்களை ஆய்வு செய்து பாமரர்களும் அறியும் முகமாக வியக்க வைக்கும் தமிழர் சிந்தனைகள் என்ற நூலையும், இராஜேந்திரசோழன் கடாரம் வென்றதை ஒரு நாவலாகவும் எழுதி வெளியிடவுள்ளார். இவரது 'எல்லை தாண்டா அகதிகள்" சிங்கள மொழியிலும், 'கண்டிச் சீமை" ஆங்கில மொழியிலும் விரைவில் வெளிவர இருக்கின்றன.

# வியூகம்: ஒரு வாசகநிலை நோக்கு

சி.விமலன்

உமா வரதராஜன் பொறுப்பாசிரியராக விளங்கும் 'வியூகம்' சஞ்சிகை 17 வருடங்களின் பின்னர் மீளவும் வெளிவந்திருக்கிறது. அவரே குறிப்பிடுவது போல வியூகம் ஏன் வெளியானது , நடுவில் ஏன் நின்று போனது என்ற கேள்விகளை சிற்றிதழ்களின் தன்மையையும் வரலாறையும் அறிந்தவர்கள் எழுப்பமாட்டார்கள். எனவே அது குறித்த விவாதங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் 2017, 18 ம் ஆண்டு காலப்பகுதி என்று நினைக்கிறேன் உமாவரதராஜன் 'தினகரன்' பத்திரிகையில் 'பிரதி பிம்பம்' என்ற பகுதியின் வாயிலாக அது ஒரு பக்கமாக இருந்தாலும், சிறிது காலமேயென்றாலும் சிற்றிதழ் ஒன்றிற்கான தரத்தோடு காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தார். உமாவரதராஜனின் இதழியல் பங்களிப்பில் இது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஓர் அம்சமாகும்.

ஏற்கனவே வெளிவந்து நின்று போன சஞ்சிகைகள் அண்மைக்காலத்தில் மீளவும் வெளிவருவது மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருந்தாலும் 'வியூகம்' சஞ்சிகையின் வருகைக்கு ஒரு தனித்துவம் இருக்கிறது. அதற்குக் காரணம் உமாவரதராஜன் . தமிழின் சிறந்த படைப்பாளியாக மாத்திரமல்லாமல் நல்லதொரு வாசகராகவும் விளங்குபவர். அவரோடு உரையாடும் பொழுதுகளில் புதிதாக வெளிவந்திருக்கும் நல்ல புத்தகங்கள், சிறந்த திரைப்படங்கள் பற்றிய அவரது பரிந்துரை என்னை ஆச்சரியப்படுத்திக் கொண்டே இருக்கும். இந்தப் பரந்த வாசிப்பனுபவமும் தன்மையும் சிற்றிதழ் ஒன்றில் எதனைப் பிரசுரிக்க வேண்டும் என்பதை விடவும் எதனைத் தவிர்க்க வேண்டும் என்பதில் அதிக சிரத்தையையும் வெளிப்படுத்தும் என நம்பலாம்.

அந்தவகையில் வியூகம் சஞ்சிகையின் 5ஆவது இதழில் இயக்குனர் லீ ஐசக் சங்கின் 'மினாரி' திரைப்படம் குறித்து லேகா ராமசுப்ரமணியன் 'விடியலைத் தேடி' என்ற கட்டுரையை எழுதி உள்ளார். 1980 களில் அமெரிக்காவில் குடியேறிய கொரிய குடும்பம் ஒன்றின் வாழ்க்கைப் போராட்டம் குறித்து இது சித்திரிக்கின்றது. ஒரு திரைப்படமாகட்டும் அல்லது குறும்படமாகட்டும் அதன் திரைமொழியை உருவாக்குவதில் காட்சிப்படுத்தலின் வகிபங்கு முக்கியமானது. அதற்காக இயக்குனர்கள் எவ்வளவு இடங்களைப் பார்;வையிட்டு தான் மனதில் நினைத்திருக்கும் அந்தக் காட்சிக்கு பொருத்தமான அல்லது மிக நெருக்கமான இடங்களைத் தெரிவு செய்கின்றார்கள். ஆனால் அதற்காக அவர்கள் படும் சிரமங்கள் பெரும்பாலும் வெளியே தெரிவதில்லை. என்றாலும் விதிவிலக்குகளாக மேக்கிங் வீடியோ என்ற பெயரில் அண்மைய வருடங்களாக அவை குறித்த காணொலிகளும் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. அதை வெளிப்படுத்தும் கதைதான் ஹசீன் எழுதிய 'ஆற்றில் ஒரு பூ' கதை . மெருகூட்டப் பட்ட மாமூலான கதைக்கான மொழிநடையைக் கதாசிரியர் திட்டமிட்டே தவிர்த்திருக்கிறார் 'ஆற்றில் ஒரு பூ' கவிதையை வீடியோ காட்சியாக எடுப்பதில் அவர் பட்ட சிரமங்களுக்கு சமாந்தரமாக இன்னொரு சம்பவமும் கதையினுள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. வித்தியாசமான முயற்சி.


கல்லூரான் குறித்து 'உண்மை எளிமை மனிதநேயம் 'என்ற தலைப்பில் நினைவுப் பதிவொன்றை சிவ. வரதராஜன் எழுதியுள்ளார். கல்லூரானின் குணநலன்களும் கவிதைகளும் பிரித்தறிய முடியாதவை என்பதற்கு வகைமாதிரியாக அவருடைய கவிதை வரிகளையும் கட்டுரையாளர் தருகிறார்.

**'ஆயிரம் சிப்பாய்கள் இறந்ததாக**
**நீங்கள் மகிழ்ந்து சொன்ன போது**
**மனிதர்கள் இறந்து போனதாகவே**
**எனக்குக் கேட்டது'**

தற்போதைய இலக்கிய உலகில் 'காகித ஈசல்'களாய் வெளிவரும் நூல்கள் குறித்தும் நூல் வெளியீடுகளில் நடைபெறும் அபத்தங்கள் குறித்தும் ஆதங்கத்துடன் உமா வரதராஜன் தனது பக்கங்களில் எழுதியுள்ளார். அத்தோடு நௌஷாத்தின் 'பூச் செண்டு போல் ஒரு மனிதன்' சிறுகதைத் தொகுப்பு குறித்தும் அலறியின் 'துளி அல்லது துகள்' கவிதைத் தொகுதி குறித்தும் காத்திரமான விமர்சனத்தை உமா வரதராஜன் முன்வைத்துள்ளார்.

நௌஷாத்தின் சிறுகதைகள் குறித்து சொல்லும் போது 'வழிவழி வந்த கதை சொல்லல் முறையிலிருந்து விலகி இன்னொரு பாதையை அவர் தேர்ந்தெடுக்கிறார். ஒரு சாதாரண வாசகன் அவருடன் சமாந்தரமாகப் பயணிப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. பல்துறை அறிவு வாசகனுக்கு வாய்க்கப் பெற்றால் அவருடனான கதைப்பயணம் உவப்பானதாக இருக்கும். அவருடைய படைப்புலகத்தின் அடியாழத்தில் ஓடிக் கொண்டிருக்கும் சூட்சும நீரோட்டத்தை உய்த்துணர இலக்கியப் பயிற்சியும் இருக்க வேண்டும். வெறும் ஒற்றையும் தட்டையுமான எழுத்துக்கு மாற்றீடாக இத்தகைய கதைகளைக் கொள்ளலாம்' என்கிறார். அதேசமயம் நௌஷாத் கையாளும் மொழி நடை சற்று வித்தியாசமானது. மொழி பெயர்ப்பைப் படிப்பது போன்ற உணர்வை உருவாக்க அவர் விரும்புகிறார் என வாக்கியப் பிரயோகங்களில் தான் உணர்ந்த சில உறுத்தல்களையும் சுட்டிக்காட்டுகின்றார். 'சரிநிகர்' சஞ்சிகையில் கவிதைகளை பிரசுரித்துவிட்டு அதன் கீழ் சில வரிகளுக்கு மாற்றீடாக ஆசிரியர் குழு தமது வரிகளைப் பிரசுரித்ததைப் போன்றதொரு பிரமையை அது எனக்கு ஏற்படுத்தி இருந்தது.

அலறியின் புதிய கவிதை நூல் பற்றிக் குறிப்பிடும் போது 'முன்னைய கவிதைகளில் இருந்த அடர்த்தியையும் , அழகும் பொருளும் கைகூடிய சொல்லாட்சியையும் இத்தொகுப்பின் பெரும்பாலான கவிதைகளில் காணக் கிடைக்கவில்லை. பெரும்பாலான கவிதைகளில் கட்டிறுக்கம் குறைந்து ஒரு ஐதான



நிலை தெரிகிறது. உள்தரிசனங்களுக்கு வாய்ப்புத் தராத ஒரு விரிநிலையால் பல கவிதைகள் உயர்ந்த தளத்தை எட்ட முடியவில்லை. இந்தப் பலவீனங்களைத் தாண்டி அவரது ஆற்றலுக்கு அடையாளமான கவிதைகளும் இல்லாமல் இல்லை. அதற்காக இதர கவிதைகள் மோசமானவை என்று அர்த்தமில்லை. வெறும் மொழியழகை மாத்திரம் கொள்ளாமல் அனுபவ வத்தின் வெளிச்சமும் அங்கே ஒளிர்வதால் அவை வெறும் சொற்கூட்டங்களாகும் நிலையில் இருந்து தப்பிக்கின்றன.' எனக் கூறுகிறார்.

அதேவேளை ஒரு படைப்பைப் படித்ததும் அதன் அருட்டுணர்வில் இன்னொரு படைப்பை உருவாக்க முடியுமென்றால் ஒரு வகையில் அது கூட மூலப்படைப்புக்குக் கிடைத்த வெற்றி எனலாம். அந்தவகையில் அலறியின் காமத்துப்பாலை உமாவரதராஜன் தன் மொழியில் மாற்றிப் பின்வருமாறு எழுதிப் பார்க்கிறார்.

'மலைகள் வாசலாய்த் திறந்திருக்கின்றன. சமவெளியின் விரிப்பில் படுத்த படி அவள் நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள். அடர் இருளிலும் அவள் கண்கள் அவன் மேல் ஊர்கின்றன. இதழ்களின் இறுக்கத்தில் ஊறிய நீர் எவருடையதென அக்கணம் புரியவில்லை. பாம்புகள் போல் பிணைகின்றனர். ஊற்றெடுத்த உவர் நீர்ப்பெருக்கு ஈற்றில் உலர்கிறது. அவன் புரண்டு படுக்கிறான். எப்போதும் கிடைக்காத அபூர்வ வர்ணத்துடன் அந்த மலையடிவாரம் மோனத்தில் ஒளிர்கிறது'

வியூகம் இதழின் இன்னொரு எழுத்தாளர் சரவணன் மாணிக்கவாசகம். கவிஞர் ராஜசுந்தரராஜனது தன்வரலாற்று நூலான 'நாடோடித்தடம்' நூல் குறித்தும் அவரது கவிதைத் தொகுப்பான 'தாய்வீடு' குறித்தும் அறிமுகக் குறிப்பொன்றை அவர் எழுதி உள்ளார். முகநூலில் அவர் எழுதும் நூல் அறிமுகங்கள் வாசிப்பில் அவருக்கிருக்கும் தீவிரத்தையும் அக்கறையையும் வெளிப்படுத்துபவை. சில சந்தர்ப்பங்களில் அவை ரசனைக் குறிப்புகளாக இருந்தாலும் புதிதாக வெளிவரும் புத்தங்களை, சஞ்சிகைகளை உடனுக்குடன் அறிமுகப்படுத்துகின்ற வகையில் அவர் முக்கியமானவர். இந்தக் கட்டுரையும் ராஜ சுந்தரராஜனைத் தேடிப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

டணிஸ்கரன், சோலைக்கிளி, றஷ்மி, வாசுதேவன் ஆகியோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. டணிஸ்கரனின் 'திறக்கப்பட்ட ழாக் ப்ரெவரின் கல்லறையில் எழுதப்பட்ட சொற்கள்' கவிதையில் வரும்

**'...கைதிகள் எல்லாம் குற்றவாளியா**
**சூரியன் ஏன் அவர்களுக்கு பிரகாசிப்பதில்லை என**
**அழுத்திக் கேட்டேன்**
**ப்ரெவரின் சொற்கள் என்காதுகளுக்குள் வரும்**
**அந்த இடைவெளிக்குள் மின்னலென**
**வந்து மறைந்தார்கள்**
**உதிரம் வடிந்து உறைந்த உடம்பில் சீழ் வடிந்த படி சில**
**போராளிகள்...'**
**போன்ற வரிகளிலும் ரஷ்மியின்**
**'அடைவு காலத்தின் பாடல்' கவிதையில் வரும்**
**'...மலைக்கான பாதையில்**
**யாரும் பயணிப்பதில்லை**
**தூக்கு விளக்குகள் எரிவதில்லை.**
**ஒளியேற்றிப் பிரார்த்தித்த பக்தர்களால்**
**கைவிடப்பட்டான் கடவுள்.**
**இருளில் -**
**பாதங்களில் இருந்தும் வெளியேறிப்**
**பஞ்சசீலங்கள் எரிகின்ற வெளிதாண்டிப் போய்**
**பதுங்கினான் முனி**
**அவன் பேரில் கையகப்பட்ட நிலங்களில்**
**கல்லாய் சிலையாய்**
**நிலையிலும் இருக்கையிலும்**
**சயனித்தும் கிடத்தப்பட்ட**
**திருவுருக்களைக் கடந்துபோனான்**
**அவன் வாழ மறுக்கப்பட்டான்'**

போன்ற வரிகளிலும் சமகால அரசியலின் பிரதிபலிப்புகள் துலாம்பரமாய்த் தெரிகின்றன.

ஈழ விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. சரி பிழைகளுக்கு அப்பால் விடுதலைப் புலிகள் பற்றிய எதிர்மறை விமர்சனங்கள் அதிகம் தோன்றியதும் இந்தக் காலப்பகுதியில்தான். அதிலும் குறிப்பாக இறுதிப் போரை முன்வைத்து எழுதப்பட்ட படைப்புகள் சிலவற்றில் அது கடுமையானதாகவே இருந்தது. அதற்கு முன்னதாகவும் இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் ஆயுதங்கள் முனைப்புற்றிருந்த காரணத்தால் அவை சற்று அடக்கியே வாசிக்கப்பட்டிருந்தன. சனவநீதன் எழுதிய 'கனிய வைத்தல்' சிறுகதை விடுதலை இயக்கங்கள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்த காலகட்டத்தில் போராட்டத்திற்கு ஆட்சேர்ப்பதற்காகக் கையாண்ட மலின உத்தி நம்பிக்கைத் துரோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துவதாக உள்ளது. கதையில் நிகழும் சி.ஜி.எவ் கெடுபிடிகள், விடுதலை இயக்கத்தினரின் நடமாட்டங்கள், கைதுகள், காணாமல் போதல் என்பவை அன்றைய கால அரசியலின் குறுக்கு வெட்டு முகத்தை வெளிப்படுத்தி நிற்பதோடு கதாசிரியர் அந்த நெருக்கடியான வாழ்வியலை தானும் சகமனிதர்களும் எதிர்கொண்ட விதம் பற்றி சித்திரித்த விதம் ஒரு துயரிசையின் படிமமாய் நெஞ்சை அழுத்துகிறது.

காதலில், கூடலையும் ஊடலையும் கவித்துவமாய் பதிவு செய்கிறது இளங்கோவின் 'மூக்குத்தி அணிந்த பெண்ணுக்கு எழுதிய காதற் குறிப்புகள்'.காதலின் புனிதம் கேள்விக்குள்ளாக்கப்பட்டு, அறியாமல் நிகழும் சுய முரண்பாடுகளால் காதலின் இறுதியில் நினைவுகளில் எஞ்சுவதென்னவோ குற்றவுணர்வும் வலிகளும் மாத்திரமே.

சஞ்சிகை வெளியீடுகள் தனிநபர்களை முன்னிலைப்படுத்தி வெளிவந்திருந்தாலும் உண்மையில் படைப்பாளிகள், வாசகர்கள், அச்சகதாரர்கள், விளம்பரதாரர்கள் என்ற பலரது ஒத்துழைப்போடு நடைபெறும் ஒரு கூட்டுச் செயற்பாடே. அந்தவகையில் ரஷ்மியின் இதழ் வடிவமைப்பும் அவர் வரைந்த ஓவியங்களும் படைப்புக்களின் கனதியை அதிகரிக்கச் செய்கின்றன. 36 பக்கங்களில் வெளிவந்துள்ளதே என்ற குறையைத் தவிர நிறைவானதொரு வாசிப்பனுபவத்தை தந்திருக்கும் 'வியூகம்' அடுத்த இதழின் வருகைக்கான ஆவலையும் தூண்டியுள்ளது.

## மிஃராஜ் சிறப்புக் கவிதை:

(முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 'மிஃராஜ்' தினத்தை முன்னிட்டு இணைய தளத்தில் நடாத்திய சிறப்புக் கவியரங்கில் பாடப்பட்ட கவிதை)

### மாநபிகள் மிஃராஜில் பெற்ற கொடை தொழுகை

உலகாளும் அல்லாஹ்வின் அழைப்பில் எங்கள்
உத்தமர் மிஃராஜில் விண்ணுலகம் சென்றார்
புளகாங்கிதம் கொண்டே படைத்தோன் அளித்த
தொழுகையை கரமேந்தி இவ்வுலகு மீண்டார்

உலகெல்லாம் வியக்கும் அம்மிஃராஜ் இரவில்
உலகோர்க்கு பரிசாய் தொழுகையை கொணர்ந்தார்
நாளெல்லாம் நன்மைகள் நாமெல்லாம் பெற்றிட
நல்லமலாய் தொழுகையை நிறைவாகத் தந்தார்.
மண்ணுலகு சிறக்க வந்த எம் மக்கத்து மாநபிகள்

மாலிக்குல் முல்க்கை கண்டுவந்த தினம் மிஃராஜ்
விண்ணுலகு சென்று வந்த முதல் மனிதராய் திருநபிகள்
மண்ணகத்தை வியக்கவைத்த வரலாறே நல் மிஃராஜ்

அகிலத்தார் அகக்கண்ணும் கண்டிராத காட்சிகளை
உணர்கருவி எதுகொண்டும் அறிந்திடா புதுமைகளை
மகிமைநபி நேரிடையாய் கண்டுவந்து விளக்கியதால்
மாந்தர்கள் மாண்புறவே வழியமைத்த ஒளி மிஃராஜ்

மனிதனை புனிதனாய் புடம்போடும் தொழுகையதை
மகிழ்வோடு நபியேந்தி மண் மீண்ட நாள் மிஃராஜ்
இனிதான வாழ்வுதனை ஈருலகிலும் நாம் பெறவே
தொழுகையதை தந்திட்ட தனித்துவ நாள் மிஃராஜ்

சொர்க்கத்து வாசிகளின் சந்தோச வாழ்வினையும்
நரகத்து பாவிகளின் வேதனையின் வலிகளையும்
பார்த்ததனை புரிந்து வந்த பூமான் எம் நபியவர்கள்
பாருலகம் வந்ததனை போதித்த பாங்கினையாம்

சீர்தூக்கி பார்த்தேயதன் பெறுமானம் புரிந்துணர்ந்து
சீராக வாழ்ந்தாலே சீர் பெறுவோம் ஈருலகில்
நேர் கொண்டு மிஃராஜை மனசார நாமறிந்து
பேர் கொண்டு வாழ்வோமே தொழுகையால் சிறந்து

அதிகாரம் அதி காரமாய் அடக்கியாளும் காலம்
அன்றாடம் அந்தகாரம் மறைக்கின்ற நேரம்
கதிகலங்கும் கவலைகளால் சூழ்கின்ற மேகம்
கயமைகள் கருமழையாய் பொழிகின்ற வேகம்

மதிமயங்கி மாநிலத்தில் மாரடிப்போர் போகம்
மதம் போக்க மருந்தாக தொழுகையே வேதம்
மதியோடு மறவாது தொழுதால் இறையோனை
மகிழ்வோடு வாழ்ந்திடலாம் மண்ணகத்தில் நாளும்

பணிகளையாம் பொறுப்போடு செய்திடும் பாங்கினையே
பக்குவமாய் பயிற்சிதரும் பயிற்சிக்களம் தொழுகை
அணியணியாய் ஒன்றிணைந்து தொழுவதனால் ஐவேளை
ஐக்கியமே வளர்ந்திடுமே உள்ளங்கள் இணைந்திடுமே

இஸ்லாத்தின் இரண்டாவது கடமையே இத் தொழுகை
இறையோனின் நிகரில்லா அருட்கொடையே தொழுகை
முஸ்லிமின் முத்தான அடையாளமே தொழுகை
முற்றிலும் வெற்றியின் அடிப்படையே தொழுகை

கஷ்டங்கள் களைந்திடும் கருணையே தொழுகை
கவலைகளை களைந்து விடும் கருவியே தொழுகை
நஷ்டங்கள் நலிவுகளை நீக்கி விடும் தொழுகை
நன்மைகளை ஈருலகிலும் நிறைக்கும் அருள் தொழுகை

மேலோன் அல்லாஹ்வின் நன்கொடையே தொழுகை
மேலோராய் ஆவதன் அடித்தளமே தொழுகை
நல்லோராய் மாற்றிவிடும் நற்பயிற்சியே தொழுகை
நாயனருள் மழை பொழியும் கருமேகமே தொழுகை

தீயோர்கள் திருந்திட நல் தீன் வழியே தொழுகை
தீமைகள் தீய்த்திடும் பெரும் தீபமே தொழுகை
நாயகம் மிஃராஜில் பெற்ற கொடை தொழுகை

நாமெல்லாம் இறையருளை பெறும் வழியே தொழுகை
ஜன்னத்தை திறந்திடும் திறவுகோல் தொழுகை
சுகமான வாழ்வுதரும் சுகந்தமே எம் தொழுகை
உள்ளத்தின் அழுக்குகளை நீக்கிடும் நீர் தொழுகை
உலகத்தில் உயர்ந்தோராய் ஆக்கிடும் ஏர் தொழுகை

விண்ணுலகும் வியக்கும் நல் அமலே எம் தொழுகை
வெற்றிகள் பெற்றிட நல் பிராத்தனையே தொழுகை
வென்றிடலாம் அனைத்தையும் நல் ஆயுதமே தொழுகை
வல்லோரின் இணையில்லா நன்கொடையே தொழுகை


தொழுகையை மிஹ்ராஜில் பரிசாகப் பெற்றோம்
தொல்லைகள் தொலைத்திடும் வழியதனைக் கண்டோம்
வழுக்கியே தீ நெறியில் வீழ்ந்திடாது தடுக்கும்

வலுவான அரணாக தொழுகையைத் கொள்வோம்
பழுக்கக் காய்ச்சியதால் பளபளக்கும் தங்கமாம்
பத்தரை மாத்துத் தொழுகையால் ஒளிர்வோம்
அழுக்குகள் அகற்றிப் பாவங்கள் போக்கும்
தொழுகையால் வாழ்வை தூயதாய் தொடர்வோம்

அல்லன அகற்றி அநியாயம் அழித்து
எல்லோரும் மகிழும் நாளினை நாடி
நல்லன செய்து நாளெல்லாம் சிறக்க

நல்லோர் ஆளும் உலகினைப் பெறுவோம்
மிஃராஜ் தந்த தொழுகையால் சிறந்து
மகிழ்ச்சி பொங்கும் சூழலை அமைப்போம்
நிஃமத் நிறைந்த வாழ்வினை தேடி
நித்தமும் நாயனை தொழுதே மீள்வோம்

இலக்கியச் செம்மல்,
கலாபூஷணம்
சட்டத்தரணி
**ரஷீத் எம். இம்தியாஸ்**



# பாரம்பரியத்தில் ஆர்.என்.சைபுதீன் சாஹிப் நினைவுகள்....



இ.ஒ.கூ. முஸ்லிம் சேவையில் எதிர் வரும் 16ஆம் திகதி செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில், மர்ஹூம் மௌலவி ஆர்.என். சைபுதீன் சாஹிப்பின் வானொலி பங்களிப்புகள், நினைவுகூரப்படவிருக்கிறன. கடந்துபோன காலங்களில் முஸ்லிம் சேவைக்கு இவர் வழங்கிய பங்களிப்புகள், அளப்பரியன. தன் கம்பீரக் குரலால் ஆத்மார்த்தமாக ஆன்மீக நிகழ்ச்சிகள் பல வழங்கி ஆயிரக்கணக்கான நேயர்நெஞ்சங்களில் இடம் பிடித்துக்கொண்ட இவர், "தீன்ஷா" எனும் பெயரில் நூற்றுக்கணக்கான நாடகங்கள் எழுதியதன் மூலம் தமிழ் பேசும் அனைத்து இனத்தவரின் மத்தியிலும் பெரும் புகழைத்தேடிக் கொண்டவராவார்.

அன்னாரின் நினைவுகள் அவரது புதல்வர் மௌலவி ரிப்கி (அல் அரூஷி), சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர்கனி ஆகியோரின் நேர்காணல் மூலம் வெளிகொணர்படவுள்ளன. இவர்களை கலாபூஷணம் எம்.எஸ்.எம். ஜின்னா நேர்காணல் செய்ய நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப்பொறுப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினோஷியா தயாரித்தளிக்கிறார்.



மேமன் மனிதாபிமான சங்கம் ஐந்தாவது ஆண்டாக ஏற்பாடுசெய்த பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகாரணங்கள் வழங்கும் நிகழ்வு கொழும்பு கைரியா பெண்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் சங்கத்தின் தலைவர் ஏ.எல். அன்வர் மாணவிக்கு புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்குவதையும், கல்லூரி அதிபர் நஸிரா ஹஸநார், பிரதி அதிபர் பரீதா அசார், சங்கத்தின் செயலாளர் சலீம் ஜாபார் மற்றும் பொருளாளர் அப்துல் சத்தார் உமர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.
படம் : ருசெயிக் பாருக்

## பிழைதிருத்தம்

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**பாதுகாப்பு அமைச்சு**

**கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்**

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக Hybrid Uninterrupted Power Supply (UPS) இன் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பு**

**Contract Identification No: MOD/KDU/02/2020**

2021 மார்ச் 07ஆம் திகதி சண்டே ஒப்சர்வர், சிலுமின மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமான விளம்பரங்களில் குறைபாடுகளுடன் பிரசுரமாகி உள்ளதால் இவ்விளம்பரங்களின் கீழக்காணும் இடங்கள்

(1) விளம்பரத்தின் தலைப்பு
பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக Hybrid Uninterrupted Power Supply (UPS) இன் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பு Contract Identification No: MOD/KDU/02/2020

(2) அறிவித்தலின் இணைப்பு
பந்தி 01 மற்றும் பந்தி 03 இல் குறிப்பிடப்படும் Hybrid Cardiac Catheterization Laboratory Uninterrupted Power Supply (UPS) என்ற பதம் மற்றும் 01 இல் குறிப்பிடப்படும் Hybrid OT உடன் Uninterrupted Power Supply (UPS) என்ற பதத்திற்கு பதிலாக Hybrid Cardiac Catheterization Laboratory and Uninterrupted Power Supply (UPS) என்று திருத்தப்படல் வேண்டும் என்பதை தயவுடன் அறிவிக்கிறேன்.

மேற்கண்டவாறு திருத்தப்படல் வேண்டும் என்பதை தயவுடன் கவனிக்கவும்.
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை

**வேரஹெர**
**பொரலஸ்கமுவ, 10290 இலங்கை**

## ஸாஹிரா கல்லூரி, கொழும்பு 10 முதலாம் தரத்துக்கான மாணவர் அனுமதி – 2022

2022ம் ஆண்டில் முதலாம் தரத்தில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள்:

1 2022.01.31ம் திகதியில் 5 வயதைப் பூர்த்திசெய்த ஆண் பிள்ளைகளாக இருத்தல் வேண்டும்.

2 விண்ணப்பப் படிவங்களை 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் திகதி முதல் 21ம் திகதி வரை **www.zahiracollege.lk** எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான விபரங்களை இவ்விணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

3 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிகழ்நிலை (Online) மூலமாகவே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி (copy) மற்றும் நிகழ்நிலை (Online)யில் இணைக்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் ஏப்ரல் மாதம் 05ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

Principal
**Zahira College**
406, Orabi Pasha Road,
Maradana, Colombo 10.

4 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தகுதி அடிப்படையில் மாத்திரமே அனுமதி வழங்கப்படுவர். இது விடயமாக மூன்றாம் நபர்களின் தலையீடு அல்லது செல்வாக்கு செலுத்த முயலுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான முயற்சிகள் விண்ணப்பங்கள் நிராகரிப்பட காரணிகளாக அமையலாம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

அதிபர்




தினகரன் வாரமஞ்சரி BUDGET adz It suits your budget







**Advertise Here**
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,000/- +VAT
adzsuo@gmail.com







புதிய அலை கலை வட்டம் நடத்திவரும் 'எவோட்ஸ்2021' கலாசார போட்டித் தொடரின் இரண்டாவது கட்டமான நகைச்சுவை துணுக்கு எழுதும் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த சனியன்று (06.03.21) கொழும்பு15 இல் அமைந்துள்ள கிளாரட் கல்வி நிறுவனத்தில் நடைபெற்றபோது முதல் பரிசான ரூபா 5000 மற்றும் சான்றிதழை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர். மட்டக்களப்பைச் சேர்ந்த வெற்றியாளர் சபினா சோமசுந்தரத்துக்கு வழங்குவதையும் இரண்டாம் பரிசான ரூபா 3000 மற்றும் சான்றிதழை பிரபல கவிஞர் பிரோம்ராஜ் வவுனியாவைச் சேர்ந்த வெற்றியாளர் கந்தாசாமிகுருக்கள் சார்பாக அவரது உறவினர்களுக்கு வழங்கி வைப்பதையும் மூன்றாம் பரிசான ரூபா 2000 மற்றும் சான்றிதழை உக்குவலையைச் சேர்ந்த எம்.பரீனுக்கு கலைஞர் பொன்.புத்மநாதன் வழங்கிவைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்ஓவியன்)






குளோபல் பீஸ் பல்கலைக்கழக(GLOBAL Peace University) ஆட்சிக்குழு வழங்கும் தத்துவ ஞானசாஸ்திர கலாநிதி பட்டம் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் கல்வி பீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரம் தலைமையிலும், பல்கலைக்கழக இணைப்பாளர் கலாநிதி குமரகுருபரன் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வில் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் திருமதி ரஜேஸ்கண்ணா ஜெயசக்தியவாணிக்கு பட்டம் வழங்குவதையும், சான்றிதழ் பெற்றுக்கொண்ட ராஜரட்னம் ராஜமாணிக்கம், இப்ராகிம் இஸ்மாயில் ஹசன் அலி, மொஹமட் இம்ரான் ஆகியோரையும் காணலாம். (படப்பிடிப்பு, கொழும்பு வடக்கு நிருபர்)


# தினகரன் BUDGET adz

It suits your budget













## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com



## மாத்தளையின் ஜீவநதி:...

(17 ஆம் பக்கம் தொடர்)

தோட்டத்து மக்களோடு நகமும் சதையுமாய் வாழ்ந்த அனுபவத்தின்பலமே மாத்தளை கார்த்திகேசுவிற்கு இந்த நாவலை எழுதும் உத்வேகத்தைக் கொடுத்திருக்கிறது.

கைவிரல் கொண்டு எண்ணக்கூடிய அளவிலேயே மலையக நாவல்கள்வெளியாகியுள்ள நிலையில் ஒரு நாவல் தொகுதியை நாம் உருவாக்க இவ்வாறு எண்ணற்றநாவல்கள் எழுதப்படவேண்டும்.

மலையகக் கலை, இலக்கிய விகசிப்பிற்கான எல்லா ஓடங்களிலும் துடுப்பெடுத்து ஓடியிருக்கிறார் கார்த்திகேசு. மலையகத்தின் நூல் வெளியீட்டுத்துறையில் மாத்தளை கார்த்திகேசு ஆழ்ந்தத டங்களைப் பதித்திருக்கிறார்.

அந்தனி ஜீவாவின் 'மலையக வெளியீட்டகம்' சாரல்நாடனின் 'சாரல் வெளியீடு' துரை விஸ்வநாதனின் 'துரைவி' வெளியீடு போன்றவெளியீட்டகங்களுடன் நோக்கும்போது கார்த்திகேசு சிலதனித்தன்மைகளையும் வெளிப் படுத்தியிருக்கிறார்.

'மலையகப் பாரம்பரிய கலைகளைப்பற்றி இதுவரை காலம் ஆய்வுநூல்கள் எதுவும் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை' என்று கூறி மாத்தளை வடிவேலன் எழுதிய 'மலையக பாரம்பரியக் கலைகள்' என்ற முன்னோடி நூலை வெளியிட்டவர் கார்த்திகேசு.

மாத்தளை ரோஹிணி தனது நூலை வெளியிடுவது பற்றி கார்த்திகேசுவிடம்கேட்டபோது' இது நம்ம வீட்டு வரலாறு அல்லவா? இதைப் புத்தகமாக வெளிக்கொணர வேண்டியது எனது கடமை' என்று சொன்னவர் அவர்.'உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள்' நூல் வெளிவந்த கதை அது.

மலையகத்தின் நாடிபிடித்து எழுதவல்ல நுட்பமான எழுத்தாளர் மு.சிவலிங்கத்தின் 'மலைகளின் மக்கள்' என்ற சிறுகதைத்தொகுப்பு வெளியாவதற்கு'எனதுசிறுகதைத்தொகுப்பு ஒன்றை எப்படியும் உருவாக்கியே தீருவேன் என்றுழைத்த என் அருமை நண்பர் கலைஞர் மாத்தளை கார்த்திகேசுதான்' என்று சாட்சியம் தருபவர் மு.சிவலிங்கம்.

'எனது நாவல்களைப் புத்தகமாகப் போட வேண்டுமென்பதில் பலர் ஆர்வம்காட்டிய போதும் இறுதியாக கார்த்திகேசு தான் இந்த நாவலைப்புத்தகமாகக் கொண்டுவர முயற்சி எடுத்தவர் என்று மாத்தளை ரோஹிணி தனது 'இதயத்தில் இணைந்த இருமலர்கள்' என்ற நாவல் வெளியாவதற்கு நன்றி கூறுகிறார்.

'கதைக்கனிகள்' என்ற மலையகத்தின் முதல்தரமான சிறுகதைத் தொகுப்பினை, அத்தொகுப்பு கைக்குக்கிடைக்காத கனியாக இருந்த நிலையில் இருபது ஆண்டுகளுக்குப்பின் அதன் இரண்டாவது பதிப்பினை வெளியிட்டு சிறுகதைவளத்திற்கு நீர் வார்த்திருக்கிறார் மாத்தளை கார்த்திகேசு.

இதற்கப்பால், பெனடிக்ற் பாலன் எழுதிய 'தலைவிதியைப் பறிகொடுத்தோர்'' நா.சோமகாந்தன் எழுதிய 'நிலவோ நெருப்போ...'என்ற சிறுகதைத் தொகுப்புகளையும் அருணா செல்லத்துரை எழுதிய 'வீடு' என்ற நாடகப்பிரதியையும் வெளியிட்டு பிறபிராந்தியங்களின் எழுத்துவளத்திற்கும் கால்வாய்வெட்டியிருக்கும் பெரியமனதுக்காரன் இவர்.

பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கும் மாத்தளை கார்த்திகேசு கனடாவிலிருந்து டொலர்களாகவும் லண்டனிலிருந்துபவுண்டுகளாகவும் வந்த காசில் சொகுசு வெளியீடுகள் நடத்தியவர் அல்ல. சாமானியராக அவரது சாதனை அது. கர்மயோகியின் யாகம். சித்தனின் சாந்தநிலை. ஓட்டையும்பொன்னையும் ஒப்பென நோக்கும் சாதகம். இம்மாதிரி மனிதர்கள் நம் காலத்தில்கொச்சிக்கடை ஜெம்பட்டா வீதியிலும், இன்று மாத்தளையிலும் நடந்து திரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பது அவரை அறிந்த எங்களுக்குபெருமையைத்தருகிறது.

எதனைச் செய்தாலும் அதனை மனமுவந்து, அர்ப்பணிப்போடு செய்வது என்பது அவர் நமக்கு சொல்லித்தரும் பாடம்.

மலையகத்தில் கலை, இலக்கியம், நாடகம், சினிமா, நாவல், நூல் பிரசுரம்என்று இத்தனை துறைகளில் ஆளுமை காட்டிய பெருமகன் கார்த்திகேசு நூறாண்டுகாலம்வாழ்கவாழ்க என வாழ்த்துகிறேன். மத்திய மாகாண சாகித்திய விழாவில் மத்திய மாகாண முன்னால் அமைச்சர் வே. இராதாகிரு~ணன் மற்றும் சச்சிதானந்தன் இருவரும் பொன்னாடை போர்த்தி கேடையம் வழங்கி கௌரவிக்கின்றனர்.

## ஜெனிவாப் பிரேரணை...

(05ஆம் பக்கத் தொடர்)

மாற்றுத்திறனாளிகளாக இருப்போரின் நிலையைப் பற்றிய உங்கள் கரிசனை என்ன? வேலைத்திட்டம் என்ன? இதுவரையில் நீங்கள் அல்லது உங்கள் கட்சி செய்த பணிகள் எவை?

இப்படி நாம் ஒவ்வொன்றைப் பற்றியும் கேள்விகளாக அடுக்கலாம். இதை உணர்வுள்ளவர்களாக, மக்களுக்கு விசுவாமாக செயற்படும் நோக்கமுள்ள தரப்பினராக நீங்கள் இருந்தால் உங்கள் கட்சி, உங்கள் அமைப்பு, உங்கள் தலைமை மூலம் பட்டியலிட்டு வெளிப்படுத்துங்கள். அதன் மூலம் உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இப்படிச் சொல்லும்போது இந்தக் கட்சிகளின் விசுவாசிகளாக இருப்போரிற் சிலர் சொல்கிறார்கள், இதெல்லாவற்றையும் விட முக்கியமானது அரசியல் உரிமையும் நடந்தவற்றுக்கான தண்டனை அளித்தலுமே என்று.

அவர்களுக்கு ஒன்றைச் சொல்லலாம். இதில் மறுத்துரைப்புகள் ஒன்றுமில்லை. ஆனால், இதற்கு நீங்கள் சுட்டுகின்ற வழிகளுக்கு ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை "கனவு பொய்ப்படும்" என்று தகுந்த பதிலைச் சொல்லியுள்ளது. இதைத்தான் சொல்வார்கள், தூரத்துத் தண்ணி ஆபத்துக்கு உதவாது என. மக்களும் சிலவற்றை விளங்கிக் கொள்ள வேண்டும். தங்களுடைய சுய புத்தியையும் சுய அனுபவத்தையும் பெறுமதியாக்கிக் கொள்ள வேணும்.

கடந்த பதினொரு ஆண்டுகளாக ஜெனிவாப் பிரேரணை, சர்வதேச விசாரணை, இந்தியாவின் அழுத்தம், ஆலோசனை என்றெல்லாம் தமிழ்த்தரப்பினர் சொல்லி வருகிறார்கள். இதற்கு எந்தப் பெறுமானமாவது கிட்டியுள்ளதா? அதைப்போல புதிய அரசியலமைப்புப் பற்றிய ஒவ்வொரு அரசாங்கத்தின் அறிவிப்புகளைப் பற்றியும் துரித அபிவிருத்திக் கனவுகளைப் பற்றியும் ஏதாவது பெறுமானம் கிட்டியுள்ளதா?

# வெற்றிடங்கள்

## இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)

### தொழில்நுட்ப அமைச்சு

SLSI இன் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதியுடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் - சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவு (HM 1-1)
### சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் - (நிர்வாகம்)

**தகைமைகள் - வெளிவாரி**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வியாபாரம், மனித வள முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம் அல்லது வர்த்தக நிர்வாகத்தில் சிறப்புப் பட்டம் (நான்கு ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொதுவான பட்டம் (மூன்று ஆண்டுகள்).

**அத்துடன்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், முகாமைத்துவம், பொது முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகம் சம்பந்தமான முதுமாணித் தகைமை அல்லது பதவியின் விடயப் பரப்பிற்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் பட்டய அங்கத்துவம்.

**மேலுள்ள பதவிக்கான அனுபவம்**

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் ''முகாமைத்துவ தரம்'' ஒன்றில் முதல் பட்டத்திற்கு பின்னர் குறைந்தது 13 ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம்.

**உள்வாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

01). மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்

02). பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் முகாமைத்துவ பிரிவில் 13 ஆண்டுகள் அனுபவத்துடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், முகாமைத்துவம், பொது முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகம் சம்பந்தமான முதுமாணித் தகைமை அல்லது பதவியின் விடயப் பரப்பிற்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் பட்டய அங்கத்துவம்.

தேர்வு செய்யப்படும் அபேட்சகர் அந்தப் பிரிவின் மேற்பார்வை பணியை மேற்கொள்வார். அனைத்து மட்டத்திலும் ஊழியர்களுக்கு வசதிகளை வழங்குவதற்கு சிறந்த தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் திறனை அவர் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : **LKR 80,295.00 – 15 x 2,270.00 – LKR 114,345.00**

**வயது** : 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

### சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் - சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவு (HM 1-1)
### சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் - (தரநிலைகள் மற்றும் சேவைகள் ஊக்குவிப்பு)

**தகைமைகள் - வெளிவாரி**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் அல்லது சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தை ஒரு பாடமாகக் கொண்ட முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம் மற்றும் சிறப்புப் பட்டம் (நான்கு ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொதுவான பட்டம் (மூன்று ஆண்டுகள்).

**அத்துடன்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ வர்த்தக முகாமைத்துவம் அல்லது சந்தைப்படுத்தலில் வர்த்தக நிர்வாகம் சம்பந்தமான முதுமாணித் தகைமை அல்லது பதவியின் விடயப் பரப்பிற்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் பட்டய அங்கத்துவம்.

**மேலுள்ள பதவிக்கான அனுபவம்**

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் ''முகாமைத்துவ தரம்'' ஒன்றில் குறைந்தது 13 ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம்.

**உள்வாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

01). மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.

02). பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் முகாமைத்துவ பிரிவில் 13 ஆண்டுகள் அனுபவத்துடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ வர்த்தக முகாமைத்துவம் அல்லது சந்தைப்படுத்தலில் வர்த்தக நிர்வாகம் சம்பந்தமான முதுமாணித் தகைமை அல்லது பதவியின் விடயப் பரப்பிற்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் பட்டய அங்கத்துவம்.

தேர்வு செய்யப்படும் அபேட்சகர் அந்தப் பிரிவின் மேற்பார்வை பணியை மேற்கொள்வார். அனைத்து மட்டத்திலும் ஊழியர்களுக்கு வசதிகளை வழங்குவதற்கு சிறந்த தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் திறனை அவர் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : **LKR 80,295.00 – 15 x 2,270.00 – LKR 114,345.00**

**வயது** : 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**ஏனைய நன்மைகள்**

01. பொதுதொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015 மற்றும் PED 1/2015 (i) இன்படி போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது வாகனம் வழங்கப்படும்
02. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்கல்
03. ஆயுள் காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதி
04. மட்டுப்படுத்தப்பட்டதாக மருத்துவ செலவுகளை மீளளித்தல்
05. பொதுத் திறைசேரி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஊக்கக் கொடுப்பனவு
06. தொழில்முறை சூழல் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு
07. தொழில்முறை கொடுப்பனவு
08. தொடர்பாடல் கொடுப்பனவு

### உதவிப் பணிப்பாளர் - முகாமைத்துவ பிரிவு (MM 1-1)
### உதவிப் பணிப்பாளர் - (தொழில்நுட்பம்)

**தகைமைகள் - வெளிவாரி**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானத் துறையில் இளமாணிப் பட்டம் - சிறப்புப் பட்டம் (நான்கு ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொதுவான பட்டம் (மூன்று ஆண்டுகள்).

**அத்துடன்**

பதவிக்கு தொடர்புடையதாக ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

(விஞ்ஞானப் பிரிவின் பின்வரும் பாடங்களில் ஒன்று எதிர்பார்க்கப்படுகிறது பௌதீகவியல், இரசாயனவியல், உணவு விஞ்ஞானம், நெசவு, நுண்ணுயிரியல், சுற்றுச்சூழல் விஞ்ஞானம், கடற்றொழில், விவசாயம், உயிரியல், உயிர்தொழில்நுட்பவியல், மூலக்கூற்று உயிரியல், கணிதம் அல்லது புள்ளிவிபரவியல்.)

**உள்வாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

01. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
02. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு** : LKR 53,175.00 – 10 x 1,375.00 – 15 x 1,910 – LKR 95,575.00

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

### உதவிப் பணிப்பாளர் - முகாமைத்துவ பிரிவு (MM 1-1)
### உதவிப் பணிப்பாளர் - (தரநிலைகள் மற்றும் சேவைகள் ஊக்குவிப்பு)

**தகைமைகள் - வெளிவாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

01). இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் அல்லது சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தை ஒரு பாடமாகக் கொண்ட முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம் மற்றும் சிறப்புப் பட்டம் (நான்கு ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொதுவான பட்டம் (மூன்று ஆண்டுகள்).

**அத்துடன்**

சந்தைப்படுத்தல் துறையில் ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

02.). பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் பதவிக்கு தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்வாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

01. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
02. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு** : LKR 53,175.00 – 10 x 1,375.00 – 15 x 1,910 – LKR 95,575.00

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

### உதவிப் பணிப்பாளர் - முகாமைத்துவ பிரிவு (MM 1-1)
### உதவிப் பணிப்பாளர் - (பொறியியல்)

**தகைமைகள் - வெளிவாரி**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்கு தொடர்புடைய பொறியியலில் (நான்கு ஆண்டுகள்) இளமாணிப் பட்டம்.

**அத்துடன்**

பதவிக்கு தொடர்புடையதாக ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**தகைமைகள் - வெளிவாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்கு தொடர்புடைய பொறியியலில் (நான்கு ஆண்டுகள்) இளமாணிப் பட்டம்.

**அத்துடன்**

02. பதவிக்கு தொடர்புடையதாக ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்வாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

01. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
02. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு** : LKR 53,175.00 – 10 x 1,375.00 – 15 x 1,910 – LKR 95,575.00

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

### உதவிப் பணிப்பாளர் - முகாமைத்துவ பிரிவு (MM 1-1)
### உதவிப் பணிப்பாளர் - (உள்ளகக் கணக்காய்வு)

**தகைமைகள் - வெளிவாரி**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ வர்த்தகம்/ நிதி முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம்/ வர்த்தக நிர்வாக சிறப்புப் பட்டம் (நான்கு ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொதுவான பட்டம் (மூன்று ஆண்டுகள்).

**அத்துடன்**

**கணக்கியல் துறையில் ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.**

2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் பதவிக்கு தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்வாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

01. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
02. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு** : **LKR 53,175.00 – 10 x 1,375.00 – 15 x 1,910 – LKR 95,575.00**

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**ஆட்சேர்ப்பு முறை**

எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவுகள் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய இரு பகுதிகளுக்கு உட்பட்ட ஒரு தாளைக் கொண்டதாக பரீட்சை இடம்பெறும்
- ஆங்கில அறிவுத் தேர்ச்சி
- உளச்சார்புப் பரீட்சை

**ஏனைய நன்மைகள்**

01. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்கல்
02. ஆயுள் காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதி
03. மட்டுப்படுத்தப்பட்டதாக மருத்துவ செலவுகளை மீளளித்தல்
04. பொதுத் திறைசேரி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஊக்கக் கொடுப்பனவு
05. தொழில்முறை சூழல் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு
06. தொழில்முறை கொடுப்பனவு
07. தொடர்பாடல் கொடுப்பனவு

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் முழுப் பெயர், வயது, கல்வித் தகைமை மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்களை குறிப்பிடும் விண்ணப்பப் படிவங்களை 2021.03.29 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இலங்கை கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அரச துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் அதனூடே தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)**

# விலைமனுக்களுக்கான அழைப்பிற்கான திருத்தம்

## கொழும்பு – 08, சீமாட்டி றிட்ஜ்வே வைத்தியசாலையின் இருதயம் மற்றும் ஆபத்தான நிலை பராமரிப்பு கட்டிடத்தொகுதிக்கான வளிச்சீராக்கல் முறைமையை வழங்கல் மற்றும் நிறுவுதல்

**Contract No.: SB/179/G/53/2020**

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக 2021 பெப்ருவரி 21 ஆம் திகதியிடப்பட்டு சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. பின்வரும் திருத்தங்கள் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.
   - ➢ விலைமனு திறத்தல்/ மூடும் நேரம் ஆகியன 2021 மார்ச் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளன.
   - ➢ விலைமனுக்கள் 2021 ஜுலை 26 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   - ➢ விலைமனுப் பிணையானது 2021 ஓகஸ்ட் 21 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. முன்னைய விலைமனுக்களுக்கான அழைப்பிலுள்ள ஏனைய அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று, விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்து அவைகளை 2021 மார்ச் 28ஆம் திகதி வரையும் வேலை நேரங்களில் மு. ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/5ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுத் தலைவரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2390719**
**தொலைநகல்: 0094-11-2390720**
**மின்னஞ்சல்: procurement@defence.lk**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
## பாதுகாப்பு அமைச்சு

### போர்த்திறன் சார்ந்த பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்றிட்டத்திற்கு [STRATEGIC DEFENCE COMMUNICATION NETWORK (SDCN)] மைக்ரோவேவ் ரேடியோ கொம்யூனிகேஷன் முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்

**விலைகோரல் இல.: MOD/SDCN/01/2021**

01. விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சிற்கு மைக்ரோவேவ் ரேடியோ கொம்யூனிகேஷன் முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பிப்பதற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பாதுகாப்பு அமைச்சின் (MOD) சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் (SCAPC) தலைவர் இப்போது அழைக்கின்றார்.

    இலங்கை, கொழும்பு-03, இல. 15/5, பாதுகாப்பு அமைச்சின் SDCN செயற்றிட்டத்திற்கு வலையமைப்பு முகாமைத்துவ முறைமை உட்பட மைக்ரோவேவ் ரேடியோ கொம்யூனிகேஷன் முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பன இந்த வேலைகளில் உள்ளடங்குகின்றன.

02. ஒப்பந்தத்தின் FIDIC நிபந்தனைகளை வடிவமைத்து நிர்மாணித்தல் மற்றும் பொறித்தொகுதிக்கான ஒப்பந்த நிபந்தனைகளின் கீழ் சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல் செயற்படுத்தப்படும். எவ்வாறாயினும் ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளை இலங்கை பெறுகை வழிகாட்டி நிர்வகிக்கும்.
03. மதிப்பீட்டிற்காக கவனத்திற் கொள்ளவும் ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அனைத்துப் பொருட்களுக்கும் ஒவ்வொரு பொருளின் மொத்த அளவு மற்றும் சார்புடைய சேவைகளுக்கும் விலைக்கோரல் வேண்டும். பகுதி விலைக்கோரல்கள் பதிலளிக்காதவையாக கருதப்படும் மற்றும் நிராகரிக்கப்படும்.
04. மைக்ரோவேவ் ரேடியோ கொம்யூனிகேஷன் முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவை இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும் நாளிலிருந்து ஒன்பது (09) மாதங்கள் செயற்படுத்தல் காலத்தினுள் முடிக்கப்படல் வேண்டும்.
05. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் உள்நாட்டு விலைமனுதாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தொலைத்தொடர்பு மற்றும் பாதுகாப்பு முறைமைகள் மீதான துணை நிபுணத்துவ பரப்பின் கீழ் மின்சாரம் மற்றும் இயந்திரவியல் சேவைகளுக்கான EM1 தரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் வெளிநாட்டு விலைமனுதாரர்கள் தொலைத்தொடர்புகள் பொறியியல் துறையில் பத்து (10) வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவத்தை நிரூபிக்கப்பட்ட தடகள பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்களின் அனுபவம் மற்றும் தடகள பதிவுகளை ஆதரிப்பதற்கான ஆவண சான்றுகள் விலைமனுக்களுடன் தரப்பட்டுள்ளன.
06. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை ஹோமாகம, பிட்டிபன, மொரகஹாஹேன வீதி, மஹேனவத்த, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், தலைமையகம், போர்த்திறன் சார்ந்த பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ அலகு, செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து 2021-03-15ஆம் திகதி முதல் 2021-04-21ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. (+94)112421357/ தொலைநகல் (+94)112437923/ மின்னஞ்சல் முகவரி dg@crd.lk)
07. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2021-03-15ஆம் திகதி முதல் 2021-04-21ஆம் திகதி வரையில் மீளளிக்கப்படாத ஒரு இலட்சம் இலங்கை ரூபாவைச் (ரூபா 100,000.00) செலுத்தி இலங்கை, கொழும்பு-03, இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, பாதுகாப்பு அமைச்சிற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். இதே முகவரியிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி இல. (+94)112390719/ தொலைநகல்: (+94)112390720).
08. இலங்கை, ஹோமாகம, பிட்டிபன, மொரகஹாஹேன வீதி, மஹேனவத்த, CDRD, போர்த்திறன் சார்ந்த பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ அலகில் 2021-03-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.
09. 2021-04-27ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் இலங்கை, கொழும்பு-03, இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, பாதுகாப்பு அமைச்சு, பிரதான நிதி அலுவலர் 1 அவர்களுக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2021-04-27ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு திறக்கப்படும்.
10. அனைத்து விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் வங்கி உத்தரவாதமொன்றை விலைமனுப் பிணை முறியாக எண்பத்து நான்கு இலட்சம் இலங்கை ரூபா (இல. ரூபா 8,400,000.00) அல்லது இதற்குச் சமனான இலகுவாக மாற்றக்கூடிய வெளிநாட்டு பண அலகை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் பெற்று இணைத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியால் விலைமனுப் பிணை முறி அல்லது வங்கி உத்தரவாதம் உறுதி செய்யப்பட்டால், வெளிநாடுகளில் செயற்படும் ஒரு வர்த்தக வங்கி வழங்கும் விலைமனுப் பிணை முறி ஏற்றுக்கொள்ளத்தக்கது. இந்த விலைமனுப் பிணை முறி கோரிக்கை பத்திரத்தின் அடிப்படையிலும் நிபந்தனையற்றதாகவும் 2021-09-21ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
11. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி நாள் முதல் 2021-08-24ஆம் திகதி வரையில் விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
12. இலங்கை, கொழும்பு-03, இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, பாதுகாப்பு அமைச்சு, பிரதான நிதி அலுவலர் 1 அலுவலகத்தில் விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் (விலைமனுதாரர்களின் பெயர், அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டுப் பிரதிகள் என்பவற்றை 3 நாட்களுக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்) விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரத்தின் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.
13. விலைமனுக்களைச் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் என்பவற்றோடு தொடர்புடைய விலைமனுதாரர்களால் செலவிடப்பட்ட எந்தவொரு செலவினத்திற்கும் அல்லது கிரயத்திற்கும் பாதுகாப்பு அமைச்சு பொறுப்புக்கூற மாட்டாது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு, இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு 03.**
**இலங்கை.**

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

## கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

## சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபை

### தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து கீழ்க்காணும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) (MM 1-3) - 01**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட அரச நிர்வாகம்/வர்த்தகம்/முகாமைத்துவம்/ சட்டம் பற்றிய முதல் பட்டம் அல்லது வேறு பட்டத்துடன் முகாமைத்துவம் பற்றிய பட்டப்பின் படிப்பு பட்டம் மற்றும் தகைமை பெற்றதன் பின்பு குறித்த துறையில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம்

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

குறித்த பதவிக்கு ஒப்படைக்கப்படும் பாடத்துறையுடன் சம்பந்தப்பட்ட கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகையில் 1ஆம் தரத்தில் ஐந்து வருட (05) திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

**சம்பள அளவு மற்றும் வகுதி** : MM-1-3-2016-ரூ-55925-10X1375-15X1910-98,325

**வயதெல்லை** : 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

- ➢ இலங்கை பிரஜைகளிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- ➢ தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி கூடிய வயதெல்லை பொருந்தாது.
- ➢ விண்ணப்பங்கள் 2021.03.29ஆம் திகதி அல்லது அதற்கு முன் சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதியுடன் கீழக்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- ➢ உள்ளக விண்ணப்பதாரிகள் நிறுவன தலைமையின் பரிந்துரையுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுங்கள்.

**கவனிக்கவும்.**

மேற்படி பதவிக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவது முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட சேர்த்துக் கொள்ளும் முறையின் விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

**தலைவர்,**
**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபை**
**த.பெ.2211,**
**ஆர்தர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 13.**

## நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

# நகர அபிவிருத்தி அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் (மாங்குளம் வீதி, கோவில்குடியிருப்பு) அமைந்துள்ள கடை அறைகளை மாதாந்த குத்தகை அடிப்படையில் 10 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனு கோரல்

1. முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் (மாங்குளம் வீதி, கோவில்குடியிருப்பு) அமைந்துள்ள கடை அறைகளை மாதாந்த குத்தகை அடிப்படையில் 10 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதில் ஆர்வம் காட்டும் தரப்பினர் பின்வரும் மாற்றுவழிகளில் ஒரு மாற்றுவழியின் கீழ் தமது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

**2.1 மாற்றுவழி 1**

I. ஒவ்வொரு கடை அறைக்காகவும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள அடிப்படை விலையை விட கிடைக்கப்பெற்றுள்ள கூடிய விலைகளுக்கிடையில் அதிகூடிய பெறுமதி / விலைக்கோரலைக் கவனத்திற் கொண்டு குத்தகைதாரரைத் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

II. ஆர்வமுள்ள தரப்பினர் ஒரு கடை அறைக்காக ஒரு கேள்விப் படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்கலாம். யாராவது விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட கடை அறைகளுக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு உத்தேசிப்பதாயின் ஒவ்வொரு கடை அறைக்கும் வெவ்வேறான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| கடை இல. | தரை பரப்பளவு (சதுர மீற்றர்) | அடிப்படை விலை (Key Money) (ரூபா) | மாதாந்த குத்தகைத் தொகை (ரூபா) | பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | 28.50 | 639,000.00 | 2,300.00 | 18,500.00 |
| 02 | 28.50 | 568,000.00 | 2,000.00 | 16,000.00 |
| 03 | 28.50 | 497,000.00 | 1,800.00 | 14,500.00 |
| 04 | 28.50 | 568,000.00 | 2,000.00 | 16,000.00 |
| 05 | 28.50 | 497,000.00 | 1,800.00 | 14,500.00 |
| 06 | 28.50 | 426,000.00 | 1,500.00 | 12,000.00 |
| 07 | 28.50 | 426,000.00 | 1,500.00 | 12,000.00 |
| 08 | 28.50 | 568,000.00 | 2,000.00 | 16,000.00 |
| 09 | 28.50 | 497,000.00 | 1,800.00 | 14,500.00 |
| 10 | 28.50 | 497,000.00 | 1,800.00 | 14,500.00 |
| 11 | 28.50 | 568,000.00 | 2,000.00 | 16,000.00 |
| 12 | 28.50 | 639,000.00 | 2,300.00 | 18,500.00 |
| 13 | 28.50 | 568,000.00 | 2,000.00 | 16,000.00 |
| 14 | 28.50 | 497,000.00 | 1,800.00 | 14,500.00 |
| 15 | 28.50 | 426,000.00 | 1,500.00 | 12,000.00 |

**2.2 மாற்றுவழி 2**

I. யாராவது தரப்பினர் 15 கடை அறைகளுக்காவும் ஒரே விலைக்கோரலில் விலைமனுவைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுவதானால், அதற்கான அடிப்படை விலை 8,600,000.00 ரூபாவாகும் என்பதுடன் அப்பெறுமதிக்கு மேலான விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். கிடைக்கப்பெற்றுள்ள கூடிய விலைகளுக்கிடையில் அதிகூடிய பெறுமதி / விலைக்கோரலைக் கவனத்திற் கொண்டு குத்தகைதாரரைத் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும். இந்த முறையில் 15 கடை அறைகளுக்குமான மாதாந்த வாடகைத் தொகை 31,000.00 ரூபாவாகும் என்பதுடன் பிணை முறித் தொகை 246,000.00 ரூபாவாகும்.

3. நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மிகவும் சாதகமான மாற்றுவழியின் கீழ் குத்தகைதாரரைத் தெரிவு செய்வதற்கு வருமானக் கேள்விச் சபைக்கு (சிறிய) அதிகாரம் உண்டு.
4. சித்திகரமான குத்தகைதாரர் விலைக்கோரலின் அடிப்படை விலை மற்றும் மாதாந்த வாடகைக்குப் புறம்பாக 8% வெட் வரி செலுத்துதல் வேண்டும். சித்திகரமான விலைமனுதாரரினால் செலுத்தப்பட்ட அடிப்படை விலைத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.
5. இதில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் மேலதிக விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்களை மீளளிக்கப்படும் 2,000.00 ரூபா தொகை மற்றும் அதற்கு இயைபான பெறுமதி சேர் வரியையும் (VAT) செலுத்தி பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 8ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவிலிருந்து அல்லது இல. 134, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண அலுவலகத்திலிருந்து 2021-03-15ஆம் திகதி முதல் 2021-03-31ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இக்காலப்பகுதியில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. மேலேயுள்ள 2.1 மாற்றுவழியின் I இலக்கத்தின் கீழ் விண்ணப்பிக்கும் கடை அறைக்கு இயைபாக மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணை முறித் தொகை அல்லது மாற்றுவழி 2இன் கீழ் விண்ணப்பிக்கையில் மேலேயுள்ள 2.2 மாற்றுவழியின் 02ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிணை முறியை நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்கு அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண அலுவலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2021-04-02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுற்றதன் பின் இல. 134, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண அலுவலகத்தில் (இல. 134, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்) விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் வாய்ந்த பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
8. இது தொடர்பிலான மேலதிகத் தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் தேவையாயின் பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'' கட்டம் 1, 8ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவில் (தொ.பே. 011-2875921, 011-2875916-20 நீடிப்பு 2960-2967) அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண அலுவலகத்தில் (தொ.பே. 021-2213519 மற்றும் 021-2223269) அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் விசாரித்தறியலாம்.

**வருமான கேள்விச் சபை (சிறியது),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல : 313

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | 12 | 13 | | 14 |
| 15 | | 16 | 17 | 18 | 19 |
| | 20 | | 21 | 22 | |
| 23 | 24 | 25 | | 26 | 27 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
பாடசாலை பெயர் ..........................................
பாடசாலை முகவரி ..........................................
..........................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) நாள்தோறும் உதயமாகி, உலகின் இருள் அகற்றும் உலகின் பிரதாபன சக்தி முதல்.
(8) இது ஒரு நிறம். சமயத் துறவிகள் அணிகின்ற ஆடையின் நிறம்.
(10) நாம் கறி சமைக்கப் பயன்படுத்துகின்ற காய்கறியொன்றின் செடிக்குரிய பெயர்.
(16) அன்றைய காலத்தில் அரசர்களுக்கு பட்டாபிஷேகம் செய்யும்போது, அவர்களது தலையில் கிரீடம் போல சூட்டிக் கொள்வது இது. அரசன் தலையில் சூடிக் கொள்கின்ற கிரீடம்.
(தலைகீழான சொல்)
(21) மன்னன் என்றும் பொருள் தருகின்ற சொல்.
(23) மலையில் இருந்து வீழ்கின்ற நீரூற்று.
(26) ஊருக்கு வனப்பும், செழுமையும் தருகின்ற நீர்நிலை.
(தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) தன்மையும், அழகும் நிறைந்த உபகோள்.
(3) தகவல் பரிமாற்றத்துக்கான தொடர்பு சாதனம். இன்றைய நவீன யுகத்தில் இலகுவழி தொடர்பு சாதனங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ள போதிலும், இதன் முக்கியத்துவம் குறையவில்லை.
(5) கழிவுநீர் வடிந்தோடும் இடம்.
(தலைகீழான சொல்)
(9) வாலிபன் ஆன பின்னர், ஆண் ஒருவனின் வாழ்க்கைத் துணை இவள்.
(தலைகீழான சொல்)
(13) மரம் தறிக்கவும், விறகு வெட்டவும் பயன்படும் உபகரணம்.
(தலைகீழான சொல்)
(18) மலையைக் குறிக்கும் சொல்.
(20) அறிவூட்டும் ஆசான்.

**போட்டி இல. 313**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 312

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பருந்து 06. கல் 11. துருவம்
15. மந்தை 19. பந்தி 24. அணில்

**மேலிருந்து கீழ்**

01. பல்லி 02. கரு 04. மருந்து
05. குடம்பி 11. பந்து 15. சந்தை 22. மணி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 311

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**ச. சஞ்ஜனா,**
தரம் 12 (கலைப்பிரிவு),
மட்/விஷ்ணு மகா வித்தியாலயம்,
வந்தாறுமூலை.

**இரண்டாம் பரிசு**
**எம்.எஸ்.எப். ஆயிஷா,**
தரம் 11, கா/துந்துவை மு.ம.வி.,
தநுதுவ, கபுறுகல,
பெந்தோட்டை.

**மூன்றாம் பரிசு**
**எம்.ஆர். ஸாரா,**
தரம் 08, மாறை/அல் மினா ம.வி.,
மீயல்லை.

### பாராட்டு பெறுவோர்

**1. ரமீஸ் இமாரா இஸ்ரா,**
தரம் 08, அல் அமான் மு.ம.ம.வி.,
கல்லொலுவ,
மினுவாங்கொட.

**2.பஹ்மா ருஷ்தி,**
தரம் 06 ஏ, பென்ஹில் கல்லூரி,
கம்பளை.

**3. ஏ.எச். அப்துல் அலீம்,**
தரம் 07 சி, அலிகார் தேசிய கல்லூரி,
ஏறாவூர்.

**4. எம்.ஏ.எப். அலீனா,**
தரம் 06 பி (த),
க/ பதுயுதீன் மகளிர் வித்தியாலயம்,
கண்டி.

**5. ரவீந்திரன் சபரீசன்,**
தரம் 04,
மட்/பட்/குருமன்வெளி கனிஷ்ட வித்தியாலயம்.



குறளமுதம் :

**கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை.**

***தெளிவுரை :*** *நூல்களைக் கற்கவில்லையாயினும், கற்றறிந்தவரிடம் கேட்டறிய வேண்டும்; அஃது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல்போல் துணையாகும்.*



## பென்குயின்

சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் கவர்ந்த பறவைகளில் பென்குயின்களும் அடங்கும். வெள்ளை நிற வயிற்றை தூக்கியபடி துடுப்பு போன்ற இறக்கைகளை அசைத்து, அசைத்து அவை நடந்து செல்வதைப் பார்க்க ரம்மியமாக இருக்கும். இவற்றை நேரில் பார்க்க வேண்டும் என்றால் அண்டார்டிகாவுக்கு தான் செல்ல வேண்டும். அங்கு அவை கூட்டம் கூட்டமாக அணிவகுத்து பனியில் நகர்ந்து செல்லும் அழகே தனி! பென்குயின்களால் பறக்க இயலாது! இவை பெரும்பாலும் நீரிலும் அவ்வப்போது நிலத்திலும் வாழ்பவை. பென்குயின்களில் எம்பார் பென்குயின், அடடிய், ஜென்டூ, சின்ஸ்ட்ராப், மக்ரோனி, ராக் ஹொப்பர் என பல வகைகள் உண்டு.

இவற்றில் சில ஒரு அடி முதல் சுமார் 5 அடி வரை உயரம் கொண்டவை. இவை நீரில் லாவகமாக நீந்தும். பென்குயின்கள் கூட்டமாகவே வாழ்வதுண்டு.

இவைகளுக்கு பிடித்த உணவு, அண்டார்டிகா கடலில் அபரிமிதமாகக் கிடைக்கும் கிரில் வகை மீன்களாகும்.

பென்குயின்கள் திமிங்கிலங்களின் உணவாக இருக்கின்றன.

பென்குயின்கள் மனிதர்களிடம் மிகவும் சிநேகம் பாராட்டும் குணம் கொண்டவை. தன் ராஜ நடையோடு மனிதர்களுக்கு நடுவிலும் வந்து போய்க்கொண்டிருக்கும்!

**என். வினோமதிவதனி,**
லுணுகலை.



# இவ்வார சிரிப்பு

**முகமட் சமர்**

அமான் / சஸ்னா,
சீனக்குடா, திருகோணமலை.

## விடுகதைகள்

1. உதை வாங்கி உதை வாங்கி ஊருக்கு சேதி சொல்லுவான். இவர் யார்?
2. கருப்பன் தண்ணீரில் குளித்து வெள்ளையனாவான். வெள்ளையானவன் பிறகு விருந்தாவான்..
3. உருவம் இல்லாத ஒருவன், உலகெங்கும் உலவித் திரிவான்
4. அடித்தாலும் உதைத்தாலும் இவன் அழமாட்டான்
5. எவ்வளவு மழையில் நனைந்தாலும் இவனுக்கு நடுக்கமே வராது இவன் யார்?
6. அனலில் பிறந்தவன், ஆகாயத்தில் பறக்கிறான்.
7. வயிற்றில் விரல் சுமப்பான், தலையில் கல் சுமப்பான்..
8. ஓடையில் நிற்கும் ஒற்றைக் காலனுக்கு, ஒரே குறிக்கோள் உணவுதான்..
9. ஒற்றைக்கால் பந்தலில் ஊரெல்லாம் தங்கலாம், இது என்ன?

**விடைகள்**

1. தண்டோரா 6. புகை
2. உளுந்து 7. மோதிரம்
3. காற்று 8. கொக்கு
4. பந்து 9. ஆலமரம்
5. குடை

**ஆ.சுஸ்மிதன்**
நோர்வூட் த.ம.வி
நோர்வூட்

## நூல்களும் ஆசிரியர்களும்


| | | |
|---|---|---|
| தமிழில் ஆசிய ஜோதி | - | தேசிய விநாயகம் பிள்ளை |
| அர்த்தமுள்ள இந்துமதம் | - | கவிஞர் கண்ணதாசன் |
| யேசு காவியம் | - | கவிஞர் கண்ணதாசன் |
| கம்பெரலிய | - | மார்ட்டின் விக்கிரமசிங்க |
| கீதாஞ்சலி | - | ரவீந்திரநாத் தாகூர் |
| இரகுவம்சம் | - | காளிதாசன் |
| மதங்கசூளாமணி | - | சுவாமி விவேகானந்த அடிகளார் |
| த இத்தாலி | - | முசோலினி |
| ஹம்லட் | - | வில்லியம் சேக்ஸ்பியர் |
| விலா | - | மார்ட்டின் விக்கிரமசிங்க |
| சத்தியசோதனை | - | மகாத்மா காந்தி |
| யாழ். நூல் | - | சுவாமி விபுலானந்த அடிகளார் |
| மகாவம்சம் | - | மகாநாம தேரர் |

**கே.எல். ஹில்மி,**
தேசிய பாடசாலை,
சம்மாந்துறை.






**எம்.ஐ. ஆயிஷா,**
தரம் 06,
இர/அல் அக்ஸா முஸ்லிம் மகா வித்தியாலயம்,
எஹலியகொட, இரத்தினபுரி.



**எம்.எப்.ஏ. ஹம்மாஷ்,**
சென். மேரிஸ் கல்லூரி,
நாவலப்பிட்டி.



**எச். பாத்திமா அக்ஸா,**
லிட்டில்பிளவர் பாலர் பாடசாலை,
வெளிமடை.



**சவ்தா ஜிப்ரி,**
தரம் 09, மாறை. அஸ் ஸபா மு.ம. வித்தியாலயம்,
மாத்தறை.

## தொடர்மொழிக்கு ஒரு மொழி

| | | |
|---|---|---|
| **சுயசரிதை** | : | ஒருவர் தன்னைப்பற்றி தானே எழுதும் சரிதை. |
| **சிலேடை** | : | ஒரு சொல் இரு கருத்தைக் கொண்டு வெளிப்படுத்துவதாக அமைந்தது. |
| **விவேகி** | : | எவ்விடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமோ அவ்வாறு நடந்து கொள்ளும் திறமையுடையவர். |
| **ஒத்திகை** | : | கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்த்தல். |
| **வள்ளல்** | : | யாவருக்கும் இல்லையென்று சொல்லாது வழங்குபவர். |
| **முன்னுரை** | : | நூலாசிரியர் தமது நூலைப்பற்றி எழுதும் உரை. |
| **பதிப்புரை** | : | ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை. |
| **அடிவானம்** | : | ஆகாயமும் கடலும் ஒன்றையொன்று தொடுவது போல தோன்றும் கோடு. |
| **நடத்துநர்** | : | பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர். |
| **தீர்க்கதரிசி** | : | எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன். |

**நி. இலக்கியா,**
தரம் 05, றோமன் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை,
வத்தளை.

## மனிதனுக்கு புகழ் எவ்வாறு கிடைக்கும்?

மனிதன் எவ்வளவு தெரிந்து கொண்டிருக்கிறான் என்பதில் புகழ் இல்லை. என்ன நல்ல செயல்களை சமுதாயத்திற்கு செய்து கொண்டிருக்கிறான் என்பதில் தான் புகழ் இருக்கிறது. புகழ் என்பது தன்முனைப் பிற்கு போடும் தூபம் அல்ல.

நற்செயலின் விளைவினால் பயனடையும் மக்கள் அன்போடு கொடுக்கும் மதிப்புணர்வே புகழாகும்.

நீங்கள் புகழைத் தேட முயற்சித்தீர்களானால் அந்த வேட்பே புகழ் உங்களை அணுகாமல் துரத்தும் சக்தியாகும்.

**சோ.வினோஜ்குமார்,**
தொழில்நுட்ப பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
கிளிநொச்சி.



கடந்தாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அக்குறணை முஸ்லிம் பெண்கள் மகா வித்தியாலய மாணவி எம்.டபிள்யூ.எப். அம்னா 188 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் அக்குறணை நீரெல்லையைச் சேர்ந்த எம்.வை.எம். வசீர் நூருல் ஸியானி தம்பிகளின் புதல்வியாவார்.

**மாணவர் கழக அங்கத்துவ இல : 427**



**எஸ். கேஷிகன்,**
தரம் 01,
பது/கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம்,
ஹொப்டன்.

**மாணவர் கழக அங்கத்துவ இல : 428**



**ஏ.பி. ஹினாபத் ஹேபா,**
தரம் 04,
கமு/சது/அல் ஹம்றா வித்தியாலயம்,
செந்நெல் கிராமம்,
சம்மாந்துறை.

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ..........................................
பிறந்த திகதி ..........................................
வகுப்பு ..........................................
பாடசாலை ..........................................
..........................................

..........................................
வகுப்பாசிரியர் கையொப்பம்

**வர்ணப் புகைப்படம்**

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**

# விளையாட்டு



## தனுஷ்கவிடம் மன்னிப்பு கோரினார் பொலார்ட்

அன்டிகுவா சேர் விவியன் றிச்சர்ட்ஸ் விளையாட்டரங்கில் புதனன்று நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் களத்தடுப்புக்கு தடை ஏற்படுத்தினார் எனக் கோரி இலங்கை வீரர் தனுஷ்க குணதிலக்கவை ஆட்டமிழக்கச் செய்தமைக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் கீரன் போலார்ட் மன்னிப்பு கோரியுள்ளார்.

போட்டியின் பின்னர் பொலார்ட் தன்னிடம் மன்னிப்பு கோரியதாக குணதிலக்க தெரிவித்தார்.

வீடியோ சலன அசைவுகளைப் பார்வையிட்ட பின்னர் குணதிலக்க குற்றம் செய்யவில்லை என்பதை பொலார்ட் புரிந்துகொண்டு தான் தவறு செய்துவிட்டதை உணர்ந்து தன்னிடம் மன்னிப்பு கோரியதாக குணதிலக்க குறிப்பிட்டார்.

'சம்பவ நேரத்தில் அதனை சரியாகப் பார்க்கவில்லை என என்னிடம் தெரிவித்த அவர், மன்னிப்பு கோரினார். வீடியோவை நன்கு பார்த்த பின்னரே நான் எதுவும் செய்யவில்லை என்பதை அவர் புரிந்துகொண்டார்' என தனுஷ்க குணதிலக்க தெரிவித்தார்.

37ஆம் இலக்க கிரிக்கெட் விதிகளின் பிரகாரம், வேண்டுமென்றே களத்தடுப்புக்கு தடை அல்லது இடையூறு ஏற்படுத்தும் துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்ததாக அறிவிக்க முடியும். ஆனால் தனுஷ்க குணதிலக்க பொலார்ட்டிடமிருந்து வேண்டுமென்று பந்தை நகர்த்தவில்லை என்பது வீடியோ காட்சி தெளிவுபடுத்தியுள்ளது.



### சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில்

# இலங்கையின் இளம் வீரர்கள் இருவர்





இந்தியாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐபிஎல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் வலைப்பயிற்சிகளில் இணைந்து கொள்ளுமாறு இலங்கை அணியின் இரண்டு இளம் பந்துவீச்சார்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் இரசிகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ள 14வது ஐபிஎல் ரி20 கிரிக்கெட் தொடர் ஏப்ரல் 9ஆம் திகதி சென்னையில் ஆரம்பமாகவுள்ளது. அதற்காக தயாராகும் பணியில் ஒவ்வொரு அணியினரும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த முறை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, லீக் சுற்றுகூட செல்லாமல் வெளியேறியது. ஆனால் இந்த முறை மீண்டும் சம்பியன் பட்டத்தை வெல்லும் ஆவேசத்துடன் ஐபிஎல் தொடரில் களமிறங்க உள்ளதுடன், எதிர்வரும் 9ஆம் திகதி முதல் சென்னையில் பயிற்சியைத் தொடங்க உள்ளது.

அணியின் தலைவர் எம்எஸ் தோனி கடந்த வாரம் சென்னையை வந்தடைந்தார்.

இதன்படி, இந்த வாரம் முதல் சென்னை சேப்பாக்கத்தில் நடைபெறும் பயிற்சியில் தோனி, அம்பதி ராயுடு உள்ளிட்ட அணி வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் வலை பயிற்சிகளில் ஈடுபட இலங்கை அணியின் இளம் பந்துவீச்சாளர்களான மஹீஷ் தீக்ஷன மற்றும் மதீஷ பத்திரன ஆகிய இருவருக்கும் சென்னை அணி நிர்வாகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இறுதியாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற அபுதாபி ரி10 லீக் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற நொதர்ன் வொரியர்ஸ் அணியில் இடம்பிடித்த அவர், இறுதிப் போட்டியில் பந்துவீச்சில் அசத்தி ஆட்டநாயகன் விருதினை தட்டிச் சென்றார்.

மறுபுறத்தில் இறுதியாக நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட இளையோர் உலகக் கிண்ணத்தில் இலங்கைக்காக விளையாடியவரும், லசித் மாலிங்கவின் பந்துவீச்சுப் பாணியைக் கொண்ட 19 வயதுடைய மதீஷ பத்திரன, இறுதியாக நடைபெற்ற அபுதாபி ரி10 லீக் தொடரில் பங்ளா டைகர்ஸ் அணிக்காக விளையாடியிருந்தார். இதனிடையே, மஹீஷ் தீக்ஷன தற்போது உள்ளூர் முதல்தர கழகங்களுக்கிடையிலான ரி20 தொடரில் இராணுவ கிரிக்கெட் கழகத்துக்காக விளையாடி வருவதுடன், மதீஷ பத்திரன, கண்டி திருத்துவக் கல்லூரி அணிக்காக 19 வயதுக்குட்பட்ட போட்டித் தொடரில் களமிறங்கவுள்ளார்.

இதனால் குறித்த இரண்டு வீரர்களுக்கும் சென்னை அணியுடனான வலைப்பயிற்சியில் இணைந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேபோல, இலங்கை கிரிக்கெட் அனுமதிக்காகவும் குறித்த இரண்டு வீரர்கள் காத்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக இம்முறை ஐபிஎல் ஏலத்தில் இலங்கை சார்பில் 29 வீரர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்திருந்தாலும், இறுதியில் 9 வீரர்களே குறும்பட்டியலில் இடம்பெற்றனர். ஆயினும் எந்தவொரு வீரரும் ஏலத்தில் வாங்கப்படவில்லை.

எதுஎவ்வாறாயினும், ஐபிஎல் குறும்பட்டியலில் இடம்பெற்றிருந்த சுழல் பந்துவீச்சாளர் மஹீஷ் தீக்ஷன தற்போது சென்னை அணிக்கு வலைப்பந்துவீச்சாளராக அழைத்துள்ளமை சிறப்பம்சமாகும்.

சென்னை அணியில் இவர்கள் இணைக்கப்படாவிட்டாலும் மேலதிக வீரர்களாக தோனி உள்ளிட்ட முன்னணி வீரர்களுடன் தமது ஆற்றலை வெளிப்படுத்த ஒரு அரிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளமை பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

பீ.எப் மொஹமட்...

### கட்டார் டோட்டல் பகிரங்க டென்னிஸ்

## பெட்ரா கிவிட்டோவா சம்பியனானார்



கட்டார் டோட்டல் பகிரங்க டென்னிஸ் போட்டியில் சம்பியனானதையிட்டு பெரு மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதாக செக் குடியரசு வீராங்கனை பெட்ரா கிவிட்டோவா தெரிவித்துள்ளார்.சில போட்டிகளில் இலகுவாக வெற்றிபெறக்கூடியதாக இருந்தபோதிலும் கடுங் காற்று காரணமாக மற்றைய சில போட்டிகளில் கடுஞ் சவாலுக்கு மத்தியில் வெற்றிபெற நேரிட்டதாக அவர் குறிப்பிட்டார். டோஹாவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்பெய்ன் வீராங்கனை கார்பின் முகுருஸாவை 6-2, 6-1 என்ற புள்ளிகளைக் கொண்ட இரண்டு நேர் செட்களில் கிவிட்டோவா வெற்றிகொண்டு சம்பியனானார். சில கால இடைவெளிக்குப் பின்னர் கிவிட்டோ வென்றெடுத்த சம்பியன் பட்டம் இதுவாகும்.நிரல்படுத்தலில் நான்காம் இடத்திலுள்ள கிவிட்டோவா இந்தப் போட்டியை டோஹாவில் கிவிட்டோவா ஈட்டிய இரண்டாவது சம்பியன் பட்டம் இதுவாகும். அத்துடன் அவரது டென்னிஸ் வாழ்க்கையில் ஈட்டிய 28ஆவது சம்பியன் பட்டமாகும். இது இவ்வாறிருக்க, துபாய் டென்னிஸ் போட்டியில் பங்குபற்றி வந்த கிவிட்டோவா இரண்டாம் சுற்றில் உபாதைக்குள்ளானதால் விலகிக்கொண்டுள்ளார்.

# 32 தேசிய, கனிஷ்ட மெய்வல்லுநர்களுக்கு ரிட்ஸ்பரி நிறுவனம் அனுசரணை

பீ.எப் மொஹமட்

டோக்கியோ 2020 ஒலிம்பிக் விளையாட்டு விழா உட்பட இன்னும் பல சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கைக்கு வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்கின்ற வீர, வீராங்கனைகளின் திறமைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் 'ரிட்ஸ்பரியின் தேசத்துக்கு ஒரு வெற்றிவீரர்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 32 மெய்வல்லுநர்களுக்கு அனுசரணை வழங்கப்பட்டது.

கடந்த ஒன்றரை தசாப்தங்களாக இலங்கையின் மெய்வல்லுநர் விளையாட்டு உள்ளிட்ட ஸ்கொஷ், நீச்சல், றக்பி, டென்னிஸ் ஆகிய விளையாட்டுக்களுக்கும் தொடர்ச்சியாக அனுசரணை வழங்கி வருகின்றது ரிட்ஸ்பரி.

இந்நிலையிலேயே, இலங்கைக்கு பதக்கங்களை வென்றுகொடுக்கக்கூடியவர்கள் என தேசிய மெய்வல்லுநர் தெரிவுக்குழுவினால் இனங்காணப்பட்டுள்ள 2019 முதல் தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் தொடர்ந்து திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற 18 வீர, வீராங்கனைகளுக்கு மாதம் 25 ஆயிரம் ரூபா வீதம் 3 இலட்சம் ரூபா அனுசரணையை ரிட்ஸ்பரி நிறுவனம் வழங்கவுள்ளது.

இதில் சிறப்பம்சம் என்னவெனில், தேசிய ரீதியில் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற 18 வீரர்களினதும் பயிற்சியாளர்களாக கடமையாற்றி வருகின்ற 10 பேருக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை மெய்வல்லுநர் பயிற்றுநர்கள் சங்கத்தின் முன்மொழிவுக்கு அமைய எதிர்கால நட்சத்திரங்களாக விளங்குகின்ற 14 பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கு மாதந்தோறும் ஐயாயிரம் ரூபா வீதம் வழங்கி வருகின்ற 60 ஆயிரம் ரூபா அனுசரணைத் தொகையை இந்த வருடம் முதல் 32 வீரர்களாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரிட்ஸ்பரியின் தேசத்துக்கு ஒரு வெற்றிவீரர் திட்டத்தின் கீழ் நன்மை பெறவுள்ள வீரர்களுக்கு அனுசரணை வழங்கும் வைபவத்தில் பேசிய சிபிஎல் புட்ஸ் இன்டர்நெஷனல் லிமிட்டெட்டின் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) நிலுபுல் டி சில்வா, 'நாட்டில் முதல்தர சொக்லெட் என்ற வகையில் இலங்கையின் முதல்தர மெய்வல்லுநர்களுக்கு நாங்கள் அனுசரணை வழங்குகின்றோம்.

பல்வேறு நெருக்கடிகள் காரணமாக எமது விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் பதக்க கனவை கைவிட நேரிடுகின்றது. வீரர்கள் எவ்வித தடைகளையும் எதிர்கொள்ளாமல் ஒலிம்பிக் பதக்க கனவை நனவாக்கும் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்' என தெரிவித்தார்.



இதேவேளை, குறித்த வைபவத்தில் சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் குழுமப் பணிப்பாளர் ரஸித் விக்ரமசிங்ஹ, பிரதான நிறைவேற்று அதிகாரி சமித பெரேரா, இலங்கை மெய்வல்லுநர் சங்க தெரிவுக் குழு தலைவர் விமலசேன பெரேரா, அதன் உறுப்பினர்களான இனோகா குரே, மெய்வல்லுநர் சங்கத்தின் செயலாளர் ப்ரேமா பின்னவல மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுனர் சங்கத்தின் தலைவர் உபாலி அமரதுங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா நிதி உதவிபெறும் வீரர்கள்:**

சுமேத ரணசிங்க, வினோஜ் சஞ்சய டி சில்வா, அருண தர்ஷன, ஹிமாஷ ஏஷான், அமில ஜயசிறி, குப்புன் குஷாந்த, ரொஷான் தம்மிக்க, செனிரு அமரசிங்க, நிமாலி லியன ஆராச்சி, ஷெலிண்டா ஜென்சென், நடீஷா ராமநாயக்க, இனேக்கா குறே, டில்ஷா குமாரசிங்க, அமாஷா டி சில்வா, லக்ஷிகா சுகந்தி, நிலானி ரட்நாயக்க, இந்துனில் ஹேரத், சுரேஷான் தனஞ்சய, விதூஷா லக்ஷானி

**மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா நிதி உதவிபெறும் வீரர்கள்:**

காவிந்தி சஞ்சனா, அமேஷா ஹெட்டிஆராச்சி, இஷார பல்லேகம, நவிஷ்க சந்தேஷ், ரஷ்மி காவிந்தியா, சதீப்பா ஹெண்டர்சன், காவிந்தி தத்சரணி, ஷானிக்கா லக்ஷானி, ஜனிந்து லக்விஜய, டபிள்யூ. கே. பியசிறி, ஹர்ஷா கருணாரட்ன, சதினி காவீஷா, டிலான் போகொட.

### SLTMOBITEL அனுசரணையில்

## Southern Eliyakanda Hill Climb வெற்றிகரமாக நிறைவு

'SLTMobitel Speedup Southern Eliyakanda Hill Climb 2021' மோட்டார் சைக்கிள் மற்றும் கார் பந்தய சம்பியன்ஷிப் போட்டிகள் வெற்றிகரமாக பூர்த்தியடைந்தன. இலங்கையின் அல்ட்ரா உயர் வேக ஃபைபர் புரோட்பான்ட் மற்றும் வேகமான மொபைல் இணையச் சேவைகள் வழங்குநரான SLTMOBITEL அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு கடந்த பெப்ரவரி 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் மாத்தறை, எலியகந்த பந்தயத் திடலில் இடம்பெற்றன.

25 ஆவது 'SLTMobitel Speedup Southern Eliyakanda Hill Climb 2021' போட்டிகளை முன்னெடுப்பதற்காக சதர்ன் மோட்டர் விளையாட்டுக் கழகத்துடன் SLTMOBITEL கைகோர்த்திருந்தது. தொடர்ச்சியான ஆறாவது தடவையாகவும் இந்த மாபெரும் போட்டிகளின் பிரதான அனுசரணையாளராக SLTMOBITEL கைகோர்த்திருந்தது.

இந்த விறுவிறுப்பான பந்தயத் தொடரில் 16 மோட்டார் சைக்கிள் நிகழ்வுகள் மற்றும் 17 மோட்டார் கார் பந்தயங்கள் இடம்பெற்றதுடன், அதில் 600 மீற்றர்களை உள்வாங்கி குன்று ஏறும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மூன்று கட்டங்களாக இந்த போட்டிகள் இடம்பெற்றன. மோட்டார் சைக்கிள் போட்டிகள் பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்றதுடன், கார் பந்தயங்கள் 28 ஆம் திகதி இடம்பெற்றன. பந்தயத்தின் ஏற்பாட்டாளர்கள் கடுமையான சுகாதார விதிமுறைகளை பின்பற்றியிருந்ததுடன், சுகாதார அதிகார அமைப்புகளினால் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வழிகாட்டல்களையும் பேணியிருந்தனர். மேலும், 'PeoTV Event' அலைவரிசையில் மற்றும் SLTMOBITEL இன் சமூக வலைத்தளப் பக்கங்களில் இந்த நிகழ்வை நேரடியாக கண்டு களிப்பதற்கான வசதியை SLTMOBITEL ஏற்படுத்தியிருந்தது. இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரின் பங்கேற்பில் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், SLTMOBITEL இன் சிரேஷ்ட முகாமைத்துவ அணியினர் நிறைவு செய்யும் நிகழ்வில் பங்கேற்று வெற்றிகரமான முறையில் நிகழ்வுகளை பூர்த்தி செய்தனர்.

இந்த ஆண்டு இடம்பெற்ற போட்டிகளில் 220 போட்டியாளர்கள் பங்கேற்றிருந்ததுடன், இதில் புகழ்பெற்ற கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பந்தய வீரர்களும் பங்கேற்றிருந்தனர். 103 மோட்டார் சைக்கிள் போட்டியாளர்களுள் ஜேடன் குணவர்தன பந்தயத்தில் வெற்றி பெற்றுக் கொண்டார். இவர் 33.63 செக்கன்களில் பந்தயத்தை பூர்த்தி செய்திருந்தார். கார் பந்தயத்தில் 25 வருட கால வரலாற்றில் முதன்முறையாக பந்தயத் தூரத்தை 31.26 செக்கன்களில் பூர்த்தி செய்து அஷான் சில்வா வரலாற்றுச் சாதனையை பதிவு செய்திருந்தார். முன்னைய பந்தயமொன்றில் திலான் செனெவிரத்னவின் 31.783 செக்கன்கள் எனும் சாதனையை



அஷான் முறியடித்திருந்ததுடன், இந்த ஆண்டு அவர் தமது சொந்த சாதனையை முறியடித்திருந்தமை விசேட அம்சமாக அமைந்திருந்தது.

SLTMobitel Speedup Southern Eliyakanda Hill Climb என்பது தேசிய சம்பியன்ஷிப் நிகழ்வாக அமைந்திருப்பதுடன், இலங்கையில் மோட்டார் பந்தயங்களின் மேற்பார்வை கட்டமைப்பான, இலங்கை வாகனங்கள் விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் இயங்குகின்றது. நாடு முழுவதையும் சேர்ந்த மோட்டார் பந்தய ஆர்வலர்களுக்கு இலங்கையின் சிறந்த மோட்டார் வாகன பந்தயத்தின் அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இது இருக்கிறது.

பந்தயங்கள் வெற்றிகரமாக பூர்த்தியடைந்தமை தொடர்பில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "Southern Eliyakanda Hill Climb குன்று ஏறல் போட்டிகளுக்கு தொடர்ச்சியான ஆறாவது ஆண்டாகவும் அனுசரணை வழங்க முடிந்ததையிட்டு SLTMOBITEL பெருமை கொள்கின்றது. வேகமான புரோட்பான்ட் சேவைகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழும் SLTMOBITEL, விளையாட்டின் ரசிகர்கள் அதிகளவு எதிர்பார்த்துக் காத்திருந்த இந்த போட்டிகளை கண்டு களிப்பதற்கான வசதியை ஏற்படுத்தியிருந்தது." என்றார்.

சதர்ன் மோட்டர் விளையாட்டுக் கழகத்தின் கலாநிதி சஞ்ஜய சேதர செனரத் கருத்துத் தெரிவிக்கையில், "இந்தப் போட்டித் தொடரை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு SLTMOBITEL வழங்கியிருந்த ஆதரவை நாம் மிகவும் பாராட்டுகின்றோம். இலங்கையில் மோட்டார் பந்தய விளையாட்டின் தரத்தை மேம்படுத்தி இலக்குகளை எய்துவதற்கான தமது வலிமையை இது மேலும் மேம்படுத்தியிருந்தது." என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## வாழ்வாதாரமா சேதாரமா

170



தமிழ்க் கவி பேசுகின்றார்

அங்கே பிறந்திருக்கும் பிள்ளைகளும் இந்த பெரியவர்களைச் சார்ந்து வாழ்கிறார்கள். அவர்களுக்கு பராயம் வரும்வரை அவர்களது தொடர்புகள் விளையாட்டு என்பன மட்டுமல்லாமல், நற்பழக்க வழக்கங்களும் சீராக பேணப்படுகிறது. விளையாட நினைத்தால் அயல்பிள்ளைகளும் தனது சகோதரர்களுமாக ஒரு கூட்டமே சேர்ந்து விளையாடும். அந்த விளையாட்டுத்திடலில் எத்தனை விதமான கதைகள் உறவுப்பரிமாறல்கள் நட்புகள் இருக்கும்..

இன்றைய பிள்ளைகளுக்கு அந்த வாய்ப்புகள் இல்லை. பாடசாலை விட்டு வந்தபின் தனியார் கல்விக்கூடங்களில் பிள்ளைகள் சிறை வைக்கப்படுகின்றன. மாலையில், (சிலர் இரவில்) வீட்டுக்கு வந்தால் அப்பா தன் கணனியுடனோ கைபேசியுடனோ இருப்பார். அம்மா தொலைக் காட்சிப் பொட்டிக்குள்ளோ அல்லது அடுக்களையிலோ இருப்பாள். அங்கே பாட்டி பாட்டன் மாமா மாமி என யாரும் கிடையாது அந்தப் பிள்ளை தனது உள்ளக்கிடக்கைகளை யாரிடமாவது சொல்ல வேண்டும் என்று விரும்பினால்கூட அம்மாவுக்கோ அப்பாவுக்கோ நேரம் கிடையாது. மனமும் கிடையாது. அது தனிக்கு தொழிலில் அல்லது தாயின் வேலையில் உதவி செய்து பார்த்திருக்கிறீர்களா? அப்படியாவது பேசிக் கொண்டே வேலை செய்யலாமே.

பணம் பணம் பணம் ஒன்றே குறியாக ஓடித் திரிகிறோமே. நாம் சம்பாதித்த பணத்தை வைத்து என்பிள்ளை வாழுவானா? என்பதை யாரும் நினைப்பதில்லை ஒழுங்கு செய்யப்பட்ட திருமணத்திலும் சரி காதல் திருமணத்திலும் சரி. அந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் விடிய விடிய பேச விடயங்கள் இருக்கும். திருமணமான பிறகு அவர்கள் யந்திரமாகி விடுகிறார்கள்.

காதலிக்கிறபோது மணிக்கணக்கில் பேசியவன் கல்யாணத்துக்குப் பிறகு அவசியமான விடயத்தைக்கூட காதில் போட்டுக் கொள்ளாமல் அலட்சியப்படுத்தும்போது அது சச்சரவாக வெடிக்கிறது. சச்சரவுக்குப் பயந்து அவன் வீட்டுக்கு வருவதை தாமதமாக்குகிறான். இது பிரச்சினையை மேலும் இறுக்கமாக்குகிறது. வீட்டுக்கு வருவதே நரகமாக தெரியும்போது, அவன் மது பானத்தை நாடுகிறான். விளைவு விவாகரத்தாகவோ தற்கொலையாகவோ முடிகிறது. தற்கொலைக்கான தீர்மானம் ஒரு விநாடிக்குள்தான் எழுகிறது. சரியான துணை இருந்தால் காப்பாற்றிவிட முடியும்.

# தனியார் கல்விக்கூடங்களில் சிறை வைக்கப்படும் பிள்ளைகள்



மனிதன் ஒரு போதும் மற்றவர்களை சார்ந்திருக்காமல் வாழவே முடியாது. முற்காலத்தே தாய்வழிச்சமூகம் முற்று முழுதாக குழுவாக அதாவது சேர்ந்தே வாழ வேண்டிய நிலை இருந்தது. காலங்கள் மாறிவிட இன்றைய வாழ்க்கை முறையில் ஒருவரைச் சார்ந்து தான் அல்லது ஒரு குழுவைச் சார்ந்தே இன்னொரு குழு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. காரணம் ஒவ்வொரு மனிதனின் தேவைகளையும் அவனே நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் இருக்கிறது. மனிதனுக்கு மனிதன் என்ன? நாடுகளே ஒரு நாடு இன்னொரு நாட்டை சார்ந்துதான் வாழ்கிறது.

நாம் இலங்கையர்கள் எமது ஆடை விசயத்தில் நாம் தன்னிறைவு அடையவில்லை. ஆனால் அதை தைத்து உருப்படிகளாக்குவதில் திறமை பெற்றுள்ளோம். இதேபோல எரிபொருளுக்காக நாம் இன்னொரு நாட்டை நாடவேண்டியுள்ளது. இது வெறும் உதாரணம்தான் அந்த செயலைத் தான் பண்ட மாற்று அல்லது வர்த்தகம் என்று கூறுகிறோம். பெரும் தேசங்களுக்கே இப்படியென்றால், வாழும் கிராமங்களுக்குள்ளும் விரலுக்கேற்ற வீக்கம் மாதிரி அது இருக்க வேண்டியதுதானே. எங்கள் கிராமத்து தேங்காய்களை கொடுத்து இன்னொரு கிராமத்து பழங்களை பெறலாம். நெல்லைக் கொடுத்து வேறு தானியங்களை பெறலாம். அல்லது பணமாக வாங்கி தேவையான பொருட்களாக மாற்றலாம்.

உலகமே இப்படியெனில் வீடுகளுக்குள் எப்படி வாழ்ந்தோம். அம்மா அப்பா பேரன் பேத்தி மாமா மாமி அண்ணன் தம்பி அக்காள் தங்கை. அயலவர் என எண்ணிப்பாருங்கள் அந்த கூட்டு வாழ்க்கையை. அப்பா வெளியூர் போகவேண்டும் என்றால், எந்த தடையுமில்லலாமல் புறப்பட்டு போக முடியும். இங்கே வீடு நிறைந்த உறவுகள் இருப்பதால் தன் பிள்ளைகள் மனைவி என்று பதறத் தேவையில்லை. அந்த மகனைப் பெற்றவர் இன்று அவனைச் சார்ந்து அந்த வீட்டில் வாழ்கிறார்கள். அதேபோல டித்தனம். பிள்ளையும் ஒற்றைப்பிள்ளை. அதற்கு கூடி விளையாடவோ பேசவோ சகோதர உறவுகள் கிடையாது.

கொஞ்சம் காது கொடுங்கள் குடும்பத்தினருடன் குதூகலமாக பேச ஒரு மணித்தியாலத்தை ஒதுக்க முன்வாருங்கள். எனக்குத் தெரிந்த ஒரு குடும்பம் தந்தையும் மகனும்தான். தாய் இறந்து விட்டாள். பத்து வயதிலிருந்து அந்தப்பையனும் தந்தையும்தான். வானொலிக்காலம் ஆனால் இரவில் மட்டுமே வானொலி பாடும். பகலில் தந்தையும் மகனும் கூடி வேலை செய்வார்கள். பின் கூடி நீச்சலடிப்பார்கள். இருவருமாக சமைப்பார்கள். இரவு வானொலி கேட்டு விட்டு படுப்பார்கள். அந்த தந்தை சாகும்வரை அந்த மகன் அவ்வளவு கரிசனையாகப் பார்த்தான். பகலில் தொலைக்காடசி போடுவதை நிறுத்தி வைத்திருக்கும் குடும்பம் ஒருசில இப்போதும் உண்டு. அதெல்லாம் பிள்ளைகளின் டியூசன் வகுப்புகளை வீட்டிலேயே ஒழுங்குபடுத்தி உள்ள வீடுகளில்தான். எந்தப்பிள்ளையாவது தந்தையின் எல்லா மனோத்தத்துவ நிபுணர்களும் சொல்வது இதைத்தான். ஆனால் செய்ய முடிகிறதா.

வெளிநாட்டில் இருக்கும் என் நண்பருக்கு நான் தொலைபேசியில் தகவல் ஒன்றை சொன்னேன் "ஒரு பெண் மூன்று குழந்தைகளைக் கொன்று தானும் தற்கொலை செய்திருக்கிறாளாம்" என்று. அதற்கு அவன் "பரவாயில்லை. இங்கே தான் பெற்ற பிள்ளையையே கத்தியால் குத்திக் கொல்வதும் மனைவி பிள்ளைகளை வெட்டிவிட்டு தற்கொலை செய்வதுமான சம்பவங்கள் நடக்கிறது" என்றான்.

வாழ்க்கையை தூக்கி எறிந்து விட்டு சாவை தேடிப்போவோர் தொகை விரல் விட்டு எண்ணக்கூடிய அளவை மிஞ்சிவிடும் போல இருக்கிறது. ஒரு புறம் கொரனா, டெங்கு போன்ற பாரிய நோய்களிலிருந்து மக்களின் உயிர்களைக் காப்பாற்ற அரசாங்கமும் வைத்தியர்களும் பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

30ஆம் பக்கம் பார்க்க...

## நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

# பள்ளிக்கூடம்



எட்டு மணிக்கு டொணங்கென்று ஒரு பெல் அடிக்கிறது. நான் முதலாம் வருடம் பள்ளிக்கூடம் போன காலத்திலிருந்தே அந்தக் கை மணி அதிபரின் மேசையின் ஓர் ஓரத்தில் ஒட்டி வைத்ததுபோல் இருக்கிறது. வடக்கு முகமான சுவரில் மரத்திலான நீண்டதொரு மணிக்கூடு. அதன்கீழ் ரோசாப் படம் போட்ட தேதிக் கூட்டுக் கலண்டர் 1973 ஆவணி மாதம் புதன் கிழமையென்று காட்டுது. அதிபர் வருவதற்கு முதல் குப்பையைப் பெருக்கி அள்ளி, மண் பானையில் தண்ணீர் வைத்து நாற்காலியில் ஏறிக் கடிகாரத்துக்குச் சாவி கொடுத்து இடாப்பை வகுப்பறைக்குள் கொண்டுசேர்க்க வேண்டும்..

எங்கள் பாடசாலை எப்போதும் காவி நிறமாகவே இருக்கும். சல்லி ஓடுகள் போட்ட கூரைகளைத் தாங்கிய பெரும் சதுரத் தூண்கள். புள்ளடி போட்டதுபோல் கிடையாக விட்டத்தில் கைமரங்கள். இடையில் காகங்கள் நின்று எச்சமிட்டிருந்தன; பாடசாலைத் தோட்டத்தில் சித்திரைக் காலத்தில் மரவள்ளித் தடி நட்டு அதன் பாத்தியில் கடலை விதைத்திருந்தோம். மறையாமல் தெரியும் கடலைப் பருப்பிற்காகக் காக்கைகள் பீலிக் கம்பியில் உட்கார்ந்திருந்தன..

கருங் குருவி கூடு கட்டி முட்டைவைத்து அடைப்படுக்கும் மோட்டு வளையில் வைக்கோல் இழுத்து நீண்டிருக்கும். சிலேட்டும் அதன் கரு நிறப் பென்சிலும் என் மடியில் அமருகின்ற போதெல்லாம் இன்னுமொரு தோழன் என்னோடு ஒட்டிக் கொள்வான். அவனுக்கு என் சிலேட்டின்மீதுதான் கண். உடைத்து விடுவானோ என்ற பயத்தில் ஏதாவது காரணம் சொல்லி அவனை அங்கிருந்து நகர்த்தி விடுவேன்..

கரும்பலகையில் ஆனா ஆவண்ணா எழுதிக் கிடக்குது. யாருமே கொஞ்ச நேரம் பேசவில்லை. அப்படியுமில்லை சற்று அதிக நேரம்தான். துளை போடுகின்ற மாதிரியான அந்த மௌனம் வகுப்பறையை என்னவோ செய்தது. சக மாணவனின் தகப்பனார் திருதிருன்னு முழித்துக்கிட்டு நின்றார். "ஏப்பா கூட மாட ஒத்தாசையா தூக்கிற சாத்திற வேலைக்கு இவன வைச்சுக்காம எதுக்குப் படிப்புக்கிடிப்புன்னு இங்க கொண்டாந்து சேக்கிற.." சுரக்கா வாத்தியின் உபதேசம் இப்போதும் ஒலிக்கிறது; அந்தச் சிறிய வயதில் அப்படியென்ன பெரிய குற்றம் செய்தான்? இன்றுவரை அது எனக்குப் புரியாத கேள்விதான்..

விபரீதம் புரிந்து போச்சு; அந்த நேரம் பார்த்து ஒரு பெருக்கல் கூட ஞாபகத்துக்கு வராது. கணிதப் பாடம், வாய்ப்பாடு பாடமில்லாதவர்கள் முட்டுக்காலில் நிறுத்தப்படுவார்கள். வலது கையைத் தலைக்கு மேலே வைத்து இடது காதைத் தொடச் சொல்லுவார். சிரமப்பட்டுக் காதைத் தொடுவோம். அப்படியே நூறு தடவைகள் தோப்புக் கரணம். அடிவிழும் என்ற பயத்தில் குந்தி எழுவோம். சட்டக் கொளரில் ஊத்தை ஒட்டாமல் கைலேஞ்சை மடித்து வைத்துக் கொண்டு சாவகாசமாக அமருவார் ஜப்பார் வாத்தி. அவருதான் அங்கு எல்லாமே "இன்றைக்கு ஆர்ர முறை.." என்பார். பின் வரிசையில் இருக்கும் மூன்று தடிப் பயல்கள் ஆளையால் முந்திக் கொண்டு கை உயர்த்துவார்கள்..

வாரத்துக்கு இரண்டு நாட்கள் விறகு பொறுக்க வேண்டும்; ஸ்கூலுக்குக் கிழக்கே அது வெறும் கிறவல் பாதை. மணல், செங்கல் வண்டிகள் போய் நடுவில் பள்ளம் வேறு, அதில் கால் வைக்கும்போது புழுதி மெத்தென்றிருக்கும். அந்த வழியின் தொங்கலில்தான் அவரின் வீடு இருக்கிறது. வாசலில் கட்டியிருந்த ஒற்றைக் கொம்பு வெள்ளாடு ரெட்டைக்குட்டி போட்ட அழுக்கு அப்படியே தெரிந்தது. இரண்டு குட்டிகளும் குடித்ததுபோக பின்னேரத் தேநீருக்கு ஒரு கிளாஸ் பால் கறக்கலாமா என்று அவர் மனையாள் மடியைத் தடவித் தடவிப் பார்த்தபடி குந்தியிருப்பது தெரிந்தது. அங்குதான் நாங்கள் சுமக்கின்ற விறகுகளை இறக்க வேண்டும்..

ஆசிரியர் இல்லாத நேரத்தில் கதைக்கிறவங்க பெயர் எழுதி வைப்பது என் வகுப்புச் சட்டாம்பியின் உத்தியோகமாய் இருந்தது. ஆசிரியரைக் கண்டதும் விரலை உயர்த்திக் காண்பித்துவிட்டு ஒண்ணுக்குப் போவோம். அங்கே உடைந்த நிலையில் கூரையில்லாத மலசல கூடங்கள் மூக்கைப் பீறுவதாக நெடி பரப்பிக் கொண்டிருக்கும். சில இடங்களில் பித்தளைத் தூக்கு வாளியும் சுரைப் பேணியும் தொங்க விட்டிருப்பார்கள். மத்தியானம் பெல் அடிப்பதற்குள் விஸ்கற் பாடம். அமெரிக்க அரசு இலவசமாக இலங்கை மாணவர்களுக்கு வழங்கிய கெயர் பிஸ்கட்டுகள் தலைக்கு ஆறு அல்லது ஏழு வீதம் கிடைக்கும்; அதனை வைத்து ஒருவருக்கு ஒருவர் சீட்டுப் பிடிப்போம். நேரத்துக்குக் காகங்கள் குழுமி விடும். அதன் வருகைதான் பிஸ்கற் பகிரும் நேரமென்று அறிவோம். திடுமலையான மாணவர்கள் அதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதில் தெரிந்தவர்கள் இருந்தால் பத்துக்கும்மேல் பிஸ்கற்றுகள் விழும். சிறு சிறு துண்டுகளாக உடைத்து உள்ளே பிளேட் தகடுகளைச் சொருகி காகங்களுக்கு வீசுவதும்தான்; அவை கொறளி போல பாய்ந்து தகடுகளைக் கொத்தி நீக்கி, விஸ்கற்றை மட்டும் விழுங்கிவிட்டு லாவகமாகக் கை விரித்துப் பறக்கும்..

வெயில் பூச்சிகள் எங்கள் ஸ்கூல் கேற்றுக்கு வெளியே சுற்றிக் கொண்டிருந்தன; கடலை மூத்தம்மா வறுத்த பயறு, கொண்டைக் கடலை, கௌபி என்று வியாபாரத்தில் திளைத்திருப்பார். கச்சான் கொட்டைகளை ஒரு டின்னின்மேல் குவித்திருப்பார். ஐந்து சத்தத்துக்கு ஒரு சோடா மூடியால் பயறு தருவார்; பத்துச் சதத்துக்கு கொஞ்சம் பெரிய மூடி. இருபத்தைந்து சதத்துக்கு எவரடி டோச்லைட் பின்மூடி இப்படி அளவுகள் அவர் கைவசம் வைத்திருப்பார். பக்கத்தில் ஒரு கறுப்புப் பூனை இவரையே பார்த்துக் கொண்டிருக்கும்..

தண்ணீர் குடிப்பதென்றால் வெள்ளம்மா லாத்தாவின் கிணறடிக்குப் போவோம். ஒரு சிறிய குடிசை பாதியில் ஒரு சுவர். அதனோரம் வாழை மரங்கள். முட்டை வடிவிலான கிணறு தரையில் வல்லாரைக் கன்றுகள் கால்களில் மிதிபடும். பத்திக்கையை ஒருவர் பிடித்திருக்க இன்னுமொருவர் வாளியில் வாய்வைத்துக் குடிக்கின்றபோது நீர் பன்னீர்மாதிரி இறங்கும்..

ஆறாவது பெல் அடித்து ஓயும. மைதானத்துப் புளிய மரத்தடியில் விளையாடுவோம். முன்னே நிற்பவர் கண்டபடியெல்லாம் கேள்விகள் தொடுப்பார். வாயைத் திறக்காமல் தலையை மட்டும் ஆட்டிக்கிட்டே பதில் சொல்ல வேண்டும். அப்போது கொடுப்புக்குள்ள அடைந்திருந்த சிரிப்பு வெளியாகி விட்டால் அந்த விளையாட்டிலிருந்து விலக்கி விடுவார்கள். இதற்குள் லாலாமி நிசார் அவன் போட்ட தூஷண வார்த்தை கேட்டுத் தலைமை சேர் பிரம்புடன் வெளியில் வருவார்..

பூழைக் கொசுக்கள் ரீங்காரமிட்டபடி கண்களைச் சுற்றி மொய்த்தன; வகுப்பறையிலிருந்து எட்டிப் பார்த்தால் அப்துல் டீ ரூம் தெரியும். இளையம்பி மாஸ்டர் அந்தக் கடையில்தான் டீயும் வடையும் சாப்பிடுவார்; எங்கள் வகுப்பாசிரியரும் அவர்தான்; எல்லாம் கடன்தான். கடைக்காரர் அப்துல் வேலிக்குமேல் தலையைப் போட்டு ஒர் அரட்டு அரட்டுவார்; அப்போது எங்களுக்கு இவர் ஒரு பாட்டுச் சொல்லுவார். "ஆரப்பா இடையில / அப்துல் புள்ளட கடையில / போடப்பா தேயிலை / பூப்போட்ட கிளாசில.." இதனை நாங்கள் எல்லோரும் ஒருமித்துப் பாடுவோம். இந்த விளம்பர உத்தியால் கொடுத்த கடனைக் கேட்டுக் கொண்டிருந்த அப்துல் மெல்லத் தலையைப் பணித்துக் கொள்வார்..

இவருக்குத்தான் இன்னுமொரு கதையும் இருக்கிறது; ஒருமுறை பாடம் நடத்தும்போது ரவுசரின் பின் பக்கம் கிழிந்து விட்டிருப்பதைக் கண்ட பக்கத்து வகுப்பு ஆசிரியை மெதுவாகச் சென்று "உங்க ரவுசர் பிஞ்சிருக்கு சேர்.." என்றார்; "ஓஹ்! உங்கட புடவையில பூவிருக்கு, பிஞ்சிருக்கு, காயிருக்கு நாங்க சொல்றோமா? எங்கட ரவுசர்ல பிஞ்சிருந்தா மட்டும் நீங்க பெரிசாத் தூக்கிட்டு வாரிங்க.." இப்படி மோதிக் கொண்டாலும் டீ குடிப்பதென்றால் பின்னர் உருவான எங்கள் கெண்டீனுக்கு இருவரும் ஒன்றாகத்தான் போவார்கள்..

நல்ல படம் வந்தால் அந்த வகுப்போடு கூட்டிப்போய் காட்டுவார்கள். எனக்கு அவ்வாறே அன்னை வேளாங்கண்ணி படம் பார்க்க ஹரிசன் தியேட்டருக்கு அழைத்துப்போன ஞாபகம். அந்தப் பட மாளிகையின் உட்சுவரில் பொழுது மலைக்கு மேலே தெரிவதும் அதிலிருந்து தண்ணீர் பாயும் ஓடக் கரையில் குருவிப் பட்டாளம் வட்டமடித்துப் பறப்பதுபோலவும் சித்திரமொன்று கீறியிருப்பார்கள். இதைவிட என்னைப் பாதித்தது அங்கு வாழ்ந்திருந்த முதலைதான்; அங்கே முன்றலில் இருந்த நீர் தடாகத்தில் உயிரோடு வளர்க்கப்பட்ட முதலை வலுவாக என் நெஞ்சை ஊடுருவி விட்டது; அதைக் கண்ட கணத்திலிருந்து அன்று ராத்திரி தூக்கமே வரவில்லை; எந்தப் பொருளைப் பார்த்தாலும் அந்த முதலைதான் தெரிந்தது; காலையில்தான் கோழி மாதிரிக் கண்ணை மூடினேன்..

கைப் பையைத் தோளில் போட்டுக் கொண்டு வீதியைக் கடந்து வெளியேறுகையில் "தம்பி படிக்கிற புள்ளைக அந்தக் கடைப் பக்கமே போயிரக் கூடாது; என்னா சரியா.." என்றபடி குத்தூசி மாமா எங்களைக் கடந்து செல்வார்; சிரிப்பும் அதிர்ச்சியுமாய் இருக்கும்; தூர நின்று பார்த்தால் கடை நல்ல இருட்டாகத் தெரியும்; யானைக் கிடுகினால் வேயப்பட்டிருந்த படல் பிரண்டு கிடந்தது; காடா விளக்கு இரண்டும் இருளை முடிந்த அளவு விரட்டிக் கொண்டிருந்தது. கஞ்சாப் புகை தள்ளும் அந்தக் கடைக்குச் "சமாதான ஹொட்டேல்" என்று 'பெயர் போர்ட்' சாத்தியிருந்தார்கள்.

# நியூஸிலாந்து நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பொங்கல் விழா!



நியூஸிலாந்து நாடாளுமன்றத்தில் முதன் முறையாக இடம்பெற்ற தைப் பொங்கல் விழாவின் போது தமிழ் கலாசாரத்தை அபிவிருத்தி செய்யும் முகமாக ஆட்டெரோவா நியூசிலாந்து தமிழ் சங்கம் (ANTS) என்ற அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

"தமிழ் செல்வன்" என்ற சிறப்பு மிக்க பட்டத்தை பெற்ற கௌரவ அமைச்சர் மைக்கேல் வூட், கேக் வெட்டி தைப் பொங்கல் விழாவில் ANTS அமைப்பை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

ANTS இன் பொங்கல் ஆரம்ப விழாவில் நியுஸிலாந்தின் பல்வகைமை, உள்விவகார மற்றும் தேசிய இனங்கள் தொடர்பான அமைச்சர் பிரியங்கா ராதாகிருஸ்ணனின் உரை, அப்பர் ஹாபருக்கான நியுஸிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் வனுஷி வோல்டஸின் வரவேற்புரை, இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் பிரதிநிதி முக்டேஸ் கே பர்தேஷியின் விசேட உரை, பொங்கல் தின விசேட பிரமுகர் வை. ரவிந்திரன் ஆகியோரின் உரையும் இடம்பெற்றன.

30ஆம் பக்கம் பார்க்க...









# மேல் மாகாணத்தில் கொவிட்–19 விழிப்புணர்வுப் பிரசாரம் லைஃவ்போய் - ஸ்ரீலங்கா பொலிஸ் இணைந்து நடவடிக்கை



கொவிட்19 தொற்று நோய்க்கு எதிரான முயற்சிகளுக்கு தொடர்ந்தும் உதவிவரும் லைஃவ்போய், மேல் மாகாணத்தில் விரிவான விழிப்புணர்வுப் பிராச்சாரங்களை முன்னெடுப்பதற்காக ஸ்ரீலங்கா பொலிஸ் திணைக்களத்துடன் அண்மையில் கூட்டுச் சேர்ந்துள்ளது.

லைஃவ்போய் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸார் ஒன்றிணைந்து, சமூக இடைவெளி பேணல், முகக் கவசங்களை அணிதல், கைகளைக் கழுவுதல் மற்றும் அடிக்கடி கை சுத்திகரிப்பான் திரவங்களை உபயோகித்து கைகளைச் சுத்தப்படுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் ஏனைய சுகாதார மற்றும் சுத்தம் தொடர்பான வழிகாட்டல்கள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் வலியுறுத்துவதில் ஈடுபடுகின்றனர். லைஃவ்போய் விடுக்கும் கொவிட் 19 தொடர்பான அறிவூட்டல் துண்டுப்பிரசுரங்கள் இந்த மாகாணத்தில் 108 பொலிஸ் பிரிவுகள் மத்தியில் 300,000 பேருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் நிலையில், இவ்விழிப்புணர்வுப் பிரச்சாரத்தின் கீழ் பிராந்தியத்திலுள்ள 885 பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனம் தனது லைஃவ்போய் வர்த்தகநாமத்தின் மூலமாக கொவிட்19 தொடர்பான எமது விழிப்புணர்வு முன்னெடுப்பிற்கு ஆதரவை நீடித்துள்ளமைக்காக அந்நிறுவனத்திற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மக்கள் வீடுகளை விட்டு வெளியே வருவது அதிகரித்து வருவதுடன், பாடசாலைகளும் மீள ஆரம்பிக்கப்பட்டு வருகின்ற நிலையில், தொற்று நோயின் ஆபத்து இன்னமும் எம்மத்தியில் உள்ளது என்பதை நாம் தொடர்ச்சியாக நினைவில் கொள்ளல் வேண்டும். சுகாதாரத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளைப் பின்பற்றி, சுகாதாரம் மற்றும் சுத்தம் தொடர்பான அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற இத்தகைய செயற்திட்டங்கள் மூலமாக நாம் மக்களை தொடர்ந்தும் அறிவூட்டி வருகின்றோம். உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எமது அர்ப்பணிப்பைப் பகிர்ந்துகொள்கின்ற யூனிலீவர் போன்ற நிறுவனங்களுடன் கூட்டாண்மையை ஏற்படுத்துவது இன்னும் அதிக எண்ணிக்கையான இலங்கை மக்களுக்கு இச்செய்தியை எடுத்துச்செல்ல உதவுவதாக குறிப்பிட்டார்.

# ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்சுக்கு விருது வழங்கி கௌரவிப்பு




இலங்கையின் வேகமாக வளர்ந்து வரும் காப்புறுதி சேவை வழங்குநரும், டிஜிட்டல் துறையில் புத்தாக்கமான சேவைகளை வழங்கும் காப்புறுதி சேவையாளருமான ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு, SLIM Digis 2020 விருதுகள் வழங்கும் நிகழ்வில் காப்புறுதிப் பிரிவில் தங்க விருதும், சகல பிரிவுகளிலும் சிறந்த டிஜிட்டல் சந்தைப்படுத்தல் புத்தாக்கத்துக்கான வெள்ளி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்தினால் (SLIM) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமது தொழில்நுட்பம் அல்லது தொடர்பாடல்கள் என சகல பிரிவுகளினூடாகவும், புத்தாக்கத்தை நோக்கி தொடர்ச்சியான பயணத்தை ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் பதிவு செய்திருந்தது. மக்களின் வியாபாரமாக திகழ்வதுடன், தாம் இயங்கும் மக்களின் பார்வையினூடாக உலகைக் கண்டதுடன், புதிய வழமையை பின்பற்றி அவர்களின் பணிகளை நிறைவேற்றுவதற்கு புத்தாக்கமான சேவைகளையும் வழங்கியிருந்தது.

எனவே, ஃபெயார்ஃபஸ்ட் வழியில் விடயங்களை முன்னெடுப்பதனூடாக, எதிர்காலத்துக்கு தயாரான வர்த்தக நாமமாக ஃபெயார்ஃபஸ்ட் திகழ்வதுடன், மூன்று தசாப்த காலப்பகுதிக்கு மேலாக எவ்விதமான புத்தாக்கத்தையும் அல்லது புத்துணர்வையும் காணாத துறையில் விருப்பத்துக்குரிய தெரிவாக அமைந்துள்ளது. ஃபெயார்ஃபஸ்ட் வழியில், வடிவமைப்புடனான சிந்தனையுடன் கூடிய புத்தாக்கங்களினூடாக வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியாக மாறியிருந்ததுடன், வினைத்திறன் வாய்ந்த தொடர்பாடல்களுக்குரிய கட்டமைப்பை ஏற்படுத்தி நேர்த்தியான தகவல்களை உறுதி செய்து சமூகத்துக்கு உறுதி செய்யப்பட்ட மூலத்தை ஏற்படுத்தியிருந்தது.

உலகத் தரம் வாய்ந்த வாடிக்கையாளர் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பாவனையாளர் பயணத்தை மீளமைத்திருந்ததுடன், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்காளர்கள் மற்றும் சமூகத்துக்கு வாழ்க்கையை மகிழக்கூடிய வகையில் அமைத்திருந்தது.

# புதிய F19 PRO வை வெளியிடும் OPPO



புதுமையான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் அணியும் சாதனங்களின் முன்னோடியான OPPO, அதன் F தொடரின் சமீபத்திய வெளியீடான F19 Pro வை, நாளை மார்ச் 15ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு அதன் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கம் மற்றும் யூடியூப் சேனல் வழியாக வெளியிட உள்ளது. சமூக ஊடகங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கானோரிடம் மேற்கொண்ட ஆய்வை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்ட புதிய கையடக்கத் தொலைபேசியானது, இணையற்ற அனுபவத்தை வழங்கும் வகையில், OPPO இன் வர்த்தக முத்திரையான நுண்ணறிவு மற்றும் பயனர்களின் தேவை ஆகியவற்றுடன் தங்கு தடையின்றி ஒருங்கிணைக்கிறது.

F19 Pro ஆனது, சிறந்த பாடகரும் The Voice Sri Lanka நிகழ்ச்சியின் இசை பயிற்சியாளருமான உமாரியா சின்ஹவம்ச தலைமையில், இக் கையடக்கத் தொலைபேசியின் அறிமுகத்தை ஊக்குவிப்பதற்காக, பாடகரும் நடிகருமான கயான் குணவர்தன மற்றும் இயக்குனர் புகைப்படக் கலைஞர் / ஒளிப்பதிவாளர் / பயண ஆர்வலர் அயேஷ் தனஞ்சய பெரேரா, நடனக் கலைஞர் ரமோத் மாலக, டிக்டோக் புகழ் ஹர்ஷனி யுதங்கனா, உடற் பயிற்சியாளர் சூரிகத் ஆகியோர், இணைவார்கள்.

இதன் வெளியீட்டிற்கு முன்னதாக, உமாரியா இது தொடர்பில் தெரிவிக்கையில்: "நான் OPPO தயாரிப்புகளின் இரசிகை என்ற வகையில், புதிய F19 Pro வெளியீடு தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன், இது குறிப்பாக படைப்பாற்றலை ஊக்குவிப்பதற்கான பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது." என்றார்.

# உலகளாவிய விலைகள் அதிகரித்தபோதிலும் நிர்ணயிக்கப்பட்ட விலையை பேணும் லிற்ரோ கேஸ்




கொவிட்19 தொற்று நோய் ஆனது உலகளாவிய ரீதியில் சந்தைகளை பாதித்ததுடன் நாணய ஏற்ற இறக்கங்கள் இடம் பிடித்து வருவதால் உலகில் அதிகளவு பரந்தளவில் பயன்படுத்தப்படும் சக்தி மூலங்களில் ஒன்றான திரவ பெற்றோலிய வாயுவின் உலகளாவிய விலையானது உலகம் முழுவதும் நிலையற்றதானது.

ஆர்கஸ் சுயாதீன பொருள் விலை அறிக்கையிடல் முகவர் நிறுவனத்துக்கிணங்க , எரிசக்தி மற்றும் பொருள் விலை நிர்ணயங்களின் முன்னணி சுயாதீன வழங்குநர், விலைகள் உயர்வு மற்றும் நிச்சயமற்ற பொருளாதார முன்னறிவிப்புகள் உலகளவில் திரவ பெற்றோலிய வாயு தொழில்துறையை மறைக்கின்றன.

ஆர்கஸ் விலை நிர்ணய அளவுகோல் "ஆர்கஸ் தூர கிழக்கு சுட்டெண்" ஆசியாவில் பரவலாக பயன்படுத்தப்படும் அதேவேளை சவூதி அராம்கோ சுட்டெண் இலங்கை போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில் தேசிய திரவ பெற்றோலிய வாயுவான லிற்ரோ கேஸ் லங்காவானது கௌரவம் மிகுந்த ஜனாதிபதியின் ''வளம் மற்றும் மேன்மைக்கான நோக்கு'' எனும் நாட்டின் பொருளாதார நோக்கத்திணங்க நிலையான விலைகளை மாறாமல் பேணுகிறது, என லிற்ரோ கேஸ் லங்கா லிமிட்டெட் இன் தலைவரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான அனில் கொஸ்வத்த தெரிவித்தார்.

' இலங்கையில் திரவ பெற்றோலிய வாயுவானது மிக உயர்வானதாக திகழ்வதுடன் இது ஒரு பொருளாதார குறியீட்டாளர் என்ற நிலையில் வீடுகளில் சமையலுக்கும் மற்றும் பன்முக துறைகள் இயங்குவதற்கும் காரணமாகிறது.

நாட்டுக்கான அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இறுதிப் பயனாளிக்கு பொருளாதார நலன்களை வழங்குவதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்துள்ளோம்.இதன் விளைவாக நாணய ஏற்றத்தாழ்வுகளுடன் திரவ பெற்றோலிய வாயுவின் விலைகள் உலகளாவிய ரீதியில் உயர்ந்தாலும் இந்த தொலைநோக்குக்கிணங்க நாம் மாறாமல் எமது விலைகளை பேணுகிறோம்.''எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பணிப்பாளர் சபையின் பெண் தலைமைத்துவ சாதனைகளைக் கொண்டாடுகின்றது Baurs


பவித்ரா


அனோஜா

பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்கு தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், இலங்கையின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரக் குழுமமான Baurs என அழைக்கப்படும் ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், தனது பணிப்பாளர் சபையிலும், நிறைவேற்று தலைமைத்துவ பதவிகளிலும் பெண்களைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை கௌரவித்து சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடியது.

கூட்டாண்மைத் துறையில் உயர்ந்த பதவிகளுக்கு பெண்கள் செல்லும் போது, அவர்கள் குறைந்தளவு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றனர் என்பதை பல்வேறு ஆய்வுகளினூடாக கண்டறியப்பட்டிருந்தது. பாலின சமத்துவத்தைப் பேணுவதிலும், குறிப்பாக நிறுவனம் முழுவதிலும் பதவி நிலைகளில் வேறுபாடின்றி இந்த சமத்துவத்தைக் கொண்டிருப்பதிலும் Baurs அதிகளவு பெருமை கொள்கின்றது. அதன் பிரகாரம் தனது பணிப்பாளர் சபையின் இரு அங்கத்தவர்களான தகவல் தொழில்நுட்ப பிரிவின் பணிப்பாளர் அனோஜா பஸ்நாயக்க மற்றும் நிதியியல் பிரிவின் பணிப்பாளர் பவித்ரா சமரசிங்க ஆகியோரின் சாதனைகளை கௌரவித்துக் கொண்டாடியிருந்தது.

தனது பிரதான பெறுமதிகள் மற்றும் நோக்கத்துக்கு உண்மையாகத் திகழும் வகையில் Baurs தொடர்ச்சியாக சமகாலத்துக்கேற்ப மற்றும் வளர்ந்து வரும் வியாபார கட்டமைப்புகளில் தொடர்ச்சியாக வளர்ந்து வருகின்றது. சமத்துவம், பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் புத்தாக்கம் ஆகிய கலாசார அம்சங்களை நிறுவனம் ஊக்குவிக்கின்றது.

Baurs இல் அஜோனா பஸ்நாயக்கவின் பயணம் என்பது 12 வருடங்களாக தொடர்கின்றது. 2008 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப பிரிவின் முகாமையாளராக இணைந்து கொண்டார். இவர் தற்போது Baurs இல் குழும டிஜிட்டல் மாற்றியமைப்பு தந்திரோபாய செயற்பாடுகளுக்கு தலைமைத்துவமளிக்கின்றார்.

“Baurs உடனான எனது பயணத்தில், பெண்கள் துணிவான முடிவுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட்டிருந்ததுடன், தன்னம்பிக்கையை கட்டியெழுப்பும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஊக்குவிக்கப்பட்டிருந்தேன். ஒருவர் எந்த பாலினத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுக்கப்பட்டு, தீர்மானமெடுத்தல்களில் பங்களிப்பு வழங்குவதற்கும் உறுதியளிக்கப்படும்.” என்றார்.

# இலங்கையில் அதிகம் விரும்பப்படும் 10 நிறுவனங்கள் வரிசையில் SLT



160 வருட காலத்துக்கு மேலான வரலாற்றைக் கொண்டு, இலங்கையர்களுக்கு தொடர்ச்சியாக தொடர்பாடல்கள் வலுவூட்டலை வழங்கும் ஸ்ரீ லங்கா ரெலிகொம், இலங்கையில் அதிகம் விரும்பப்படும் 10 நிறுவனங்கள் வரிசையில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் சிறந்த நிதியியல் சாதனைகளினூடாக முன்மாதிரியாக திகழ்கின்றமை மற்றும் சமூகத்துக்கு பெறுமதி வாய்ந்த பங்களிப்பை வழங்குகின்றமை போன்றவற்றின் காரணமாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச வர்த்தக சம்மேளனம் மற்றும் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் கல்வியகம் ஆகியவற்றினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வாக அதிகளவு விரும்பப்படும் நிறுவனங்கள் விருதுகள் அமைந்துள்ளது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

SLT இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன மற்றும் SLT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி கித்தி பெரேரா ஆகியோர், இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிடமிருந்து விருதைப் பெற்றுக் கொள்கின்றார்.

# ஆரம்பகால Etisalat 072 சந்தாதாரர்கள் தங்கள் சிம் அட்டைகளை மேம்படுத்தக் கோரிக்கை


தற்போது HUTCH வலையமைப்பில் உள்ள ஆரம்பகால Etisalat 072 வாடிக்கையாளர்கள், தங்களது தற்போதைய சிம் அட்டைகளை கூடிய விரைவில் Hutch 072 சிம் அட்டைகளுக்கு மேம்படுத்துமாறு Hutch வேண்டுகோள் விடுக்கின்றது. ஏனெனில், இவை விரைவில் காலாவதியாகிவிடும் என்பதுடன், செப்டம்பர் 2021 க்குப் பிறகு பயன்படுத்த முடியாமல் போகும்.

இந்த அறிவிப்பின்படி, இதுவரை தங்கள் சிம்மை மேம்படுத்தாத ஆரம்பகால Etisalat வாடிக்கையாளர்கள் நாடு முழுவதும் 4000+ Hutch சிம் மேம்படுத்தல் மையங்களில் சௌகரியமாக புதிய Hutch 072 சிம்மிற்கு மேம்படுத்திக் கொள்ள முடியும். வாடிக்கையாளர்கள் மொபைல் அல்லது ஒன்லைனில் ஓர்டர் செய்து தபால் மூலம் தங்கள் வீட்டு வாசலுக்கே புதிய சிம்மை பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கை விடுத்து 3 5 நாட்களுக்குள் சிம் விநியோகிக்கப்படும்.

ஒவ்வொரு சிம் மேம்படுத்தலுடனும், வாடிக்கையாளர்களுக்கு ரூ. 500 போனஸ் வழங்கப்படுவதுடன், ஒரு வாரத்திற்கு குரல், தரவு மற்றும் எஸ்.எம்.எஸ் சேவைகளுக்கு இதனைப் பயன்படுத்த முடியும்.

இந்த முயற்சியின் மூலம், HUTCH தனது 072 & 078 சந்தாதாரர்களை ஒரு ஒருங்கிணைந்த சேவை அமைப்பின் கீழ் கொண்டுவர திட்டமிட்டுள்ளதுடன் அதன் புதிய ஸ்மார்ட் வியாபார திட்டத்தின் மூலம் சமமான நன்மைகளையும் வழங்குகிறது.

புதிய ஸ்மார்ட் பிரசாரமான “Yanko, Vango, Let’s Go Smart with HUTCH” என்பது மற்றொரு முன்னோடி முயற்சியாகும். இது இலங்கையர்கள் அனைவரையும் அவர்கள் நினைக்கும், வாழும், செயல்படும் விதத்தில் ஸ்மார்ட்டாக இருக்க ஊக்குவிக்கிறது.




## மேஷம்

உங்கள் ராசிக்கு விரயஸ்தானமான மீனத்தில், மார்ச் 18 ஆம் திகதி சுக்கிரன் சஞ்சரிக்க போகிறார்.இது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். முழு வலிமையோடு சஞ்சரிக்கும் சுக்கிரன், பஞ்சமாதிபதி சூரியனோடு சேர்வதால் கொஞ்சம் வலிமை இழக்கலாம். இருந்தாலும் அவர் தரும் பலனுக்கு குறைவு இருக்காது. உங்கள் ராசிக்கு 2,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன் என்பதால், குடும்ப முன்னேற்றம் கூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 16,17,18

## ரிஷபம்

உங்கள் ராசிநாதன் சுக்கிரன் மார்ச் 18 ஆம் திகதி மீன ராசியில் உச்சம் பெறுகின்றார். எனவே தொட்ட காரியங்கள் வெற்றிபெறும். தொல்லைதந்தவர்கள் எல்லை விட்டு விலகுவர். நிதிநிலை சீராகும். திருமணம், வீடு மாற்றம் போன்றவற்றில் இருந்த தடை விலகும். தொழில் சூடு பிடிக்கும். அரசு வழியில் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தால் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். பெண் வழி பிரச்சினைகள் அகலும் பிரபலமானவர்கள் பல நன்மைகளை பெறுவார்கள்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 15,16

## மிதுனம்

உங்கள் ராசிக்கு 5,12 க்கு அதிபதியான சுக்கிரன், மார்ச் 18 ஆம் திகதி மீன ராசியில் உச்சம் பெறுகின்றார். எனவே தொழில் ஸ்தானம் கொஞ்சம் பலமடைகின்றது. புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணி மாற்றம் திருப்திகரமாக இருக்கும். இருப்பினும் சிலர் விருப்ப ஓய்வில் வெளிவந்து சொந்த தொழில் செய்யலாமா? என்று சிந்திப்பர். தற்போது அஷ்டமத்து சனியின் ஆதிக்கம் இருப்பதால், புதிய தொழில் தொடக்கம் முயற்சி கைகூடுவதில் தாமதம் ஏற்படும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 16,17

## கடகம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் ராசிக்கு 8ஆம் இடத்திற்கு சுக்கிரன் வருகின்றார். மீனத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் அங்கு உச்சம் பெறுவதால் மாற்றங்களும், ஏமாற்றங்களும் வந்து சேரும். உங்கள் ராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். சுக ஸ்தானம், லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும் பொழுது பணப்பற்றாக்குறை அகலும், பல நாட்களாக நடைபெறாத சில காரியங்கள் இப்போது நடைபெறும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 14,15,20

## சிம்மம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் ராசிக்கு அஷ்டமத்தில் சுக்கிரன் உச்சம் பெறுகின்றார். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்துக்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும் பொழுது, தொழில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். நடக்கும் தொழிலை விரிவு செய்வதோடு புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.சுக்ர பலன் நன்றாக இருக்கும் பொழுது ஆடை ஆபரணம் சேர்க்கை அதிகரிக்கும். இடம் வாங்கும் யோகமும்,எதிர்பாராத தனவரவும் உண்டு.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 16,17

## கன்னி

உங்கள் ராசிக்கு 7 ஆம் இடமான களத்திர ஸ்தானத்தில், மார்ச் 18ஆம் திகதி சுக்கிரன் சஞ்சரிக்கப் போகின்றார். இது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். எனவே நல்ல வாய்ப்புக்கள் உங்களை தேடி வரப்போகின்றது. பொதுவாக உங்கள் ராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி சுக்ரன். எனவே குடும்பத்தில் நீண்ட நாட்களாக தடைப்பட்ட திருமண பேச்சுவார்த்தைகள் திடீரென முடிவுக்கு வரலாம். பெண்களால் பெருமை சேரும். புதிய ஆபரண சேர்க்கைக்கு வழிபிறக்கும். உடல் நலம் சீராகும்

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 19,20

## துலாம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் சுக்கிரன் சஞ்சரிக்க போகின்றார். மீனத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரனால் மிகசிறந்த பலன்கள் கிடைக்க போகின்றது. சுக்கிரனுக்கு மீன ராசி உச்ச வீடாகும். எனவே குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொள்கைப்பிடிப்போடு செயல்படுவீர்கள்.கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். தொழில் வெற்றி பெறும். கடன் சுமை தீரும். எற்பட்ட பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். பங்காளி பகை மாறும். பார்க்கும் தொழிலை விரிவு செய்யலாமா? என்று நினைப்பீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்பீகள்

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 20

## விருச்சிகம்

மார்ச் 18 ஆம் திகதி உங்கள் ராசிக்கு 5 ஆம் இடமான மீனத்தில், சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சரிக்க போகின்றார். 7,12 க்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும் பொழுது வருமானம் திருப்தி பெறும். சுப செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பதவிகளும், பொறுப்புகளும் வந்து சேரும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

## தனுசு

மார்ச் 18ஆம் திகதி உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தில் சுக்கிரன் உச்சம் பெறுகிறார். 5,11 ஆகிய இடங்களில் அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும் பொழுது உத்தியோகத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் பணியில் சேரவாய்ப்புஉண்டு . தாயின் உடல் நிலை பற்றிய கவலை அதிகரிக்கும்.வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரும். இளைய சகோதரத்தோடு இணக்கம் எற்படும். தடை அகலும்

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 14,15

## மகரம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் ராசிக்கு 3ஆம் இடமான மீன ராசியில் உச்சம் பெறுகிறார்.இது ஒரு பொற்காலமாகும். உங்கள் ராசி அடிப்படையில் 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பலம் பெறும் இந் நேரத்தில் தடைகள் அனைத்தும் அகலும். தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். பிள்ளைகளில் எதிர்கால கனவுகளை நனவாக்குவீர்கள். பூர்வீக சொத்து தகராறுகள் தீரும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் எதிர்பார்த்தது கிடைக்கும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 16,17

## கும்பம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் ராசிக்கு 2ஆம் இடமான மீன ராசியில் சஞ்சரிக்க பெறுகிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். 4,9 க்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெரும் பொழுது நன்மைகள் அதிகரிக்கும். உடல் நலம் சீராகும் . தந்தை வழி ஆதரவு கிடைக்கும், பங்காளி பகை தீரும். பாகப்பிரிவினையில் ஏற்பட்ட தாமதங்கள் தீரும். புதிய வாய்ப்புக்கள் கைகூடும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 14,15,19

## மீனம்

மார்ச் 18ஆம் திகதி,உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் சுக்கிரன். உச்சம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு 3,8ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. சில இழப்புக்களை சந்திக்க நேரிடும். எதிர்காலம் பற்றிய பயம் உருவாகும்.பணப்பற்றாக்குறை காரணமாக சொத்துக்களை விற்க நேரிடும். பிறரை நம்பி செய்த காரியங்கள் தடைபெறும்

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 16,17

# நல்லதோர் எழுத்தாளன் யாழூர் துரை..!!



யாழ் நகரில் அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகள், காவல்துறையினர் எனப் பல்துறையினரும் வந்து போகும் சந்திக்கும் ஓரிடம் பூபாலசிங்கம் புத்தகசாலையாகும்.

அதன் அதிபர் நயினாதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட ஆர். ஆர். பூபாலசிங்கம். இவர் யாழ்ப்பாணத்தில் கொட்டடியில் வசித்துவந்தார்.

இவரது வீட்டிற்கு அயலில் இளவயதில் தந்தையை இழந்த வாலிபர் ஒருவர் பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் குடும்பச் சுமையினால் தடுமாறிக்கொண்டிருந்தார்.

இதனை அறிந்த பூபாலசிங்கம் அவரை அழைத்துவந்து புத்தகசாலையில் பத்திரிகை விற்பனைப் பிரிவை நிர்வகிக்கும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்.

அந்த வாலிபர்தான் சிறந்த நாடகங்களை எழுதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தொடர்ந்து மேடையேற்றி வந்த யாழூர் துரை..!

பொருளாதார நிலையின் சங்கடத்திலிருந்து மீள்வதற்குக் காரணர்களான பெருந்தகை பூபாலசிங்கம் மற்றும் அவரது புதல்வர்களான ஸ்ரீதரசிங், ராஜன் ஆகியோரை வாழ்வில் என்றும் மறக்க முடியாது என யாழூர் துரை பதிவு செய்துள்ளார்.

புத்தகசாலை பத்திரிகை விற்பனைப் பிரிவின் மூலம் யாழூர் துரைக்குப் பலதரப்பினரது அறிமுகம் கிடைத்தது. பலரும் அவருடன் நட்புரிமையுடன் பழகிவந்தனர்.

அன்றைய யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேசுவரன் பத்திரிகைப் பகுதிக்குள் வந்து நின்று பத்திரிகைகளைப் பார்ப்பார்.

'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா உள்ளேவந்து மல்லிகை எத்தனை பிரதிகள் விற்பனையாகியுள்ளது என அவற்றை எடுத்துக் கணக்குப் பார்ப்பார். பிரதிகள் விற்பனையாகியிருந்தால் தனது பையிலிருந்து சில பிரதிகளை எடுத்துப் புத்தக விற்பனையைக் கவனிக்கும் தர்மராசாவிடம் கொடுப்பார்.

புதிதாக வந்துள்ள சஞ்சிகைகளைப் புரட்டிப் பார்ப்பார்.

நானும் பக்கத்தில் நின்று அன்றைய பத்திரிகைகளைப் புரட்டிக்கொண்டிருப்பேன்.

பல்கலைக்கழகப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வந்து ஒரு சில பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் பெற்றுக்கொண்டு சிலவேளை 'ஓட்டோ''வில் ஏறிச் செல்வார்.

சிலவேளைகளில் பத்திரிகைப் பகுதிக்குள்ளும் முன்பாகவும் வந்துநிற்கும் எழுத்தாளர்கள் அரசியல் கட்சிகளின் அனுதாபிகள் சர்ச்சை விவாதங்களிலும் ஈடுபடுவதுண்டு.

எல்லோரையும் ஒருவாறு சமாளித்து யாழூர் துரை அனுப்பிவைப்பார்.

சிலர் அவசரமாக வந்து ஓர் 'என்பலப்பைத்'' துரையிடம் கொடுத்து அதனை வந்து கேட்கும் நபரிடம் பெயரைக் கேட்டு ஒப்படைக்குமாறு கூறிச்செல்வர்.

எழுத்தாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிலர் தமது நண்பர்களைச் சந்திப்பதற்கு நேரம் குறித்துக் கடிதம் எழுதிவிட்டு பத்திரிகைப் பகுதிக்கு முன்னால் காத்திருப்பர். குறித்த நபர் குறித்த நேரத்தில் வராவிட்டால் துரையிடம் தகவல் சொல்லிவிட்டுச் செல்வர்.

துரைக்கு உதவியாகச் சிலவேளைகளில் கல்லூரி மாணவரான அவரது மருமகன் ரவி பத்திரிகைப் பகுதியைக் கவனித்துக் கொள்வார்.

அவரும் சஞ்சிகைப் பகுதியைக் கவனித்துக் கொள்ளும் தர்மராசாவும் உள்ளே நின்று பத்திரிகை, சஞ்சிகைகள் பலவற்றையும் எடுத்து மேலோட்டமாகப் பார்க்கும் எங்களைப் போன்றவர்களை 'பதினைந்தின் கீழ் மூன்று சங்கக்காரர்' (O/C) என மறைமுகமாகத் தங்களுக்குள் சொல்லிக் கொள்வர்.

ஒருநாள் அப்படி அவர்கள் சொல்லும் போது ''தம்பியவை... நீங்க சின்ன பிள்ளையள்.. நாங்க இப்ப மாத்திரமல்ல எத்தனையோ வருசமா இப்படித்தான் பார்க்கிறனாங்க.. உங்களுக்குத் தெரியாவிட்டால் உள்ளே முதலாளி இருக்கிறார்.. கேட்டுப்பாருங்கோ... " என்றேன்.

பக்கத்தில் டொமினிக் ஜீவா புன்னகையோடு ஒரு சஞ்சிகையைப் புரட்டிக்கொண்டிருந்தார்.

புத்தகத்தட்டுக்குப் பின்னால் உள்ளே இருந்த தோழர் பூபாலசிங்கம் அவர்களுக்கும் என் குரல் கேட்டிருக்கும்.

அன்று மாலை முதலாளி, ''பத்திரிகைக்காரர் எழுத்தாளர்கள் போன்றவர்களோடு பண்பாக நடந்துகொள்ள வேண்டும்.. அவர்கள் நமக்கு வேண்டியவர்கள்.." எனத் தங்களுக்குக் கண்டிப்பான அறிவுரை சொன்னதாக மறுநாள் அந்தத் தம்பிகள் என்னிடம் சொன்னார்கள்.

துரைக்கு உதவியாகச் செயற்படும் ரவி கல்லூரியால் வரத் தாமதமானால், அவசர அலுவல் காரணமாகத் துரை ஒருசில நிமிடங்கள் வெளியில் செல்லவேண்டிய சு+ழ் நிலை ஏற்பட்டால், அங்குவந்து உள்ளே நிற்கும் நண்பர் யாராவது பத்திரிகை விற்பனைப் பகுதியைக் கவனித்துக் கொள்வார்.

அவ்வாறு சிலவேளை நாடாளுமன்ற உறுப்பினர் யோகேசுவரன் பத்திரிகைப் பகுதியைக் கவனித்துக்கொண்டதை யான் பார்த்திருக்கிறேன்.

நானும் அவ்வாறு சிலவேளை பத்திரிகைப் பகுதியைக் கவனித்துக் கொண்டதுண்டு..

யாழூர் துரை சிறந்த எழுத்தாளன். இளம் வயதுமுதல் பல நாடகங்களை எழுதி மேடையேற்றி வந்துள்ளார்.

அவர் எழுதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றிய, 'புரியாத புதிர்" நாடகத்தில் 'குத்து விளக்கு' பட நாயகன் ஆனந்தன், ஐயந்தி, புத்தூர் றிச்சாட் போன்ற அன்றைய பிரபல கலைஞர்கள் நடித்துள்ளனர்.

'நீதி வேந்தன்' என்ற நாடகத்தில் வண்ணை ஆனந்தன், மகாதேவன் போன்றோர் நடித்ததுண்டு.

'நிலைமை மாறுமா' 'அன்பும் அருளும்' போன்ற நாடகங்களும் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறின. இவற்றிலும் பிரபல கலைஞர்கள் நடித்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது நாடகங்கள் குறித்து யாழ் 'ஈழநாடு' பத்திரிகை செய்திகள் விமர்சனங்கள் வெளியிட்டு வந்தது.

நாடகங்களை எழுதி இயக்கியதோடு நில்லாமல் நண்பர்களோடு சேர்ந்து சினிமாவிற்குள் நுழையும் முயற்சியில் ஈடுபட்டார்.

அன்று இலங்கையில் சினிமா தயாரிப்பதானால் முதலில் கதை, திரைக்கதை, வசனம், 'கமெரா' கோணங்களுடனும், காட்சி விபரங்களுடனும் எழுத்தில் பதிவு செய்து இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு மூன்று பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

அவைகள் கூட்டுத்தாபனத்தின் பிரதி மதிப்பீட்டுக் குழுவினராலே பரிசீலிக்கப்பட்டு தர நிர்ணயம் வழங்கப்படும்.

சிறந்த தரத்திலே சிபார்சு செய்யப்படும் பிரதிகளுக்குக் கூட்டுத்தாபனம் கடனுதவி வழங்கும்.

அந்த வகையில் யாழூர் துரையின் ''உறங்காத உள்ளங்கள்" ''புளுகர்கள் ஜாக்கிரதை" என்ற இரு திரைப்படப் பிரதிகள் கூட்டுத்தாபனத்தால் ஏற்கப்பட்டுக் கடன் வழங்குவது சம்பந்தமாக பேசுவதற்கும் அழைக்கப்பட்டார்.

அந்த படங்களில் நடிப்புதற்கான நடிகர் தேர்வும் நடைபெற்றது.

பிரபல நாடக திரைப்பட நடிகர் தர்மலிங்கம் துரையுடன் சேர்ந்து அந்த முயற்சிகளில் ஈடுபட்டதை யான் நன்கறிவேன்.

அவற்றில் நடிப்பதற்கு நானும் தெரிவு செய்யப்பட்டிருந்தேன்.

கடன் கிடைப்பது காலதாமதமாகிக் கொண்டே போனது.

ஆரம்ப வேலைகளுடன் படத் தயாரிப்பினை நிறுத்தவேண்டியதாகிவிட்டது.

அரசாங்கமும் மாறிவிட்டது.

இந்திய 'அமைதிப் படை' யாழ் வந்த காலத்தில்,

நிலைமைகள் சீர்குலைந்து யுத்த நிலைமை ஏற்பட்டதும் யாழ் நகரில் கொட்டடியில் வசிக்கமுடியாத நிலையில் யாழூர் துரை தமிழகம் சென்று சென்னையில் வசித்துவந்தார்.

புலம்பெயர்ந்து வாழும் மருமக்களின் உதவிபெற்றுச் சென்னையில் சிறிய அளவில் உடை தயாரிப்பு நிலையமொன்றை நடாத்திவந்தார்.

அத்துடன் இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

1991 ம் ஆண்டு சென்னை சென்றபோது நண்பர் துரையைச் சந்தித்து ஒருநாள் முழுதும் அவருடனிருந்து உரையாடி மகிழ்ந்தமை ஞாபகத்திலுண்டு.

அவர் பல சிறுகதைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார்.

அவரது சிறுகதைகள் தொகுக்கப்பட்டு ''கண்ணீர் தேசம்" என்ற பெயரில் சென்னை 'மித்ர பதிப்பகத்தினால்' 2005 டிசம்பரில் வெளியிடப்பட்டது.

''பூவேலையும் பூச்சு வேலையும் இல்லாமல் இந்தக் கதைகள் சொல்லப்படுகின்றன. இவை உண்மையான சம்பவங்களின் ஆவணங்கள். ஒவ்வொரு கதையிலும் சொல்லப்படும் நிகழ்ச்சிக் கூறுகளிலே எவ்விதக் கற்பனையும் இல்லை.

உண்மை பேசுதல் இக்கதைகளின் ஆன்மாவாகவும் பலமாகவும் அமைகின்றன.

எழுபதுகளில் ஈழத்தில் முகிழ்ந்த கதை சொல்லிகளின் எழுத்துக் கோலங்களின் ஓர் ஆவணமாகவே இக்கதைத் தொகுதி திகழ்கிறது."

என்றவாறு இந்நூலில் நீண்ட முன்னீடு எழுதியுள்ள எஸ். பொ. குறிப்பிட்டுள்ளார்.

மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான சசிபாரதி சபாரத்தினம் வழங்கிய ஆசியுரையும் நூலில் இடம்பெற்றுள்ளது.

சிறந்த நாடகக் கதாசிரியர், இயக்குனர், திரைப்படச்சுவடி எழுத்தாளர், சிறுகதைப் படைப்பாளி, எல்லோருக்கும் இனிய நண்பர் யாழூர் துரை 2012 ம் ஆண்டு மார்ச் மாதம் சென்னையில் காலமானார். அவரது நாமம் கலை இலக்கிய நேசர்கள் மத்தியில் நீடித்து நிலைக்கும் என நம்பலாம்..!






வி.ரி.இளங்கோவன்...
தியத்தலாவை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை இராணுவம்

### 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணிகளுக்கான பெறுகை – 552,000 மீற்றர்கள்

### ஒப்பந்த அடையாள இலக்கம்: MOD/SLA/06/2021

1. இலங்கை இராணுவத்திற்கு 552,000 மீற்றர் 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணிகளைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை இராணுவத்தின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழு (MPC) தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல் செயற்பாடுகள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் முதன்மை பொதுக் கட்டளை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொ.பே. 011-2432135, மின்னஞ்சல்: mgobranchemail@gmail.com மற்றும் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் (இலவசமாக) பரீட்சித்துப் பார்க்கலாம்.

   **பெறுகைக்கிளை**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
   **கொழும்பு 03.**
   **தொ.பே. 011-2390719**
   **தொலைநகல்: 011-2390720**

   **சகல வேலை நாட்களிலும் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை**
4. இயைபானால், விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரமான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
5. விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றறைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   **பிரதான நிதியியல் அதிகாரி (1)**
   **பெறுகைக் கிளை,**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03.**
   மற்றும்
   பாதுகாப்பு அமைச்சுக்கு மீளளிக்கப்படும் கட்டணமாக 55,000.00 இல. ரூபாவை (ஐம்பத்தையாயிரம் இலங்கை ரூபாய்கள்) ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
7. மேலுள்ளவற்றிக்குப் புறம்பாக, விலைமனுதாரர்கள் 92,300.00 இலங்கை ரூபாவை (தொண்ணூற்றி இரண்டாயிரத்து முன்னூறு) ரொக்கப் பணத்தில் மாதிரி பரீட்சித்தல் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2021-07-05ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
9. ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து விநியோகக் காலம் அதிகபட்சமாக 90 நாட்களாகும்.
10. மேலேயுள்ளவற்றிக்குப் புறம்பாக, விலைமனுக்கள் திறக்கப்படும் நாளில் பரீட்சித்துப் பார்ப்பதற்காக 20 மீற்றர் 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணிகளை விலைமனுதாரர்கள் முற்படுத்துதல் வேண்டும்.
11. விலைமனுக்களை MOD/SLA/06/2021 எனும் குறிப்பீட்டிலக்கத்தைக் குறித்து பின்வரும் முகவரிக்கு 2021-04-06ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

    **பிரதான நிதி அதிகாரியின் அலுவலகம்,**
    **தரைத் தளம்,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
    **கொழும்பு 03.**

    பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விருப்பத்தின் பேரில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
12. பின்வரும் முகவரியில் 2021-03-22ஆம் திகதி 0900 மணித்தியாலயத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.

    **இராணுவ சிலிங்கோ கட்டிடம்,**
    **இல. 167/30, அவிசாவளை வீதி,**
    **ஒருகொடவத்தை.**
13. சகல விலைமனுக்களுடனும் ITBயின் 20ஆம் பிரிவின் பிரகாரம் நாற்பத்தைந்து இலட்சத்து ஐம்பதாயிரம் இலங்கை ரூபாவுக்கான (4,550,000.00 இல. ரூபா) விலைக்கோரல் உத்தரவாதமொன்று (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற, கோரிக்கை மீதான விலைக்கோரல் உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்) விலைக்கோரல் உத்தரவாதமானது 2021-07-28ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
14. தொடர்பு விபரங்கள்

    **இலங்கை இராணுவ முதன்மை பொதுக் கட்டளைப் பிரிவு,**
    **தொலைபேசி : 011-2432135**
    **தொலைநகல் : 011-2432135**
    **மின்னஞ்சல் : mgobranchemail@gmail.com**

    **பிரதான நிதியியல் அதிகாரி,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **தொலைபேசி: 011-2390719**
    **தொலைநகல்: 011-2390720**
15. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக்குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக, விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் பங்குபெறும் தனிநபரின் பெயர் மற்றும் தே.அ.அ./கடவுச்சீட்டின் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதியியல் அதிகாரிக்கு எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு 03.**
14/03/2021

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை இராணுவம்

### ஒலிவ் பச்சை நிற குளியல் துவாய்களுக்கான பெறுகை – 278,250 எண்ணிக்கை

### ஒப்பந்த அடையாள இலக்கம்: MOD/SLA/08/2021

1. இலங்கை இராணுவத்திற்கு 278,250 எண்ணிக்கையான ஒலிவ் பச்சை நிற துவாய்களைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை இராணுவத்தின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழு (MPC) தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல் செயற்பாடுகள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் முதன்மை பொதுக் கட்டளை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொ.பே. 011-2432135, மின்னஞ்சல்: mgobranchemail@gmail.com மற்றும் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் (இலவசமாக) பரீட்சித்துப் பார்க்கலாம்.

   **பெறுகைக் கிளை,**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
   **கொழும்பு 03.**
   **தொ.பே. 011-2390719**
   **தொலைநகல்: 011-2390720**

   **சகல வேலை நாட்களிலும் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை**
4. இயைபானால், விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரமான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
5. விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப் படாதவராக இருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   **பிரதான அதிகாரி**
   **பெறுகைக் கிளை,**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
   **கொழும்பு 03.**

   மற்றும்

   பாதுகாப்பு அமைச்சுக்கு மீளளிக்கப்படும் கட்டணமாக 35,000.00 இல. ரூபாவை (முப்பத்தையாயிரம் இலங்கை ரூபாய்கள்) ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
7. மேலுள்ளவற்றிக்குப் புறம்பாக, விலைமனுதாரர்கள் 87,600.00 இலங்கை ரூபாவை (எண்பத்து ஏழாயிரத்து அறுநூறு இல. ரூபா) ரொக்கப் பணத்தில் மாதிரி பரீட்சித்தல் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2021-07-06ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
9. ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து விநியோகக் காலம் அதிகபட்சமாக 90 நாட்களாகும்.
10. மேலேயுள்ளவற்றிக்குப் புறம்பாக, விலைமனுக்கள் திறக்கப்படும் நாளில் பரீட்சித்துப் பார்ப்பதற்காக 15 எண்ணிக்கையான ஒலிவ் பச்சை நிற துவாய்களை விலைமனுதாரர்கள் முற்படுத்துதல் வேண்டும்.
11. விலைமனுக்களை MOD/SLA/08/2021 எனும் குறிப்பீட்டிலக்கத்தைக் குறித்து பின்வரும் முகவரிக்கு 2021-04-07ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

    **பிரதான நிதி அதிகாரி**
    **தரைத் தளம்,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
    **கொழும்பு 03.**

    பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விருப்பத்தின் பேரில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
12. பின்வரும் முகவரியில் 2021-03-22ஆம் திகதி 10.30 மணித்தியாலயத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.

    **இராணுவ சிலிங்கோ கட்டிடம்,**
    **இல. 167/30, அவிசாவளை வீதி, ஒருகொடவத்தை.**
13. சகல விலைமனுக்களுடனும் ITBயின் 20ஆம் பிரிவின் பிரகாரம் இருபத்து நான்கு இலட்சத்து அறுபதாயிரம் இலங்கை ரூபாவுக்கான (2,460,000.00 இல. ரூபா) விலைக்கோரல் உத்தரவாதமொன்று (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற, கோரிக்கை மீதான விலைக்கோரல் உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்) விலைக்கோரல் உத்தரவாதமானது 2021-08-03ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
14. தொடர்பு விபரங்கள்

    **இலங்கை இராணுவ முதன்மை பொதுக் கட்டளைப் பிரிவு,**
    **தொலைபேசி : 011-2432135**
    **தொலைநகல் : 011-2432135**
    **மின்னஞ்சல் : mgobranchemail@gmail.com**

    **பிரதான நிதியியல் அதிகாரி,**
    **பாதுகாப்பு அமைச்சு,**

    **தொலைபேசி: 011-2439381**
    **தொலைநகல்: 011-2390720**
15. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக்குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக, விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் பங்குபெறும் தனிநபரின் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டின் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதியியல் அதிகாரிக்கு எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு 03.**
14/03/2021

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு

## பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை இராணுவம்

### 100,000 சோடிகள் கறுப்பு நிற ஹைலெக் பூட்களைக் கொள்வனவு செய்தல்

### ஒப்பந்த அடையாள இலக்கம்: MOD/SLA/02/2021

1. இலங்கை இராணுவத்திற்கு 100,000 சோடிகள் கறுப்பு நிற ஹைலெக் பூட்களைக் (Boot Highleg) கொள்வனவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை இராணுவத்தின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழு (MPC) தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல் செயற்பாடுகள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. இதற்குச் சமமான காலணி உற்பத்திக் கைத்தொழில் தொடர்பில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவம் சகிதமான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்தப் பொருட்களை உற்பத்தி செய்யாத உள்நாட்டு விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணத்தின் IV பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்தி உற்பத்தி அதிகாரம் வழங்கும் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அவ்வாறான உற்பத்தியைக் கொண்ட சமமான காலணி உற்பத்திக் கைத்தொழில் தொடர்பில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன், விலைமனுதாரருக்கு ஆகக் குறைந்தது 03 வருட கால வியாபார பதிவுச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்) வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் முறையான நியமிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் கடந்த 5 வருட காலத்தினுள் ஆகக் குறைந்தது நிகரான கறுப்பு நிற பூட் ஹைலெக் (Boot Highleg Black) மூன்று (03) ஒப்பந்தங்களை நிறைவேற்றியிருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் கடந்த மூன்று வருடங்களுக்கான வருடாந்த நிதிப் புரள்வானது 500 மில்லியன் இலங்கை ரூபாவுக்குச் சமமான பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் முதன்மை பொதுக் கட்டளை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொ.பே. 011-2432135, மின்னஞ்சல்: mgobranchemail@gmail.com மற்றும் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் (இலவசமாக) பரீட்சித்துப் பார்க்கலாம்.

   **பெறுகைக் கிளை,**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03.**
   **தொ.பே. 011-2390719**
   **தொலைநகல்: 011-2390720**
   **சகல வேலை நாட்களிலும் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை**
5. விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
6. விலைமனுதாரர்கள், 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக கவனத்திற் கொள்ளல் வேண்டும் என்பதுடன் அந்தச் சட்டத்தின் சில முக்கிய பிரித்தெடுத்தல்கள் பின்வருமாறாகும்.

   6.1 விலைமனுதாரர் சார்பில் யாராவது முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது நியமிக்கப்பட்டவராக செயற்படுவாறாயின் இந்த பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 10ஆம் பிரிவின் பிரகாரம் அவர் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். 6ஆம் பிரிவின் கீழ் தேவையான விபரங்களை பதிவாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   6.2 இந்த விலைமனுதாரர் சார்பில் யாராவது முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது நியமிக்கப்பட்டவராக செயற்படுவாறாயின் இந்த பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் இந்தப் பிரிவுகளின் கீழ் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கு முன் முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது நியமிக்கப்பட்டவராக நியமிக்கப்பட்டமைக்கான சான்றிதழை பதிவாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   6.3 இயைபானால், விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரமான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.
7. விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரமான பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் பாதுகாப்பு அமைச்சுக்குச் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
8. உள்நாட்டு உற்பத்தி பொருட்களுக்கென அளிக்கப்படும் விருப்பச் சலுகை (A Margin of Preferences) இங்கு ஏற்புடையதானது. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.
9. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   **பெறுகைக் கிளை,**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03.**
   மற்றும்
   பாதுகாப்பு அமைச்சுக்கு மீளளிக்கப்படும் கட்டணமாக 45,000.00 இல. ரூபாவை (நாற்பத்தையாயிரம் இலங்கை ரூபாய்கள்) ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
10. மேலுள்ளவற்றிக்குப் புறம்பாக, விலைமனுதாரர்கள் 92,900.00 இலங்கை ரூபாவை (தொண்ணூற்றி இரண்டாயிரத்து தொண்ணூறு இல. ரூபா) ரொக்கப் பணத்தில் மாதிரி பரீட்சித்தல் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.
11. விலைமனுக்கள் 2021-07-04ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
12. ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து விநியோகக் காலம் (அதிகபட்சமாக) 90 நாட்களாகும்.
13. விலைமனுக்களை MOD/SLA/02/2021 எனும் குறிப்பீட்டிலக்கத்தைக் குறித்து பின்வரும் முகவரிக்கு 2021-04-05ஆம் **திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.**

    **பிரதான நிதி அதிகாரியின் அலுவலகம்,**
    **தரைத் தளம்,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03.**
    பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விருப்பத்தின் பேரில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
14. பின்வரும் முகவரியில் 2021-03-22ஆம் திகதி 1300 மணித்தியாலயத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.

    **இராணுவ சிலிங்கோ கட்டிடம்,**
    **இல. 167/30, அவிசாவளை வீதி,**
    **ஒருகொடவத்தை.**
15. சகல விலைமனுக்களுடனும் முப்பத்தொன்பது இலட்சம் இலங்கை ரூபாவுக்கான (3,900,000.00 இல. ரூபா) விலைக்கோரல் உத்தரவாதமொன்று (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற, கோரிக்கை மீதான விலைக்கோரல் உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்) விலைக்கோரல் உத்தரவாதமானது 2021-08-01ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
16. தொடர்பு விபரங்கள்

    **இலங்கை இராணுவ முதன்மை பொதுக் கட்டளைப் பிரிவு,**
    **தொலைபேசி: 011-2432135**
    **தொலைநகல்: 011-2432135**
    **மின்னஞ்சல்: mgobranchemail@gmail.com**
    **பிரதான நிதியியல் அதிகாரி, பாதுகாப்பு அமைச்சு,**
    **தொலைபேசி: 011-2390719**
    **தொலைநகல்: 011-2390720**
17. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக்குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக, விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் பங்குபெறும் தனிநபரின் பெயர் மற்றும் தே.அ.அ./கடவுச்சீட்டின் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதியியல் அதிகாரிக்கு எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு 03.**
14/03/2021

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை இராணுவம்

### 10,000 எண்ணிக்கையான பெலிஸ்டிக் ஹெல்மெட்களைக் கொள்வனவு செய்தல்

### ஒப்பந்த அடையாள இலக்கம்: MOD/SLA/09/2021

01. இலங்கை இராணுவத்திற்கு 10,000 எண்ணிக்கையான பெலிஸ்டிக் ஹெல்மெட்களைக் (Helmet Ballistic) கொள்வனவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை இராணுவத்தின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழு தலைவர் அழைக்கின்றார்.
02. விலைக்கோரல் செயற்பாடுகள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
03. தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் முதன்மை பொதுக் கட்டளை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொ.பே. 011-2432135, மின்னஞ்சல்: mgobranchemail@gmail.com மற்றும் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் (இலவசமாக) பரீட்சித்துப் பார்க்கலாம்.

    **பெறுகைக் கிளை,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
    **கொழும்பு 03.**
    **தொ.பே. 011-2390719**
    **தொலைநகல்: 011-2390720**
    **சகல வேலை நாட்களிலும் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை**
04. விலைமனு தாரர்கள்அபகீர்த்தியாளர் பட்டியல் படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
05. இயைபானால், விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரமான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

    **பிரதான நிதியியல் அதிகாரி 1,**
    **பெறுகைக் கிளை,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
    **கொழும்பு 03.**
    **மற்றும்**

    பாதுகாப்பு அமைச்சுக்கு மீளளிக்கப்படும் கட்டணமாக 40,000.00 இல. ரூபாவை (நாற்பதாயிரம் இலங்கை ரூபாய்கள்) ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
07. விலைமனுக்கள் 2021-07-06ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
08. LC திறக்கப்பட்ட சரியான நாள் முதல் விநியோகக் காலம் அதிகபட்சமாக 90 நாட்களாகும்.
09. மேலேயுள்ளவற்றிக்குப் புறம்பாக, விலைமனுக்கள் திறக்கப்படும் நாளில் பரீட்சித்துப் பார்ப்பதற்காக 09 எண்ணிக்கையான பெலிஸ்டிக் ஹெல்மெட்டுக்களை விலைமனுதாரர்கள் முற்படுத்துதல் வேண்டும்.
10. விலைமனுக்களை MOD/SLA/06/2021 எனும் குறிப்பீட்டிலக்கத்தைக் குறித்து பின்வரும் முகவரிக்கு 2021-04-07ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

    **பிரதான நிதி அதிகாரியின் அலுவலகம்,**
    **தரைத் தளம்,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
    **கொழும்பு 03.**

    பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விருப்பத்தின் பேரில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
11. 2021-03-22ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு பின்வரும் முகவரியில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.

    **இராணுவ சிலிங்கோ கட்டிடம்,**
    **இல. 167/30, அவிசாவளை வீதி,**
    **ஒருகொடவத்தை.**
12. தொடர்பு விபரங்கள்

    **இலங்கை இராணுவ முதன்மை பொதுக் கட்டளைப் பிரிவு,**
    **தொலைபேசி : 011-2432135**
    **தொலைநகல் : 011-2432135**
    **மின்னஞ்சல் : mgobranchemail@gmail.com**

    **பிரதான நிதியியல் அதிகாரி,**
    **பாதுகாப்பு அமைச்சு,**

    **தொலைபேசி: 011-2390719**
    **தொலைநகல்: 011-2390720**
13. சகல விலைமனுக்களுடனும் ITBயின் 20ஆம் பிரிவின் பிரகாரம் இருபத்தாறு இலட்சம் இலங்கை ரூபாவுக்கான (2,600,000.00 இல. ரூபா) விலைக்கோரல் உத்தரவாதமொன்று (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற, கோரிக்கை மீதான விலைக்கோரல் உத்தரவாதமாக விருத்தல் வேண்டும்) விலைக்கோரல் உத்தரவாதமானது 2021-08-03ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
14. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக்குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக, விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் பங்குபெறும் தனிநபரின் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டின் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதியியல் அதிகாரிக்கு எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு 03.**
**14/03/2021**

Food and Agriculture Organization of the United Nations

gef GLOBAL ENVIRONMENT FACILITY INVESTING IN OUR PLANET

மத்திய மலைநாட்டின் கண்டி, பதுளை, நுவரெலியா பகுதிகளில் வளம் குறைந்த விவசாய நிலங்களை புனர் நிர்மாணம் செய்யும் திட்டம் (RDALP)

## விண்ணப்பம் கோரல்

**இலங்கையில் பயன்பாட்டிலுள்ள சிறந்த நிலையான நில முகாமைத்துவ நடைமுறைகளுக்கான தேசிய மட்ட விருது**

RDALP என்பது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் (FAO), சுகாதார அமைச்சு மற்றும் விவசாய திணைக்களத்தின் இயற்கை வளங்கள் முகாமைத்துவ மையத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இந்த திட்டத்தின் ஒரு செயற்பாடாக, நிலையான நில முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பிலான அறிவு மற்றும் அனுபவ பகிர்வினை ஊக்குவிப்பதனூடாக இலங்கையில் நிலையான விவசாயத்தை கட்டியெழுப்பும் நோக்கில் இத்தேசிய முயற்சியானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிலையான நில முகாமைத்துவ நடைமுறைகள் (10 தொழில்நுட்பங்கள் மற்றும் 05 அணுகுமுறைகள்) சுயாதீன நிபுணர் குழு ஒன்றினால் தெரிவு செய்யப்படும். தேர்வுகளின் போது பின்வரும் முக்கிய விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

- புதுக் கண்டுபிடிப்பு: புதிய நடைமுறைகளளின் அறிமுகம், கண்டுபிடிப்பு மற்றும் செயற்படுத்துகை
- செயல் திறன்: குறித்த பலனை அடையும் திறன்
- உகந்த பயன்பாடு: வளங்களின் உகந்த பயன்பாடு மற்றும் குறைந்த செலவில் பலனை அடையும் திறன்
- தொடர்பு: நில சீரழிவு தொடர்பிலான பிரச்சினைகளுக்கான தீர்வு தரக்கூடியதாக இருத்தல்
- நிலைத்தன்மை: உகந்த வளப் பயன்பாட்டுடன்கூடிய நிலைத்திருக்கும் தன்மை
- பங்கேற்பு நடைமுறை அபிவிருத்தி மற்றும் செயற்படுத்தலின் போது பலதரப்பட்ட பங்குதாரர்களின் பங்களிப்பு

இந்த நிகழ்வு தொடர்பான மேலதிக விபரங்கள் உள்ளடங்கிய கருத்துக்குறிப்பு மற்றும் விண்ணப்ப படிவத்தினை கீழுள்ள இணைப்பின் ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

https://sricat.net/index.php/ta/9-news-and-events/news/222-slm-award

கருத்து குறிப்பில் தரப்பட்டிருக்கும் படிவத்திற்கு அமைய தங்களால் நடைமுறைப்படுத்தப்படும் நிலையான நில முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பிலான தகவல்களை 31.03.2021 திகதிக்கு முன்பு கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்
RDAL திட்டம் ,
FAO அலுவலகம்
இயற்க்கை வள முகாமைத்துவ மையம்
இல : 52 சரசவி வீதி, பேராதனை

தொ.இ : 0812 085120/ 074 1747392
மின்னஞ்சல் : info@sricat.net

## பெருந்தோட்ட அமைச்சு

## இலங்கை தேயிலை சபை

# பதவி வெற்றிடம்

இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் ஒழுங்கு, அபிவிருத்தி, விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக செயற்படும் முன்னோடி அரச நிறுவனமான இலங்கை தேயிலை சபையில் அங்கீகாரம் பெற்ற ஊழியர் எண்ணிக்கைக்குள் நிர்வாக அதிகாரி பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த, செயல்திறன் மிக்க, ஆக்கத்திறனுள்ள மற்றும் நன்னடத்தையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## தேயிலை பரிசோதகர்/ போதனாசிரியர் பதவி
## (Tea Inspector/Instructor) IIIஆந் தரம் - MA (2-1)

**தொழில் விபரம்**

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியினால் ஒப்படைக்கப்பட்ட செயற்றிறன் கடமையாக தேயிலைக் கொழுந்து விநியோகஸ்தர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிற்சாலைகள், தயாரிக்கப்பட்ட தேயிலை மற்றும் தயாரிப்புகளை அகற்றல், தயாரிப்பாளர்களின் ஒழுங்குமுறை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் என்பனவாகும்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

இலங்கை மூன்றாம் நிலைக் கல்வி அல்லது வாழ்தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் தேசிய வாழ்தொழில் தகைமையின் (NVQ 5) 05வது மட்டத் தகைமைக்குக் குறையாத இரண்டு வருட விவசாய டிப்ளோமா தகைமை.

**மற்றும்**

க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பாடம் உள்ளடங்களாக ஆகக் குறைந்தது 05 பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் க.பொ.த. (உயர்) தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானப் பாடப்பரப்பில் மூன்று (03) பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : MA 2-: ரூபா 30,310 – 10 x ரூபா 300- 7 x ரூபா 350 – 4 x ரூபா 495 -20 x ரூபா 660 – ரூபா 50,940.00

**ஆரம்பச் சம்பளம்** : 30,310.00 ரூபா என்பதுடன் வாழ்க்கைச் செலவுப் படி 7,800/- ரூபா வழங்கப்படும்.

**வயது** : 18 வயதுக்குக் குறையாமல் மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**தேர்ந்தெடுத்தல்** :

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைப்புடனான நேர்முகப் பரீட்சையின் மூலம்
(எழுத்து மூலப் பரீட்சைக்கான விடயங்கள் மற்றும் ஒவ்வொரு விடயத்திற்கும் புள்ளிகள் வழங்குதல் பின்வருமாறாகும்)

| விடயம் | நேரம் மற்றும் புள்ளிகள் | பரீட்சை மொழிமூலம் |
|---|---|---|
| • மொழி ஆற்றல் | (100 புள்ளிகள்) - 1 1/2 மணித்தியாலம் | ஆங்கிலம் மற்றும் சிங்களம் |
| • தகுதி பரிசீலனை | (100 புள்ளிகள்) - 45 நிமிடங்கள் | ஆங்கிலம் மற்றும் சிங்களம் |
| • பதவிக்கு உரிய அறிவாற்றல் | (100 புள்ளிகள்) - 3 மணித்தியாலம் | ஆங்கிலம் மற்றும் சிங்களம் |

ஒவ்வொரு விடயத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் 40% மும் மற்றும் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது 50% புள்ளிகளையும் போட்டிப் பரீட்சையில் சித்தியெய்துவதற்குப் பெறுதல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்:**

- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றத் தேவையான சிறந்த உடல், உள தகுதியுடன் சிறந்த தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரிகளும் சிறந்த நன்னடத்தையுடைய நபர்களாயிருத்தல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தி சேர்க்கப்படுவர் என்பதுடன் ஏற்கனவே நிரந்தரமாக்கப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் ஒரு வருட பரிசீலனைக் காலத்தின் கீழ் நியமிக்கப்படுவர்.
- தேர்ந்தெடுக்கப்படும் சகல வெளி விண்ணப்பதாரர்களும் குறித்த சம்பள அளவின் ஆரம்ப நிலையில் அமர்த்தப்படுவார் என்பதுடன் உள்ளக விண்ணப்பதாரர்களின் சம்பளம் தாபனக் கோவையின் viiஆம் உப அத்தியாயத்தின் 04 அத்தியாயத்தின் பிரகாரம் அமர்த்தப்படுவர்.

**ஏனைய அனுகூலங்கள்:**

- சபையில் தற்போது நிலவும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக வைத்திய நிவாரண வசதிகள் வழங்கப்படும்.
- சேமலாப நிதிக்கான பங்களிப்பு - தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் அவரது சம்பளத்தின் 10% த்தை ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பாகச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன் இதன்பொருட்டு சபையினால் 15% பங்களிப்பு செய்யப்படும்.
- சபையினால் மேலும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு அவரது சம்பளத்தின் 3% பங்களிப்பு செய்யப்படும்.

**விண்ணப்பித்தல்**

இக்காரியாலயத்தில் அல்லது http;//www.srilankateaboard.lk எனும் இணையதளத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய உரிய மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் தொழில்சார் தகைமைகள் / அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2021 மார்ச் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத்/ திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தேயிலைச் சபை,**
**574, காலி வீதி, கொழும்பு 3.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பாதுகாப்பு அமைச்சு

### *அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தின் 04 ஆம் இலக்க கட்டிடத் தொகுதிக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முறைமையை (ICTS) வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றிற்காக விலைமனுக்களை கோரல்*

**ஒப்பந்த இல.: DHQC/ICTS/04/2021**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 490 மில்லியன் இலங்கை ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதியிலுள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதியின் 04 ஆம் தொகுதிக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

   ***The work consists of supply, installation and maintenance of all the works in Local Area Network Switches System (LANS), Network Operating Center (NOC), Closed Circuit Television IP Surveillance System (CCTV/IPSS) and Door Access Control System (DACS) of Block 03 of Defence Headquarters Complex at Akuregoda, Sri Lanka.***

2. நிர்மாணக் காலப்பகுதியானது 270 நாட்களாகும்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருத்தல் வேண்டும். Bidders shall have Construction Industry Development Authority Grading EM1 in the Specialty of Electrical and Mechanical Services (EM1) under subspecialist area on Telecommunication and Information Technology Systems, Security Systems and pipe Music Systems (ELV).
5. ஒப்பந்த பெறுகைக்கான தகைமையை பெறுவதற்காக ஏனைய ஆகக் குறைந்த தகைமைகள் தேவைப்பாடுகள்.


| | தகைமைகள் | ஆகக்குறைந்த தகைமைத் தேவைப்பாடுகள் |
|---|---|---|
| (i) | கடந்த பத்து வருடங்களில் எந்தவொரு ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் வருடாந்த சராசரி பெறுமதி. (2010 இலிருந்து 2020 வரையுமானது) | வருடமொன்றிற்கு 490 மில்லியன் இலங்கை ரூபா 2010/2011, 2011/2012, 2012/2013, 2013/2014, 2014/2015 , 2015/2016, 2016/2017, 2017/2018. 2018/2019, 2019/2020 ஆகிய ஆண்டுகளுக்கான அத்தாட்சிப்படுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் அறிக்கைகள் விலைமனுவுடன் வழங்கப்படல் வேண்டும். |
| (ii) | கடந்த பத்து வருடங்களில், வழங்கல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றில் அனுபவம் (2011 இலிருந்து 2020 வரையுமானது) | கடந்த 10 வருடங்களில் ஆகக் குறைந்தது 3 எண்ணிக்கையுடைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முறைமைகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறான முறைமைகளில் ஆகக் குறைந்தது ஒன்றின் (1) பெறுமதியானது 750 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாததாகவிருத்தல் வேண்டும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முறைமைகளுக்கான சான்று வழங்கப்படல் வேண்டும். |
| (iii) | திரவச் சொத்துக்களின் ஆகக் குறைந்த பெறுமதியானது மற்றும்/ அல்லது கடன் வசதிகள் (ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகளுக்கான ஒதுக்கப்பட்டவை நீங்கலாக) இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எவ்வித முற்பணமானது | 160 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறைவானதாகவிருத்தல் ஆகாது. சான்று வழங்கப்படல் வேண்டும். |


6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையக் கட்டிடத்தொகுதி செயற்றிட்ட, செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து அல்லது **pmudhqc@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக மேலேயுள்ள முகவரியில் 2021/03/15 ஆம் திகதியிலிருந்து 2021/ 04/16 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பரீட்சிக்கப்படலாம்.
7. 2021.03.15 ஆம் திகதியிலிருந்து **2021.04.16** ஆம் திகதி வரையும் வேலை நாளொன்றில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 40,000 இலங்கை ரூபாவை (நாற்பதினாயிரம் இலங்கை ரூபாவை) செலுத்திய பின்னர், கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/**5** ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதிசார் அலுவலருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று (except Section I மற்றும் II of Volume 1A) ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவொன்றில் கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/5 ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் தரை மாடியிலுள்ள பிரதான கணக்காளரின் அலுவலகத்தின் பிரதான நிதி அலுவலர் (I), அமைச்சு பெறுகைக் குழுவின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. 2021.03.23 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதியின் வேலைத்தளத்தில் செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறுவதுடன் அதே தினம் விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் தளவிஜயமொன்றும் நடைபெறும்.
9. விலைமனுக்கள் 2021.04.19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் 2021.08.15 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். (விலைமனுக்களை திறக்கும் திகதி அடங்கலாக அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 119 நாட்கள்.
11. நிபந்தனையற்றதும் இலகுவில் ரொக்கப் பணத்தில் மாற்றக்கூடியதுமானதுமான வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து நாற்பத்தொன்பது இலட்சம் இலங்கை ரூபாவில் (4,900,000 இலங்கை ரூபாவில்) பெற்றுக் கொள்ளப்பட்டதுமான ‘‘விலைமனுப்பிணையொன்றுடனும்’’ அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2021.09.12 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 147 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் பயனாளியானவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராவார்.
12. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் சான்றிதழை சமர்ப்பிக்கும்படி விலைமனுதாரர்கள் தீர்க்கமாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.
13. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக் குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக விலைமனு திறக்கும் நிகழ்வில் பங்கேற்கும் தனிநபரின் பெயர் மற்றும் தேஅஅ/ கடவுச்சீட்டு இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதி அலுவலருக்கு எழுத்தில் அறிவிக்குமாறு அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

மேலே 9 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி : 0094-077-3766601**
**தொலைநகல் : 0094-011-2390720**

- HOUSES
- LANDS
- COMMERCIAL PROPERTIES
- APARTMENTS
Sunday Observer adz it's what you want
Buy & Sell
Rent or Lease
Wanted
HOUSE & PROPERTY SECTION





# இப்படி நடந்தால் என்ன...?

மஜீத் றாவுத்தர் கிண்ணியா

அப்புகாமியின் வீட்டில் 'ஆஆ.... ஆஆ... துவ பாசலட்ட யன் னெத்த? நகின்ட வெலாவ கத்தாய்' என்றாள் திங்கிரி மெனிகே அப்புகாமியின் மனைவி. சுமனா டீச்சரின் தாய்.

நேரம் ஏழு மணி என்று அம்மா சொன்னதும் மகள் சுமனா வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து காலைக் கடனை அவசர அவசரமாக முடித்துக் கொண்டாள் வீதிக்கு இறங்கி பாடசாலை நோக்கி விறு விறு என்று நடந்தாள். இடையில் தான் தன் பேக்கை மறந்தது நினைவுக்கு வந்தது. அப்போதும் மகாலிங்க மாஸ்டரின் முகம் தான் அவள் முன் வந்து நின்றது. அவன் நினைவோடே நடந்தாள் வித்தியாலயத்தை அடைந்தாள். தினவரவு இடாப்பில் கையெழுத்திட்டாள் அவள் தான் 'இலாஸ்ட் பஸ்'. மகாலிங்க மாஸ்டர் கையெழுத்தை தான் தேடினாள். மனதின் ஆழத்தில் களிப்பு எங்கோ ஒரு மூலையில் ஊசலாடிக்கொண்டிருந்தது.

சுமனா டீச்சரும் மகாலிங்க மாஸ்டரும் ஒரே 'இஸ்டாப்'. அவள் அம்/ அல் அம்ரா வித்தியாலயத்தில் சிங்களம் போதிக்கும் ஒரு சிங்கள ஆசிரியை. கலியாணமே வேண்டாம் என்றும் திருமண பந்தத்தில் இணையப்போவதில்லை என்றும் வைராக்கிய நெஞ்சோடு இருந்தவள் சுமனா டீச்சர்.

மாற்றலாகி வந்து ஒரு வருடம் பூரணமாகாத நிலையில் மகாலிங்கம் மாஸ்டர் அவள் வைராக்கியத்தை தகர்த்துவிட்டார். அன்று மாலை பெற்றார் ஆசிரிய சங்க கூட்டத்தில் மகாலிங்கம் ஆற்றிய உரை அவளைப் பெரிதும் கவர்ந்தது. இந்த உரையினால் மகாலிங்க மாஸ்டரின் மீது சுமதிக்கு மேலும் நேசம் ஓங்கியது. அவள் சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள். அவளின் எண்ணமும் அது தான். அதனால் அவன் மீது உள்ள விருப்புக்கு மெருகூட்டியது.

யாழ்/ இந்துக் கல்லூரியில் இருந்து அம்பாந்தோட்டை அல் அம்ரா மகா வித்தியாலயத்துக்கு அதிபர், பெற்றோர், அரசியலாளர்களின் செல்வாக்கால் மகாலிங்கம் மாஸ்டர் இடமாற்றம் செய்யப்பட்டார். அவருக்கு அங்கு பிரியாவிடை கூட்டத்தில் கலந்து கொள்ளாத ஒரே ஒரு டீச்சர் என்றால் அது மகாலிங்க மஸ்டரின் தாய் மாமன் மகள், சுமதி டீச்சர் தான். அவள் அந்த மகாலிங்க மாஸ்டரின் பிரிவு உபசார வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை.

சுமதி டீச்சர் கலந்து கொள்ளாதது மகாலிங்க மாஸ்டரை மட்டும் அல்லாமல் அதிபர், பெற்றார்கள், சக ஆசிரியர்கள் உட்பட அனைவரையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கிது. அன்வர் மாஸ்டரை தவிர. அன்வர் மாஸ்டரிடம் சுமதி டீச்சர் ஏற்கனவே தான் சமூகம் தர மாட்டேன் என்று சொல்லி இருந்தாள் அதனாலேயே அன்வர் மாஸ்டர் எவ்வித சலனமும் இன்றி இருந்தான். சுமதி டீச்சருக்கும் அன்வர் மாஸ்டருக்கும் இடையில் சாடையான 'அது' இருப்பதாக சில வாத்திமாருக்குத் தெரியும். அந்த ஒரு சில வாத்திமார் 'பெயாவல் மீட்டிங்' இல் அன்வரைப் பார்த்த பார்வையில் அது தெரிந்தது. ஏனென்றால் அவன் முகம் மட்டுமே மாறுதலின்றி மலர்ந்திருந்தது.

வாலிபனான மகாலிங்க மாஸ்டரின் மனம் சூடேறி அங்கு பரிமாறப்பட்ட குளிர்பானத்தின் குளிராலோ ஏஸியாலோ அந்தச் சூட்டைத் தணிக்க முடியவில்லை. கூட்டம் ஆரம்பித்த போது எல்லோரும் அவனைப் பார்த்த பார்வை மேலும் முகத்தை வாடச் செய்து சோகையாக்கியது. பிரிந்து போகும் போது மனவருத்தமாக இருந்தாலும் அடுத்த நாள் மனச்சுமையுடனே சுமதியிடம் இருந்து விடை பெற்றான் அவன்.

தோற்று விடுவோமோ என்ற பூதாகர சிந்தனை அவனை வாட்டியது. ஏன் சுமதி பிரியாவிடைக்கு வரல்ல என்ன வீட்டு வேலையா நேற்று நீ லீவு போட்டது ஏன்? அவனே மறுமொழியாக கேள்வியை கேட்டான். அவள் மௌனமாக தலையை அசைத்தாள்.

ஓம் சேர் எனக்கும் கொஞ்சம் உடம்பு சுகம் இல்லாதது போலே கிடந்தது கோவிச்சுக் கொள்ளாதிங்கோ என்றாள். அவள் பொய் சொல்லுகிறாள் பொருந்தச் சொல்லுகிறாள். என்பதை அவளின் தடுமாற்றம் தெரியப்படுத்தியது. மகாலிங்க மாஸ்டருக்கு விளங்காது என்று அவள் நினைத்துக் கொண்டாள் போலும்.

சரி சரி டீச்சர் நான் போட்டு வாரன், ஆ என்றவள் நல்லம் போட்டு வாருங்கோ, என்ற பதிலை எதிர்பாராமல் வெடுக்கென்று திரும்பியும் பார்க்காமல் கம்பீர நடை நடந்து சென்றான். தன்னைப் பார்ப்பான் என்ற நினைவோடு தான் நடந்தாள் ஆனால் சுமதி டீச்சரின் மனப்பாரம் சற்று இறங்கியது, நடந்து சென்ற மாஸ்டரின் மனம் சுமை ஏறிக் கனத்தது.

வடக்கிலிருந்து தெற்குக்கு வந்த மகாலிங்கம் மாஸ்டருக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தது காரணம் படிபிப்பிக்கக் கூடிய கெட்டிக்கார ஒரு வாத்தியார். அந்த மகா வித்தியாலத்தில் படிப்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்களுக்குள் அதிபர் உட்பட அரைவாசிக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் யாழ்ப்பாண வாத்தியார்களிடம் கல்வி கற்று தேறியவர்கள் தான்.

சுமதியின் சுமையோடு வந்த மகாலிங்க மாஸ்டருக்கு அவர்களின் வரவேற்பும் உபசரிப்பும் மரியாதையும் சற்று பாரத்தை குறைத்தது. அதைவிட சிங்கள டீச்சரின் நட்பு மேலோங்கியது என்றாலும், தன் உறவுமுறையான சுமதி டீச்சரின் நினைவு அவன் மனதின் அடி மூலையில் எங்கோ ஓர் இடத்தில் இருந்து கொண்டு தான் இருந்தது.

சுமதியின் சுமையோடு வந்த மகாலிங்க மாஸ்டருக்கு அவர்களின் வரவேற்பும் உபசரிப்பும் மரியாதையும் சற்று பாரத்தை குறைத்தது. அதைவிட சிங்கள டீச்சரின் நட்பு மேலோங்கியது என்றாலும், தன் உறவுமுறையான சுமதி டீச்சரின் நினைவு அவன் மனதின் அடி மூலையில் எங்கோ ஓர் இடத்தில் இருந்து கொண்டு தான் இருந்தது.

அன்றைய 'மெயி' லில் மகாலிங்க மாஸ்டருக்கு ஒரு கடிதம் இருந்தது அதிபர் அவங்க அவங்க கடிதங்களை தெரிவு செய்து அனுப்பினார் . அந்த கடிதத்தை கண்ட நேரம் முதல் மகாலிங்கத்துக்கு ' இலக்ரிக் சொக்' அடித்தால் போல் எதிலும் பற்றற்ற விரக்தி மனோ பாவம் வேரூன்றியது. அதனால் அவன் அரைநாள் லீவில் தன் குவாட்டஸ்க்கு சென்று விட்டான். அடுத்த நாள் ஒரு லோங் லீவில் சென்றவன் டேம் லீவும் முடிந்து தான் வந்தான்.

இது நேற்றுப் போல தான் இருந்தது கடிதம் வந்து சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது நடந்து அங்கு படிப்பிற்கும் சக ஆசிரியர் கமால் மாஸ்டரும் மகாலிங்க மாஸ்டரும் சந்தித்து கொண்டார்கள் மூன்று மாதங்களுக்கு பிறகு கடற்கரை மணலில் தனிமையில் கடலைப்பார்த்த வண்ணம் இருந்த மகாலிங்க மாஸ்டர் வலப்பக்கமாக திரும்பி மச்சான் கமால் வாடப்பா வா சந்தோச மிகுதியால் கூவி அழைத்தான் ஆ... ஆ... மகாலிங்கம் எப்ப அப்பா? ஊரிலே இருந்து எப்போ வந்த நீ. நேற்று வந்தனான் மச்சான் கொஞ்சம் பயண களைப்பாகக் கிடந்தது குவாட்டசிலே படுத்து கிடந்தனான். நாளைக்கு பள்ளிக் கூடத்துக்கு வருவேன்.

டேய் மகாலிங்கம் ஒன்ர சந்நியாசி வேடத்தை கலையடாப்பா. இந்த உலகத்துக்கு நாம் வாழத்தானே வந்திருக்கிறோம். விரைவாக போகும் முன் நமக்கு என்றொரு வாரிசு இருக்கத்தானே வேண்டும். உன் இளமையை வீணாக கடலில் கொட்டப்போகிறாயா. அவள் எப்போதும் விரும்பிக் கொண்டு தான் இருக்கிறாள். அவள் உன்னைக் கண்ட உடனே அவளின் வைராக்கியம் இழந்து மனம் இளகி தவம் கிடக்கிறாள். நீ விரும்பிய உன் சொந்தக்காரி சுமதி என்ற டீச்சர் அன்வர் என்ற மாஸ்டருடன் கலியாணம் முடிச்சி ஒரு புள்ளையும் இருக்கு அப்போ நீ விரும்பிய பெண்ணை விட்டு உன்னை விரும்பும் சுமதியை கட்டுடப்பா... கமால் மாஸ்டர் முடிக்கவில்லை அட கமால் உனக்கு எப்படிப்பா தெரியும் கடிதத்தை பார்த்த நீயோ? ஊரிலே நான் கேள்விப்பட்டு அறிந்ததை விட கூடுதலாக சொல்லுகிறாய் நீ!

அப்படி 'மெனஸ்' இல்லாதவனாப்பா நான், அந்த பொடிச்சி கட்டின அன்சாரும் நானும் ஒரே 'பெச் மெட்' அவன் தான் சொன்னான் சொந்த முறை மச்சானை விட்டுப்போட்டு என்னை விரும்பிறாள் அவள நான் கட்டி ஒரு பிள்ளையும் இருக்கிறாள் என்று. கமால் மாஸ்டர் சொன்ன குட்டிச் செய்தியை புத்திமதியாக மகாலிங்க மாஸ்டருக்கு போதை ஏறி விட்டது.

இது நடந்து ஒரு வருடம் ஆகியது. மகாலிங்க மாஸ்டருக்கும் சிங்கள டீச்சருக்கும் கலியாணம் நிச்சயமாகி விட்டதாம் என்ற செய்தி ஊர் முழுக்க பரபரப்பாகி யது.

மகாலிங்க மாஸ்டரின் பெற்றோர் உற்றார் உறவினர் குடும்பத்தை பொடியப்புகாமி குடும்பம் வரவேற்று உபசரித்தது. மாப்பிள்ளை மகாலிங்கத்தை மறந்தவள் போல் சுமனா மாமா மாமியை உபசரித்தாள்.

அவள் மணப்பெண்ஸ்தானத்தில் ஒரு டீச்சர் ஸ்தானத்தில் இருக்கவில்லை சாதாரண வீட்டுப்பணிப்பெண் போல பம்பரமாய் சுழன்று போவோர் வருவோரை வரவேற்றாள். அவளின் பெற்றோரான பொடியப்புகாமியும் அவன் மனைவி மெனிக்கேயும் நெருப்புத் தணலில் கால் வைத்தவர்கள் போல் ஓடித்திருந்தார்கள். அதிபர் அஹமது லெப்பை அவர் குடும்பம், டேவிட் ஜோன் கல்வி அதிகாரி அவர் குடும்பம். சாதாசிவம் மாஸ்டர் குடும்பம், இப்படி முத்தமிழ் விழா கோலம் பூண்டது. மூவின மக்களும் கூடி ஒரு விழாவாக காட்சி அளித்தது அந்த கலியாண வீடு சாதி, மத, இன, மொழி என்ற பேதமில்லாதது காதல்.

## நியூஸிலாந்து நாடாளுமன்றத்தில்... 25ஆம் பக்கத் தொடர்

இலங்கையில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் வனுஷி வோல்டஸ் நாடாளுமன்றத்தில் பொங்கல் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

பொங்கல் நிகழ்வின்போது பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், வெவ்வேறு நகரங்களில் இருந்தும் இந்திய கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ANTS இன் நிதி வழங்குனர்களில் ஒருவரும் வெலிங்டன் முத்தமிழ் சங்கத்தின் தற்போதைய தலைவருமான ரவீன் அண்ணாமலை நன்றியுரை வழங்கினார்.

அவர் கருத்துக் கூறுகையில் "வளமான பாரம்பரியம், மொழி, கலை மற்றும் கலாச்சார விழுமியங்களைக் கொண்ட தமிழ் சமூகம் தொடர்பான அறிவு, கொள்கையை நிர்வகித்தல், விவாதித்தல், மற்றும் சமகால விடயங்கள் தொடர்பாக நியூஸிலாந்தில் வாழும் இளைய தலைமுறை தமிழர்களுக்கு விளக்கம் ஒன்றை ஏற்படுத்துவதே இந்த சங்கத்தை உருவாக்கியதன் நோக்கம்" என்று குறிப்பிட்டார்.

இந்திய உயர்ஸ்தானிகர் கௌரவ முக்டேஷ் பர்தேஷி நிகழ்வில் உரையாற்றுகையில், "நியுஸிலாந்துக்கான இந்திய உயர்ஸ்தானிகர் என்ற வகையில் பாரம்பரியம் மிக்க தமிழின் மரபுரிமையை கௌரவிக்கும் வகையில் நியுஸிலாந்தின் ஆட்டேரோவா தமிழ் சங்கம் ஏற்பாடு செய்த பொங்கல் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டமை மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது.

சுமார் 5 மில்லியன்களுக்கும் அதிகமான புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் நியூஸிலாந்து உட்பட பல உலக நாடுகளில் வாழ்கின்றார்கள்.

பொங்கல் விழா கொண்டாட்டம் புத்தாண்டை வரவேற்பதாகவும், வாழ்வின் புதிய எதிர்பார்ப்புகளை கொண்டு வரும் அம்சமாகவும் இருக்கின்றது.

கடந்த வருடம் பல பேரழிவுகளையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்தியதுடன், இனந்தெரியாத உயிர்கொல்லி தொற்று நோய் பரவல் காரணமாக உலக மக்கள் பல இன்னல்களை சந்தித்தார்கள்.

ஒரு இருண்ட யுகத்தின் பின்னணியில், பிரதமர் ஜசிந்தா ஆர்டர்னின் முன்மாதிரியான தலைமைத்துவமும், நியுஸிலாந்து மக்களின் நம்பிக்கையும் எம்மை மீண்டும் முன்னோக்கி நகரச் செய்வதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

நியுஸிலாந்து அரசாங்கம் தங்களின் பாரிய கொவிட் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்தை கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி ஆரம்பித்துள்ளமை மிகவும் திருப்தியளிக்கும் விடயமாக உள்ளது." என்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பானிஷரினால் மிகப்பிரம்மாண்டமாகவும், வண்ணமயமாகவும் நடத்தப்பட்ட பொங்கல் சிறப்பு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், நியுஸிலாந்தில் உள்ள பல்வேறு நகரங்களை சேர்ந்த 250 க்கும் மேற்பட்ட தமிழ் சமூகங்களின் தலைவர்களும், அரசன் தமிழ் நாளிதழின் பணிப்பாளர்கள் கிஷோர் குமார் மற்றும் லக்ஸ்மனன் செல்வநேசன் உட்பட ஊடகத்துறையினர் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

குறிப்பாக ஹெமில்டன், ஆக்லண்ட், பாமஸ்டன், வடக்கு தவுரங்கா, வெளிங்டன், கிறிஸ்ட்சர்ச், டன்னீடன் உள்ளிட்ட பல நகரங்களை சேர்ந்த பலர் இதில் பங்கேற்றனர்.

## தனியார் கல்விக்கூடங்களில்... 25ஆம் பக்கத் தொடர்

ஆனால் சுயமாக சாவைத்தேடி தூக்குப்போட்டும். தொடர்வண்டிப்பாதையில் பாய்ந்தும், விசத்தை அருந்தியும் தம்மை மாய்த்துக் கொள்வோர் பெருகி வருகிறார்கள். குறிப்பாக வாழ்க்கை என்றால் என்ன என்பதை புரியாத பாலகர்கள் பத்துமுதல் பதினாறு பதினேழு வயதிலுள்ளவர்கள். தற்கொலை செய்து கொள்வதைத் தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.


அச்சுறுத்தல் தொல்லை, தனிமை உறவுகளின் பிரிவு என பல காரணங்கள் கூறப்படுகின்றன. பெரிய வசதியான சுதந்திரமாக சம்பாதித்துக் கொண்டு, புகழோடு வாழ்ந்தவர்கள் கூட தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

அன்றாடம் அல்லல்களுடன் வாழ்வோரை கண்டு பிடித்து அவர்களுக்கென ஒரு விழிப்புணர்வுத்திட்டம் வரையப்பட வேண்டும். வாழ்க்கையே நரகமாக வாழ்பவர்களை ஒவ்வொரு இடங்களிலும் கண்டுபிடித்தாக வேண்டும். அவர்களுக்கு உற்சாகமளித்து தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.

பணம் வாழ்க்கைக்கு தேவைதானே ஒழிய பணமே வாழ்க்கை இல்லை. நாள் முழுதும் வயலில் பாடுபட்டு பயிரை வளரவிட்டு வரப்பில் நின்று பார்க்கும்போது விவசாயிக்கு ஏற்படுமே ஒரு மகிழ்ச்சி.

அந்த மகிழ்ச்சி போன்றதுதான் ஒரு அல்லல்படும் சகமனிதனுக்கு வழிகாட்டுவதும் ஒரு குடும்பத்தை நேர்வழியில் செலுத்த கொஞ்சம் பாடுபட முன் வரவேண்டும். எனக்குத் தெரிய மனநலக்காப்பகங்களும் குடும்பநல ஆலோசனை நிலையங்களும் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அவர்களுடைய நிகழ்ச்சித் திட்டங்களில் முன்னேற்றம் வேண்டும்.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல : 35




திரு/திருமதி/செல்வி ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................................

..............................................

..............................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 35

### கேள்விகள்

**இடமிருந்து வலம்**

1. நேசமான கூட்டுறவு,
2. கடலில் பெறுவது. ஊதி ஒலி எழுப்பவும் பயன்படும்.
4. ஒட்டுவதற்கு பயன்படும். (திரும்பியுள்ளது)
5. தீய உள்நோக்கம் (குழம்பியுள்ளது)
9. முனிவர்கள் மேற்கொள்ளும் தியானம்.
11. இறுமாப்பு.
12. வில்லிலிருந்து எய்துவதற்கு இது தேவை. (குழம்பியுள்ளது)
13. காற்று குழம்பி வீசுகிறது.
14. அணிகலன் அல்லது நகை. (குழம்பியுள்ளது)
19. நீர் எடுப்பதற்கு பயன்படும். (குழம்பியுள்ளது)
20. பணிவு.
21. மனிதர்கள் குழுமியிருப்பது.

**மேலிருந்து கீழ்**

1. பாலைவனத்தில் போக்குவரத்துக்கு பயன்படுவது.
2. சூளுரை.
3. தொல்லை கொடுக்கும் விளையாட்டுச் செயல்.
6. ஈடுபாடு அல்லது விருப்பு நிலை. (குழம்பியுள்ளது)
7. அவதானம்.
8. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்.
10. அரிசியிலிருந்து தயாரிக்கும் உணவுப் பொருள். (குழம்பியுள்ளது)
15. நீர்வழி போக்குவரத்துக்கு பயன்படுவது.
16. மன இயல்பு அல்லது பண்பு. (குழம்பியுள்ளது)
17. இனிமைக் குரல் பறவை.
18. எப்போதும்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 34

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. கோரிக்கை 3. சிற்பி 5. சிரமம் 8. கண் 9. புதுமை 11. கடம் 12. தாலி 14. பசி 15. தீர்மானம் 17. அப்பம் 19. அம்மி 20. வாரம்

**மேலிருந்து கீழ்**

1. கோபம் 2. கைராசி 3. சிலம்பு 4. பித்து 6. மண் 7. ரகம் 9. துயர் 10. மைதானம் 11. கசிப்பு 13. அம்புலி 15. தீபம் 16. மாமி 18. அவா

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 33

### பரிசுபெறுவோர்

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| **சிவந்திகா தம்பிப்பிள்ளை,** பழைய தபாலக வீதி, சங்கானை, யாழ்ப்பாணம். | **ப. குணசேகரன்,** வன்னியா வீதி, களுதாவளை, களுவாஞ்சிக்குடி. | **ஏ.டபிள்யூ.எம். நியாஸ்,** A29/9, சமித்தியா வீதி, மாவனல்லை. |

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். நிரோஷன்,** இல. 24/2, உடுப்பிட்டிய, உக்குவளை.

**2. மங்களம் மனோரஞ்சன்,** இல. 69, வட்டைவிதான வீதி, கல்முனை 02.

**3. ஏ.எஸ்.ஏ. பாச்சா,** இல. 34, டி வோஸ் லேன், கிறாண்ட்பாஸ், கொழும்பு 14.

**4. எம்.ஏ. அத்தாஸ்,** 141/1, குமாரதுங்க மாவத்தை, மாத்தறை.

**5. ஏ.ஆர். பாக்கியராஜா,** இல. 88/1/1, பஸல்ஸ் லேன், கொழும்பு 06.



# கசப்பும்... இனிப்பும்...

– தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு–1

நம் நாட்டுப் பொருளாதாரத்திற்கு நூற்றாண்டுக்கு மேல் உதிரம் சிந்தி உழைத்த, உழைக்கும் பாட்டாளி வர்க்கத் தோட்டத் தொழிலாள மக்கள் தமிழரும் அல்லாமல், சிங்களவரும் அல்லாமல் ஒருவித விசித்திர சமூகமாகச் சடுதியாக மாறிக் கொண்டிருக்கும் அவலத்தை இன்று கசப்பு வில்லைகளாக விழுங்கப் போகிறீர்கள்.

இதுவரை காலமும் அபிமானிகள் பெரும்பாலனோருக்கு தோட்டத் தொழிலாளர் என்றால், மலையகமாகிய கண்டி, கம்பளை, நாவலப்பிட்டி – ஹட்டன் ஹப்புத்தளை – நுவரெலியா, கந்தப்பளை, பதுளை, பண்டாரவளை என்றே நினைவு வரும், பார்வை போகும்.



தென்னிலங்கைப் பக்கம் கண்ணோட்டம் போகுமா? போகவே போகாது. நானே வலுக் கட்டாயமாகக் கூட்டிச் செல்லப்போகிறேன். வாருங்கள்,

காலி மாநகர், தெரிந்த பெயர் தான்!

பேருந்து நிலையம் போய் 'எல்பிட்டிய' என்று சீட்டு பெற்று சில நிமிட நேரத்தில் இறங்குங்கள் எல்பிட்டிய தோட்டம் அருகே

உங்களை வரவேற்க பிரதான பாதையில் நிற்கும் பெண் யார்? தமிழா? சிங்களமா? நெற்றிப் பொட்டைக் காணலியே...? மஞ்சள் பூச்சு இல்லியே! உடை கூட வித்தியாசமா இருக்கே...?

ஆம்! பயங்கரமான தகவல் சொல்கிறேன். தென்னிலங்கை – மாத்தறை மாவட்டத்துத் தோட்ட தமிழ்ப் பெண்கள் வெளியில் வந்தால் தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளவே மாட்டார்கள். தமிழும் பேச மாட்டார்கள்! அதாவது, தோட்டப்புறக் குருவிக் கூடுகளிலிருந்து வெளிப்பட்டு வீதிக்கு வந்ததும் ஆட்களே மாறிப் போவார்கள்!

**தென் மாகாணத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு சிறு தொகையே!**

இன்றையச் சூழ்நிலையில் தங்கள், கலாசாரம், கோட்பாடு, நடை, உடை, தாய்மொழி உரையாடல் அனைத்தும் மறந்தவர்களாக அல்லது மறைத்தவர்களாக அவர்கள் நடமாடுகிறார்கள். நாள் முழுவதும் தோட்டங்களில் உதிரம் சிந்தி உழைக்கிறார்கள்.

ஏறக்குறைய எல்லாமே பெரும்பான்மை இனத்துப் பழக்க வழக்கங்களை ஒட்டியதாகவே மாறி உள்ளன. தமிழ்ப் பெயர் மட்டும் ஒட்டிக் கொண்டுள்ளது. பிறப்புச் சாட்சிப்பத்திரத்திலும் தவறாமல் இடம்பெற்றுள்ளது.

ஆனால், அவர்கள் சந்ததியினர் நிலை? முக்கியமாகக் கல்வி நிலை?

காலி மாவட்டத்தில் மூன்று பாடசாலைகளும், மாத்தறை மாவட்டத்தில் ஆறு பாடசாலைகளும் உள்ளதாம்! தாய்மொழியில் படிக்க வரும் பிள்ளைகள் தொகையை விரல் விட்டு எண்ணி விடலாமாம். பல சிறுவர்கள் சிறு வேலைகளுக்கு ஓடுகிறார்களாம்.

பேசுவது தமிழ் சிங்களக் கலவனா? அல்லது சிங்களம் முக்காலும் தமிழ் காலுமா?

பிரமிளா பிரதீபன் என்றோர் ஆசிரியமணி பதுளை மண். உடல் முழுக்க ஓடிக் கொண்டிருப்பது தமிழ் சிருஷ்டி இலக்கிய ஆளுமை. நல்ல படைப்பிலக்கியவாதி எனப்பெயர் பெற்றுவிட்ட அடக்கமான ஆரவாரமில்லாப் பெண்.

இவர், தமிழைப் புகட்ட காலி – எல்பிட்டியத் தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியையாகத் ஆர்வத்துடன் வேள்வித்தீ மிதித்தவர்! ஒரு சில ஆண்டுகளில் நன்றாகவே புண்ணாகிப் போய், 'தீக்காயங்களுடன் (அனுபவங்கள்) மீண்டவராக தற்சமயம் மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் ஒரு நல்ல பதவியில் உள்ளார்.



இவரது நாவல் ஒன்று 'கட்டுப்பொல்'. அந்தப் படைப்பு கொடகே நிறுவன விருது பெற்றது. எல்பிட்டிய, செம்பனைத் தோட்டத் தமிழ மக்கள் அவலங்கள், ஆசாபாசங்கள், தாய்மொழியை விட்டு தாண்டி ஓடும் வேதனைக் காட்சிகள் அனைத்தையும் படம் பிடித்துக் காட்டுவது.

அவர்கள் எவ்வாறு தமிழர்களாகவும் அல்லாமல், சிங்களவராகவும் அல்லாமல் 'இரண்டும் கெட்டான்' சமூகத்தினராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் துலாம்பரமாகத் தெரிய வைக்கிறது.

இங்கே வெளியாகியிருக்கிற ஒரு படங்களில் தென்னிலங்கைத் தோட்ட தமிழ் அக்கா – தங்கச்சிகளின் மாறிப்போன உடைகளையும் உருவங்களையும் பார்க்கலாம்.

மேலும், இதே தென்னிலங்கை தெனியாயப் பிரதேசத்து ச. யேசுதாசன், கட்டுரையொன்றில் இவர்கள் அவலங்கள் பற்றி அலசியுள்ளவை மிகவும் கவலையைத் தருவதாக உள்ளன.

தேயிலை தோட்டத் தொழிலாளர்களாகவும் அன்றாடம் கூலித் தொழில் செய்பவர்களாகவும் இருக்கும் இவர்கள்,

மத்திய மலையக பகுதியில் வாழ்கின்ற இரத்தினபுரி, நுவரெலியா, கண்டி, பதுளை மாவட்டங்களுடன் நெருங்கிய தொடர்பு இல்லாத நிலையில் அரசியல் அநாதையாளாக இருக்கின்றனர்.

"தங்கள் வாழ்வில் அவலங்களையே அனுபவித்து வருகின்றனர். போக்குவரத்து ரீதியிலான பிரச்சினைகள் அதிகம். கல்வி அபிவிருத்தி, பொருளாதாரவிருத்தி என்பன மிக அத்தியாவசியத் தேவை.

"தங்களது தனித்துவங்கள், சம்பிரதாயங்கள் மழுங்கிப் போய்க் கொண்டிருக்கும் நிலை, இவர்களுக்காக மலையக அரசியல்வாதிகள் சுயநல அரசியலைக் கைவிட்டு மக்களின் மேம்பாட்டுக்காகக் கூடுதலான பங்களிப்பைச் செய்யமுன்வர வேண்டும்.

"பெருந்தோட்ட மட்டத்தில் விழிப்புணர்வுக் குழுக்கள், மேம்பாட்டுக் குழுக்கள் ஆகியவை அமைக்கப்பட வேண்டும். உள்ளூர் பொலிஸ் துறையின் அனுசரணை இதற்குப் பெறப்பட வேண்டும். ஏற்கனவே இருக்கின்ற அமைப்புகளும் வலுப்படுத்தப் பட வேண்டும்.

இந்தப் பேனா முனையைப் பொறுத்தளவில், கோடிப் பெறுமதியான கேள்வி, இங்கே பிரதான கண்டி, நுவரெலியா, பதுளை வாழ் மலையகத்தோர், தென்னிலங்கைப் பிரதேசத்தில் தங்கள் 'உடன்பிறப்புகள்' சிறுகச் சிறுக சமூகத்தைவிட்டு அகன்று போய்க் கொண்டிருக்கின்றனர் என்பதைத் தெரிந்தும் தெரியாமலேயே அரசியல் செய்து கொண்டிருப்பது ஏன்? ஏன்?

பழைய பர்மாவில் (மியான்மர்) மொரிசியஸில், அந்தமானில் அடையாளமே தெரியாமல் ஆகிவிட்ட 'பாவப் பட்டவர்'களைப் போல இவர்களும் ஆகட்டும் என்பது 'மலையகத்தலைவர்கள்' எனப்படும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் உள்ளார்ந்த ஆசையா?

அது மட்டுமல்லாது, 'எழுத்துக் கொம்பர்களாக' மாதா மாதம் கூட்டங்கள் போடும் 'பேனா வாலாக்கள்' பேப்பரிலும் பேச்சிலும் என்ன கிழித்தார்கள்? ஒரு பதுளை, பிரமிளா (பிரதீபன்)வைப் பின்பற்ற வெட்கமா? கூச்சமா?

## இனிப்பு

அப்பாடா! அமைதி! நிம்மதி! அனைத்துப் புகழும் அவன் ஒருவனுக்கே! (அல்ஹம்துலில்லாஹ்) அடங்கி, ஒடுங்கி, அமைதி உறக்கம் கொள்ள ஓர் அடக்கத்தலம், இந்த எண்சாண் உடலுக்குக் கிடைத்தே கிடைத்து விட்டது! இன்றையப் பொழுதில் 'வரலாற்றில் ஓர் ஏடாக' எதிர்காலப் பதிவுகளில் இடம்பிடித்து விட்ட கிழக்கிலங்கை ஒட்டமாவடியும் அதைச் சுற்றியுள்ள பிரதேச ஊர்களும் எனக்கு இலக்கியத் துறை மூலமாக மட்டுமே தெரியும்.



அப்பகுதி இலக்கியவாதிகளாக 150பேர் தேர்வர். இந்தப் பக்தி எழுத்துக்களை அச்சுக்கு அனுப்பும் அவசரத்தில் நினைவோட்டத்தில் நீச்சலடிப்போர்களாகக் காலஞ் சென்ற வை. அஹமத் ஆகிய எழுத்து வித்தகர் முதல், இப்போதைய ஜாம்பவான்கள் **எஸ்.எல்.எம். ஹனிஃபா, ஏ.பீ.எம் இத்ரீஸ், அஷ்ரஃப் ஷிஹாப்தீன், முஸ்டீன், அரஃபாத், சதகா** எனச்சிலர் கண் சிமிட்டுகின்றனர்.

அவர்களது அந்தச் சிமிட்டல்களை ரசித்துக் கொண்டு கடந்த 05ஆம் தேதி, வெள்ளிக்கிழமை நல்ல நாளில் அங்கு நடந்தேறிய ஒன்பது ஜனாசாக்களின் நல்லடக்கம், நம் இலங்கை அனைத்துப் பகுதி மக்கள் மத்தியிலும் "ஓட்டமாவடி" என்ற பெயரை பாடமாக்கிவிட்டது! அலைகடலுக்குப்பாலும் ஒரே நாளில் புகழ் அடைந்து விட்டது இந்த இடமும் பெயரும். நானும், ஓட்டமாவடிப் பிரதேசம் காகிதநகர் கிராமம், சூடுபத்தின சேனை கரிசல் வெளி" எனப் பலதடவை சொல்லி மனப்பாடம் செய்தேன்.

என் வெளிநாட்டு அபிமானிகளுக்கும் விவரங்கள் சொல்லி களைப்படைந்தேன்.

புயல் அடித்துக் கொண்டிருந்த ஒரு பொழுதில், அதை நிறுத்தி அமைதி, ஆனந்தம் பெறச் செய்தவர்கள் ஒரு சபையினர். அவர்கள் அப்பகுதிப் பிரதேச சபையினர்!

**ஜனாஸா நல்லடக்கக் காணி**

அவர்களே கடந்தாண்டு நவம்பர் அன்பளிப்பு! மாதத்திலேயே ஒரு முடிவெடுத்து அரசுக்குத் தெரியப்படுத்தி விட்டனர். ஆனால் எந்தெந்த சக்திகளாலோ தடைப்பட்டுப் போய், மாதங்கள் மூன்று கழிந்து நல்ல வெயில் தொடங்கி வெக்கை வீச ஆரம்பிக்கையில் அதை மீறி ஆனந்தப் பூங்காற்று!

பாருங்கள், விசித்திரத்தை ஒரு மனித உயிரை அடக்கம் செய்துவிட்டு 'அப்பாடா' என்று ஆனந்தப்படச் செய்யும் சூழ்நிலையில் நம் வாழ்க்கை இன்று!

ஜனாஸா நல்லடக்கத்திற்காக சென்றுவருடமே பத்து ஏக்கர் காணிகளை அன்பளிப்புச் செய்துவிட்டனர் அப்பிரதேசச் சபையினர்.



யார், யாரெல்லாம் அவர்கள்? அனைவரும் அறிந்தே ஆக வேண்டும்.

**ஏ.எம்.நௌஃபர் – தவிசாளர்**
**அஹமது லெவ்வை – பிரதித்தவிசாளர்**
**எஸ்.எம். ஷிஹாப்தீன் – செயலாளர்**

மற்றும் 16 அங்கத்தவர்களான ஆகியோர்.

இச்சபையினரின் 10 ஏக்கர் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

ஜனாஸா நல்லடக்கம் ஏற்பாடுகளில் **பிரிகெடியர் எஸ். பிரதீப்கமகே** தலைமையிலான இராணுவ அதிகாரிகளும், மருத்துவர் தாரிக் மற்றும் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உள்ளிட்ட பொதுச் சுகாதாரப்பரிசோதர்கள், ஓட்டமாவடி ஜனாசா நலன்புரி அமைப்பு நிர்வாகிகள் கல்குடா, காத்தான்குடி, ஏறாவூர் பள்ளிவாயில்கள், முஸ்லிம் நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் தங்கள் முழுமையான பங்களிப்புகளை வழங்கியுள்ளனர். ஓட்டமாவடியையும் அதனைச் சுற்றிச் சூழவுள்ள பிரதேசங்களையும் இலங்கையர் காலப் போக்கில் மறந்தாலும் அலைகடலுக் கப்பால் உள்ள முஸ்லிம் சமூகம் ஒரு போதும் மறவாது. இது என் இனிப்பான கணிப்பு!

---




"நேத்து நடந்த சம்பவத்துக்கு உங்க மனசு புண்பட்டிருந்தா என்னைய மன்னிச்சிடுங்க மலர்...!"

"இல்ல... பரவா இல்ல... நீங்க ஒண்ணும் திட்டமிட்டு அத செய்யல்லியே...!"

அதன் பிறகு,

இருவரும் அமைதியாகவே இருந்தார்கள்.

எந்த இடத்தில் பேச்சை ஆரம்பித்து,

எந்த இடத்தில் முடிப்பதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான் சுகுமாரன்.

அவளைப் பார்த்த நாளில் இருந்து அவன் மனதில் தோன்றும் எண்ணங்களை,

வார்த்தைகளில் வடிக்க முடியாமல் அவன் திண்டாடிக் கொண்டிருந்தான்.

"மலர்...!" அவன் இதழ்கள் மெல்ல விரிந்தன.

அவள் மெல்ல தலையைத் தூக்கி,

காந்த விழிகளால் அவனைப் பார்த்தாள்.

இந்தப் பார்வையில் அவன் சொல்லவந்த விஷயங்கள் எதையுமே அவனால் சொல்ல முடியாமல் போய் விடுகிறது.

அந்த விழிகளை இன்று முழுவதுமே பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் தோன்றியது.

ஆனாலும்,

அதற்கு நேரம் இது வல்ல!

"உங்களிடம் சொல்ல ஒரு பெரியகதையே இருக்கிறது. ரொம்ப நாளா இத சொல்ல நெனச்சிட்டு இருக்கேன்..."

சொல்லிவிட்டு,

வறண்டு போன தொண்டையை நனைத்துக் கொள்ள,

பாலுடாவைக் கொஞ்சம் குடித்தான்.

"பெரிய கதையா...! அது என்ன கதை....?" புருவங்களை வில்லாக்கினாள் மலர் விழி..!

"உங்களைப் பார்த்த முதல் நாளே என் மனசுக்குள் நீங்க குடி வந்துட்டீங்க... அப்புறமா நான் உங்களப் பத்தி விசாரிச்சேன்... நீங்க ஹோமாகவில் இருந்ததாக தெரிஞ்சி கொண்டேன், அதன் பிறகுதான் நீங்க போறவார நேரத்திலேயே நானும் அந்த பஸ்ஸில் வர ஆரம்பித்தேன்... உங்களை பத்தி நெறையபேர் நெறைய விசயங்களைச் சொன்னாங்க...

இப்படிச் சொல்லிவிட்டு, மலர்விழியின் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் சுகுமாரன்.

தன்னைப்பற்றி,

நிறையபேர், நிறைய சொன்ன கதைகளை எல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற அவசியம் அவளுக்கு இருக்கவில்லை.

காரணம்,

தன்னைப் பற்றி அவர்கள் எல்லாம் என்ன சொல்லி இருப்பார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

"ம்.... அப்புறம் சொல்லுங்கள்.."

"நீங்க என்ன சொல்றீங்க?"

"எதப்பத்தி...?"

"நான் உங்கள திருமணம் செய்து கொள்ள விரும்புறேன்!"

சொல்லிவிட்டு

அவள் பதிலுக்காக காத்திருந்தான்.

அவன் திடீரென்று இப்படி கேட்பான் என்று மலர்விழி எதிர்பார்க்கவே இல்லை...!

இதனால்,

இந்த கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குத் தோன்றவில்லை!

"என்ன சொல்றீங்க...?"

மீண்டும் கேட்டான் சுகுமாரன்.

அமைதியாக இருந்த அவள் பலூடாவை கரண்டியால் மெல்ல குலுக்கினாள்.

பிறகு,

உறிஞ்சிக் குடித்தாள் தொடர்ந்து

"சுகுமார்...!"

அவள் அதரங்கள் மெல்ல அசைந்தன....

"சொல்லுங்க மலர்?" ஆவல் அவன் விழிகளில்,

"என்னையவிட நல்ல பெண்ணை நீங்க திருமணம் செய்து கொள்ளலாமே!"

## அமைச்சரோ பெரிய கில்லாடி இந்த விஷயத்தில் போவாரா தள்ளாடி!

"இது நான் கேட்ட கேள்விக்கு பதில் இல்லையே... அதுவுமில்லாமா... நல்லதா இல்லையா என்பதை நான் முடிவு செய்து விட்டேன்...!"

"நான் தான் உங்களுக்கு பொருத்தமானவளுன்னு நினைக்கிறீங்களா?

"ஆமா...!"

"தப்பான முடிவு...!"

"இல்ல சரியான முடிவு?"

"இல்ல சுகுமார் அது...!"

"உங்க எண்ணத்த மாத்திக் கொள்ளஇன்னும்அவகாசமிருக்குது மலர்... யோசிங்க...!" அமைதியாக சொன்னான் சுகுமார்.

இரவில்

கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தாலும்,

மலர்விழிக்கு தூக்கமே வரவில்லை.

சுகுமார் சொன்ன வார்த்தைகள்,

மாறி மாறி,

அவள் காதுக்குள் எதிரொலித்தது!

"வாழ்க்கையில் சில சமயங்களில் நாம் சில தவறுகளை செய்து விடுவோம், சரி என்று நாம் எடுக்கும் முடிவுகள் தவறு என்பது பிறகு தான் தெரியவரும். தவறு என்று தெரிந்திருந்தும் அதிலேயே கவனம் செலுத்துவது தப்பு. தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும்!"



"மீண்டும் திருத்திக் கொள்ள முடியாத சில விஷயங்களும் இருக்கு"

"திருத்திக் கொள்ளமுடியாத தென்று எதுவுமில்லை இந்த உலகில் உங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு சிறு தவறினால்... வாழ்நாள் முழுவதும், துன்பத்தை அனுபவிக்கிறீங்க..."

"துன்பத்தை அனுபவிக்கிறேனா....?"

"துன்பத்தை அனுபவிக்கிறேனா?"

"ஆமாம்... இன்பமான வாழ்க்கைக்குப் பதிலாக துன்பமான வாழ்க்கையை அனுபவிக்கிறீங்க!"

"இல்ல... நான் துன்பத்தை அனுபவிக்கவில்லை இன்பத்தைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்!"

"இங்கே பாருங்க... மலர்... நாம் வாழுறுது ஒருவிதமான சமுதாயத்தில் அந்த சமூகத்திற்கென சில சம்பிரதாயங்கள் இருக்கின்றன. இஷ்டப்பட்டோ அல்லது இஷ்டமில்லாமலே அதை நாம ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும். அப்படி இல்லை யென்றால் இந்த சமுதாயத்தில் எங்களால் வாழ முடியாது!"

முடிவுடன் தான் சுகுமாரன் உறுதியான முடிவுடன் தான் இப்படிச் சொல்லுகிறான் என்பது மலர்விழிக்குத் தெரியும்.

அவனுடைய அம்மாவும், திருமணமாகி விவகாரத்துப் பெற்றிருக்கும் அவனுடைய அக்காவும் இதற்கு சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள்.

அதுவுமில்லாமல்,

கள்ளப் பொண்டாட்டியாக இருக்க அவன் தன்னை அழைக்க வில்லை. அவனுடைய பத்தினியாக இருக்கவே அழைக்கிறான்.

அமைச்சரால் கொடுக்க முடியாத அந்த 'பத்தினி' என்ற அந்தஸ்தை அவன் கொடுக்கப்போகிறான்.

அவனைத் திருமணம் செய்து கொண்டால்,

இனிமேல் சமூத்தில் தலைநிமிர்ந்து வாழலாம்.

இறந்த காலத்தைப் பற்றியெல்லாம் தனக்கு கவலை இல்லையென்று அவன் சொல்லுகிறான்.

ஆனாலும்,

அவன் சொல்லுவதைப்போல,

அசிங்கமான அந்த இறந்த காலத்தைப்பற்றிய நினைவுகளை மறக்கத்தான் முடியுமா?

கண்டிப்பாக முடியாது.

அறிவழகன் என்ற அந்த இனியவன்,

தனது வாழ்வில் ஓர் அங்கமாக சங்கமமாகிவிட்டான்.

நிறைய பேர்நினைக்கிறமாதிரி,

அவனுடைய பணத்திற்காகவோ,

செல்வாக்கிற்காகவே,

அல்லது,

அவருடைய அமைச்சுப் பதவிக்காகவோ மயங்கி,

அவர் மடி மீது சாயவில்லை

அவர்மீது தன் உள்ளத்தில் ஏற்பட்ட உண்மையான அன்பிற்காகவே அவரைப்பற்றிய எண்ணிங்களை என் உள்ளத்தில் நிறைத்துக் கொண்டேன்.

இன்ன காரணத்தூக்காகத் தான் அவர்மீது அன்பு ஏற்பட்டது என்று சொல்ல முடியாவிட்டாலும்,

இருவருமே ஒருவித அன்பினால் கட்டுண்டுதானே இருக்கிறோம்!

வெறும் உடல் பசியைத் தீர்த்துக் கொள்வதற்காக மட்டுமே அவர் என்னுடன் இணைந்திருக்கவில்லை.

மாறாக,

இருவருக்கும் இடையில் இருப்பது ஒரு மானசீக உறவல்லவா?

இதனால்,

அவர் என்னை விட்டு பிரிந்து செல்லமாட்டார்.

அதேபோல்,

என்னையும் பிரிந்து போக விடமாட்டார்.

இவற்றை எல்லாம் சுகுமாரனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று அவள் முடிவு செய்து கொண்டாள்.

அன்று, அலுவலத்தில் இருந்து பஸ்தரிப்பு நிலையத்திற்கு வந்த போது,

சுகுமாரன் அவளுக்காக காத்திருந்தான்.

அதேநேரம்,

மலர்விழியின் தொலைபேசி அலறியது.

எடுத்தாள்,

அமைச்சர்,

தான் வரும் வரை பஸ் தரிப்பு நிலையத்தில் காத்திருக்கும்படி சொன்னார்.

அலைபேசியின் பட்டனை அழுத்தியபடியே,

சுகுமாரனைப் பார்த்தாள்.

"யார்... அந்த அமைச்ரா?" ஐயத்துடன் கேட்டான் சுகுமாரன்

"ம்...!"

"என்னவாம்..."!

"இன்னும் சிறிதுநேரத்தில் இங்க வாராராம்!"

அவள் இப்படிச் சொன்னதும்,

அவன் முகம்,

அமாவாசையானது!

அதைப் பார்த்ததும் அவளுக்கு கவலையாக இருந்தது.

"இத பாருங்க மலர்... இப்பவாவது நான் சொல்றது கேளுங்க...!"

அவள் தோளைப் பற்றியபடியே அவன் சொன்ன போது!

அவன் வார்த்தைகள் கொஞ்சம் கடுமையாகத்தான் இருந்தது.

மலர்விழிக்கு இப்போது கொஞ்சம் பயமாக இருந்தது.

அது,

அமைச்சர் எந்த நேரத்திலும் இங்கே வந்துவிடலாம் என்று எண்ணி பயம் வந்தது,

அவர் இங்கே வரும்போது,

சுகுமாரனுடன் தான் நிற்பதைப்பார்த்து விட்டால்...,

வேறுவினையே வேண்டாம்.

"சுகுமார் நீங்க போங்க நாளைக்கி நாங்க சந்திப்போம்....!" என்று சொல்லியபடியே,

சற்றுதள்ளி நின்றாள். மலர்விழி.

"ம்... போன் வந்ததும் என்னைய போகச் சொல்றீங்க... இல்ல நான் போக மாட்டேன்!" பிடிவாதம் பிடித்தான் சுகுமாரன்.

(தொடரும்)




# யாவரும் கேளீர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 32

**தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்**

*('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்|)*

### மலையக நவீன இலக்கிய எழுச்சியின் முதல்வர் திருச்செந்தூரன்



மலையக நவீன இலக்கிய எழுச்சியின் முதலர்வர் எனப்போற்றப்படும் திருச்சந்தூரன் அமரத்துவமடைந்த மாதமான மார்ச் மாதத்தில் அவரது நினைவுகளை மீட்டுவதாக இப்பத்தி அமைகிறது

நான் எழுதிய குருதிமலை நாவலுக்கான அறிமுகவிழா ஒன்றினை முதன்முதலில் கண்டி இலக்கிய வட்டம் என்ற அமைப்பு 15.06.1980இல் ஏற்பாடு செய்தது. கம்பளை நகரசபை மண்டபத்தில் இடம் பெற்ற அந்த விழாவில் முக்கிய பேச்சாளர்களில் ஒருவராக திருச்செந்தூரன் அழைக்கப்பட்டிருந்தார். அன்றுதான் நான்முதன்முதலில் அவரைச் சந்தித்தேன.

1959இல் தமிழகச் சஞ்சிகையான கல்கி| நடத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய உரிமை எங்கே என்ற சிறுகதை இரண்டாம் பரிசுபெற்றது. இக்கதை, இலங்கையில் பிரஜா உரிமை மறுக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்களின் உரிமை பற்றியது. இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் குடியுரிமை மறுக்கப்பட்டு நாடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியை இக்கதைமூலம் தமிழ்கூறு நல்லுலகெங்கும் கொண்டுசெல்ல இலக்கியத்தைப் பயன் படுத்தியவர் என்ற பெருமையையும் மலையக நவீன இலக்கிய எழுச்சியின் முதல்வர் என்ற தகைமையையும் இவருக்குப் பெற்றுத்தந்தது.

சிறந்த சிறுகதை எழுத்தாளராக மிளிர்ந்த இவர் நடுக்கடலில், என்ன செய்துவிட்டேன், சாமிக்கடன் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.

திருச்செந்தூரன் கண்டி மாவட்டத்தில் உள்ள கலகா பகுதியில் ஷமந்திரமலை| என்னும் தேயிலைத் தோட்டத்தில் 30.08.1936இல் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை கலகா பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்.இந்துக்கல்லூரியிலும் உயர்கல்வியை சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் பெற்றார்.

1959இல் ஹட்டன் புனித பொஸ்கோ கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் பின்னர் ஹைலண்ட் கல்லூரியில் முதலில் ஆசிரியராகவும் பின்னர் 010471முதல் 310376வரை அதிபராகவும் கடமையாற்றியவர். அக்கல்லூரிக் கீதத்தை இயற்றியவரும் இவரே. கல்லூரி அதிபராகப் பணியாற்றிக் கொண்டே தனது நண்பர் இர.சிவலிங்கம் அவர்களுடன் இணைந்து மலையகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.

நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திருச்செந்தூரன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற துறையில் பட்டமேற்படிப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர். மலையக நாட்டார்கலையான காமன்கூத்தை நவீனமயப்படுத்தி கொழும்பில் மேடையேற்றியவர். தனது மாணவர்கள் பலருக்கு நாடகத்துறையில் பயிற்சி வழங்கியவர். சிலைகள் என்ற நாடகத்தில் நடித்ததோடு தாளலய நாடகங்களையும் நெறிப்படுத்தினார்.

பிற்பட்ட காலத்தில் மாத்தளை பாக்கியா வித்தியாலயத்தில் பணியாற்றும்போது அங்கும் பல கலை இலக்கியவாதிகளை உருவாக்கினார். மாத்தளை கார்த்திகேசு தயாரித்த அவள் ஒரு ஜீவநதி என்ற தமிழ்த் திரைப்படத்தில் பாதிரியார் பாத்திரமேற்று நடித்தார்.

1980களில் தமிழகம் திரும்பிய திருச்செந்தூரன், நீலகிரி மாவட்டத்தில் மலையக மக்கள் மறுவாழ்வுமன்றம் என்ற அமைப்பினூடாகத் தனது நண்பர் இர. சிவலிங்கம், மற்றும் அருட்பணி அல்பொன்ஸ ஆகியோருடன் இணைந்து 1984முதல் பதினாறு வருடங்கள பணியாற்றியபின் 31.03.2001இல் திருச்சியில் அமரரானார்.

### செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக்கத்தரிக்காய் – புனைவுக்கட்டுரைகள்

நவீன தமிழ் இலக்கியத்தில் புனைவுக்கட்டுரை என்பது ஓர் இலக்கிய வகைமை. இது விவரணக்கட்டுரை, ஆராய்ச்சிக்கட்டுரை, தகவல்தரும் கட்டுரை என்பனவற்றிலிருந்து வேறானது. புனைவுக்கட்டுரையில் கற்பனையும் அழகியல் அம்சமும் பாத்திரவார்ப்பும் இணைந்திருக்கும். தமிழிலக்கிய உலகில் இன்று புனைவுக்கட்டுரையின் தலைமைப் படைப்பாளியாகத் திகழ்பவர் ஆசி கந்தராஜா.

அவுஸ்திரேலியாவில் வாழும் ஆசி கந்தராஜா ஓர் ஈழத்து எழுத்தாளர். பூங்கனியியல், உயிரியல் தொழில் நுட்பத்துறைப் பேராசிரியரான இவர், ஜேர்மனி, யப்பான் மற்றும் அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களில் பயின்றவர். 20க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் பூங்கனியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம்பற்றி விரிவுரைகள் ஆற்றியவர்;. இத்துறையில் பல கல்விமான்களை உருவாக்கியவர். இத்துறையில் 70க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைகளை எழுதியவர். ஜேர்மன் நாட்டில் 13 ஆண்டுகள் வாழ்ந்த இவர், தற்போது 30 ஆண்டுகளுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார்.



பல்கலைக்கழகப் பணி நிமித்தம் இவர் சென்ற நாடுகளில், தான் கண்ட வித்தியாசமான நிகழ்வுகள், வாழ்வியல் தரிசனங்கள் ஆகியவற்றைப் படைப்புகளாகத் தருகிறார்.

இத்தொகுப்பில் உள்ள செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக்கத்தரிக்காய், ஒட்டுக்கன்றுகள், மரங்களும் நண்பர்களே, என்.பி.கே. ஆகிய படைப்புகள் யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பகைப்புலமாகக் கொண்டவை.

அரை நூற்றாண்டுக்கு முன்பிருந்த யாழ்ப்பாணச்சூழலை அக்கால மக்களின் வாழ்வியலை வாசகர்முன் கொண்டுவருகிறார். கைதேர்ந்த புனைகதையாளனின் திறனுடன் மண்ணின் மைந்தர்களுக்கேயுரிய மண்வளச் சொற்றொடர்களை ஆங்காங்கே புகுத்தி வாசகனைப் படைப்புடன் ஒன்றச் செய்கிறார். எடுத்துக்காட்டாக, ஷகத்தரிக்காய்கள் பல்லிளித்தன|, ஷமனைவிக்குக் குழையடித்து|, மாமிக்குப் புளிப்த்தியிருக்க வேண்டும்|, வெட்டிப் புருடாவிட்டு, நீண்ட நேரம் பீலாவிடுவார்|, பேடு கூவித்தான் பொழுது விடியும் போன்ற சொற்பிரயோகங்களைக் கூறலாம். இந்த மொழிசார் நளினங்கள் வாசகனை படைப்புடன் ஒட்டியுறவாடச் செய்வதோடு புனைவின் அழகியல் அம்சங்களுக்கு வலுச்சேர்க்கின்றன.

விலாங்கு மீன்கள் வீரசிங்கம் பயணம் போகிறார் மைனாக்கள் தம்பித்துரை அண்ணனும் பேரனும் ஐந்து ஐமிச்சங்களும் போன்ற புனைவுக்கட்டுரைகளும் உயர்தரத்தில் அமைந்துள்ளன.

மொத்தத்தில், விஞ்ஞான பூர்வமானதும் அறிவியல் சார்ந்ததுமான சிக்கலான விடயங்களை இலகு தமிழில் சொல்லிவிடும் சூட்சுமம் ஆசி கந்தராஜாவுக்கு கைவந்த கலையாக இருக்கிறது.

### நெதர்லாந்து நாட்டின் தலைநகரில் அழகுமிகு காட்சிகள்



நெதர்லாந்து நாட்டில் நுழைந்ததும் முதலில் எமது கண்ணில் படுவது தெருவெங்கும் நிறைந்திருந்த மக்களின் சயிக்கிள் பாவனைதான். இங்குள்ளவர்கள்; யாபேரும் ஏற்றத்தாழ்வின்றி அன்றாடப் பயணங்களுக்கு சயிக்கிள்களையே பாவிக்கின்றனர். நாடு முழுவதையுமே சயிக்கிளில் சுற்றி வரலாம். தெருவெங்கும் சயிக்கிள்களுக்கென தனியான பாதைகள் உள்ளன. நெதர்லாந்து அரசு இத்தகைய சயிக்கிள் பாவனையை ஊக்குவிப்பதாகவும் இந்த நாட்டில் 37000 கிலோ மீற்றர் நீளத்திற்கு சயிக்கிளில் பயணிப்போருக்கான தனியான பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன என அறிய முடிந்தது.



இதேபோல நாடு முழுவதும் படகில் சுற்றிவர ஏரிப் பாதைகளும் உள்ளன. வடமேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள இந்த நாட்டின் வடக்கிலும் மேற்கிலும் வடகடலும் தெற்கில் பெல்ஜியமும் கிழக்கில் ஜேர்மனியும் எல்லைகளாக அமைந்துள்ளன.

டச்சு மொழியிலும் வேறு ஐரோப்பிய மொழிகளிலும் நெதர்லான்ட் என்றால் தாழ்வான நிலம் என்று பொருள். புவியியல் அடிப்படையில் இந்த நாட்டின் 25 வீதம் கடல் மட்டத்துக்குக் கீழே அமைந்துள்ளது. நாட்டில் 21 வீதமான மக்கள் இத்தாழ்வான பிரதேசத்தில் வாழ்கிறார்கள். 50 வீதமான நிலப்பகுதி கடல்மட்டத்திலிருந்து ஒரு மீட்டருக்கு உட்பட்ட பகுதியிலேதான் அமைந்துள்ளது.

உலக வெப்பமாதல் காரணமாக கடல் மட்டம் உயர்ந்தால் உடனடியாக மூழ்கும் நாடுகளில் நெதர்லாந்தும் ஒன்றாகும்.

நாடு காத்த சிறுவன்| என்ற சிறுவர் கதை உலகப் பிரபல்யமானது. வாசகர்கள் பலரும் இக்கதையை அறிந்திருப்பர். ஒரு காலத்தில் இலங்கை கல்வித் திணைக்களத்தின் பாடநூல் ஒன்றிலும் இக்கதை இடம் பெற்றிருந்தது.

கடல்மட்டத்துக்குக் கிழே இருக்கும் இந்நாட்டில் கடல் நீர் அடிக்கடி உள்ளே வந்து பேரழிவை ஏற்படுத்துவதால் அதைத் தடுக்கும் பொருட்டு கடலோரமாக மிகப்பெரிய அணை ஒன்றைக் கட்டினர். அப்படிக் கட்டிய அணையில் ஒரு நாள் சிறிய துவாரம் ஒன்று ஏற்பட்டு நீர்கசிவதை ஒரு சிறுவன் கண்டான். கடல் நீர் ஊருக்குள் செல்வதைத் தடுக்கத் தனது பெருவிரலால் அந்தத் துவாரத்தை மூடிக்கொண்டே இருந்தான். அவனை யாரும் காணவில்லை. உதவிக்கு யாரும் வரவில்லை. இரவு முழுவதும் துவாரத்தை அடைத்தபடி இருந்தான். துவாரம் வரவரப் பெரிதாகி கடைசியில் சிறுவனையும் உதைத்துக்கொண்டு நாட்டினுள் நீர் புகுந்து சிறுவனையும் அள்ளிச் சென்றது. சிறுவனது உயிர்பிரிந்தது. இக்கதை ஐரோப்பிய நாடுகளில் முதலில் பரவி இன்று உலகநாடெங்கும் சிறுவர்க்கான கதையாகியுள்ளது.


நெதர்லாந்தில் எங்கு திரும்பினாலும் காற்றாலைகள், மலர்த் தோட்டங்கள், அதிகமாகக் காணப்படுகின்றன.

நெதர்லாந்தின் மொழி டச்சு. அம்ஸ்ரடாம் இந்த நாட்டின் தலைநகரம். இந்த நகரின் பிரதான இடங்களை கால்நடையாகவே நாம் சுற்றிப் பார்த்தோம்.

உலகிலேயே உயரமானவர்கள் டச்சுக்காரர்கள்தான்! ஆண்களின் சராசரி உயரம் 1.85மீற்றர். பெண்களின் சராசரி உயரம் 1.70மீற்றர்.

மிகவும் முற்போக்குக் கொள்கையுடைய இந்த நாட்டில் பாலியல் தொழில், போதைப் பொருட்கள் விற்பனை, கருணைக்கொலை, ஓரினத் திருமணங்கள் ஆகியவை சட்டரீதியாக ஏற்கப்பட்டுள்ளன.

*(இனி அடுத்த வாரம்)*

# படித்ததும் பகர்வதும் 36



**சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### பாதைகளை முறையாக பயன்படுத்துவோம்




பாதைகளை பயன்படுத்தும் ஒவ்வொருவரும் அதனை ஒழுங்காக முறைப்படி பயன்படுத்துதல் அவசியம். பாதசாரிகளானாலும் சரி, வாகனங்களை செலுத்துவோராயினும் சரி, பாதைகளில் வேலை செய்வோராயினும் சரி அனைவரும் தமக்குரிய, பாதைகளை பயன்படுத்துவதற்கான சரியான விதிமுறைகளை பேணி நடப்பது அவசியமாகும்.

வாகனங்களை செலுத்துவோர் சகல பாதை விதிமுறைகளையும், சட்ட ஒழுங்குகளையும் முறையாக பின்பற்றுவதோடு பாதைகளில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களையும், குறியீட்டு சின்னங்களையும் கவனித்து வாகனத்தை செலுத்த கவனம் எடுத்துதல் வேண்டும். வேக கட்டுப்பாடு, வாகன நெரிசல்களில் பொறுமை, பாடசாலைகள் வைத்தியசாலைகள் விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றில் அதிக நிதானம், பாதசாரிகள் கடவைகளை காணும் போதும் உரிய பேணுதல் என்பன வாகன சாரதிகள் கட்டாயமாக கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளில் சிலவாகும். போதையோடு வாகனம் ஓட்டுவதும் கூடாது.

பாதசாரிகளும் கண்டபடி பாதையின் குறுக்கே முறையற்று நடந்து செல்வதையும், பாதசாரிகளுக்கான கடவையில் நடக்கும் போதும்கூட அதனை தமது குத்தகை இடமாக கருதி சாவகாசமாக நடப்பதையும் முற்றாக தவிர்த்தல் வேண்டும். பாதைகளில் நடந்து செல்வோர் இயன்ற அளவில் வலது பக்கத்தை பயன்படுத்துவதும், அதற்கான வாய்ப்பு இல்லாத சந்தர்பங்களில் இயன்ற அளவில் ஒதுங்கி நடப்பதும் அவசியம்.

பாதைகளில் வேலைகள் செய்வோர், குறிப்பாக துப்பரவு செய்வோர், திருத்த வேலைகள் செய்வோர், மின்சாரம் தொலைபேசி நீர்க்குழாய் போன்றவற்றை பொருத்துவோர், திருத்தம் மேற்கொள்வோர் தமது பொறுப்புணர்ந்து பாதைகளை பாவிப்போருக்கு இடையூறு செய்யாத வகையில் தமது பணிகளை செய்ய உறுதி கொள்ள வேண்டும்.


இவ்வாறு ஒவ்வொருவரும் தம் பொறுப்புணர்ந்து செயல்படும் போது, சகலரும் பாதைகளை தமது தேவைகளுக்கு பயன்படுத்துவது இலகுவாக அமையும்.

"தவறு செய்தால் ஏற்றுக்கொள்ளுங்கள் .விரைவாக சரி செய்து கொள்ளலாம். ஆனால் செய்த தவறை 'தவறே இல்லை' என்று சாதிக்காதீர்கள். பின்னர் என்றுமே அதனை சரிசெய்ய முடியாது".

## நெஞ்சுக்கு நீதி

**"தவறு செய்தால் ஏற்றுக்கொள்ளுங்கள் .விரைவாக சரி செய்து கொள்ளலாம். ஆனால் செய்த தவறை 'தவறே இல்லை' என்று சாதிக்காதீர்கள். பின்னர் என்றுமே அதனை சரிசெய்ய முடியாது".**

## என் கேள்விக்கென்ன பதில்?



எனது கேள்விக்கு கொழும்பு பல்கலைக்கழக கல்விபீட முன்னாள் தலைவரும், சமூக சிந்தனையாளரும், பிரபல கல்வியியலாளருமான, பேராசிரியர் சோ. சந்திரசேகரம் வழங்கிய பதில் இங்கு இடம் பெறுகிறது.

**கேள்வி:** சிங்களம், தமிழ், முஸ்லிம் என மொழி ரீதியாக, இன ரீதியாக பாடசாலைகள் இருக்கக்கூடாது என சிலர் கூறுகின்றனரே! இதுப்பற்றிய உங்களது கருத்து என்ன?

**பதில்:** இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம், கத்தோலிக்க, தோட்ட பாடசாலைகள் என தனித்தனி பாடசாலைகள் மொழி, மத, இன ரீதியாக வகுக்கப்பட்டு இயங்குகின்றன பல தசாப்தங்களாக எவ்வித பிரச்சினைகளும் இன்றி இவாறான வகைப்படுத்தலூட்டனான பாடசாலைகள் இயங்கி வந்தன; இப்போதும் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் இப்போது ஒரு சிலர் இவ்வாறான பாடசாலைகள் அவசியம் இல்லை என்றும் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து கற்கக்கூடிய ஒருமித்த பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று கோசம் எழுப்புகின்றனர். ஆனாலும் இது நடைமுறை சாத்தியமான விடயமல்ல.

ஒவ்வொரு மதத்தவரும் ஒவ்வொரு இனத்தவரும் தமக்கே உரித்தான தனித்துவமான கலை, கலாசார மத விழுமியங்களை பேணிக்கொண்டு கற்கக்கூடிய முறையில்தான் இத்தகைய தனித்துவமான பாடசாலைகள் இருக்கின்றன. இதனால் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. அரசியல் சுயநல இலாப நோக்கங்களுக்காகவே இத்தகைய பாடசாலைகளுக்காக எதிராக குரல் எழுப்பப்படுகிறது எனலாம்.

சிங்களம், தமிழ், முஸ்லிம் என இன, மொழிரீதியான பாடசாலைகள் தொடர்ந்து இயங்க இடமளிப்பதே இலங்கை போன்ற பல்லின மக்கள் வாழ்கின்ற நாட்டுக்கு பொருத்தமானதாக அமைய முடியும் என்பதோடு அவரவரது சமூக, சமய, கலாசார தனித்துவங்களை பேணி வாழ்வதற்கும் அவர்களது அடிப்படை உரிமைகளை மதித்து நடப்பதற்கும் பொருத்தமானதாக இருக்கும்.

## சிந்தனை செய் மனமே

### கால் புண்ணுக்கு கடல் நீர் மருந்து?



ஒரு கிராமத்து பாட்டியின் காலில் புண் ஒன்று உண்டானது. நீண்ட நாட்களாகியும் காலில் இருந்த புண் ஆறவில்லை. இதனால் பாட்டியின் பேரன் மிகவும் வருத்தமடைந்தான். பேரனின் நண்பன் ஒருவன், 'பாட்டியின் காலில் ஏற்பட்டிருக்கும் புண் குணமடைய தினமும் கடல் நீரை எடுத்துவந்து காலில் ஊற்றினால் போதும்' என்றான். அதைக் கேட்ட பேரனுக்கு மிகவும் மகிழ்ச்சி. வீட்டிற்கு வந்தவனுக்கு திடிரென்று ஒரு சந்தேகம் உண்டாகியது. கடல்நீரோ பொதுச்சொத்து. தனிமனிதன் சுயநலத்திற்காக பொதுச்சொத்தான கடல்நீரைப் பயன்படுத்தலாமா? என்ற குழப்பம் உண்டாகியது. எதற்கும் அரச அதிகாரியிடம் அனுமதி பெற்றுவிடலாம் என்று பொறுப்பான அதிகாரிக்கு அனுமதி கோரி ஒரு கடிதம் எழுதினான்.

கடிதத்தை படித்த அரச அதிகாரி அதிர்ச்சி அடைந்தார். 'இது எவன் செஞ்ச கூத்துனு தெரியலயே. இதுவரைக்கும் எவனும் இது மாதிரி ஒரு அனுமதி கேட்டதில்லையே. இப்படி ஒருவன் கேட்பதில் ஏதோ வில்லங்கம் இருக்கு என்று அர்த்தம். நமக்கெதுக்கு வம்பு. பேசாம பிரதேச செயலாளருக்கு அனுப்பிடுவோம்' என்று தீர்மானித்து அந்த பேரன் எழுதிய கடிதத்தையும் சேர்த்து பிரதேச செயலாளருக்கு அனுப்பினார்.



பிரதேச செயலாளரிடம் அந்த கடிதம் சென்றது. அதனை பார்த்த பிரதேச செயலாளர், 'அந்த அதிகாரிக்கும் நமக்கும் ரொம்ப நாளா தகராறு. எப்படி நம்மள பழிவாங்கலாம்னு பார்த்துட்டு இருந்தான். அவன் தான் ஏதோ சூழ்ச்சி பண்றான். பேசாம இதை அரசாங்க அதிபருக்கு அனுப்பிடுவோம்' என்று முடிவு செய்து, "எங்க பகுதி கிராமத்து பாட்டி காலுல புண்ணு. அதற்கு கடல் தண்ணிய பயன்படுத்திக்க அனுமதி கேட்கிறார்கள். வழங்குகின்றீர்களா?' எனக் கேட்டு கடிதம் எழுதினார்.

கடிதத்தைப் பெற்ற அரசாங்க அதிபர் யோசித்தார். 'அனுமதி கேட்டவன் ஆளுங்கட்சிக்காரனா எதிர்க்கட்சிகாரனான்னு தெரியலயே. கேட்டவன் ஆளுங்கட்சிகாரனா இருந்து அனுமதி கொடுத்துட்டா எதிர்க்கட்சிக்காரன் போராட்டம் நடத்துவான். கேட்டவன் எதிர்க்கட்சிக்காரனா இருந்து அனுமதி கொடுத்துட்டா ஆளுங்கட்சிகாரன் கோபத்துக்கு ஆளாகனும். நமக்கு எதுக்கு வம்பு' என்று எண்ணிய அரசாங்க அதிபர், அதனை சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சுக்கு அனுப்பி வைத்தார்.

அக்கடிதம் மாகாண அமைச்சர் கையில் கிடைத்தது. 'எந்த கிறுக்கன் இப்படி ஒரு பிரச்சினையை எழுப்புகிறானோ தெரியலயே. தெரியாத்தனமா அனுமதி கொடுத்துட்டு நாளைக்கு திரும்பி வந்தாங்கனா நம்ப அமைச்சர் பதவியே காலியாகி விடுமே!' என்று அஞ்சிய அவர், 'ஆத்து தண்ணி, குளத்து தண்ணி, கிணத்து தண்ணிதான் மாகாண சபை கட்டுப்பாட்டில் வரும். நீங்கள் கேட்பதோ கடல் தண்ணீர்.. கடலோர பாதுகாப்பு மத்திய அரசு கட்டுப்பாட்டுல வரும். அதனால உங்கள் அனுமதி கடிதத்தை நான் மத்திய அரசுக்கு அனுப்புகிறேன்' என்று அரசாங்க அதிபருக்கு அமைச்சர் பதில் எழுதினார்.

கடிதம் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கையில் கிடைத்தது. அவர் பிரதமரிடம் பேசினார். பிரதமரோ 'நான் பல வெளிநாடுகளுக்கும் பயணம் செய்திருக்கிறேன். அந்த அனுபவத்தின் படி பார்த்தால் என்னதான் கடலின் ஒரு கரை நம்ம நாட்டில் இருந்தாலும் அடுத்த கரை அடுத்த நாட்டில் உள்ளது. எனவே கடல் தண்ணீரை எடுத்து பயன்படுத்துவது என்பது சர்வதேசப் பிரச்சினை. ஆகவே அது குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் பேசி அனுமதி வாங்கும் வரை கடல் நீரை எடுத்து பாட்டி காலை கழுவுவதற்கு தடை விதிக்கப்படுகிறது' என்றார்.

மத்திய அரசின் இந்த உத்தரவு மாகாண அமைச்சருக்கு வந்து. அவரிடமிருந்து அரசாங்க அதிபருக்கு வந்து, அவரிடமிருந்து பிரதேச செயலாளருக்கு வந்து அவரிடமிருந்து அரச அதிகாரியிடம் வந்து, அவரிடமிருந்து பாட்டியோட பேரன் கைக்கு கிடைத்தபோது அந்த பாட்டி இறந்து பல நாட்களாகி இருந்தன.

## கொஞ்சம் சிரிங்க



விவாகரத்து கேட்டு வந்த வாதியிடம் நீதிபதி கேட்டார், "எதற்காக விவாகரத்து கேட்கிறாய்.?"

வாதியான கணவன் சொன்னான், "ஐயா என் மனைவி என்னை தினமும் பூண்டு உரிக்கச் சொல்கிறாள். வெங்காயம் வெட்ட சொல்கிறாள். பத்துப்பாத்திரம் தேய்க்கச் சொல்கிறாள். என்னால் முடியல. அதனால விவாகரத்து தாருங்கள்." என்றான்.

"இதெல்லாம் காரணமாக ஏத்துக்க முடியாது. உரிக்க வேண்டிய பூண்டை ஒரு போத்தலில் போட்டு மூடி நான்கு முறை குலுக்கினால் தோல் தன்னால கழண்டு வரப்போறது. அரிய வேண்டிய வெங்காயத்த பத்து நிமிடம் பிரிட்ஜ்ல வைச்சு எடுத்தா ஈசியாகவும் வெட்டலாம்; அரியும்போது கண்ணிலும் தண்ணீர் வராது. பத்துப்பாத்திரத்தை எல்லாம் பத்து நிமிஷம் தண்ணீரில ஊறவைத்து தேய்ச்சா சரியாப் போயிடுது. அப்படியும் போகலேண்ணா 'பேக்கிங் பவுடர்' ஒரு சிட்டிகை போட்டு, ஒரு ஸ்பூன் 'வினிகர்' விட்டா எப்படிப்பட்ட தீச்சல் சட்டியா இருந்தாலும் பளிச்சுண்ணு ஆயிடும்

அது மட்டுமில்ல, துணிய வாஷிங் பவுடர்ல ஊறவைக்கறதுக்கு முன்னாடி, நல்ல தண்ணியில ஒரு தடவ நனைக்கணும். அதன் பின் வாஷிங் பவுடர்ல ஊறவைச்சி மிஷின்ல போட்டா, துணி ரொம்பவுமே துப்பரவாயிடும். அதனால நீ சொன்ன காரணங்களுக்கெல்லாம் டைவர்ஸ் தரமுடியாது. புரிஞ்சுதா.?" என்றார் நீதிபதி.

"ஐயா நல்லா புரிஞ்சதுங்க. எம் பொண்டாட்டி பூண்டு, வெங்காயம், பாத்திரத்தோட நிறுத்திக்கிட்டா, ஆன நீங்க துணியும் கூட துவைக்கிறீங்களே!" என்றான் வாதியான விவாகரத்து கேட்ட கணவன்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2021 மார்ச் 14 ஞாயிற்றுக்கிழமை


இலங்கை தனியார்
வானொலித் துறையின்
ஆரம்பம் தொட்டு
இன்று வரைக்கும்
வானலையில்
நேயர்களோடு
பயணிக்கும்
ஹோஷியா அனோஜன்



# இரத்தத்தால் ஒரு குர்ஆன்

ஈராக்கின் முன்னாள் சர்வாதிகாரி சதாம் ஹுசைன் சர்வாதிகாரிகளுக்கே உரிய சில குறும்பு வேலைகளையும் செய்வார். ஆனால் அவர் தன் இரத்தத்தாலேயே புனித குர்ஆனை எழுதியதை எந்த ரகத்தில் சேர்ப்பது என்று புரியவில்லை. 1990களின் கடைசியில் இந்தத் திட்டத்தை அவர் ஆரம்பித்தார். இரண்டு ஆண்டுகளில் முழு குர்ஆனும் சதாம் ஹுசைனின் இரத்தத்தால் எழுதப்பட்டது. (உண்மையிலேயே அவரது இரத்தத்தால் எழுதப்பட்டதா என்பது பற்றிய சந்தேகம் இன்னும் போக்கப்படவில்லை என்பது வேறு கதை.)

2000ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அந்த இரத்தத்தால் ஆன குர்ஆன் வெளியிடப்பட்டது. முஸ்லிம் மதத்தலைவர்களிடம் இருந்து இதற்கு பரவலாக எதிர்ப்பு வெளியானது. அது பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு அமெரிக்க ஆக்கிரமிப்பை அடுத்து அந்த குர்ஆன் பொதுமக்கள் பார்வையில் இருந்து அகற்றப்பட்டது.



# உலகின் மிகப்பெரிய வைரக்கல்லின் கதை




உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய வைரக்கல்லின் பெயர் கல்லினன் வைரம். இதன் எடை 621.35 கிராம். 1905 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் இருக்கும் வைரச் சுரங்கத்தில் தான் இது கண்டுபிடிக்கப்பட்டது. உண்மையில் இதன் பெறுமதி விலைமதிப்பற்றது.

உலகெங்கும் அவதானத்தை பெற்ற இந்த வைரம் திருடுபோகலாம் என்ற அச்சம் எல்லாவற்றையும் விட பெரிதாக இருந்தது. இந்த வைரத்தை பிரிட்டனுக்கு அனுப்ப வேண்டி இருந்தது தான் அப்போதைய பெரிய சிக்கல்.

கப்பலில் கடும் காவலுக்கு மத்தியில் பூட்டுப்போட்ட பெட்டியில் அந்த வைரக் கல் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டதாகச் செய்தி. அப்படி ஒரு கப்பல் உண்மையிலேயே தென்னாபிரிக்காவில் இருந்து பிரிட்டனை நோக்கி புறப்பட்டது.

ஆனால் அந்தப் பாதுகாப்பான பூட்டுப்போட்ட பெட்டிக்குள் வைரம் இருக்கவில்லை. ஏனென்றால் அந்தப் பயணத்திலும் வைரம் திருடுபோகலாம் என்ற அச்சம் இருந்ததால் அந்தக் கப்பலில் வைரம் அனுப்பப் படவே இல்லை. இது ஒரு திசைதிருப்பும் வேலை.

சொன்னால் நம்பமாட்டீர்கள் அத்தனை பெறுமதியான அந்த வைரக்கல், சாதாரண பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டு பதிவுத் தபாலில் தென்னாபிரிக்காவில் இருந்து பிரிட்டனுக்கு பாதுகாப்பாக அனுப்பப்பட்டது.

பிரிட்டனுக்கு கொண்டு செல்லப்பட்ட அந்த வைரக்கல்லை யாரும் வாங்காத நிலையில் இரண்டு ஆண்டுகளின் பின் சுரங்க முதலாளியால் எட்வர்ட் மன்னருக்கு பரிசாக வழங்கப்பட்டது.

காலப்போக்கில் அது ஒன்பது பெரிய கற்களாகவும், 100 சிறியதாகவும் உடைக்கப்பட்டது. அதில் பெரிய மூன்று கற்கள் லண்டனில் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# 'ஏரியா 51' மர்மம்

ஏரியா 51 என்பது உலகின் மர்மமான இடங்களில் ஒன்று. அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் அமைந்திருக்கும் அந்த இடத்தில் அமெரிக்க விமானப்படைத் தளம் ஒன்று தான் இருக்கிறது. அங்கே என்ன நடக்கிறது என்று கேட்டால் அமெரிக்க அரசு கமுக்கமாக இருந்துவிடும்.

அங்கே யாருக்கும் போகமுடியாது மேலால் விமானங்கள் கூட பறக்கத் தடை இருக்கிறது என்கின்றபோது யாருக்குத் தான் சந்தேகம் வராது. எனவே, ஏரியா 51 பற்றி ஏகப்பட்ட கதைகள் இருக்கின்றன.

இது ஒரு திறந்த பயிற்சி முகாம் என்று பொதுப்படையாக விளக்கம் அளிக்கப்பட்டபோதும், அங்கே ஆயுத சோதனைகள் நடத்தப்படுவதாகவும், சக்திவாய்ந்த நவீன ஆயுதங்கள் வைக்கப்பட்டிருப்பதாகவும், ஏன், வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய ரகசியங்கள் கூட இருப்பதாகவும் ஆளுக்கொரு கதை சொல்கிறார்கள்.

'ஏரியா 51' இராணுவ மையத்தில் என்ன ஆராய்ச்சி செய்யப்படுகிறது? எவ்வளவு செலவு செய்யப்படுகிறது? நடுப் பாலைவனப் பகுதியில், உலகிலேயே மிகப் பாதுகாப்பான இராணுவ மையம் எதற்காக செயல்படுகிறது என்கிற கேள்விகளுக்கு இன்று வரையில் பதில் இல்லை.



# விசித்திர பழக்கம்



இந்தோனேசியாவில் டானா டொரா என்ற தீவில் வசிக்கும் மக்களிடம் விசித்தரமான பழக்கம் ஒன்று இருக்கிறது. அங்கு பிறக்கும் குழந்தைகள் பல் முளைக்கும் முன்னரே இறந்துவிட்டால் அவர்களை புதைக்க மாட்டார்கள். குடும்பத்தினர் சேர்ந்து மரத்தில் பொந்து ஒன்றை தோண்டி குழந்தையின் உடலை வைத்துவிடுவார்கள். மரம் வளர்ந்து குழந்தை உடலை விழுங்கிவிடும்.

இங்குதான் இறந்த உடல்களைத் தோண்டி எடுத்து அவைகளை புத்தாடை அணிவித்து கொண்டாடும் பழக்கமும் இருக்கிறது.

# உலகின் பழமையான தேவாலயம்



காஸ்பியன் கடற்கரையில் அமைந்திருக்கும் ரஷ்யாவின் பண்டைய நகரான டெர்மண்டில் நிலத்திற்கு அடியில் 39 அடி உயர கட்டடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது உலகின் மிகப்பழையான கிறிஸ்தவ தேவாலயமாக இருக்கலாம் என்று இப்போது நம்பப்படுகிறது. இந்த கட்டடம் கட்டப்பட்டது கி.பி 300 ஆம் ஆண்டுகளில்.

சிலுவை வடிவத்தில் இருக்கும் இந்தக் கட்டடம் 36 அடி உயரம் 50 அடி நீளம் மற்றும் 44 அடி அகலம் கொண்டது. அந்த நகரை அரபியர் கைப்பற்றியதை அடுத்து அது கட்டப்பட்டு 400 ஆண்டுகளில் மண்ணில் புதையுண்டிருக்கிறது.

# நிலவுக்கு பயணிக்க 8 பேர் தேவை:






**ஜப்பானைச் சேர்ந்த செல்வந்தர் யூசாக்கு மைசவா என்பவர் இலவசமாக விண்வெளிக்கு செல்ல எட்டுபேருக்கு அழைப்பு விடுத்துள்ளார். ஈலான் மஸ்க்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் ராக்கெட் மூலம் இந்த நிலவுப் பயணம் திட்டமிடப்பட்டுள்ளது.**

அனைத்து பின்புலத்தை சேர்ந்த மக்களும் இதில் இணைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன் என ட்விட்டரில் காணொளி பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார் யூசாக்கு மைசவா.

விண்வெளி செல்ல விரும்புபவர்கள் விண்ணப்பிப்பதற்கான இணையதளப் பக்கத்தின் இணைப்பையும் அவர் பகிர்ந்துள்ளார்.

விண்வெளிக்கு இவருடன் செல்ல உள்ளவர்களின் ஒட்டு மொத்த செலவையும் தாம் பொறுப்பேற்றுக் கொள்வதாக யூசாக்கு கூறியுள்ளதால் இவருடன் செல்பவர்கள் எந்தவிதமான செலவும் செய்ய வேண்டிய தேவை இருக்காது.

2023ஆம் ஆண்டு நடக்கத் திட்டமிடப்பட்டுள்ள இந்த விண்வெளிப் பயணத்துக்கு 'டியர்மூன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த நிலவுப் பயணம் வெற்றியடைந்தால், 1972க்கு பிறகு மனிதர்கள் முதல் முறையாக நிலவுக்கு மேற்கொள்ளும் பயணமாக இது இருக்கும்.

இலவச நிலவுப் பயணத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்களுக்கு இரண்டு கட்டுப்பாடுகளை விதித்துள்ளார் யூசாக்கு மைசவா.

இவற்றில் முதலாவது இந்தப் பயணத்துக்காக விண்ணப்பிப்பவர்கள் எந்த செயலில் ஈடுபட்டுள்ளார்களோ, அது பிறருக்கும் இந்த சமூகத்துக்கும் ஏதாவது ஒரு வகையில் உதவி செய்வதாக இருக்க வேண்டும்.

இரண்டாவது கட்டுப்பாடு இதேபோன்ற விருப்பங்களைக் கொண்டுள்ள சக விண்வெளி திட்டப் பயணிகளுக்கும் உதவும் நோக்குடன் இருக்க வேண்டும், என்று அவர் கூறியுள்ளார்.

நிலவுக்கு செல்வதற்கு என்று உள்ள அனைத்து டிக்கெட்டுகளையும் தான் வாங்கி விட்டதால் இது ஒரு தனிப்பட்ட பயணமாகவே இருக்கும் என்று அவர் கூறுகிறார்.

ஃபேஷன் துறையில் தொழில் அதிபராக உள்ள யூசாக்கு மைசவா, கலைப் பொருட்கள் சேகரிப்பாளராகவும் இருக்கிறார்.

இந்த ஸ்டார்ஷிப் ராக்கெட்டில் விண்வெளிக்கு செல்வதற்காக 'கலைஞர்களை' அழைத்துச் செல்ல இருப்பதாக இவர் முன்னர் தெரிவித்திருந்தார்.

"இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தில் உலகெங்கிலும் உள்ள மக்கள் அனைவருக்கும் இந்த பயணத்தில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது," என்று அவர் கூறுகிறார்.

நீங்களே உங்களை ஒரு கலைஞர் என்று கருதினால், நீங்கள் ஒரு கலைஞர்தான் என்று கூறுகிறார் யூசாக்கு.

தன்னுடன் விண்வெளிக்கு வருவதற்கு ஒரு காதலி வேண்டும் என்று கடந்த ஆண்டு இவர் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். ஆனால் தமக்கு ஏற்பட்ட கலவையான உணர்வுகளால் அத்திட்டத்தை கைவிடுவதாக பின்னர் அறிவித்தார்.

ஈலான் மஸ்க்கின் ஸ்பேஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விண்கலம் மூலம் விண்வெளிக்கு செல்லும் முதல் தனியார் பயணியாக 2018ஆம் ஆண்டு யூசாக்கு மைசவாவின் பெயர் அறிவிக்கப்பட்டது.

ஆனால் அந்தப் பயணத்துக்காக அவர் எவ்வளவு தொகை செலுத்தினார் என்பது குறித்த விவரங்கள் வெளியிடவில்லை. "இது ஒரு மிகப்பெரிய தொகை," என்று மட்டும் ஈலான் மஸ்க் குறிப்பிட்டிருந்தார்.

## பிறந்த நாள் வாழ்த்து

உங்கள் அபிமான செந்தூரம் இதழில் உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை பிரசுரிக்க தீர்மானித்திருக்கிறோம். குழந்தைகளின் அழகிய நிழற்படம் ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தால் களமமைத்துக் கொடுக்க தயாராக இருக்கிறோம். குழந்தையின் முழுப் பெயர், பெற்றோரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.



அனுப்ப வேண்டிய முகவரி:

**பிறந்தநாள் வாழ்த்து, செந்தூரம், தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல. 834, கொழும்பு.**
Senthooramtkn@gmail.com

செந்தூரம் பிறந்த நாள் பகுதிக்கான உங்கள் அன்புச் செல்வங்களின் படங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கோ 0714901181 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ அனுப்பலாம்.



# முதல்கட்ட சோதனையில் பெர்சவரன்ஸ் ரோவர்





நாசா அமைப்பின் ஜெ.பி.எல் என்ற ஆய்வகத்தால் பெர்சவரன்ஸ் ரோவர் வடிவமைக்கப்பட்டது. இது கடந்த ஆண்டு ஜூலை மாதம் 30ல் புளோரிடாவில் உள்ள கேப் கெனவரல் விமானப்படைத் தளத்தில் இருந்து அட்லஸ் ராக்கெட் மூலம் செலுத்தப்பட்டது.

அண்மையில் செவ்வாய் கிரகத்திற்கு வெற்றிகரமாக சென்ற பெர்சவரன்ஸ் ரோவர் தனது பயணத்தின் முதல்கட்ட சோதனை ஓட்டத்தை நிறைவு செய்துள்ளதாக நாசா அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது.

பூமியைத் தவிர உயிரினங்கள் வாழ்வதற்கு ஏதுவான அம்சங்கள் உள்ள கிரகங்களை விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாகத் தேடிக் கொண்டு இருக்கின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று.

செவ்வாய் கிரகம் இந்த ஆராய்ச்சியின் முக்கிய கிரகமாக இருந்து வருகிறது. இதற்காக கடந்த ஆண்டு அனுப்பப்பட்ட பெர்சவரன்ஸ் ரோவர் கடந்த மாதம் வெற்றிகரமாக செவ்வாயில் தரையிறங்கியது.

மேலும் செவ்வாய் கிரகத்தின் தரைப்பகுதியில் ஆய்வு செய்து வரும் அந்த ரோவர், அங்கு காணப்படும் மலைகள், குன்றுகள், பாறைகள் என அனைத்தையும் மிகவும் தெளிவாக படம்பிடித்து காட்டியது.

நாசா அமைப்பு அண்மையில் வெளியிட்ட தகவலின் படி, கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் பெர்சவரன்ஸ் ரோவரை அதிகமாக இயக்கி முயற்சி மேற்கொண்டதாகவும். இதனால் ரோவர் 33 நிமிடங்கள் முன்னும் பின்னுமாக இயக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் நாசா அமைப்பு ஏற்கனவே அனுப்பிய கியூரியாசிட்டி ரோவரை விட 5 மடங்கு வேகத்தில் பெர்சவரன்ஸ் ரோவர் இயங்குவதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பின்பு செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் மேலும் ஆய்வு செய்வதற்கான பாதைகள் குறித்து பரிசீலித்து வருவதாக விஞ்ஞானிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பெர்சவரன்ஸ் ரோவர் உடன் அனுப்பி வைக்கப்பட்ட சிறிய ரக ஹெலிகாப்டரை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், பின்பு 30 இடங்களில் பாறைகள் மற்றும் மாதிரிகளை சேகரிக்க முயற்சி செய்து வருவதாகவும் நாசா விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். மேலும் இந்த மாதிரிகளை மற்றொரு ரோவர் மூலம் வரும் 2031ம் ஆண்டு பூமிக்கு கொண்டு வர நாசா திட்டமிட்டுள்ளது. குறிப்பாக ஓராண்டுக்கு ரோவர் செவ்வாய்கிரகத்தில் ஆய்வு மேற்கொள்கிறது.

குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால் செவ்வாய் கிரகத்தில் ஓர் ஆண்டு என்பது பூமியை பொறுத்தவரை 687 நாட்கள். கார்பன் டை ஆக்சைடை ஆக்சிஜனாக மாற்றும் கருவியும் ரோவருடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதன் வெற்றியை பொறுத்து தான் மனிதர்களை செவ்வாய்க்கு அனுப்பும் திட்டத்தை நாசா வகுக்கும் என்று கூறப்படுகிறது.



# ஸ்டீபன் ஹாக்கிங்

## இவரின் முக்கியமான கண்டுபிடிப்புகள்

### ஒருமைப்பாடு

ஸ்டீபன் ஹாக்கிங் ஒருமைப்பாடு குறித்த பாதையை உடைக்கும் வேலையைச் செய்து அதை முழு யுனிவர்ஸுக்கும் பயன்படுத்தினார் மேலும் ஈர்ப்பு ஒருமைப்பாட்டை உருவாக்குகிறது என்று கூறினார். ஐன்ஸ்டீனின் கோட்பாடு பிக் பேங் கோட்பாடான ஒரு தனித்துவத்தை கணித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

### கருந்துளை இயக்கவியலின் சட்டங்கள்

ஸ்டீபன் ஹாக்கிங் கருந்துளை இயக்கவியலின் விதிகளைக் கண்டுபிடித்தார். கருந்துளையின் மொத்த பரப்பளவு ஒருபோதும் சிறியதாக இருக்காது என்று அவரது முதல் சட்டம் கூறுகிறது. இது ஹாக்கிங் பகுதி தேற்றம் என்றும் அழைக்கப்படுகிறது. கருந்துளைகள் சூடாக இருந்தன என்று மற்றொரு சட்டம் கூறுகிறது. ஆனால் இது கிளாசிக்கல் இயற்பியலின் முரண்பாடாகும், இது கருந்துளைகள் வெப்பத்தை கதிர்வீச்சு செய்யாது என்று கூறுகிறது. மற்றொரு சட்டம் கருந்துளைகளின் "முடி இல்லை" தேற்றம், இது கருப்பு துளைகளை மூன்று எண்களால் வகைப்படுத்தலாம் என்று கூறுகிறது; அவற்றின் நிறை, கோண உந்தம் மற்றும் கட்டணம். கருந்துளைகள் கதிர்வீச்சை வெளியிடுகின்றன, அவை அவற்றின் ஆற்றலை வெளியேற்றி ஆவியாகும் வரை தொடரக்கூடும். இது ஹாக்கிங் கதிர்வீச்சு என்றும் அழைக்கப்படுகிறது. ஜனவரி 1971 இல், அவர் "கருப்பு துளைகள்" என்ற தலைப்பில் தனது கட்டுரைக்காக மதிப்புமிக்க ஈர்ப்பு ஆராய்ச்சி அறக்கட்டளை விருதை வென்றார்.

### காஸ்மிக் பணவீக்கக் கோட்பாடு

இந்த கோட்பாட்டை ஆலன் குத் 1980 இல் அறிமுகப்படுத்தினார், இயற்பியல் அண்டவியலில், அண்ட பணவீக்கம் என்பது ஒரு கோட்பாடாகும், இதில் பெருவெடிப்பு பெருங்குடலுக்குப் பிறகு அதிவேகமாக விரிவடைகிறது. மேலும், குவாண்டம் ஏற்ற இறக்கங்களைக் கணக்கிட்டவர்களில் முதன்மையானவர் ஹாக்கிங், அதாவது பொருளின் விநியோகத்தில் சிறிய வேறுபாடுகள் மற்றும் பணவீக்கத்தின் போது இது பிரபஞ்சத்தில் விண்மீன் திரள்கள் பரவுவதற்கு வழிவகுக்கும் என்பதைக் காட்டுகிறது.

### யுனிவர்ஸின் அலை செயல்பாட்டின் மாதிரி

அவர் ஈர்ப்பு விசையின் குவாண்டம் கோட்பாட்டை நிறுவுவதில் ஆர்வம் காட்டினார், ஆனால் ஜேம்ஸ் ஹார்ட்லுடன், 1983 ஆம் ஆண்டில் ஹார்ட்ல்ஹாக்கிங் ஒரு மாதிரியை வெளியிட்டார். இந்த கோட்பாடு பெரிய காலத்திற்கு முன்பே இல்லை என்று கூறுகிறது பேங் வெடிப்பு, எனவே பிரபஞ்சத்தின் தொடக்கத்தின் கருத்து அர்த்தமற்றது. யுனிவர்ஸுக்கு நேரம் அல்லது இடத்தில் எந்த ஆரம்ப எல்லைகளும் இல்லை.

### ஒரு சுருக்கமான வரலாறு

அவரது புகழ்பெற்ற புத்தகம் இந்த புத்தகத்தில் பிக் பேங், கருந்துளைகள், ஒளி கூம்புகள் போன்ற அண்டவியல் பாடங்களின் வரம்பைப் பற்றி விளக்குகிறார். இந்த புத்தகம் 237 இன் சாதனையை முறியடிக்கும் சிறந்த விற்பனையான புத்தகமாக மாறியது. பிரிட்டிஷ் சண்டே டைம்ஸ் சிறந்த விற்பனையாளர் பட்டியலில் தோன்றியது.

### அண்டவியல் பற்றிய டாப்டவுன் கோட்பாடு

தாமஸ் ஹெர்டாக் உடன் இணைந்து, 2006 இல் "டாப்டவுன் அண்டவியல்" என்ற கோட்பாட்டை அவர் முன்மொழிந்தார்.



ஆசிரியர்: "டேய் ராமு,
இன்னும் பத்து நாளில் உலகம்
அழியப்போகுதுன்னு வச்சுக்கோ.
அப்போ கடவுள் கிட்டே என்ன
வேண்டிக்குவே?"
ராமு: "அன்னிக்கு ஸ்கூல் லீவு
விடணும்னு வேண்டிக்குவேன்
சார்"



என் கணவர் நடுராத்திரி வந்த
திருடனை பிடிச்சுட்டார்..
நடு இரவில் அவர் எப்படி
முழிச்சுக்கிட்டு இருந்தார்?
பகலில்தான் ஒபீஸ்ல தூங்கிடறாரே!



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



"வரதட்சணையா
வைரத்தைத் தர்றேன்னு
சொல்லிட்டு கரியைத்
தர்றீங்களே!"
"இன்றைய கரி, நாளைய
வைரமாச்சே!







பக்கத்து வீட்டுக்காரன்
காய்ச்சல்ல இருக்கான்னு
பாக்கப் போனேன்.
என்னய்யா.... உடம்பு இப்படி
கொதிக்குதுன்னு கேட்டா...
"நெருப்புடா....."
"கபாலிடா..."ங்குறான்
"சாவுடா...."ன்னு
சொல்லிட்டு வந்துட்டேன்.





சார், என்னோட பொண்ணைக்
காலையில் இருந்து காணல! புகார்
கொடுக்கணும்..
அதோ போறாரே.. அவர்தான் உங்க
சம்பந்தியா இருக்கணும்.. முதல்ல
அவர்கிட்ட போய் பேசுங்க...
என்ன சார் நீங்க.. பொண்ணைக்
காணலைன்னு சொல்றேன்.. நீங்க
என்னடான்னா அவர் கிட்ட பேசச்
சொல்றீங்க?
அவரோட பையனக் காணோம்னு
இப்போத்தான் புகார் கொடுத்துட்டு
போறாரு.. அதான்.

குரைக்கிற நாய் கடிக்காது.
எப்படிடா அவ்ளோ உறுதியாச்
சொல்றே?
ஒரே சமயத்தில அதால ரெண்டு
வேலையை செய்யமுடியாது,
அதான்.

அப்பா, நான் மேலே படிக்க
ஆசைப்படறேன்!
அப்படியா, மேசன்கிட்ட
சொல்லி மாடியில் ரூம் கட்டி தரச்
சொல்றேன்.

# இணையத்தை நம்பி வாழ வேண்டிய நிலையில் வாழ்வியல்

ஹோஷியா

**நமது தமிழ் ஊடகப் பரப்பிலே, அதிலும் முக்கியமாக வானொலித் துறையிலே பல சிறந்த அடையாளம் கொண்டவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தமது துறையில் கோலோச்சியிருக்கிறார்கள். அவர்களில், இன்று நாம் பேசப்போகும் ஆளுமை, பெண் தனித்துவங்களில் முக்கியமானவர். நிறைய அடையாளங்களையும், விருதுகளையும் சுவீகரித்தவர். அதிலும் இன்று மற்றுமொரு மகுடத்தையும் தன்னோடே வரித்துக் கொண்டவர்.**

ஹோஷியா அனோஜன் இலங்கை தனியார் வானொலித் துறையின் ஆரம்பம் தொட்டு இன்று வரைக்கும் வானலையில் நேயர்களோடு பயணிக்கும் ஒருவர். இதுவரை தனக்கிருக்கும் அடையாளங்களைக் கடந்து, இப்பொழுது ஒரு பெண்மணியாக அலைவரிசைப் பிரதானியாக தன் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

இந்த மகளிருக்கு சிறப்பளிக்கும் நாளில், இன்னும் வெற்றிகள் குவிக்க வாழ்த்திக் கொண்டு பேசத் தொடங்கினோம்.

**● 99.5 & 99.7 எனும் அலைவரிசையில் உதயமாகும் புதிய வானொலிச் சேவையின் தலைமை அதிகாரியாகி இருக்கிறீர்கள். இந்த அனுபவம் எப்படியிருக்கிறது?**

இது புதிய அனுபவம் தான். இதுவரைக்கும் அறிவிப்புத் துறையிலும், வானொலிகளிலும், நேயர்களோடும் நிறையவே உறவாடியாயிற்று. அந்த இறுக்கம், பிணைப்பு எப்போதும் ஒரு இனிய உற்சாகம் தான். ஆனாலும், ஒரு வானொலியின் பிரதானி எனும் பொறுப்பு என்பது கத்தி மீது நடப்பதற்கு சமமானதாகும். இது எனக்கு மட்டுமல்ல, இப்போதுள்ள எல்லா தலைமைகளுக்கும் பொருந்தும்.

போட்டியான ஊடக உலகம். நிமிடத்துக்கு நிமிடம் எங்களை புதுப்பித்துக் கொள்ள வேண்டிய தேவையும், வேகமும் நிறையவே உள்ளது. நம் கையிலுள்ள பொறுப்பை திறம்பட நடத்தவும், வானொலியினை நிகழ்ச்சித் தரத்திலும், வர்த்த ரீதியிலும் உயர்த்திச் செல்ல, எங்களை தயார்ப்படுத்தி முன்கொண்டு செல்ல வேண்டும். அதை ஆரம்பித்திருக்கிறேன். பதவி இருக்கிறது என்பதற்காக கீழுள்ளவர்களை உழைக்க வைத்து, நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எல்லோரும் சேர்ந்து உழைக்கிறோம். இந்த உழைப்பு பல திருப்பங்களை எமது வானொலிக்கும் எமக்கும் கொடுக்குமென்று நம்புகிறேன்.

**● இப்பொழுதுள்ள தனியார் வானொலிகளிலிருந்து, எப்படியான மாற்றங்களை 99.5 & 99.7 தரப்போகிறது?**

நாங்கள் வெறுமனே வர்த்தக நோக்கம் என்றில்லாமல், மக்களை இரசிக்க வைக்கும் நிகழ்ச்சிகளை படைக்கவே விரும்புகிறோம். அதையே எமது நிகழ்ச்சிகளாகவும் தயாரித்திருக்கிறோம்.



இந்தக் காலகட்டத்தில், நிகழ்ச்சிகளில் புதுமையும், படைக்கும் தன்மையில் மாற்றங்களும் கெண்டுவரப்படவேண்டும். அதையே நான் அதிகமாக விரும்புகிறேன்.

வானொலியை தரமான நிகழ்ச்சிகளைக் கொடுக்கும் ஊடகமாகவும், வணிக ரீதியிலும் நிரந்தரமான இடத்தைக் கொண்டுள்ள இடமாகவும் மாற்றவும் வேண்டும். இன்றுள்ள காலத்தின் தேவைக்கேற்பவும், இரசிப்புத் தன்மைகளுக்கேற்பவும் எமது படைப்புக்கள் அமைகின்ற பட்சத்தில், நிச்சயமாக நேயர்களால் விரும்பி ரசிக்கப்படும். அந்த மாற்றத்தினை எங்களது அலைவரிசையில் நீங்கள் அவதானிக்கவும், ரசிக்கவும் முடியும்.

**● பல புதிய குரல்களையும், திறமைகளையும் உங்களது 99.5 & 99.7 அலைவரிசையில் எதிர்பார்க்கலாமா?**

நிச்சயமாக!! இதுவரைக்கும் காலகாலமாக சில குரல்களைக் கேட்டு வந்த நேயர்களுக்கு, இன்னுமொரு வித இனிமை கொடுக்கவே இங்கே இன்னும் பல புதிய திறமையான குரல்களை தெரிவு செய்து பயிற்றுவித்து வருகிறோம். அவர்களின் திறமையும் தேடலும் பல புதிய அம்சங்களை 99.5& 99.7இல் உங்களுக்காக கொடுக்குமென்று சொல்ல முடியும்.

கேட்ட குரல்களையே மீண்டும் மீண்டும் கேட்கச் செய்வதைக் குறைத்து, இன்றுள்ள வானொலிகளில் புதிய குரல்களை அதிகம் கொடுக்கப்போகும் வானொலி எமது என்பதும் பெருமை. ஏற்கனவே அறியப்பட்ட சில அறிவிப்பாளர்களோடு இந்த இளையவர் படையும் இனிமை சேர்க்கும்.

**● உங்களது 99.5 & 99.7 அலைவரிசை ஒரு தமிழ் நாமத்தில் உதயமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும், உங்களது அலைவரிசை நிகழ்ச்சிகளும் அதே தமிழில் உருவாக்கப்பட்டுள்ளனவா?**

உண்மையில் இங்கு சில தெளிவுபடுத்தல்களை நான் கோடிட்டுக் காட்டுவது பொருத்தமானது என்று நினைக்கிறேன். அழகு தமிழில் ஒரு வானொலியின் பெயர் உருவாக்கப்படுகிறது என்றே வைத்துக் கொள்வோம். அங்கு அதே போன்றே அழகு தமிழ் நிகழ்ச்சிகளின் பெயர்கள் தான் வைக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்ப்பது, இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரைக்கும் எந்தளவுக்குச் சாத்தியம் என்று எனக்குத் தெரியவில்லை.

ஏனெனில், இன்றைய காலகட்டமும், இளைய தலைமுறையின் ட்ரெண்டிங் பசியும் வேறாகி விட்டது. எமது பாரம்பரியம், பழக்கவழக்கங்கள், கலை கலாசாரங்கள் எல்லாம் இந்தவெறும் பெயர்களில் தான் தங்கியிருக்கிறதா என்றால், இல்லை என்றே நான் குறிப்பிடுவேன். மேலும், இன்றைய காலவோட்டத்திற்கு ஏற்ப நிகழ்ச்சிகளை வடிவமைத்துk;, தொகுத்தளித்தும் கொடுக்க வேண்டிய கடமை எங்களிடமுண்டு.

அதனால், தமிழாகவே எல்லாம் இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது நல்லதல்ல. காலத்தின் வேகமும், இப்போதுள்ள புதுமைகளையும் ஒருங்காக்கித்தான் நிகழ்ச்சிகளின் தன்மையும் பெயரும் அமக்க வேண்டும். ஆகவே, புதுமையும் இளமையும் சேர்ந்த உங்களைக் கவரும் நிகழ்ச்சிகளை எதிர்பாருங்கள்.

**● காலை நேர நிகழ்ச்சியில் அறியப்பட்ட தாங்கள், வானலைப் பிரதானி என்றாலும், இங்கும் காலை நிகழ்ச்சியில் வருவீர்களா?**

கட்டாயம் வருவேன். சந்தேகம் தேவையில்லை. என்னதான் பொறுப்புகள் உயர்ந்தாலும் , எனக்கும் நேயர்களுக்குமான அன்பை கட்டிப்போடுவதென்பது நான் நிகழ்ச்சியொன்றை படைக்கையிலேயே சாத்தியமாகிறது. ஆகையால்,நேயர்களின் எதிர்பார்ப்புக்கு, இன்றைய தலைமுறையின் தேடலுக்கும் தீனிபோடும் ஒரு நிகழ்ச்சியோடு காலையில் சந்திப்பேன். காத்திருங்கள்.

**● ஒரு பக்கம் குடும்பத்தலைவி, இன்னொரு புறம் அலைவரிசைப் பிரதானி. இந்த இரண்டு பொறுப்புக்களையும் எப்படி இலாவகமாக கையாளுகிறீர்கள்?**

பெண்களுக்கு இது புதிதில்லையே. குடும்பம், கணவர் பிள்ளையை பார்த்துக் கொள்வது ஒருபக்கம் கவனமாக கையாளப்பட வேண்டியதுதான்.



அதிலும் எந்த இடர்பாடுகளை மூவருக்குள்ளும் வராத படிக்கு பார்த்துக் கொள்ள வேண்டும். அம்மாவாய் மனைவியாய், எனது வகிபாவம் முக்கியமாகிறது.

இதேபோல, சமநேரத்தில் வானொலியின் வெற்றிகளிலும் முன்னேற்றங்களிலும் எனது பங்களிப்பும் வழிநடத்தல் தேவையாகிறது. இரண்டிலும் சிக்கல்கள் வராதபடிக்கு பார்த்துக் கொள்ள வேண்டிய முக்கியமான பங்கு என்னுடையது. அதை செவ்வனே செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பவர் நான். என்னுடைய பொறுப்பு மற்றும் தேவைகளை சரிவர நிறைவேற்ற வேண்டுமென்று உழைக்கிறேன். அதுதானே பரிபூரண நிம்மதியை நமக்கு கொடுக்கும்.

சரியான திட்டமிடல் மூலமாய், குடும்பம் மற்றும் வானொலி இரண்டையும் சரி வர சரியாய் நிர்வகிக்க என்னால் முடிகிறது. ஆக, வானொலிக்கு இன்னும் கொஞ்சம் அதிகமான உழைப்பைக் கொடுக்கிறோம். அதன் பிரதிபலன் நிகழ்ச்சித் தரங்களின் மூலமாக வெளிப்படும் என்று நம்புகிறேன்.

**● ஊடகங்கள் இப்பொழுதெல்லாம் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அப்படி வானொலித் துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்?**

இன்று இணையத்தில் எங்களது தேவைகளுக்கும், அவைகளுக்கான தீர்வுகளுக்கும் மூழ்கியாயிற்று. எதற்கெடுத்தாலும் இணையம் என்றான நிலைமையில், குறிப்பாக பொழுதுபோக்குவதற்கான அம்சங்களின் தேவைகளும் குறைந்து, இணைய வெளியில் எங்களது நேரத்தை இழக்கத் தொடங்கி விட்டோம். உணவு தொடக்கம் போக்குவரத்து வரை இணையத்தை நம்பி வாழ வேண்டியவர்களாக நம் வாழ்வியல் மாறிவிட்டது. இதனால், அதிகம் கேள்விக் குறியாகவுள்ளவை இலத்திரனியல் ஊடகங்களே.

அன்று வானொலியைப் போட்டு, தொலைக்காட்சியை இயக்கி நிகழ்ச்சிகளின் இரசித்தும், பாடல்களை பார்த்தும் கேட்டும் மகிழ்ந்த சமூகம், இன்று இணையத்தளத்தில் குதித்துவிட்டது. இது எவ்வளவு ஆரோக்கியம் அல்லது இலகு என்றெல்லாம் இங்கு பேசவில்லை. கால மாற்றமும் உலக இயக்கமும் இப்படித் தானென்றால் இப்படித்தான். ஆனாலும், சில இயல்புகளை மாற்றக்கூடாது என்பது என் கருத்து.

இன்று ஊடகத்துறைக்கு இணையம் ஒரு பெரிய சவால்தான். ஆனாலும், அதே இணையத்தினால், ஊடகங்களும் ஓடிக்கொண்டி ருக்கின்றன என்பதும் மறுக்க முடியாதது தான். சவாலையும் சமாளிப்போம் அவ்வளவு தான்.



**இன்று ஊடகத்துறைக்கு இணையம் ஒரு பெரிய சவால்தான். ஆனாலும், அதே இணையத்தினால், ஊடகங்களும் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதும் மறுக்க முடியாதது தான். சவாலையும் சமாளிப்போம் அவ்வளவு தான்.**

**● நீங்கள் கடைப்பிடிப்பது, எல்லோருக்கும் வெற்றி கொடுக்கக் கூடியது?**

சரியான திட்டமிடலும், தேடலும் உழைப்புமிருந்தால் எல்லோராலும் முன்னேற முடியும். பாலின வேறுபாட்டைக் கடந்து இருசாராரும் திறமையும் தேடலும் இருக்கின்ற பட்சத்தில் மிளிர முடியும். அதனால், நிறைய ஒன்றும் சொல்வதற்கில்லை. உங்களையும் உங்களுக்குள் உள்ள தன்னம்பிக்கையையும் சிறப்பாய் உணர்ந்து செயற்படுங்கள். எதிலும் தளம்பாதீர்கள். தீர்க்கமான முடிவுகளை எட்டப் பழகிக் கொள்ளுங்கள். இவைகளே உங்களது வெற்றிகரமான வாழ்வியலின் அடையாளங்கள் என நம்புகிறேன்.

இன்று ஊடகத்துறைக்கு இணையம் ஒரு பெரிய சவால்தான். ஆனாலும் அதே இணையத்தினால் ஊடகங்களும் ஓடிக்கொண்டி ருக்கின்றன என்பதும் மறுக்க முடியாதததுதான். சவாலையும் சமாளிப்போம்; அவ்வளவுதான்.

**● புதிய குரல்களை இங்கு அறிமுகம் செய்து வெற்றியீட்ட முடியுமா?**

அறிவிப்பாளர்கள் என்று காலம் முழுக்க அப்படியே ஒரு வட்டத்துக்குள் இருந்து வருகிறவர்களை விட இப்பொழுதுள்ள இளையவர்களுக்கு தேடலும் அர்ப்பணிப்பும் அதிகம் தேவையாக இருக்கிறது. அப்படியாவனவர்களைக் கண்டுபிடித்தே இங்கு கொண்டு வந்திருக்கிறோம். அப்படியானவர்கள் இன்றைய கால ஓட்டத்தின் தேவை மற்றும் வேகத்துக்கேற்ப செயற்பட தயாரானவர்கள். அதனால், அவர்களால் இன்றைய வானொலி கலாசாரத்தில் மாற்றம் நிகழுமென்று திடமாக நம்புகிறேன். ஆகவே தான், இந்த புதிய குரல்களை நம்பிக்கையோடு களமிறக்கியிருக்கிறேன்.

**● ஹோஷியாவுக்கு ஊடகத்துறை இதுவரைக்கும் சொல்லி கொடுத்திருக்கும் விடயங்கள்?**

ஹம்.. தொழில் முறையாக நிறைய கற்றுக் கொண்டிருக்கிறேன். அதிலுள்ள நுணுக்கங்களை தெரிந்துகொள்ளவும், காலவோட்டத்திற்கேற்ப நம்மை புதுமைப்படுத்திக் கொள்ளவும் இந்தத் துறை நிறைய சொல்லித் தந்திருக்கிறது.

விஷேடமாக, மனிதர்களை படிக்கவும், அவர்களது சவால்களை இலகுவாகக் கடந்து போகவும் எதிர்மறை விமர்சனங்களையும் வியாக்கியானங்களையும் தவிர்த்து விட்டு நமது வழியில் எப்படி உழைப்பது முன்னேறுவது என்பதெல்லாம் இங்கு கற்றுக்கொண்டதுதான். ஆக இந்தத் துறை நிறைய நல்லது கெட்டதுகளை கற்றுக் கொடுத்திருக்கிறது. அதில் தேவையானதை தெரிந்தெடுத்து பயணப்படுகிறேன்.



கே.ஈஸ்வரலிங்கம்





Senthooram செந்தூரம்


# பிரியாபவானியின் தீராத ஆசை

மேயாத மான் படத்தில் ஹீரோயினாக அறிமுகமாகி நம் மனதைகொள்ளையடித்து, 'களத்தில் சந்திப்போம்'ல் கலக்கி வரும் நடிகை பிரியா பவானி சங்கர் மனம் திறக்கிறார்...

**களத்தில் சந்திப்போம்' படம் பற்றி**

ஜீவா, அருள்நிதி என இரண்டு ஹீரோ. நான் அருள்நிதிக்கு ஜோடி. மஞ்சுமா தான் ஹீரோயின். நான் அருள்நிதியுடன் கொஞ்சம் வந்து போறேன். படம் பார்க்கும் பசங்க நட்பை நினைச்சு பார்ப்பாங்க. யுவன் சங்கர் ராஜா இசையில் பாடல்கள் சூப்பர்.



**எப்படி ஒரு கதையில் நடிக்க முடிவு எடுப்பீர்கள்?**

படத்தின் தயாரிப்பாளர் யாருன்னு பார்ப்பேன். இன்றைய சூழலில் பெரிய தயாரிப்பாளர்களே அதிக படம் கொடுக்குறது இல்லை.. அதனால் தயாரிப்பு அப்புறம்; கதை நல்லா இருக்கான்னு பார்த்த தான் முடிவு எடுப்பேன்.

**மீடியா டூ நடிகை வரவேற்பு எப்படி இருக்கு?**

சினிமாவுக்கு நான் வரும் போது பெரிய வரவேற்பு இல்லை. .வேலை செய்த 'டிவி' நிறுவனம் எனக்கு பிளஸ். நிறைய மக்களிடம் கொண்டு சேர்த்தது. இயக்குனர்கள் கார்த்திக் சுப்புராஜ், ரத்னாவுக்கு நன்றி. 'மேயாத மான்' நடிக்கும் போது பெரிய வாய்ப்புனு தெரியலை, அதுதான் சினிமா பயணத்தை மாற்றி இருக்கு.

**உங்களை ரசிக்கும் ரசிகர்கள் பற்றி**

என்னை 'டிவி'யில் பார்த்த பார்வையாளர்கள் இப்போ சினிமாவில் பார்க்கிறார்கள். ரசிகர்கள் ஈஸியா கிடைக்க மாட்டாங்க. 'டிவி' வாய்ப்பை சரியா பயன்படுத்துறேன்னு நம்புறேன், 'டிவி'யில் இருந்து வந்து 2 படம் நடிச்சுட்டு போயிட்டாங்கனு தவறான உதாரணமாக விரும்பலை.

**பட வாய்ப்பை பெறுவதற்கான போட்டிகள்**

சினிமா துறையில் போட்டிகள் நிறைய இருக்கும். ஒரு வாய்ப்புக்கு தகுதியானவர்கள் நிறைய பேர் இருக்காங்க. நம்மள மீறி நமக்குள் ஒரு ஒப்பீடு வந்து விடும். போட்டியை பார்த்து ஓட ஆரம்பிக்க கூடாது. முடிந்தவரை வாய்ப்பைப் பெற முயற்சி செய்யனும்.

**உங்களை ரசிகர்கள் கிளாமரில் பார்க்கணும்னு...**

'விண்ணைத்தாண்டி வருவாயா'ல் திரிஷா கிளாமர் பண்ணினாங்க. அதுல ஸ்கின் வெளியே தெரியலை. முகம் சுளிக்க வைப்பது தான் கிளாமர் என்றால் ஆபாசம்னு தான் சொல்லுவேன். ரொம்ப எளிமையான பொண்ணு கிளாமர் பொண்ணு இல்லை

**தமிழ் சினிமாவில் உங்கள் ஆசை**

'டிவி'யில் ரியாலிட்டி ஷோ பண்ணி பேமஸாகலாம். சினிமா அப்படி இல்லைங்குற புரிதலோடு 'மேயாதமான்' நடித்தேன். மக்கள் வரவேற்பு கொடுத்தாங்க. கிடைக்கும் படங்களில் எல்லாம் நடிப்பதை விட நல்ல படங்களில் நடித்தாலே போதும்.

# இன்ப அதிர்ச்சி அளித்த ஸ்லிம் நயன்தாரா



திரவுபதி' படத்தை இயக்கிய மோகன்ஜி அடுத்து, 'ருத்ரதாண்டவம்' படத்தை இயக்கி வருகிறார்.

இதில் கதாநாயகியாக நடித்து இருப்பவர், ஸ்லிம் நயன்தாரா தர்சாகுப்தா. இவருடைய நடிப்புக்கும், படத்துக்கும் இப்போதே எதிர்பார்ப்பு கூடியிருக்கிறது.

ஸ்லிம் நயன்தாரா தர்சாகுப்தா இன்ஸ்டாகிராமில், 1 மில்லியன் பார்வையாளர்கள் வந்ததை தொடர்ந்து தனது மகிழ்ச்சியை ரசிகர்களுடன் கொண்டாட விரும்பினார். சென்னையில் உள்ள ஒரு பிரபல நட்சத்திர ஓட்டலில் அவர், ரசிகர்களை சந்தித்தார். கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் இருந்து சுமார் 300 ரசிகர்கள் வந்திருந்தனர்.

அவர்களுடன் உரையாடிய ஸ்லிம் நயன்தாரா, ரசிகர்களுடன் அமர்ந்து விருந்து சாப்பிட்டார். அவருடன் ரசிகர்களும் விருந்து சாப்பிட்டார்கள். இப்படி ரசிகர்களை சந்தித்து அவர்களுடன் விருந்தும் சாப்பிட்ட ஒரே நடிகை ஸ்லிம் நயன்தாராதான்.

ரசிகர்கள் கொடுத்த அன்பளிப்பை பெற்றுக்கொண்டதுடன், அவர்களின் கேள்விகளுக்கு பதிலும் அளித்தார். அதோடு அவர் ரசிகர்களின் குடும்பத்தினருடன் வீடியோ காலில் பேசியதை பார்த்து, ரசிகர்கள் நெகிழ்ந்து போனார்கள். சிலர் ஆனந்த கண்ணீரை அடக்க முடியாமல், விம்மி னார்கள்.

# இரு நாய்களுக்கு ரூ.3.6 கோடி பரிசு அறிவித்த நடிகை



அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வசிக்கும் லேடி காகா பிரஞ்சு புல்டாக் இனத்தை சேர்ந்த 2 நாய்களை வீட்டில் வளர்த்து வந்தார். அந்த நாய்களை காகாவின் வீட்டு வேலைக்காரர் வெளியே அழைத்து சென்றபோது அவரை மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டு விட்டு நாய்களை காரில் கடத்தி சென்று விட்டான். காயமடைந்த வேலைக்காரர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து பொலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இத்தாலி சென்றுள்ள லேடி காகா இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், ''என் செல்ல பிராணிகள் கடத்தப்பட்டதால் இதயம் நொறுங்கி போய் இருக்கிறேன். அதை கண்டுப்பிடித்து தருபவர்களுக்கு ரூ.3.6 கோடி பரிசு வழங்குவேன். நாய்கள் எனக்கு கிடைக்க உதவுங்கள்'' என்று கூறியிருந்தார். இரண்டு நாய்களுக்கு இவ்வளவு பரிசு தொகையா என்று பலரும் ஆச்சரியப்பட்டு பேசினர். இந்த நிலையில் 2 நாய்களையும் பொலிசார் பத்திரமாக மீட்டு லேடி காகாவிடம் ஒப்படைத்தனர். கடத்தியவர்கள் மற்றும் மீட்கப்பட்ட விவரத்தை பொலிசார் தெரிவிக்கவில்லை.

# ரிச்சா கர்ப்பம்



தமிழில் தனுஷ் ஜோடியாக மயக்கம் என்ன படத்தில் நடித்தவர் ரிச்சா கங்கோத்யாய. தொடர்ந்து சிம்புவுடன் ஒஸ்தி படத்தில் நடித்தார். தெலுங்கில் அதிக படங்களில் நடித்து இருக்கிறார்.

கடைசியாக அவரது நடிப்பில் பொலிஸ் டைகர் என்ற படம் வந்தது. அதன்பிறகு படங்களில் நடிக்காமல் சினிமாவை விட்டு ஒதுங்கினார். ரிச்சாவுக்கும் வெளிநாட்டைச் சேர்ந்த தொழில் அதிபர் ஜோ லங்கேலா என்பவருக்கும் காதல் மலர்ந்தது. இவர்கள் 2019ல் திருமணம் செய்து கொண்டனர். இரண்டு வருடங்களுக்கு பிறகு ரிச்சா தற்போது கர்ப்பமாக இருக்கிறார்.

கர்ப்பமான தகவலை சமூக வலைத்தளத்தில் புகைப்படம் வெளியிட்டு ரசிகர்களுக்கு தெரிவித்துள்ள அவர், ஜூன் மாதம் குழந்தை பிறக்கும் என்றும் கூறியுள்ளார். புகைப்படத்தை பார்த்த ரசிகர்கள் ரிச்சாவுக்கு வலைத்தளத்தில் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

# அன்டார்டிகாவில் உடைந்த Brunt பனிப்பாறையும், ஆபத்தும்!



**அதிகரிக்கும் தட்பவெப்பம் இந்தப் பனிப்பாறைகளை உருக வைத்து நன்னீரை கடலின் உப்பு நீருடன் கலக்க வைக்கிறது. இதனால் பூமியில் வாழும் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் தேவையான நன்னீரின் அளவு குறையும்.**

பனிப்பாறைகள் என்றாலே 'டைட்டானிக்' திரைப்படம்தான் நம்மில் பலருக்கும் ஞாபகத்துக்கு வரும். ஒரு பெரிய கப்பலையே துண்டு துண்டாக உடைத்து புரட்டிப் போடக்கூடிய வல்லமை பனிப்பாறைகளுக்கு உண்டு என்பதை நாம் ஜாக் ரோஸ் காதல்வழியாகத்தான் தெரிந்துகொண்டோம். அதன்பிறகு பல காதல் கதைகள் வந்துவிட்டதால் பனிப்பாறைகள் பற்றி நாம் மறந்தே போனோம். ஆனால், சமீக காலமாக சூழலியல் ஆர்வலர்கள் அடிக்கடி முணுமுணுக்கும் பெயராக பனிப்பாறைகள் மாறி வருகின்றன. பனிப்பாறைகள் குறித்த ஆராய்ச்சிகள் அதிகரிக்கும் வேளையில் அதன் வெடிப்பும் தொடர்கதையாகி வருகின்றது. இவையெல்லாம் நமக்கு சொல்லும் செய்தி என்ன தெரியுமா?! கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்!

## பனிப்பாறைகள்!

புவி வெப்பமடைதல் காரணமாக துருவப்பகுதிகளில் பனிப்பாறைகள் உருகி வருவதாகவும், அதன் விளைவாக பூமி பேரழிவுகளை சந்திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை மணி ஏற்கனவே அடிக்கப்பட்டுவிட்டது. British Antarctic Survey என்ற அமைப்பு கடந்த பத்தாண்டுகளாகவே பனிப்பாறைகள் பெரிய அளவில் பிளவுபடும் என்று தொடர்ந்து எச்சரிக்கை விடுத்துவந்தது. இந்நிலையில்தான் கடந்த வெள்ளிக்கிழமை அன்டார்டிகாவின் ப்ரன்ட் (Brunt) ஐஸ் பனித்தட்டில், கிட்டத்தட்ட 490 சதுர மைல் (1,270 சதுர கிலோமீட்டர்) அளவு நீளமும், சுமார் 492 அடி தடிமனும் கொண்ட ஒரு பெரிய பனிப்பாறை உடைந்துள்ளது. இது அளவில் நியூயார்க் நகரத்தை விடப் பெரியது.

ஒரு பனித்தட்டில் இருந்து பனிப்பாறை பிரிந்து போவது கால்விங் (calving) என அழைக்கப்படுகின்றது. அன்டார்டிகாவில் முதன் முதலில் கடந்த நவம்பர் 2020ல் இந்தப் பனித்தட்டுகளுக்கு இடையே ஒரு புதிய வெடிப்பு உருவாகி சிறு விரிசல்களை நோக்கி நகர்ந்தது. அதன் பின் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் இந்தப் புதிய பிளவு ஒரு நாளுக்கு ஒரு கிலோ மீட்டர் வரை அதி வேகமாக நீண்டு சென்றது.

இந்த Brunt பனியடுக்குதான் British Antarctic Survey ஆராய்ச்சி நிலையத்தின் தாயகம். 2016ம் ஆண்டில், இதுபோன்ற ஒரு calving நிகழ்வின் போது, பேரழிவு நிகழலாம் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த நிலையம் கொஞ்சம் உள்நோக்கி நிலப்பரப்பிற்குள் நகர்த்தப்பட்டது.

அன்டார்டிக்கின் குளிர்காலத்தின்போது ஒரு நாளின் 24 மணி நேரமும் இருள் சூழ்ந்திருப்பதோடு வெப்பநிலை 60 டிகிரி செல்சியஸ் வரை எதிர்மறையில் செல்லும். எனவே இவ்வாறான ஒரு அசம்பாவிதம் நிகழும் பட்சத்தில் அங்கிருந்து உடனே ஆராய்ச்சியாளர்களை வெளியேற்றுவது கடினம் என்ற காரணத்தினால் பனிக்காலங்களில் அவை மூடப்பட்டன. அங்கு பணிபுரியும் 12 ஊழியர்களும் 2017முதல் அன்டார்டிகாவின் கோடை மதங்களான நவம்பர் முதல் மார்ச் வரையிலான காலப்பகுதிகளில் மட்டுமே அங்கு இருப்பார்கள்.

சிறு சிறு பிளவுகளாக இருந்து வந்த ப்ரன்ட் (Brunt) ஐஸ் பனித்தட்டின் விரிசல்கள் சென்ற பிப்ரவரி 26ம் திகதி காலை ஒரு சில மணிநேரங்களிலேயே பல நூறு மீட்டருக்கு பிளவுபட்டு மிகப்பெரிய பனிப்பாறையாக பிரிந்து சென்றுள்ளது. பிபிசி அறிக்கையின்படி கடைசியாக இந்தப் பகுதியில் இவ்வாறான ஒரு நிகழ்வு 1970 களின் முற்பகுதியில்தான் நிகழ்ந்துள்ளது.

BAS நிலையத்தை சுற்றியுள்ள உயர் துல்லியமான ஜிபிஎஸ் கருவிகளின் தானியங்கி நெட்வொர்க்கைப் பயன்படுத்தி தினசரி இந்தப் பனித்தட்டை BAS கண்காணித்து, இது எவ்வாறு சிதைந்து நகர்கிறது என்பதை அளவிடுகிறது. ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA), நாசா மற்றும் ஜெர்மன் செயற்கைக்கோள் டெர்ராசார்எக்ஸ் (German satellite TerraSARX) ஆகியவற்றின் செயற்கைக்கோள் படங்களும் இவற்றை கண்டறியப் பயன்படுத்தப்படுகின்றன.

சரி, பனித்தட்டுக்கள் என்றால் என்ன? எதற்காக சூழலியலாளர்கள் இதை கண்காணிக்கிறார்கள்?

பனித்தட்டுகள் (Ice Shelf) என்றால், ஒரு நிலப்பரப்புடன் நிரந்தரமாக இணைந்திருக்கும் மிதக்கும் பனித்தகடுகள் (Ice Sheets) அல்லது பனிக்கட்டிப் படலம் என்று அர்த்தம்.



உலகின் பெரும்பாலான பனித்தட்டுகள் அன்டார்டிகா கடற்கரையையே காதலுடன் கட்டிப்பிடித்திருக்கின்றன. இதுதவிர கிரீன்லாந்து, ரஷ்யாவின் ஆர்க்டிக் வட்டம் மற்றும் கனடா போன்ற இடங்களிலும் இவை காணப்படுகின்றன.

நாம் Ice Age எனும் கார்ட்டூன் திரைப்படத்தை பார்த்திருப்போம். IceAge காலப்பகுதியில் வாழ்ந்த விலங்குகளையும் அதன் வாழ்க்கை முறையையும் சொல்லும் அந்தத் திரைப்படத்தின் பல பாகங்கள் தொடர்ந்து வெளிவந்தன. எதிர்காலத்தில் வரப்போகும் அதன் இறுதிப்பாகத்தில் நாமெல்லாம் ஒரு கார்ட்டூன் கதாபாத்திரமாகவே வாழப்போகிறோம். ஏனெனில் இந்தப் பூமியின் கடைசி IceAge காலத்தில்தான் (அதன் பின்னர் அழிவுதானே!) நாம் தற்போது வாழ்ந்துகொண்டு இருக்கிறோம்.

கிளேசியர் எனப்படும் பனி ஆறுகள் பல மில்லியன் ஆண்டுகளாக நமது பூமியை சமநிலையாக வைத்து அழகுபடுத்தி வந்துள்ளது. கிளேசியர்கள் உருகி, பரவி, பூமியின் மேற்பரப்பை ஒரு கை தேர்ந்த சிற்பியைப் போல செதுக்கி, இன்று நாம் காணும் பல இயற்கை காட்சிகளை உருவாக்குகின்றன. ப்ளீஸ்டோசீன் பனி யுகத்தின் போது (Pleistocene Ice Age), பூமியின் மூன்றில் ஒரு பங்கு நிலம் பனிப்பாறைகளால் மூடப்பட்டிருந்தது. ஆனால் இன்று பூமியின் பத்தில் ஒரு பங்கு நிலம் மட்டுமே பனிப்பாறைகளால் மூடப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தால் இந்த பனி ஆறுகள் தற்போது கரைந்து மறைந்து போய்க்கொண்டிருக்கின்றன.

சரி, எங்கோ உலகத்தின் ஒரு மூலையில் உள்ள இந்த பனிப்பாறைகள் உருகுவதால் நமக்கென்ன என்று பலருக்கும் தோன்றலாம். Butterfly effect என சொல்லப்படும் பட்டாம்பூச்சி விளைவு பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு பட்டாம்பூச்சி அதன் இறக்கைகளை மடக்கி விரிப்பதன் மூலம் ஒரு சூறாவளியை ஏற்படுத்தும் என்று சொல்லப்படுவது போல, சிறிய விஷயங்கள் ஒரு சிக்கலான அமைப்பில் நேரியல் அல்லாத தாக்கங்களை ஏற்படுத்தும். நமக்கு எட்டமுடியா தூரத்தில் எங்கோ இருக்கும் துருவங்களில் பனிப்பாறை உருகுவதும் நம் வாழ்வில் நேரடியாக இல்லாத பல விளைவுகளை ஏற்படுத்தும்.

அதிகரிக்கும் தட்பவெப்பம் இந்தப் பனிப்பாறைகளை உருக வைத்து நன்னீரை கடலின் உப்பு நீருடன் கலக்க வைக்கிறது. இதனால் பூமியில் வாழும் விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் தேவையான நன்னீர் அளவு குறைகிறது. அதிகளவிலான நன்னீர் கலப்பு கடலின் ஈக்கோ சிஸ்டத்தின் அமைப்பை குலைப்பது மட்டுமல்லாது கடல் மின்னோட்டத்தையும் பாதிக்கின்றது. அதிகரித்துச் செல்லும் கடல் மட்டம் இப்படியே தொடருமாயின் கரையோர நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கி, உலக மக்கள்தொகையில் 40 சதவிகிதம் பேர் வரை தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவார்கள்.

## அன்டார்டிகா

உண்மையில் இந்தப் பனித்தட்டுகளுக்குத் தற்போது என்னதான் நடக்கிறது?

கடந்த முப்பது ஆண்டுகளில், அன்டார்டிக் பகுதியில் தொடர்ச்சியாகவே அசாதாரண பனித்தட்டுகள் இடிந்து விழுவதை விஞ்ஞானிகள் கவனித்துள்ளனர். எனவே பனித்தட்டுகள் விரிசலடைந்து பெரிய பனிப்பாறைகளை விடுவிப்பது ஒன்றும் (calving) வழக்கத்திற்கு மாறானதல்ல என்றாலும், ice shelvesகளில் முதலில் விரிசல்கள் மெதுவாக உருவாகும்போது, அந்த செயல்முறை பொதுவாக பல மாதங்கள் முதல் ஆண்டுகள் வரை எடுக்கும். ஒரு பனிப்பாறை பிரிந்து உடைந்தால் Ice Shelves மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப பத்தாண்டுகள் பல ஆகும்.

ஆனால், சமீபத்திய ஆண்டுகளில், அன்டார்டிக் துருவப் பகுதிகளிலும் கனடாவின் வடக்கு கடற்கரையிலும் உள்ள பனித்தட்டுகள் விரைவாக சிதைவடைந்து வருகின்றன. மார்ச் 2008ல், அன்டார்டிகாவில் உள்ள வில்கின்ஸ் ஐஸ் ஷெல்ஃப் (Wilkins Ice Shelf) 400 சதுர கிலோமீட்டருக்கும் (160 சதுர மைல்) மேல் பிரிந்து சென்றது. அதைத் தொடர்ந்து அந்த கோடைப் பருவத்தின் பிற்பகுதியில், வடக்கு கனடாவின் எல்லெஸ்மியர் தீவில் பல பனித்தட்டுகள் சில நாட்களில் தொடர்ச்சியாக உடைந்தன.

தற்போது பல மைல் தூரத்துக்கு உடைந்து பிரிந்துள்ள ப்ரன்ட் (Brunt) ஐஸ் பனித்தட்டு சூழலியலாளர்களுக்கு மட்டுமல்ல நம்மைப்போன்ற சாதாரண மனிதர்களுக்குமான ஓர் எச்சரிக்கை மணிதான்.

# செல்ஃபி உலா


தெஹிவளை மிருகக்காட்சிச் சலையில் பிரசன்யா


மஹேந்திரன் கொச்சிக்கடை சிவன்கோயில்


ஹரிஹரன் சித்துல்கலையில்


மொஹம்மட் நௌசாத் கிண்ணியா


ரமணன் இரத்தினபுரியிலிருந்து.....


ஷெரீன் சாந்தி ஹிக்கடுவை கடற்கரையில்


தினகரனின் செந்தூரம் இதழின் செல்பிஉலா பக்கத்தில் உங்களது செல்பிக்களும் இடம்பெற விரும்பினால் selfiulla@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு படத்தையும் விபரங்களையும் அனுப்பி வையுங்கள். செல்பிக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.


முனீஸ் பைசால் நகர்


அக்ஷயன் வன்கோல்பேசில்



லோஷித் கடற்கரையில்


சசிகுமார், கொட்டாஞ்சேனை


சுதர்ஷினி வெள்ளவத்தை

## எல்பர்ட் ஐன்ஸ்டைன்

சார்பியல் கோட்பாடு











## வழி காட்டுங்கள்




## நிறம் தீட்டுங்கள்




## 07 வித்திசாங்களை கண்டுபிடியுங்கள்



# அங்காடி வியாபாரத்தில் போட்டி அதிகமென்பதால் தொழிலை முன்னெடுப்பதில் சவால்கள் அதிகம்

## –நீர் கொழும்பில் தைத்த ஆடைகள் விற்கும் தேவராஜ்

**நான் ரொம்ப பிஸி...**

**நீர்கொழும்பு நகரம் தினமும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் நகரமாகும். நீர்கொழும்பு நகரத்தில் பாரிய வர்த்தக கட்டடத் தொகுதிகள், அரச மற்றும் தனியார் வங்கிகள், வியாபார நிலையங்கள், வாராந்த சந்தைகள், மீன் விற்பனை சந்தைகள், மருந்தகங்கள் மட்டுமன்றி நாளாந்த விற்பனை சந்தைகளும் இயங்குகின்றன. இதனால் நீர்கொழும்பில் பொதுமக்களின் நடமாட்டம் தினமும் அதிகரித்த வண்ணமே காணப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில் தினச் சந்தையில் ( Day Fair ) தைத்த ஆடைகளை சாதாரண விலைகளில் விற்பனை செய்யும் ஒருவரை 'நான் ரொம்ப பிஸி' பகுதிக்காக சந்திக்கும் வாய்ப்பும் கிட்டியது. தைத்த ஆடைகளை விற்பனை செய்வதில் 41 வருட கால அனுபவமுள்ள 60 வயதுடைய வடிவேல் தேவராஜ் தைத்த ஆடைகளை விற்பனை செய்வதில் மிகவும் கைதேர்ந்தவர்.**







**கேள்வி :** உங்கள் தொழில் பற்றி கூறுங்கள். ?

**பதில் :** நீர்கொழும்பு நகரம் வியாபாரத்துக்கு சிறந்த நகரமாகும் . நான் 1979 ம் வருடம் ஓர் அங்காடி வியாபாரியாகவே வியாபாரத் துறையில் இணைந்தேன் . நீர்கொழும்பு பிரதான வீதியிலுள்ள ஒரு கடையின் முன்னால் வீதி ஓரமாகவே எனது வியாபாரத்தை ஆரம்பித்தேன் . அப்போது எனக்கு 19 வயதிருக்கும் . மிகந்த ஆர்வத்துடனே வியாபாரத்தை ஆரம்பித்தேன் . வியாபாரிகள் மிகவும் பொறுமையுடனும் முயற்சியுடனும் தமது தொழில் முயற்சிகளை செய்து வந்தால் அமைதியாகவே வாழலாம் .

**கேள்வி :** அங்காடி வியாபாரியாக வியாபாரத்தை நீங்கள் ஆரம்பித்தீர்கள் . அப்போது உங்களிடம் இருந்த முதலீடு எவ்வளவு ?

**பதில் :** மிகவும் சொற்பமான பணமே என்னிடம் இருந்தது . அந்த பணத்தை எனது வீட்டாரே தந்தார்கள் . மிகவும் கஷ்டப்பட்டு சேமித்து வைத்த பணத்திலிருந்து அவர்கள் அதனைத் தந்தார்கள் . அப்போது எனது அப்பா ஓர் தேங்காய் ஆலையில் வேலை செய்து வந்தார் . அந்த ஆலை தனியார் ஒருவருக்கே சொந்தமாக இருந்தது . அப்பா அம்மாவுக்கு கொடுத்த பணத்தை சேமிப்பு செய்தே எனக்கு தந்தார்கள் .

**கேள்வி :** பிரதான வீதியில் அங்காடி வியாபாரம் அப்போது எப்படி இருந்தது ?

**பதில் :** பிரதான வீதியிலுள்ள கடைகளுக்கு முன்பாக அங்காடி வியாபாரிகள் தமது விற்பனைப் பொருட்களை வைத்து விற்பனை செய்யும் வழக்கம் அப்போது நீர்கொழும்பு நகரத்தில் இருந்தது . கடைகளின் உரிமையாளர்கள் அப்போது எங்களுடன் நெருக்கமாக நடந்து கொண்டார்கள் . அவர்களது கடைகளையும் கவனித்தவாறு எனது வியாபாரத்தையும் செய்து கொண்டு வந்தேன் . வியாபாரம் அப்போது நன்றாக நடந்தது . சந்தோஷமாகவே இருந்தேன் .

**கேள்வி :** உங்களுடைய கல்வித் தகைமைகள் என்ன ?

**பதில் :** நான் நீர்கொழும்பு, விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்வி கற்றேன் . எனது குடும்பத்தில் நிலவிய பொருளாதாரக் கஷ்டம் காரணமாக படிப்பை விட்டேன் .

**கேள்வி :** பாடசாலைக் கல்வியை மிகவும் பொருளாதார கஷ்டத்தின் மத்தியில் கற்றுள்ளீர்கள் . அதன் பின்னால் வேறு ஏதும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளீர்களா ?



**பதில் :** எனது வீடு நீர்கொழும்பு , பாங்கட சந்தியில் , மீரிகம வீதியிலுள்ள ஒழுங்கையிலேயே எனது வீடு அமைந்துள்ளது . மிகவும் சன நெரிசலான சந்தியே பாங்கட சந்தியாகும் . அங்குள்ளவர்கள் பல வகையான தொழில் முயற்சிகளில் அப்போது ஈடுபட்டு வந்தார்கள் . நானும் அவர்களுடன் சேர்ந்து சிறிய சிறிய தொழில்களில் ஈடுபட்டுள்ளேன் . அப்போது அவர்கள் சொற்ப சம்பளத்தையும் எனக்கு தந்தார்கள் . அதனை நான் எனது அம்மா, அப்பாவுக்கே கொடுத்தேன் . பின்னர் நான் அங்காடி வியாபாரத்தை ஆரம்பித்தேன் .

**கேள்வி :** தற்போது நீங்கள் தினச் சந்தையில் கடையொன்றை நடாத்திக் கொண்டு வருகிறீர்கள் . இந்தக் கடை எப்போது உங்களுக்கு கிடைத்தது?

**பதில் :** கடந்த 1988ம் வருடம் எனக்கு இந்த கடை வாடகைக்கு கிடைத்தது . நீர்கொழும்பு மாநகர சபையாலேயே தினச் சந்தைக்கான கட்டடத் தொகுதிகள் கட்டப்பட்டன . நான் நீர்கொழும்பு கிறீன்ஸ் வீதியில் பெட்டிக் கடை வைத்திருந்த போதே இந்த கடை எனக்கு கிடைத்தது . இதனால் இந்த கடைக்காக நீர்கொழும்பு மாநகர சபைக்கு நான் மாதாந்த வாடகை கொடுக்கிறேன்.

**கேள்வி :** உங்களுடைய பிள்ளைகள், உங்களுடைய வியாபாரத்துக்கு உதவி செய்கிறார்களா ?

**பதில் :** எனக்கு நான்கு பிள்ளைகள். மூன்று ஆண் பிள்ளைகள். ஒருவர் பெண் பிள்ளை. இப்போது மூத்த ஆண் பிள்ளை வெளிநாட்டில் தொழில் செய்கிறார் . மற்றவர்கள் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். முன்பு அவர்கள் நத்தார் பண்டிகை , வருடப் பிறப்பு மற்றும் சிங்கள, தமிழ் புது வருடம் ஆகிய காலங்களில் தேவையான போது ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளார்கள்.

**கேள்வி :** தைத்த ஆடைகளை எங்கே வாங்கி வருகிறீர்கள்?

**பதில் :** கொழும்பு புறக்கோட்டையிலுள்ள புடவைக் கடைகளிலேயே நான் தைத்த ஆடைகளை வாங்கி வருகிறேன் . அத்தோடு கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்தும் மொத்த வியாபாரிகள் எங்களுக்கு தைத்த ஆடைகளை கடைக்கு கொண்டு வந்து விற்பனை செய்வார்கள்.

**கேள்வி :** தற்போதைய சூழ்நிலையில் பலருடைய வியாபாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. உங்களுடைய வியாபாரம் எப்படி இருக்கின்றது?

**பதில் :** பொதுமக்கள் அதிகமாக நடமாடுவது இல்லை. மக்கள் நடமாட்டம் குறைவாகவே உள்ளது.
கடைகளுக்கு ஆட்கள் வருவதும் குறைவு.
கொரோனா வைரஸ் தொற்றின் பயம் காரணமாக மக்கள் எமது சந்தை கட்டடத் தொகுதிகளுக்கு வருவது மிகவும் குறைவாக உள்ளது.
வியாபாரம் மந்தமான நிலையிலேயே உள்ளது.

**கேள்வி :** தைத்த ஆடைகளை விற்பனை செய்வதில் பழுத்த அனுபவமுள்ள நீங்கள் உங்களுடைய வாழ்க்கை வசதிகளையும் செய்து கொண்டிருக்கிறீர்களா?

**பதில் :** இறைவன் அருளால் எனது வெற்றுக் காணியில் வீடொன்றை கட்டிக் கொண்டேன். வெற்றுக் காணியை எனது மாமாவே (மனைவியின் அப்பா) தந்தார்.
அவர்கள் தந்த காணியில் வீடொன்றினை அமைத்து பிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டு வருகின்றோம். அத்தோடு பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளையும் கவனித்து வருகின்றேன்.

**கேள்வி :** வியாபாரத்தை முன்னெடுப்பதில் முகங்கொடுத்த பிரச்சினைகள் என்ன?

**பதில் :** கடந்த 1979 மற்றும் 1985ம் வருடங்களில் அங்காடி வியாபாரிகள் மிகவும் குறைவு. 50 பேர்கள் அல்லது 75 பேர்களே அங்காடி வியாபாரம் செய்து வந்தனர் . ஆனால் எனது தொழிலை சுமார் 500 பேர்கள் தற்போது செய்து வருகின்றனர் . பலத்த போட்டியே நிலவுகின்றது. இலாபமும் மிகவும் குறைவாக உள்ளது . இதனை சமாளித்தே தொழில் செய்ய வேண்டும் .

**கேள்வி :** வேறு ஏதும் தொழில் முயற்சிகளில் ஈடுபடும் எண்ணம் உங்களுக்கு உள்ளதா ?

**பதில் :** எவ்வாறாயினும் எனக்கு கைகொடுத்த தொழில் இதுவேயாகும். நான் இந்த தொழிலின் வருமானத்தைக் கொண்டே பல தேவைகளை பூர்த்தி செய்துள்ளேன் . பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனைய தேவைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றியுள்ளேன் . என்னால் முடிந்தளவு காலம் இந்த வியாபாரத்தை செய்வேன் . வேறு தொழில்கள் செய்யும் நோக்கங்கள் எனக்கு இல்லை . என்றார் .

**படம் மற்றும் தகவல் நீர்கொழும்பு நிருபர்**
**மொஹமட் ருஸ்மான்**

# முகத்தை பளபளப்பாக்கும் கடலை மா!



பழங்காலத்தில் இருந்தே பெண்கள் முக அழகை பேணி காப்பதற்கு கடலை மாவை பயன்படுத்தி வந்துள்ளனர். பொலிவிழந்த சருமத்தை இளமையூட்டும் தன்மை கடலை மாவிற்கு உண்டு. தினமும் முக அழகிற்கு, கடலை மாவு பயன்படுத்தி வந்தால் நல்ல மாற்றத்தை உணரலாம். கடலை மாவுடன் கொஞ்சம் வெள்ளரி சாறு கலந்து நன்கு குழைத்து பாதிப்பு உள்ள சரும பகுதிகளில் நன்கு பூசவும். பின் இருபது நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி விடவும். சருமம் வழுவழுப்புடன் திகழும்.

கடலை மாவில் சிறிது நீரை கலந்து, முகத்தில் பூசி கொள்ளுங்கள். நன்கு உலர்ந்த பின்பு குளிர்ந்த நீரால் கழுவுங்கள். இவ்வாறு செய்து வருவதனால் முகத்தில் உள்ள சுருக்கங்கள் மறையும். குளிக்கும் போது சோப்பிற்கு பதில் கடலை மாவை பயன்படுத்தி வந்தால், சருமம் வழுவழுப்பாக இருக்கும். கடலை மாவுடன், மஞ்சள் மற்றும் 1 ஸ்பூன் பன்னீர் கலந்து முகத்தில் பூசி கொள்ளுங்கள். பிறகு 20 நிமிடம் கழித்து, முகத்தை கழுவினால் முகம் பளிச் பளிச் என இருக்கும்.

கடலை மாவுடன் பாதாம் மாவு மற்றும் எலுமிச்சை கலந்து குழைத்து முகம் முழுவதும் பூசி 30 நிமிடம் அப்படியே விடவும். பிறகு குளிர்ந்த நீரில் கழுவி விடவும். இதன் மூலம் முகம் பளபளப்பாக தோன்றும். கடலை மாவுடன் சந்தனம், ரோஸ் வோட்டர், தேன் கலந்து முகப்பூச்சு செய்தால் முகத்தில் உள்ள அழுக்குகள், இறந்த செல்கள் வெளியேறுவதுடன் சருமம் மென்மையும் வழுவழுப்பும் கூடும்.



கடலைமாவில் சிறிது மஞ்சள் தூள் கலந்து வாரம் இருமுறை தடவி பிறகு குளிர்ந்த நீரில் கழுவி வர முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறையும் முகம் பொலிவாக இருக்கும்.

தினமும் முகம் கழுவ பயன்படுத்தும் பேஸ்வோஷ்ஷுக்கு பதிலாக தினமும் கடலைமாவை பயன்படுத்துவது மிகச்சிறந்தது. இதனை பயன்படுத்துவதன் மூலம் முகம் சிவப்பாகவும் மென்மையாகவும் இருக்கும்.

ஏனைய அழகு சாதனப்பொருட்களில் காணப்படும் இரசாயனம் சிலருக்கு முகத்தில் ஒவ்வாமையை ஏற்படுத்தும் இதனால் முகம் அவலட்சமாகவும் வாய்ப்புள்ளது. இவ்வாறனவர்களுக்கும் ஏற்ற முறைதான் கடலைமா பேஸ்பெக். இக் கடலை மாவைப் பயன்படுத்துவதனால் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தாது. இது இயற்கையான முறையாகும்.





பொதுவாக பெண்கள் முகத்தை அழகுப்படுத்தி கொள்வது என்பது மிகவும் பிடித்தமான ஒன்று. பெண்களின் முகம் அழகு பெற உதடு மிக முக்கியமான ஒன்றாகும். தற்காலத்து பெண்கள் உதட்டை அழகாகவும் சிவப்பாகவும் பாராமரிப்பதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். அவ்வாறு வீட்டிலேயே சிவப்பான கவர்ச்சிகரமான உதட்டை பராமரிப்பது எப்படி என்பதனை பார்ப்போம்.

- உதடு சிவப்பாக காலையில் பல் துலக்குவதற்கு முன்பு டூத் பிரஷைக் கொண்டு, லேசாக உதடுகளை தடவி விட்டால் போதும். உதட்டில் இருக்கும் இறந்த செல்கள் நீங்கி வழவழப்பாக இருக்கும். மேலும் உதடு சிவப்பாக மாறும்
- உதடு சிவப்பாக மாற்ற, இரவு தூங்கும் முன் வெண்ணெய்யை உதட்டில் தடவி கொள்ளவும். பின்னர் காலை பல் துலக்கும் ப்ரஷ் வைத்து நன்றாக உதடுகளை தேய்க்கவும். தினமும் தொடர்ந்து செய்து வந்தால் கண்டிப்பாக 3 நாட்களில் மாற்றம் தெரியும்.
- உதடுகளை சிவப்பாக மற்ற வெள்ளரிக்காயை வட்டவடிவில் மெல்லிய துண்டாக வெட்டி கொள்ளவும், பின் வெள்ளரி துண்டை நன்றாக உதட்டில் தேய்க்கவும். பின்னர் ஈரப்பதத்தை தக்கவைக்க தேன் தடவி கொள்ளவும். இவ்வாறு செய்வதினால் உதடு கறுப்பாவதை தடுக்கலாம்.
- கறுத்துப் போன உதடுகளுக்கு க்ளிசரினை தினமும் தடவினால் கறுப்பு நீங்கி நல்ல நிறம் கிடைக்கும். பன்னீர் ரோஜாவின் சாறு அல்லது பன்னீரும் கூட நல்ல நிறம் கொடுக்கும். ஆனால் பிறவியிலேயே கருமை நிறத்தில் இருக்கும் உதடுகளுக்கு லிப்ஸ்டிக் மட்டும்தான் சரியான வழி.
- பீட்ரூட் கிழங்கின் சாறை உதட்டில் தேய்த்து 10 நிமிடங்களின் பின்னர் கழுவுவிவருவதன் மூலம் உதடு சிறப்பாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கும். இதனை தொடர்ந்து செய்துவருவது மிகச்சிறந்தது. இது ஒரு இயற்கையான முறையாகும்.









## சிவப்பான உதட்டை பெற வேண்டுமா!...

### தமிழ்த் திரையிசைப் பாடல்களில் நயப்பும் வியப்பும் (03)

# புதுமைகளை உள்ளீர்த்த கவிஞர் புலமைப்பித்தனின் பாடல்கள்

கவிஞர் புலமைப்பித்தன் தமிழ் படைப்புச் சூழலில் நன்கு அறியப்பட்ட ஒரு காத்திரமான படைப்பாளி. நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் புலமைச் சொத்துக்களில் மிக முக்கியமான மூத்த ஆளுமை இவராவார். நூற்றாண்டுகளைத் தாண்டி பயணம் செய்யும் தென்னிந்தியத் தமிழ்த் திரையுலகில் பலவற்றைக் கண்டவர். பல அரிய ஆளுமைகளோடு உடனிருந்து தமிழ்ச் சூழலின் செழுமைக்கு வலுச்சேர்த்தவர் புலமைப் பித்தன்.

பாடல்கள் என்று வருகின்ற போது அதனை ரசனைபூர்வமாக இரசிப்பவர்கள் எவரும் முதலில் அதைப் பற்றிய ஆராய்வுகளிலும் இறங்குவதில்லை. இதனை அனுபவ ரீதியாக நாமெல்லோரும் கண்டிருக்கின்றோம். எம்மிடத்திலிருந்தே. முதல் முறையாக ஒருபாடலைக் கேட்கின்ற போது இந்த சுகானுபவம் எல்லோருக்கும் வாய்த்து விடுவதுதான். அதன் பின்னர்தான் பாடலாசிரியர், பாடகர், இசை போன்ற விடயங்களை மனம் மெல்ல மெல்ல தேட விளையும். தமிழ்த் திரையிசைவெளியில் பாடலாசிரியர்கள் என்ற தளத்தில் கண்ணதாசன், வாலி, வைரமுத்து போன்றவர்கள் வெளித்தெரியக்கூடியவர்களாக நல்ல பல பாடல்ளை அடிக்கடி தந்துகொண்டிருந்ததன் காரணமாக பிரசித்திபெற்ற பாடல்களெல்லாம் அவர்களுடையது தான் என்ற இரசிகர்களின் சுய முடிவு பல நேரங்களில் பிழைத்துப் போய் விடக்கூடாதென பாடலாசிரியரின் நாமம் தவிர்க்கப்பட்டு விடக்கூடிய சூழ்நிலைகளை அவ்வப்போது இந்த வெளியில் நாம் கண்டிருக்கின்றோம்.

இப்படியான ஒரு சூழலை அடிக்கடி எதிர்நோக்கிருக்கக் கூடியவர்களில் கவிஞர் புலமைப்பித்தனும் ஒருவர். தமிழ்த் திரையிசைச் சூழலில் மிகச் சிறந்த பாடல்கள் என்று இற்றைவரை கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கின்ற பல பாடல்களிற்குச் சொந்தக்காரர். கவிஞர் புலமைப்பித்தன் கவிஞராக, பாடலாசிரியராக அவர் இந்த தமிழ்ப் படைப்புச் சூழலிற்கு ஆற்றிய பணிகள் அளப்பெரியவை.

1960களில் தொடங்கிய இவரது பாடல் பயணம் 1970களில் உச்சம் பெற்று 1980களில் இன்னும் உரிய நிலையை அடைந்து செல்லத் தொடங்கிய புரட்சிமயமான இவரது கவிதைகளின் தாக்கச்செல்நெறி இவரது பாடல்களிலும் செல்வாக்குச் செலுத்தியது.

கவிஞர் புலமைப்பித்தனின் பாடல்கள் மக்கள் மத்தியில் ஜனரஞ்சக அந்தஸ்தை பெற்றவையாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லப்போயின் அது மிகையாகாது. மக்கள் திலகம் எம்.ஜி.இராமச்சந்திரனின் நெருங்கிய நண்பராகவும் இருந்த புலமைப்பித்தன், எம்.ஜி.ஆரால் அரசவைக் கவிஞராகவும் நியமிக்கப்பட்டார். இதன் காரணமாக இவரது வரிகளிலமைந்த பல பாடல்கள் திரைப்படத்திற்கானவையாக இருந்தாலும் சமநேர காலத்தில் எம்.



ஜி.ஆரின் அரசியல் வாழ்க்கையில் உச்சத்திற்கான ஊன்றுகோல்களாக அமைவதற்கு மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பையும் பெற்றுக் கொடுத்தது.

இந்த இடத்தில் புலமைப்பித்தனால் எழுதப்பட்டு "இதயக்கனி" திரைப்படத்தில் இடம்பெற்ற

"நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற
இந்த நட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற"

என்ற பாடல் அந்நாளில் ஒரு புதுமையான பாணியை உள்ளிருத்தி வெளியாகி தமிழக அரசியற் சூழலில் பெரும் மாற்ற அலையொன்றை உண்டு பண்ணி எம்.ஜி.ஆர் இன் அரசியல் நிலையெடுப்பிற்கான மக்கள் ஆதரவைத் திரட்டிக் கொடுத்த ஒரு பாடலாகவும் அமைந்தது.

அடுத்து இவரது பாடல்களில் மிக முக்கியமான பாடலாக அமைந்த பாடல் அடிமைப்பெண் திரைப்படத்தில் வெளியாகிய

"ஆயிரம் நிலவே வா
ஓராயிரம் நிலவே வா
அல்லி மலர் மேனியிலே
ஆடை என்
நானிருக்க
கள்ள விழிப் பார்வையிலே காணும்
இன்பம் கோடிபெறும்

என்ற வரிகளினூடாக புதிய சொல்லாடல்களை இயல்பாக இருக்கச்செய்து பாடலை மென்மேலும் அழகுபடுத்தியிருப்பார்.

மேலும் நேற்று, இன்று, நாளை திரைப்படத்தில் இவரது பாடலான

"பாடும் போது நான் தென்றல் காற்று
பருவமங்கையோ தென்னங்கீற்று"

என்ற பாடலில் புலமைப்பித்தனின் அழகியல் தன்மையை அறிய முடிகின்றது.

தமிழ் மொழி குறித்து பல கவிஞர்களும் பாடலாசிரியர்களும் பலவாறாக பல சிறப்புறு படையல்களைத் தந்திருக்கக்கூடிய சூழலில் திரையிசைப் பாடல்களில் தமிழ் மொழிசார்ந்து வெளிவந்த சிறப்புக்குரிய பாடலாக புலமைப்பித்தனின்

"அமுதே தமிழே
அழகிய மொழியே
எனதுயிரே
தேனூறும் தேவாரம்
இசைப்பாட்டின் ஆதாரம்"

என்ற பாடல் இன்றுவரை மிக முக்கியமானதொரு திரையிசைப்பாடலாக மிளிர்கிறது.

புலமைப்பித்தன் அவர்கள் தனது பாடல்களினூடே அன்று தொட்டு பல புதுமைகளைத் தனது புலமைகளினுடாக உள்ளிருத்தினார். பல அரிய அற்புதமான உவமானங்கள், உருவகங்கள், இயற்கைக் கையாடல்கள் எனப் பல புதுமைசார் அம்சங்களை வெளிப்படுத்தி தனது பாடல்களை யாத்திருந்தார். காதல் உணர்வு ததும்பும் பாடல்களைக் கூட அற்புதமான சொற்கையாள்கை மூலமாக பிரயோகித்து பல நல்ல காதல் பாடல்களையும் தந்திருக்கின்றார்.

ஆட்டோ ராஜா திரைப்படத்தில் இடம்பெற்ற புலமைப்பித்தனின் பாடலான





"சங்கத்தில் பாடாத கவிதை உன்
அங்கத்தில் யார் தந்தது
நினைத்தால் எட்டாத தூரம்
எனக்கேன் உன் மீது மோகம்"

என்ற வரிகளினூடாக காதலைக்கூட அழகியலுக்கூடாக அவர் வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

அடுத்து நாயகன் திரைப்படத்தில் இடம்பெற்ற "நீயொரு காதல் சங்கீதம்" பாடலில்

"பூவினைச் சூட்டும் கூந்தலில் எந்தன்
ஆவியை நீ ஏன் சூட்டுகின்றாய்
தேனை ஊற்றும் நிலவினில் கூட
தீயினை நீ ஏன் மூட்டுகிறாய்"

என்ற வரிகள் தனித்துத் தெரியும் கவிஞரின் விற்பன்னத்திற்கு சான்று பகர்கின்றது.

தொடர்ந்து தங்கமகன் திரைப்படத்தில் இடம்பெற்ற "இராத்திரியில் பூத்திருக்கும் தாமரைதான் பெண்ணோ" பாடல் அந்நாள் கவிஞருக்கு நல்லவரவேற்பைப் பெற்றுக் கொடுத்தது.

"வீணையெனும் மேனியிலே தந்தியினை மீட்டும்
கைவிரலில் ஒருவேகம்
கண்ணவைவில் ஒரு பாவம்"

எனப் போன்றதாக இப்பாடலில் ஒவ்வொருவரிகளிலும் ஒவ்வொன்றிலும் புதுமைகள் பலவற்றையும் கையாண்டிருந்தார்.

புலவர் புலமைப்பித்தன் தமிழ் மீதும், தமிழ் இனம் மீதும் அளவு கடந்த பற்றுக் கொண்டதொரு பன்முகப் படைப்பாளி. அவரது பாடல்களிற்கென்று பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. நல்ல நல்ல பாடல்கள் பலவும் இன்று புலமைப்பித்தனின் நாமத்தை வாழ்வித்துக் கொண்டிருக்கின்றன. பாடல்களாகட்டும், கவிதைகளாகட்டும், இதர இலக்கிய பரப்புகளாகட்டும் எதிலும் புதுமையோடு தன் புலமையை இணைத்து செயற்படும் புலமைப்பித்தனின் பாடல்களும் அவரது எழுத்துச் செயற்பாடும் தமிழ்த் திரையிசையில் என்றும் தனித்துத் தெரியும் வசீகரப் படையல்களாய் என்றைக்கும் முகிழ்ந்திருக்கும் என்பது வெளிப்படை.

**வெற்றி துஷ்யந்தன்**



**௨00௯இல் கலாபூஷண விருது பெற்ற மூத்த இலக்கியவாதிகள் விருதுகளுடன் காணப்படுகின்றனர். பாவேந்தல் பாலமுனை பாறூக், அவரது மனைவி லரீபா, அன்புடீன் மனைவி ஹபிலா, ஆசுகவி அன்புடீன், சிரேஷ்ட ஊடகவியலாளர் மீரா இஸ்ஸதீன் ஆகியோர் கலாபூஷண விருதுகளுடன்...**

பட உதவி .எம்.எப்.ரிபாஸ்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.